# கரைம



ரா.கி.ரங்கராஜன்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

# பதிப்புரை

*1986 வாக்கில் ஒரு நாள் 'குமுதம்' பத்திரிகை வளாகத்தில், நான், ரவி தமிழ்வாணன், லேனா தமிழ்வாணன் மூவரும் பேசிக் கொண்டிருந்த போது, கதர் வேட்டி, கதர் சட்டை அணிந்த ஒரு பெரியவர் அங்கு வந்தார். வந்தவர் நேரே லேனாவுடன் பேசி விட்டுப் போக எண்ணினார் போலும். ஆனால், லேனா அவரை விடுவதாக இல்லை. என்னைக் காட்டி இவர்தான் அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன் என்று என்னை அறிமுகப்படுத்தினார். ஆனால், லேனா அவர் யார் என்று என்னிடம் சொல்லவில்லை. என் பக்கத்தில் உயரமாக நின்றிருந்த ரவி தமிழ்வாணன், என்னளவுக்குத் தன் உயரத்தைக் குறைத்து, குனிந்து, தாழ்ந்த குரலில் 'இவர்தான் ரா.கி. ரங்கராஜன்' என்று கூறினார். நான் அவரிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று இருந்தேன். ஆனால், அவர் என்னை எங்கே பேச விட்டார்? 'நீங்கள் குப்புஸ்வாமி ஐயரின் பேரனா?' என்று என்னைப் பார்த்துக் கேட்டு விட்டு, என் பதிலுக்குக் கூடக் காத்திராமல், லேனாவைப் பார்த்து, 'அல்லயன்ஸ் கம்பெனியையும், அவர்களைப் பற்றியும் எனக்கு நீங்கள் சொல்லிதான் தெரிந்து கொள்ள வேண்டுமா? குப்புஸ்வாமி ஐயர் வெளியிட்ட 'கதைக் கோவை'யைப் படித்த பிறகு தானே எனக்கு எழுத வேண்டும் என்ற ஆர்வமே ஏற்பட்டது' என்று கூறி, தன் வயதுக்கே உரித்தான ஒரு சிரிப்புடன் சென்று விட்டார். இவர் ஒரு கடுமையான மனிதர் போலிருக்கிறது! என்று அன்று எண்ணினேன்.*

*அதன் பின்னர் அவர், கிருஷ்ணகுமார் என்ற பெயரில் எழுதிய பேய்க் கதைகளை படித்தேன். அதைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்றும் எண்ணியதுண்டு. ஆனால்,*

இந்தப் புத்தகங்கள் எங்கள் நிறுவனம் மூலம் வெளிவர, அச்சுக்குப் போகும் வரையில் இவர்தான் கிருஷ்ணகுமார் என்ற பெயரில் எழுதியவர் என்று தெரியாது. சுமார் 15 வருடங்களுக்கு முன் நாம் எண்ணியதை, செயல் வடிவில் கொண்டு வந்ததற்கு முதலில் நன்றிக்கு உரியவர், தேவன் அறக்கொடையைச் சார்ந்த சாருகேசி அவர்கள். அவர்தான் இவருடைய எழுத்தின் அருமை பெருமைகளைச் சொல்லி எங்களை ஊக்குவித்தவர்.

பின்னர் இந்த விஷயத்தை லேனாவிடம் கூறிய போது, 'இத்தனை நாளாக ஒரு சரியான களம் கிடைக்காத நல்ல எழுத்தாளர் என்று நான் அவரிடமே கூறியுள்ளேன். ஆனால் இப்போது அவருக்கு ஒரு அருமையான களம் கிடைத்து விட்டது. அவருடைய நூல்களைப் பிரசுரிக்க நீங்கள் தான் சரியான பதிப்பாளர்' என்று கூறினார்.

இவருடைய இந்த நூலையும், பிற நூல்களையும் 'புரூப்' படிக்கும் போதே, பிரமித்து விட்டேன். இவருடைய எழுத்தைப் பற்றி எழுத எனக்கு தகுதி இருக்கிறதோ, இல்லையோ! ஆனால் வாசகர்களே! இதை படிப்பதற்கு உங்களுக்கு எல்லாத் தகுதிகளும் உண்டு. படியுங்கள்! ரசியுங்கள்! 75 வயதையும் தாண்டி இன்றும் உற்சாகத்துடன் எழுதும் ரா.கி. ரங்கராஜன் அவர்களை மேலும் உற்சாகப் படுத்துங்கள்.

**'அல்லயன்ஸ்' ஸ்ரீநிவாசன்.**

# முன்னுரை

ஒரு பெரிய கதைக்குள் சில சின்னக் கதைகள் இருக்கும் வகையில், 'கோஸ்ட்' என்ற நாவலை எழுதினேன். அதற்கு நல்ல வரவேற்பு இருந்ததால் அதே டெக்னிக்கில் இந்த நாவலை எழுதினேன். டிவி நிலையத்தின் செயற்பாடுகள், கோர்ட் நடவடிக்கைகள் குறித்துப் பலர் விவரங்கள் தெரிவித்ததால் சுவைபட எழுத முடிந்தது.

அழகிய முறையில் புத்தகமாக வெளியிட்டுள்ள அல்லயன்ஸ் நிறுவனத்துக்குப் பாராட்டு நன்றி.

ரா.கி. ரங்கராஜன்

மார்ச், 2003
சென்னை–40.

## எஸ்.வி.வி.
### எழுதிய நூல்கள்

1. *ராமமூர்த்தி*
2. *கோபாலன் ஐ.ஸி.எஸ்.*
3. *உல்லாச வேளை*
4. *சம்பத்து*
5. *ராஜாமணி*
6. *ஸௌந்தரம்மாள்*
7. *வசந்தன்*
8. *பொம்மி*
9. *தீபாவளிக் கதைகள்*
10. *வாழ்க்கையே வாழ்க்கை*
11. *செல்லாத ரூபாய்*
12. *சிவராமன்*
13. *புதுமாட்டுப் பெண்*
14. *சபாஷ்! பார்வதி!*
15. *ஹாஸ்யக் கதைகள்*
16. *ரமணியின் தாயார்*
17. *Thirty years a lawyer*
18. *Much Daughtered*
19. *Soap Bubbles & More Soap Bubbles*
20. *The Marriage*
21. *Mosquitoes at Mambalam*
22. *Holiday Trip*
23. *Chaff and Grain*
24. *At a Dinner*
25. *Laugh with S.V.K. (S.V.K.)*

*(மேலும் பல...)*

# க்ரைம்

## 1

'**செய்**திகள்' வாசிப்பதற்காகப் பாலா தன் மேஜையடியில் வந்து உட்கார்ந்த போது, இன்னும் பதினைந்து நிமிடத்துக்குள் தனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்படப் போகிறது என்று அறிந்திருக்கவில்லை. அப்பாவுடன் விளையாட்டும் வேடிக்கையுமாகச் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கையில் ஒரு பிரளயம் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்க்கவில்லை. கால் மணி முன்னதாகவே வந்திருந்து, நியூஸ் எடிட்டர் தயாரித்துப் புரொட்யூசர் கொடுத்திருந்த 'செய்திகள்'பிரதியை ஒரு முறை படித்துப் பார்த்துக் கொண்டாள். ஒவ்வொரு செய்திக்கும் ஒவ்வொரு காகிதம் தனித் தனியாக இருந்தது. இரண்டாவது காகிதத்தில் 'பிரதம மந்திரி' என்பதற்குப் பிரதம பந்திரி' என்று டைப்பாகியிருந்ததைக் கண்டுபிடித்து, பேனாவினால் ஒரு 'ம' போட்டுக் கொண்டாள்.

கடியாரம் ஏழு நாற்பத்தேழு காட்டியது. இன்னும் பதின்மூன்று நிமிடங்கள் இருந்தன. மேஜை மீதிருந்த இரண்டு மைக்குகளும் தலைநீட்டி அவள் முகத்தை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தன. காஷுவல் நியூஸ் ப்ரஸென்ட்டராக அவள் டி.வி. நிலையத்தில் சேர்ந்த இந்த ஆறு மாத காலத்தில் அவள் செய்திகள் வாசிப்பது இது பத்தொன்பதாவது முறை. ஆகவே எல்லாம் அத்துபடியாகியிருந்தது அவளுக்கு.

எதிரேயிருந்த டெலிவிஷன் பெட்டி ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பதைக் காட்டியது.. அது முடிந்ததும் 'செய்திகள்' என்ற அட்டையைப் போட்டு, உடனே அவள் மெல்லத் தலை நிமிர்த்தி இள முறுவலுடன் ஒரு வணக்கம் சொல்லிவிட்டு...

ஆயிரக்கணக்கான இல்லத்தில் தன் முகத்தையும் தன் குரலையும் பிரியத்துடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதை எண்ணுகையில் அவள் நெஞ்சுக்குள் ஒரு பெருமை எழுந்தது. அதிலும் நிச்சயமாய் அப்பா, நாற்காலியை.இன்னும் கொஞ்சம் டி.வி.க்கருகே இழுத்துப் போட்டுக்கொண்டு அவள் முகத்தையே உன்னிப்பாகப் பார்ப்பார்.வீட்டுக்குத் திரும்பியதும் 'உன் கன்னத்தின் மேல் ஒரு கொசு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேனே!' என்று வேண்டுமென்றே கலாட்டா செய்வார். 'அது கொசு இல்லேப்பா!மேக்கப் வுமன் வேண்டுமென்றே எனக்காக வைத்திருந்த திருஷ்டிப் பொட்டு' என்று பாலா திருப்பிச் சொல்லுவாள். இதுபோலத் தினம் ஏதாவது ஒன்று.

எப்போதும் போல் அதிக டார்க்காகவும் இல்லாமல் அதிக லைட்டாகவும் இல்லாமல் உடை அணிந்திருந்தாள். சிலுசிலுத்து நெற்றியில் விழுந்த கூந்தலைக் கோதி விட்டுக் கொண்டு நிமிர்ந்தபோது,கூரையில் ஒளவால் மாதிரி மந்தை மந்தையாய்த் தொங்கிக் கொண்டிருந்த விளக்குகளில் இரண்டைப் பளீரென்று எரிய விட்டார் காமராமேன். ஃப்ளோர் மானேஜரும், அஸிஸ்டெண்ட் ஃப்ளோர் மேனேஜரும் ஹெட்போனை மாட்டிக் கொண்டு நாற்காலியில் காலை நீட்டிக்கொண்டு எதிரே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு இரண்டு புறமும் காமெராமேன்கள் இருந்தார்கள். எல்லோருமே போரடித்துப் போய், அடுத்த நிகழ்ச்சிக்காக அலுப்புடன் காத்திருந்தார்கள்.

வலது பக்கம் உயரத்தில் கண்ணாடிச் சுவருக்குப் பின்னால் உள்ள அறையை நிமிர்ந்து பார்த்தாள். அந்த அறைக்கு என்ன பெயர் என்ற டெக்னிகல் விஷயங்கள் இன்னும் அவளுக்குப் புரிபடவில்லை. அந்த அறையின் உள்ளே இரண்டு பேர் நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருப்பது உண்டு என்று மட்டும் அவளுக்குத் தெரியும். அவர்களுடைய முகம் தெரியாத போதிலும் கண்ணாடிச் சுவர் வழியே, தன்னை வேடிக்கை பார்க்கும் இரண்டு மூன்று பேரின் உருவங்கள் தெரிந்தன. அடிக்கடி யாராவது சில பேர் பர்மிஷன் வாங்கிக்கொண்டு அந்த இடத்தில் வந்து நிற்பார்கள். போன வாரம் ஒரு பெரிய வடக்கத்திப் பட்டாளம் வந்திருந்தது. இன்று வந்திருப்பவர்களைப் பார்த்தால் ஆந்திரக்காரர்கள் மாதிரி தோன்றியது.

பாலா மறுபடி மணியைப் பார்த்தாள். ஏழு நாற்பத்து எட்டு. அறையெங்கும் நிசப்தம் ஆக்கிரமித்திருந்தது. பேசக் கூடாதென்று இல்லை. ஏனெனில் நிகழ்ச்சி ஆரம்பிக்க நிறைய நேரம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவர் ஒவ்வோர் எண்ணத்தில் மூழ்கின மாதிரி இருந்தார்கள்.

பாலா மறுபடியும் ஒரு முறை 'செய்திகள்' காகிதத்தைப் பார்த்தாள். இரண்டு மூன்று முறை படித்துப் பார்க்கையில் அவளையும் அறியாமல் அவளுடைய மெல்லிய உதட்டில் ஒரு புன்னகை பரவியது.

ஃப்ளோர் மானேஜர் அதைக் கவனித்திருக்க வேண்டும்.

''இன்று அத்தனை ஹாஸ்யமாக நியூஸில் என்னம்மா இருக்கிறது?''என்று கேட்டார்.

''இல்லை, என் அப்பாவை நினைத்துக் கொண்டேன். தமிழ் வாக்கியங்களை அவர் வேண்டுமென்றே சகிக்க முடியாமல் டிரான்ஸ்லேட் பண்ணுவார். அது ஞாபகம் வந்தது. கோரம்!'' என்று வாய்விட்டுச் சிரித்தாள் பாலா.

குலைய வைத்தது. அதே சமயம், அப்பாவுக்கு ஏதாவதாக இருந்தால் கூப்பிடுகிற குரலின் தன்மையே வேறு மாதிரி இருக்கும் என்று ஞாபகம் ஏற்பட்டு, மனத்தில் சிறிது ஆறுதல் உதித்தது.

''யார்....யார் பேசுவது?'' என்றாள்.

''லிஸன்'' என்றது மறுபடியும் அதே குரல். ''கவனமாய்க் கேள்.''

பாலாவுக்கு முதலில் பயம் ஏற்பட்டது. பிறகு யாரோ கிண்டல் செய்கிறார்களோ என்று எண்ணினாள். ''புரோக்ராமுக்கு ஐந்து நிமிஷம்கூட இல்லை. யார் நீங்கள்? சீக்கிரம் சொல்லுங்கள்'' என்றாள் கோபமாக.

''நான் யார் என்பதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ மாஜி போலீஸ் ஏ.ஸி. ஜனார்த்தனத்தின் மகள் என்பது தெரிந்துதான் பேசுகிறேன்.ரிடையரானதிலிருந்து உன் அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார் தெரியுமா?''

அவளுக்கு யோசிக்க நேரமில்லை. போனை வைத்து விடலாமா என்று நினைத்தாள். அந்தக் குரலிலிருந்த மிரட்டல்... அச்சுறுத்தல் - அவளைப் பணிய வைத்தது. ''என்ன..யார்'' என்று குழறினாள்.

''எனக்கும் நேரமில்லை. சீக்கிரமே சொல்லி விடுகிறேன். உன் அப்பா மெமாயர்ஸ் எழுதி வருகிறார். நினைவுகள் - அநுபவங்கள் - பிறகு புத்தகமாய்ப் போடப் போகிறார். அதில் எங்கள் குடும்பத்தைப் பற்றி வரக்கூடாது. தெரிகிறதா?''

பாலாவுக்கு மேலும் மேலும் தலை சுற்றியது. அப்பா என்னவோ எழுதுகிறார் - எதுவோ வரக் கூடாதென்று இந்த ஆள் சொல்கிறான். என்ன இதெல்லாம்?

''கேள். என் குடும்பத்தைப் பற்றி வரக்கூடாது. மாயப்பன் குடும்பம். புரிகிறதா? அது சம்பந்தமான குறிப்புகள் மொத்தத்தையும், காகிதம், டயரி எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி விடவேண்டியது உன் பொறுப்பு. புரிகிறதா? இல்லாவிட்டால் உன் அப்பாவின் உயிருக்கு நான் ஜவாபில்லை. அதையெல்லாம் எடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைப் பிறகு சொல்கிறேன்....''

இனிமேலும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று அவள் நினைத்த அதே சமயம், ஃப்ளோர் மானேஜர், ''பாலா! ஒன்லி ஃபைவ் மினிட்ஸ்! கமான்!'' என்று கதவைத் திறந்து கொண்டு வந்து கூப்பிட்டார்.

போனைத்திரும்ப வைக்குமுன் கடைசியாக அந்தக் குரல் சொல்வது அவள் காதில் விழுந்தது. ''பாக்கியும் கேள். என் பேச்சுக்கு நீ சம்மதித்தாய் என்று அடுத்த வாரம் எனக்குத் தெரியவேண்டும். உனக்கு அடுத்த புரோக்ராம் சனிக்கிழமை. இல்லையா? அன்று தலையில் ஒரே ஒரு வெள்ளை ரோஜா செருகிக் கொண்டு வா. டி.வி.யில் அதைப் பார்த்துப் புரிந்து கொள்கிறேன். ஓ.கே?''

ஃப்ளோர் மானேஜருடன் ஒரே தாவலில் தன் அறையை அவள் அடைந்தபோது, முகமெல்லாம் வியர்ந்து வழிந்து கொண்டிருந்தது. மேக்கப் வுமன் விசாலம் பத்து நிமிடம் மெனக்கெட்டு செய்திருந்த டச்சப் கெட்டுக் குட்டிச் சுவராகியிருந்தது. முகம் பேயறைந்த மாதிரி வெளிறி யிருந்தது. தன்னை அவள் சுதாரித்துக் கொள்ளு முன் டி.வி.யில் 'செய்திகள்' என்ற அட்டை போடப்படுவதைக் கண்டாள். ட்யூனின் ஒலியைக் கேட்டாள். பளீரென்று விளக்குகள் பிரகாசித்தன.

அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே ஃப்ளோர் மானேஜர் அவள் இன்று செய்தி வாசிக்க உபயோகப்பட மாட்டாள் என்று கண்டுகொண்டார். அடுத்த வாரம் எதிரொலியில் நூற்றுக்கணக்கான கடிதங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் – ஏன் பாலா அப்படி இருந்தாள், ஏன் அப்படிக் குழறித் தடுமாறினாள் என்றெல்லாம்.

துணைப் புரொட்யூசரும் அதே நிலைமையை அதே கணம் ஊகித்துக் கொண்டார். பாலாவைக் கையாலேயே சைகை காட்டிக் கதவருகே நிறுத்திவிட்டு, பாலாவின் மேஜை மீதிருந்த செய்திகள் பிரதியைக் கையில் எடுத்துக் கொண்டார். ''வணக்கம்...'' என்று படிக்கத் தொடங்கினார்.

யாரும் பெருமூச்சுக்கூட விட முடியாத அறை அது. காலியாயிருந்த நாற்காலியொன்றில் ஓசைப் படாமல் உட்கார்ந்தாள் பாலா. கைப்பையிலிருந்து மெல்லக் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

ஃப்ளோர் மானேஜர் மெல்ல அவளிடம் வந்து தோளைத் தட்டினார். வயதானவராகையால் அந்த உரிமை இருந்தது. கண்ணால் சாடை காட்டி, ''உனக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்குப் போ'' என்றார்.

அத்தனை பதட்டத்துக்கிடையில் ஒரு நிம்மதியுடன் அவள் எழுந்து கொண்டாள். சிறகு முளைத்துப் பறந்து உடனே வீட்டையும் அப்பாவையும் அடைந்து விட்டால் தேவலை என்றிருந்தது. இரண்டு ஃப்ளோர்களையும் கடந்து ரிஸப்ஷன் ஹாலுக்கு வருவதற்குள் பல பேர் எதிர்ப்பட்டு, 'ஏன்? என்ன? ஏன் நீ இன்றைக்கு நியூஸ் சொல்ல வில்லை? என்ன ஆயிற்று?' என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மெயின் கேட்டைக் கடந்து ஆடம்ஸ் ரோடுக்கு வந்தாள்.

கடற்கரையிலிருந்து சில்லென்ற குளீர் காற்று வீசியது. சாலையில் மின்சார விளக்குகள் எரியாமலிருந்தாலும், புதிதாகக் கட்டப்பட்ட ஓவர்ஸீஸ் டெலிகம்யூனிகேஷன் சென்ட்டருக்குள்ளிருந்து சிறு சிறு வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அதைக் கடந்து சென்றதும் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலிருந்து இன்னும் அதிக வெளிச்சம் கிடைத்தது. அங்கே நுழைந்து, சிறுவர் அரங்கத்தைக் கடந்து வாலாஜா ரோட்டை அடையலாம் என்று நினைத்தாள்.

''பூம்மா'' என்று குரல் அவளை நிறுத்தியது. எவளோ ஒரு பூக்காரி. கூடை நிறைய வெள்ளை ரோஜாப்பூக்கள்!

''வெள்ளை ரோஜாம்மா. கிடைக்கவே கிடைக்காது. ரூபாய்க்கு எட்டுப் பூ தர்றேன். வாங்கிக்க.''

இருட்டி வெகு நேரமாகி விட்ட இந்த நேரத்தில், மெரினாவுக்கு இவ்வளவு தள்ளிய இடத்தில், ஒரு பூக்காரியை சந்தித்தது கூட அவளுக்கு ஆச்சரியமில்லை. ஆனால் வெள்ளை ரோஜா! சில நிமிடங்களுக்கு முன்னால் டெலிபோன்காரன் சொன்ன வெள்ளை ரோஜா! அது ஏன் இவ்வளவு விரைவாகத் தன் வாழ்க்கையில் குறுக்கிட வேண்டும்? கெடுதலாக ஏதோ நடக்கப் போகிறது என்பதற்கு அடையாளமா?

விரைந்து நடையைப் போட்டாள்.

எம்.எல்.ஏ. ஹாஸ்டலைக் கடக்கையில், வெற்றிலை பாக்குக் கடைக்கு எதிரே நிறுத்தியிருந்த ஆட்டோக்காரர் ''எங்கேம்மா போகணும்?'' என்று அழைத்தார்.

ஏறிக்கொண்டு ''மயிலாப்பூர்'' என்றாள். ''கிழக்கு மாடவீதி.''

மாயப்பன்...மாயப்பன்...என்று அவள் உதடுகள் வழியெல்லாம் முணு முணுத்துக் கொண்டேயிருந்தன. யாரந்த மாயப்பன்? பேசியவன் பெயரே மாயப்பனா? அல்லது மாயப்பன் என்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனா?

ரிடையர் ஆனது முதல் அப்பா தினம் ஏதாவது எழுதுவதுண்டு என்று அவளுக்குத் தெரியும். வெறும் டயரி என்று நினைத்திருந்தாள். இருவருக்குமிடையே அந்தரங்கம் எதுவும் கிடையாது என்றாலும், தன் அனுபவங்களை, வாழ்க்கைக் குறிப்புக்களை, படித்ததும் கேட்டதுமான தொழில் நினைவுகளைத் தொகுத்துக் கொண்டிருப்பதாக அவர் சொன்னதில்லை. அவளும் அவருடைய அறையை அத்தனை தீவிரமாகக் குடைந்தது கிடையாது. எவனோ ஓர் அன்னியன் மூலமாக அதைத் தெரிந்து கொண்ட போது அவளுக்குத் தன் மீது வெட்கமும் அப்பா மீது கோபமும் ஏற்பட்டன. ஏன் இவருக்கு இந்த வயதில் இந்த வேலையெல்லாம்? இலக்கிய உலகம் அழுகிறதா இவர் எழுதவில்லையென்று? துப்பறியும் நாவல்களைப் படித்துக் கொண்டு, கேஸட்டுகளைக் கேட்டுக் கொண்டு ஹாய்யாய்ப் பொழுதைப் போக்காமல்...

ஆனால் அப்பா பெரும் ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்பது ஞாபகம் வந்ததும் அவள் கோபம் மறைந்தது. அவருக்கு எந்தக் கணம் என்ன நேருமோ என்று எண்ணுகையிலேயே அவளுக்குக் கண்ணில் நீர் கரித்தது. வேடிக்கையாகப் பேசும் அப்பா-விளையாட்டுப் பிள்ளையான அப்பா-உலகத்தில் தனக்கு இருக்கும் ஒரே பிடிப்பான அப்பா-அவருக்கு ஏதாவது நேர்ந்தால்...

ஆட்டோவை விட்டு இறங்கும்போதே உள்ளேயிருந்து வேகமாக வந்தார் ஜனார்த்தனம். ''ஏன் பாலா இன்னிக்கு நீ நியூஸ் படிக்கவில்லை? டி.வி.யில் வேறே யாரையோ பார்த்ததும் போன் பண்ணிக் கேட்டேன். நீ புறப்பட்டு

விட்டாய் என்று சொன்னார்கள். என்ன சமாசாரம்?'' என்று கடகடவென்று விசாரித்தார்.

''ஒன்றுமில்லை. திடீரென்று தலை வலித்தது.'' என்று சொன்ன வினாடியே அப்பாவிடம் எதுவும் சொல்லக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள் அவள். இருதய நோயாளி அவர். ஒரு முறை ஹார்ட் அட்டாக்குக்கு ஆளானவர். கண்டதைச் சொல்லி அவர் உள்ளத்தைக் குழப்பக்கூடாது. அது மட்டுமல்ல. என்னதான் விளையாட்டு வேடிக்கையான மனிதரென்றாலும், உள்ளுக்குள்ளே ஒரு கற்பாறையான சுவர் உண்டு. பிடிவாதம் ஜாஸ்தி. 'அவன் யாரவன் மாயப்பன்? என்னை இன்னது எழுது இன்னது எழுதாதே என்று சொல்ல? இரண்டிலொன்று பார்த்து விடுகிறேன்' என்று வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பினாலும் கிளம்புவார். அப்புறம் உலகத்தில் எந்தச் சக்தியாலும் அவரைத் தடுத்து நிறுத்த முடியாது.

சாப்பிட உட்கார்ந்த போது, ''காலையிலே சொன்னேனில்லையா, அதுதான் உனக்குத் தலைவலி. ஃபென்ஸ்கோயிங் கெமிலியான்..'' என்றார் ஜனார்த்தனன். பாலா போலியாகச் சிரித்தாள். 'ஓஜாரே ஓஜாரே ஓஜா' என்று அவர் இரைந்து ஒரு பழைய பாட்டைப் பாடியபடி சப்பாத்தியைச் சாப்பிட்ட போது அவள் தாளம் போடுகிற மாதிரி பாசாங்கு செய்தாள். தன் பதட்டத்தை மறைத்துக் கொள்வதற்காக, சமையல்காரப் பாட்டியிடம் அதிகமாகவே பேசினாள். தந்தையின் பார்வையைத் தவிர்த்தாள் கூடுமான வரையில்.

படுக்கும்போது அவர் அவள் நெற்றியிலும் கழுத்திலும் அமிர்தாஞ்சனம் தடவித் தேய்த்துவிட்டார். போர்வையைப் போர்த்திவிட்டு, 'ஒன்றும் படிக்க வேண்டாம்' என்று கூறித் தலைமாட்டு லைட்டை அணைத்துவிட்டுச் சென்றார். ஆனால் பாலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

அடுத்த சனிக்கிழமை அவள் ஒரு வெள்ளை ரோஜாவைத் தலையில் சூடிக்கொண்டு போனால்தான் ஒரு பெரும் அபாயத்தைத் தவிர்க்கலாம். சரி, அதற்குப் பின் என்ன நடக்கும்? அந்த மாயப்பன் என்ன சொல்வான்? புரண்டு புரண்டு படுத்தவள் நடுவே கண் விழித்தபோது அப்பாவின் அறையில் விளக்கு எரிவதைக் கவனித்தாள். மெதுவே எழுந்து போய் எட்டிப் பார்த்தாள். பழைய டைரிகளையும் புத்தகங்களையும் புரட்டிப் புரட்டிப்பார்த்து ஜனார்த்தனம் என்னவோ எழுதிக் கொண்டிருந்தார். ஆக,மாயப்பன் சொன்னது உண்மைதானா?

ஓசைப்படாமல் திரும்பி வந்து படுத்தவளுக்கு, கொஞ்ச நஞ்சமிருந்த தூக்கமும் போய்விட்டது. எந்தப் பிரசினையு மில்லாமல் குழந்தைத்தனமாக நடந்துகொண்டிருந்த தன் வாழ்க்கையில் திடீரென ஒரே இரவில் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது அவளுக்குத் தெரிந்தது. அந்தப் பெரும் பாரத்தைத் தன்னொருத்தியால் ஒண்டியாகத் தாங்கிக் கொள்ள முடியுமா? குழந்தைப் பிராயம் முதல் ஏற்றத்திலும் இறக்கத்திலும் துணைக்குக் கூப்பிட யாரும் இல்லாத நிர்க்கதியான நிலைமை அவளுள் அச்சத்தை உண்டாக்கியது.

யாரையாவது...யாரையாவது உதவிக்குப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு அவளுள் ஒரு புள்ளியாகக் கிளம்பி வர வர விசுவரூபம் எடுத்தது. அப்படி யார் இருக்கிறார்கள் என்று யோசித்தபோது உடனே அவளுக்குத் தோன்றிய முகம்...

சுதீர்!

ஆமாம், அவன் தான் சரி என்று ஒரு முறை தனக்குத் தானே சொல்லிக் கொண்ட பின்னர் பாலாவுக்குத் தூக்கம் வந்தது. ஆனால் அப்போதும் கூட முற்றிலும் அமைதியான நித்தரை என்று சொல்ல முடியாது.

★★★

சுதீர் சிரசாஸனம் செய்து கொண்டிருந்தான். காலை எட்டு மணி. உள்ளே நுழையும் பாலாவின் உருவம் தலை கீழாகத் தெரியவே 'ஹாய்!' என்று ஒரு கரணத்துடன் எழுந்து கொண்டான்.

அவன் அவளுடைய அத்தை பிள்ளை. இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமென்று சுதீரின் அம்மாவும் பாலாவின் அப்பாவும் முடிவு செய்திருந்த போதிலும், 'இந்த மூஞ்சியை எவன் கட்டிப்பான்?'' என்று அவனும், 'உலகத்திலேயே கடைசிப் பையனாக இருந்தால்கூட உன் கையால் தாலி கட்டிக்கொள்ள மாட்டேன்'என்று இவளும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது சும்மா உதட்டுப் பேச்சு என்று பெரியவர்களுக்குத் தெரியும். ஆகவே சிரித்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

''ஏய்!என்ன இந்த நேரத்தில்?'' என்றான் சுதீர் ஜட்டியின் மீது லுங்கியைச் சுற்றிக்கொண்டு. அவன் நந்தனம் கல்லூரியில் கெமிஸ்ட்ரி அஸிஸ்டென்ட் புரொபசர். ஆனால், ஆசிரியர் மாதிரி இல்லாமல், சினிமா ஹீரோ போல உடற்கட்டுடன் இருப்பான்.

''சுதீர்! உன்னிடம் ஒரு முக்கியமான காரியமாக வந்தேன்'' என்றவள் உள்புறம் பார்த்து, ''அத்தை இல்லை?''என்றாள்.

அவள் முகத்தில் அப்படியொரு கலவரத்தை அவன் இதுவரை பார்த்ததில்லை. ''என்ன விஷயம் பாலா? அம்மா காய்கறி வாங்கப் போயிருக்கிறாள்.''

'நல்லது. கிடுகிடுவென்று சொல்லிவிடுகிறேன்.'' கிடுகிடுவென்று சொல்லி முடித்தாள்.

சுதீர் பல நிமிடங்களுக்கு மௌனமாக இருந்தான். பிறகு, ''யாரோ ஜோக் பண்ணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றான்.

''நானும் அப்படி நினைக்கவில்லை.''

''அந்த மாயப்பன் சொல்கிற மாதிரி மாமா ஏதாவது எழுதிக் கொண்டிருக்கிறாரா? நீ பார்த்திருக்கிறாயா?''

''எழுதுகிறார். ஆனால் என்னவென்று நான் பார்த்ததில்லை.''

பல நிமிடங்களுக்கு அங்கே நிசப்தம் நிலவியது.

கடைசியில், ''மாமா இப்போதும் வாக்கிங் போகிறார் இல்லையா?''என்று கேட்டாள் சுதீர்.

''ஆமாம், தினம் தினம் போகிறார். சாயந்தரம் ஐந்து மணிக்குக் கிளம்புகிறார்.ஏழு மணிக்கு வருகிறார்.''

அவன் கீழுதட்டைக் கடித்துக் கொண்டு சொன்னான்: ''அந்த இரண்டு மணி நேரம் நாம் வேலை செய்ய வேண்டியதுதான்.''

''என்ன சொல்கிறாய் நீ?''

''மாயப்பன் என்பவன் சொன்னது நிஜம்தானா என்று செக்கப் பண்ணுவோம். மாமா என்ன எழுதிக் கொண்டிருக்கிறார் என்பதைப் படிக்க வேண்டியது தான்'' என்றான் அவன் உறுதியாக. ''நான் நாளை சாயந்தரம் ஐந்து மணிக்கு உன் வீட்டுக்கு வந்து விடுகிறேன். மாமா வெளியே கிளம்பிப்போனதும் நம் காரியத்தை ஆரம்பித்து விடலாம்.''

''தாங்க் யூ'' என்றாள் பாலா. அவனுடைய தெளிவான குரலைக் கேட்கக் கேட்க அவள் மனத்தில் ஒரு தைரியம் பிறந்தது.

அடுத்த நாள் மாலை ஐந்து மணிக்கு,திட்டமிட்டபடி ஜனார்த்தனத்தின் அறையை அவர்கள் ஆராயத் தொடங்கிய போது, அவர்கள் கையில் கிடைத்த முதல் நோட்டு-

"**கொ**டு! கொடு! எல்லாருக்கும் அள்ளி அள்ளிக்கொடு!" என்று உற்சாகமாக வேலைக்காரர்களுக்கு உத்திரவிட்டுக் கொண்டிருந்தார் பொன்னம்பலம். அவருடைய மாளிகையின் வாசலில் ஏழைகளின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. வருடப் பிறப்பை முன்னிட்டு அவர்களுக்குத் துணியும் தானியமும் நாணயங்களும் கணக்கின்றித் தானம் செய்து கொண்டிருந்தார் பொன்னம்பலம்.

மைல் கணக்கில் அவருக்கு எஸ்டேட் இருந்தது. முக்கியமாக, பருத்தி வியாபாரத்தில் அவர் கொடி கட்டிப் பறந்தார். பேய் மழையாய்க் கொட்டிக்கொண்டிருந்தது வருமானம். வைரமும் தங்கமுமாய் வாங்கி வாங்கி மாளிகையில் குவித்தார். அவருடைய வண்டி மாடுகளுக்குக் கொம்பில் தங்கக் கவசம் போட்டிருக்கும். சக்கரங்களுக்கு வெள்ளிப் பட்டயம் அடித்திருக்கும். அவருடைய குடும்பத்தினர் செக்கச் சிவக்க ஸில்க் குடைகளை பிடித்துக் கொண்டு தான் வெளியே வருவார்கள். எல்லாம் சீமையிலிருந்து இறக்கப்பட்டவை. மதுபானங்கள் கூட, லண்டனிலிருந்து விஸ்கியும், பாரிசிலிருந்து ஷாம்பேயினும் கப்பலில் வந்து இறங்கும்.

அந்தச் செல்வச் செழிப்பிலே பிறந்து வளர்ந்தவன் அவருடைய ஒரே மகன் அருணாசலம். ஆனால் அவன் வளர்ந்து பெரியவனாக ஆக, தந்தையின் செல்வம் நலிய ஆரம்பித்தது. பருத்தி வியாபாரம் தடாலென்று படுத்தது. ஊரெல்லாம் பிளேக்கும் மற்றக் கொள்ளை நோய்களும் பரவின.

பொன்னம்பலம் காலமாகி, அருணாசலம் தலையெடுத்த போது, அந்தக் குடும்பம் வெறும் பெருங்காயப் பாண்டமாக இருந்தது. சொத்தெல்லாம் விற்றான் அருணாசலம். அல்லது அடமானம் வைத்தான். நகைகள்,ஆடு மாடுகள்,பாத்திரம் பண்டங்கள் எல்லாம் மறைந்தன. குடிகாரனானான். தன்னுடைய ஆடம்பரப் பழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியாமல், உள்ளூரில் வட்டிக் கடை வீரய்யாவிடம் கடன் வாங்கத் தொடங்கினான். பத்திரத்துக்கு மேல் பத்திரமாய் எழுதித் தந்து தீவிர கடனாளியாக ஆனான். துன்புங்களைப் பொறுக்க முடியாமல் அவன் மனைவி இறந்து போனாள். கடைசியில் அருணாசலத்துக்கு மிஞ்சியது அவனுடைய ஐந்து வயதுக் குழந்தை பாலு ஒருவன்தான்.

தன் வாழ்க்கை விபரீதமான திசையில் செல்வது அருணாசலத்துக்கு நன்கு புரிந்தது. ஆனால் அதை மாற்றிக் கொள்ள அவனுக்குத் தெரியவில்லை.கடைசியில் ஒரு நாள் விபரீதமான எல்லையை அடைந்தான்.

## 2

**அ**ன்று நாள் பூரா மழை பெய்து கொண்டிருந்தது. வானளாவ வாழ்ந்து விட்டுச் சாக்கடை அளவுக்குத் தாழ்ந்து விட்ட அருணாசலத்தின் குடும்ப நிலைமையைப் பார்த்து பூமி கண்ணீர் பெருக்கின மாதிரி தெருவெங்கும் தண்ணீர்த் தாரைகள் சின்னச் சின்ன வாய்க்கால்களாக ஓடின. அருணாசலம் தன் தாத்தா காலத்துப் பழைய சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி பிராந்தியை ஊற்றி ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தான். கூடுவாய் முனைகளில் மழைநீர் சோவென்று கொட்டுவது ஓய்ந்து,யோசித்து யோசித்து ஒவ்வொரு சொட்டாக ஒழுகிக் கொண்டிருந்தது.

வட்டிக் கடை வீரய்யா அன்று இறுதியாக கெடு சொல்லிவிட்டுப் போய்விட்டார். பத்து நாள் கெடு.

''அப்பா...'' என்று ஒரு பிஞ்சுக் குரல் அவனை அழைத்தது.

பிராந்தி உறிஞ்சுவதை நிறுத்திக் கொண்டு, சிவந்த விழிகளால் ஏறிட்டுப் பார்த்தான்.

அருணாசலத்தின் ஒரே பிள்ளையான பாலுதான், கூப்பிட்டான். ஏழு வயதாகிறது. அப்பாவை இந்தக் கோலத்தில் பார்த்துப் பார்த்து அவனுக்குப் பழக்கமாகி விட்டது.

பையன் மென்று விழுங்கினான். ''ஒண்ணுமில்லேப்பா ...ட்யூஷன் வாத்தியாருக்குச் சம்பளம் தரணுமாம்... மூணு மாசமாத் தரலையாம்...கேட்டார்...'' என்று அவன் சொல்லும்போதே அருணாசலத்துக்குச் சுரீரென்று கோபம் வந்தது.

''ராமையா! ஓய் ராமையா!'' என்று உள்புறம் நோக்கி ஒரு சத்தம் கேட்டதும்,நடுநடுங்கிப் போன ஓர் ஒல்லியான கந்தல் கோட்டு உருவம் பயந்து பதுங்கி மெல்ல வெளியே வந்தது.

''இப்படி வாரும் ஓய் என் முன்னாலே!''என்று உறுமினான் அருணாசலம். அவர் வந்தார் அங்குலம் அங்குலமாக நகர்ந்து.''ஏன் ஓய், என்ன ஒரு தைரியமிருந்தால் குழந்தைகிட்டே சம்பளம் கேட்டனுப்புவீர்? உம்முடைய ஒன்றரையணாக் காசைத் தூக்கியெறிய முடியாத தரித்திரத்திலே நான் இருக்கேன்னு நினைத்து விட்டீரா? சொல்லும் ஓய்!''

''ஐயையோ! சமூகத்திலே அப்படியெல்லாம் நினைக்கக்கூடாது.நான் ஏதோ...''

''கீழ்ச் சாதிப் பயல்களும் பஞ்சைப் பன்னாடைகளும் படிக்கிற பள்ளிக்கூடத்திலே என் பிள்ளை படிக்கக் கூடாது என்றுதானே அவனை வீட்டில் வைத்துப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறேன்? அதற்காகத் தானே உமக்கு மாசம் பத்து ரூபாய் சம்பளம் அளக்கிறேன்? சொல்லு ஐயா!''

''ஆமாம். நான் இல்லைன்னு சொல்லலீங்களே? கொஞ்சம் வீட்டிலே கஷ்டம்...''

''கஷ்டம்னா கூவத்திலே போய் முட்டிக் கொள்ளும்!'' என்றான் அருணாசலம்.

''இனிமேல் இந்த மாதிரி தப்பு செய்யவே மாட்டேன். சமூகத்திலே மன்னிக்கணும்'' என்று சொல்லிவிட்டு, குடையை அக்குளில் இடுக்கிக்கொண்டு நழுவினார்.

அருணாசலம் பிராந்தியை உறிஞ்சுத் தொடங்கினான். தன்னுடைய சவடாலுக்கு இந்த ஆசிரியரும் இவரைப்போல இன்னும் சிலரும் பயந்து நடுங்கி வேலை செய்வதை எண்ண அவனுக்குப் பெருமையாயிருந்தது. ''சோற்றுக்கு லாட்டரி அடிக்கிற பயல்கள்! திமிர் வேறே!'' என்று திட்டிக் கொண்டே மகனைப் பார்த்தான்.

முற்றத்தில் தேங்கியிருந்த மழை நீரில் காகிதக் கப்பல் பண்ணி மிதக்க விட்டுக் கொண்டிருந்தான் பாலு. தலையில் பளபளவென்ற சரிகைக் குல்லா. பட்டு வேட்டி, பட்டுச்சட்டை, பட்டுக்கோட்டு. காதில் வைரக் கடுக்கன், இரண்டு கையிலும் கெட்டியான தங்கக் காப்பு,காலில் கொலுசு. அசல் பவுனில் அரைஞாண். கழுத்தில் பவுன் சங்கிலி.

மது கிளாஸை வைத்துவிட்டுப் பையனை நெருங்கினான் அருணாசலம். அவன் தலையை மெல்ல

வருடிக் கொடுத்தான். இத்தனை சின்னப் பையனுக்கு எதற்காக இவ்வளவு நகைகள்? இதையெல்லாம் விற்றால்...

சட்டென்று இறந்து போன மனைவி வேலம்மை அவன் கண்முன்னே தோன்றினாள். 'வேண்டாங்க...' என்று இருகரம் கூப்பி அவள் கெஞ்சுகிற மாதிரி இருந்தது. உயிர் பிரிவதற்குக் கொஞ்ச நாள் முன்பு, ''எவ்வளவோ சொத்தை விற்றீர்கள். அழித்தீர்கள். நாசம் பண்ணீர்கள். நான் எதற்கும் எதுவும் சொல்லவில்லை. ஆனால் பாலுவுக்குப் போட்டிருக்கிற நகைகளை மட்டும் என்ன கஷ்டம் வந்தாலும் எடுக்காதீர்கள். என் அப்பா கொடுத்தது அதெல்லாம். அவன் உடம்பிலேயே இருக்கட்டும்...'' என்று அவள் சொன்னது அவன் காதில் விழுந்தது.

குழந்தையின் கழுத்துச் சங்கிலி மீது வைக்கவிருந்த கையை அகற்றிக் கொண்டான். கூடவே சிரிப்பும் வந்தது. இவ்வளவு நகைகளையும் கழற்றி எடுத்துப் போய் விற்றால் கூட மூவாயிரம் நாலாயிரம் ரூபாய் தேறாது. அவனுடைய கடன் மலைக்கு முன் அது எந்த மூலை?

''சரி,சரி. நீ வாசலில் போய் விளையாடிக் கொண்டிரு'' என்று குழந்தையை அனுப்பி வைத்தான்.

அது சின்ன ஊர்தான். மொத்தம் பத்துத் தெருக்கள் தான் இருக்கும். சிறுவன் பாலுவுக்கு எங்கே போனாலும் வீட்டுக்குத் திரும்பி வர வழி தெரியும். ஆகவே தைரியமாய்ப் பக்கத்துத் தெருவுக்குப் போனான். அங்கே அவனுடைய தோழன் வீட்டில் இல்லை. இன்னொரு தெருவுக்குப் போனான். அங்கேயும் அவனுடைய தோழன் வெளியூர் போயிருந்தான்.

அப்படியே ஐந்தாறு தெருவில் சுற்றியவன் கடைசியில் பெட்டிக் கடைக்காரரின் வீடும் கடையும் இருந்த தெருவை

அடைந்தான். அவர் வீட்டை நெருங்கியபோது நின்றிருந்த மழை மறுபடியும் பிடித்துக் கொண்டது. மழையில் நனைவது ஆனந்தம்தான். ஆனால் அப்பாவிடம் அடிவாங்க நேரிடும் என்று அஞ்சி அகப்பட்ட இடத்தில் ஒதுங்கிக்கொண்டான்.

அது வீரய்யாவின் கடை என்று அவனுக்குத் தெரியாது. ''யார்ராது தம்பி?ஏன் அப்படி நனைஞ்சிட்டு நிற்கிறே? இப்படி வா'' என்றார்.

குழந்தைகளுக்கே உரிய கூச்சத்துடன் பாலு உள்ளே வந்தான். வீரய்யா தன் தொழிலில் தான் முரட்டுத்தனமும் கண்டிப்பும் உடையவரே தவிர, இளகிய மனமுடையவர். மூன்று தாரம் கட்டிக்கொண்டும் குழந்தைப் பாக்கியம் பெறவில்லை. ஆகவே எந்தக் குழந்தையானாலும் இனிமையாகப் பேசுவார். கொஞ்சுவார்.அதுவும் பாலு தங்க விக்ரகம் போன்ற சிவந்த நிறத்துடன், துரு துருத்த கண்களுடன்,சுருட்டை மயிருடன், கொழுக்மொழுக்கென்று அழகாயிருந்தான். அவனிடம் அவருக்குப் பாசம் பொங்கி வந்ததில் ஆச்சரியமென்ன?

''சொர்ணம்,இந்தப் பிள்ளை யார் பார்?''என்று வீரய்யா குரல் கொடுக்க,உள்ளேயிருந்து அவருடைய மூன்றாவது மனைவி வந்தாள். வட்டிக் கடைக்காரருக்கு அந்த ஊரிலுள்ள ஆண்களை மட்டும் தான் தெரியும். அவர் மனைவி சொர்ணத்துக்கோ எல்லாப் பெண்களையும் எல்லாக் குடும்பத்தினரையும் தெரியும்.

''அட, பாலு இல்லே?'' என்றவள், ''இந்தப் பையன் அருணாசலத்தின் மகன்'' என்று கணவனிடம் தெரிவித்தாள்.

தன்னுடைய கடன்காரரின் மகன் என்று தெரிந்தும் வீரய்யாவுக்குக் கோபமோ வெறுப்போ ஏற்பட்டு விடவில்லை. எந்தக் குழந்தையாக இருந்தாலும் சிநேகிக்கிறவர் அவர்.

''பையனுக்குத் தின்கிறதுக்கு ஏதாவது கொண்டு வந்து கொடு'' என்று மனைவிக்குக் கட்டளையிட்டார். சொர்ணம் உள்ளே போய்க் கொஞ்சம் இனிப்பு எடுத்து வந்தாள். ''சாப்பிடு தம்பி, வெல்லப் பணியாரம்'' என்று கொடுத்தாள்.

பாலு கொஞ்சம் தயங்கிவிட்டு இனிப்புப் பண்டத்தின் ஆசையினால் எடுத்துக் கொண்டாள். தண்ணீரும் கொடுத்தாள். அதற்குள் இருட்டி விட்டது.

வீரய்யா, வேலையாளைக் கூப்பிட்டு, சிறுவனை அருணாசலத்தின் வீட்டில் பத்திரமாக ஒப்படைத்துவிட்டு வரும்படி சொன்னார். அந்த வேலையாளுடன் பாலு, வீட்டை அடைந்தபோது அருணாசலம் அவனைப் பற்றி கவலைப்படவுமில்லை, தேடிக் கொண்டிருக்கவுமில்லை. வீரய்யாவின் கடை ஆளைப் பார்த்ததும் கடனைக் கேட்கத்தான் வந்திருக்கிறான் என்று நினைத்தான். அவன் அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல், ''குழந்தை அங்கே வந்திருந்திச்சு. முதலாளி கொண்டு விட்டுட்டு வரச் சொன்னார்'' என்று மட்டுமே சொல்லி விட்டுத் திரும்பிப் போய் விட்டான்.

''அந்த மாமா ரொம்ப நல்லவர் அப்பா. எனக்கு இனிப்பெல்லாம் கொடுத்தார்'' என்றான் பாலு.

அங்கே ஏன் போனாய் என்று அருணாசலம் கேட்கவில்லை. போகக் கூடாதென்று தடை விதிக்கவுமில்லை. ஆகவே பாலுவுக்குத் தைரியம் ஏற்பட்டது. மறுநாளும் அதற்கடுத்த நாளும், சில சமயம் ஒரே நாளில் இரண்டு மூன்று தரம்கூட வீரய்யாவின் கடைக்குப் போகத்தொடங்கினான். அவரிடம் இனிப்பு வாங்கிச் சாப்பிட்டான். அங்கேயே சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தான். இப்படியே பதினைந்து இருபது நாள்

சென்றது. இதெல்லாம் தெரிந்தும் அருணாசலம் மகனை ஒன்றும் சொல்லாமல் இருந்து வந்தான்.

இதற்கிடையே வீரய்யா கொடுத்திருந்த பத்து நாள் கெடு தீர்ந்து மேலும் இருபது நாள் போய்விட்டது. வீரய்யாவுக்குப் பொறுக்கவில்லை.

அன்று அருணாசலத்தின் வீட்டுக்கே நேரில் வந்து விட்டார். ''இதோ பார்! உன் மானம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள உத்தேசம் உண்டானால் நாளையே எப்படியாவது காலணா பாக்கியில்லாமல் கடனை அடை. இல்லாவிட்டால் நான் நேரே கோர்ட்டுக்குப் போவேன். டிக்ரி வாங்கி, அமீனாவை வைத்து ஜப்தி செய்வேன். சொல்லிவிட்டேன்'' என்று கண்டிப்புடன் சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டார்.

அருணாசலம் அவருக்குப் பதிலேதும் சொல்லவில்லை. எதுவும் நடவாத மாதிரி அவர் எதிரிலேயே குடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவர் போன பிறகும் மதுக் கிண்ணம் அவன் கையை விட்டு இறங்கவில்லை.

ஆனால் தன் மானம் போய்விடும் என்பது மட்டும் அவனைச் சற்றுக் கலக்கம் கொள்ள வைத்தது. இரட்டை மாட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு பக்கத்துக் கிராமத்துக்குப் போனான். அங்கே அவனுடைய பெரியப்பா நல்ல வசதியில் இருந்தார். அவரிடம் தன் நெருக்கடியைச் சொல்லிப் பண உதவி கேட்டான்.

அவர் கடித்துக் குதறினார் அவனை. ''என் முன்னாலே வந்து நிற்க உனக்கு என்ன யோக்யதை இருக்கிறது? குடும்பத்தின் கௌரவத்தையே கெடுத்தவன் நீ. செத்து ஒழிந்தால் எவ்வளவோ நல்லது. என்னிடம் தம்படி கூட எதிர்பார்க்காதே'' என்று கண்டபடி திட்டி விட்டார்.

மீண்டும் மீண்டும் மன்றாடிப் பார்த்தான். மேலும் மேலும் திட்டு கிடைத்ததுதான் மிச்சம். தோல்வியுடன் ஊர் திரும்பினான்.

அன்று இரவு மணி பதினொன்றரையைத் தாண்டி விட்டது. குளிர் காலமாகையால் ஊரில் எல்லாரும் எட்டு மணிக்கே படுத்து விட்டார்கள். எட்டுத் திசையிலும் நிசப்தம் நிலவியது.

வீரய்யா மட்டும் தனது அறையில் உட்கார்ந்து கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொண்டு விழித்திருந்தார். கதவுகளை நன்கு சாத்தியிருந்தும் சில்லென்று குளிர் வீசிக் கொண்டிருந்தது.

அவருடைய அலுவலக அறை தெருப் பக்கமாக இருந்தது. பின்புறம் மிகவும் தள்ளி இரண்டாவது கட்டில், அவருடைய குடும்பத்தினர் மற்ற அறைகளில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். வீட்டைச் சுற்றித் தோட்டமும் மாட்டுக் கொட்டிலும் இருந்தன. எங்கும் நிசப்தம்தான். பொதுவாகவே வீரய்யா, எல்லா வட்டிக்காரர்களையும் போல் இரவு வெகு நேரம் வரை விழித்துக் கொண்டிருப்பது வழக்கம் தானென்றாலும் இன்று இன்னும் சற்று அதிக நேரம் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். காரணம் அடுத்த வாரம், கலெக்டர் நடத்தவிருந்த ஜமாபந்தியில் ஒருவேளை அவரைக் கூப்பிட்டனுப்பிக் கணக்கு வழக்குகளைக் கேட்டாலும் கேட்பார். சில சமயம் இவர் கொடுக்கிற் தானியங்களையும் பழங்களையும் கறிகாய்களையும் வாங்கிக்கொண்டு பேசாமல் போய் விடுவதுமுண்டு. சில சமயம், அவைகளையும் பெற்றுக்கொண்டு கணக்குகளுக்காகக் குடைவதுமுண்டு. பாழும் வெள்ளைக்காரன் ஆட்சியில் என்ன நடக்கும், என்ன நடக்காது என்று யாரால் சொல்ல முடியும்?

கனத்த பேரேடுகளை மூடி வைத்துவிட்டு, கரென்ஸி நோட்டுக்களையும் சவரன்களையும் தண்டவாளப் பெட்டியில் வைத்து மூடுகையில்...

யாரோ வாசல் கதவைத் தட்டுகிற மாதிரி சத்தம் கேட்டது.

வீரய்யா சிறிது நிதானித்தார். எலி கிலியாக இருக்குமோ? இல்லை. மறுபடியும் மெல்லக் கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது.

எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

வெளியே, முகம் முழுவதும் பரந்த புன்னகையுடன் அருணாசலம் நின்றிருந்தான்.

வீரய்யாவுக்குத் திகைப்பு. கொஞ்சம் பயம்கூட ஏற்பட்டது.

''அருணாசலமா... என்ன இந்த வேளையில்...'' என்றார்.

''உமக்குத் தெரியாதா வீரய்யா? மூன்று பேருடைய வீட்டுக் கதவை எந்த வேளையிலும் யார் வேண்டுமானாலும் தட்டலாம். ஒன்று தாசி வீடு, இன்னொன்று மருத்துவர் வீடு. மூன்றாவது வட்டிக் கடைக்காரர் வீடு.''

வழக்கமான குடிபோதையில் இருக்கிறானா, சுய உணர்வில் இருக்கிறானா என்று அவரால் கண்டுகொள்ள முடியவில்லைல. அவனை உள்ளே விடலாமா வேண்டாமா என்று அவர் தயங்கிக் கொண்டிருக்கையிலே அவரைத் தாண்டிக் கொண்டு அவன் நுழைந்தான். குட்டி மேஜைக் கெதிரே காலைச் சப்பணமிட்டுக் கொண்டு கம்பீரமாக அமர்ந்தான். வீரய்யா வேறு வழியின்றி அவனெதிரே வந்து

உட்கார்ந்தார். ''என்ன வேண்டும்? எதற்காக இந்த ராத்திரி வேளையில் வந்திருக்கிறாய்?''என்றார்.

''என்ன வீரய்யா, தெரியாத மாதிரி கேட்கிறீர்? வட்டிக் கடைக்காரரிடம் எதற்காக ஒருத்தன் வருவான்?''என்று அவன் சிரித்தான்.

''இதோ பார், இனிமேலும் உனக்குக் கடன் கொடுக்க நான் பைத்தியமில்லை. உனக்குத் தந்திருந்த கெடுவும் முடிந்துவிட்டது. மேற்கொண்டு அவகாசம் கொடுக்க நான் முட்டாளுமில்லை,''

அருணாசலம் மறுபடியும் சிரித்து,''வீரய்யா. உனக்கு மூளை ஒரே பாதையிலேயே போகிறது. கடன் கேட்கவோ அவகாசம் கேட்கவோ தான் நான் வந்திருக்க வேண்டுமா? ஏன், உம்முடைய கடனை அசல் வட்டி மொத்தமும் கொடுத்துக் கணக்குத் தீர்ப்பதற்காக வந்திருக்கக் கூடாதா?''

வீரய்யாவின் முகம் மலர்ந்தது. அதே சமயம் சந்தேகமும் ஏற்பட்டது.''வெறும் கையை வீசிட்டு வந்திருக்கிறாயே?'' என்றார்.

''அதைப்பற்றி உமக்கேன் கவலை? என் கடன் பத்திரங்களையெல்லாம் எடும்.''

அவனுடைய குரலில் இருந்த தெளிவும் கண்டிப்பும் வீரய்யாவின் சந்தேகத்தைப் போக்கி விட்டன. ''நேற்று வரை ஒரு தம்படி கூட இல்லையென்று சொன்னாயே இன்று எங்கேயிருந்து திடீரென்று கிடைத்தது?'' என்றார்.

''பக்கத்துக் கிராமத்தில் என் பெரியப்பா இருக்கிறாரே, அவரிடம் போயிருந்தேன். முதலில் காலணா கூடத் தரமாட்டேனென்று சொல்லிவிட்டார். பிறகு என்னவோ இரக்கம் ஏற்பட்டு கொஞ்சம் முன்னாடிதான் அனுப்பி வைத்தார். நீர் பத்திரங்களை எடும்'' என்றான் அவன்.

தண்டவாளப் பெட்டியை திறந்து வீரய்யா அவன் சம்பந்தப்பட்ட பத்திரங்கள் அனைத்தையும் எடுத்தார். அருணாசலத்திடம் தந்தார். எல்லாவற்றையும் அவன் சரிபார்த்து மடித்து வைத்துக் கொண்டான்.

வீரய்யாவுக்கு மறுபடி அச்சம் ஏற்பட்டது. ''பணம் எங்கே?'' என்றார்.

''பார்த்தீரா,அதற்குள் மறுபடி சந்தேகப்படுகிறீரே? தான் பணம் கொடுத்தனுப்பிய விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம் என்று என் பெரியப்பா சொல்லியனுப்பி யிருக்கிறார். ஆகையால் நானும் ரகசியமாகவே எடுத்து வந்தேன். இங்கே உம்முடன் யாராவது வேலையாள் இருக்கப் போகிறார்களோ என்று தோன்றியது. தோட்டத்திலேயே மாட்டுக் தொட்டிலில் வைத்து விட்டு வந்தேன். வாரும்,எடுத்துத் தருகிறேன்.''

கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த லாந்தர் விளக்கை அவிழ்த்துக் கையில் எடுத்துக் கொண்டார் வீரய்யா. அருணாசலம் முன்னே செல்ல அவர் பின் தொடர்ந்தார்.

ஏதாவது சதி செய்கிறானோ என்ற அச்சம் மனத்தின் ஒரு மூலையில் எழுந்தபோதிலும், அசலும் வட்டியுமாக ஏராளமான பணம் - அனேகமாக இனி கிடைக்கவே போவதில்லை என்று எண்ணியிருந்த பணம் - திரும்பக் கிடைக்கப் போகிறது என்பதை நினைக்கையில் அவருக்குப் பூரிப்பு ஏற்பட்டது. கும்மென்று பரவியிருந்த இருட்டை லாந்தர் விளக்குப் பிளக்க,ஹோவென்று சூழ்ந்திருந்த நிசப்தத்தை அவர்களுடைய காலடியோசைகள் கலைத்தன.

வெளியே அடை மாதிரி இருட்டு காத்துக் கொண்டிருந்தது. உருவமில்லாத அரக்கன் போலத் தோட்டம் ஹோவென்று படர்ந்து தெரிந்தது. தென்னைகளும் மாமரங்களும் புளிய மரங்களும் கிளைகளைச் சலசல வென்று அசைக்கும்போது, அந்த அசைவுகளும் அதனாலேற்பட்ட ஓசைகளும் வீரய்யாவைக் கிலி கொள்ளச் செய்தன. சில்லென்று வீசிய காற்றில் அவர் கையிலிருந்த லாந்தர் விளக்கு குப்குப்பென்று வெளிச்சத்தைக் குதிக்க வைத்தது.

ஏற்கெனவே சற்றுத் தயக்கத்தில் இருந்த வீரய்யாவுக்கு இப்போது அச்சம் ஏற்பட்டது. கொஞ்சம் நின்றார்.

''என்ன தயக்கம், வாருங்கள்'' என்று அழைத்தான் அருணாசலம். அவனுடைய சகஜமான குரலும் சிரிப்பும் அவருக்குத் தைரியம் கொடுத்தன.

''கொஞ்சம் நில்லு'' என்றார் மெதுவான குரலில், ''எதற்காக இந்த ரகசியமெல்லாம் என்று பார்க்கிறேன். காலையில் வைத்துக் கொள்ளலாமே?''

அருணாசலம் அருகில் வந்து அவர் தோள்மீது கை போட்டான். ''வீரய்யா, பார்த்தீரா உம்முடைய தொழிலுக்கு உள்ள சந்தேக புத்தியை விடமாட்டேன் என்கிறீரே? எல்லாம் ஒரு காரணமாய்த்தான் சொல்கிறேன்.''

''அதுதான் என்ன காரணம் என்கிறேன்.''

''என் பெரியப்பாதான் எனக்குப் பண உதவி செய்கிறார் என்று சொன்னேன், இல்லையா?''

''ஆமாம்.''

''இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாமென்று அவர் ரொம்பவும் எச்சரிக்கை செய்திருக்கிறார்.''

''ஏன்?''

''நீங்கள் வட்டிக் கடைக்காரராயிருக்கிறீர், செல்வந்தராயிருக்கிறீர், இது கூடப் புரியவில்லையே உங்களுக்கு? கவர்மெண்டுக்குத் தெரியாமல் ஏராளமாய்த் தங்கக் கட்டிகள் சேமித்து வைத்திருக்கிறார் அவர். அதில்தான் எனக்குக் கொஞ்சம் தந்திருக்கிறார்.''

''தங்கக் கட்டிகளா?'' வீரய்யாவின் கண்கள் பளபளத்தன.

''ஆமாம். இன்னும் சொல்லப் போனால், என் கடனுக்கும் வட்டிக்குமாய் உமக்கு எவ்வளவு சேர வேண்டுமோ அதைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாகவே கூட இருக்கும் அந்தத் தங்கக் கட்டிகள். ரூபாய் அணா பைசா மாதிரி கணக்குப் பார்த்தா வெட்டித் தர முடியும்? உமது அதிர்ஷ்டம் அதிகமாகவே கிடைக்கப் போகிறது.''

லாந்தரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆசையுடன் நடந்தார் வீரய்யா.

''சரி அதை எங்கேதான் வைத்திருக்கிறாய்?''

''உங்கள் தோட்டத்தின் மூலையில் ஒரு மாட்டுக் கொட்டில் இருக்கிறதே, அங்கே. வாருங்கள் ஓசைப்படாமல்.''

கீழே பரவியிருந்த காய்ந்த சருகுகள் அவர்கள் காலடியில் சரக் சரக்கென நொறுங்கின. லாந்தரின் வெளிச்சம் பேய் போல இங்குமங்கும் தாவித் தாவிச் சென்றது.

மாட்டுக் கொட்டிலை அடைந்தார்கள்.

இரண்டு கொட்டில்கள் இருந்தன. ஒன்றில் பசு மாடுகள் கட்டப்பட்டிருந்தன. இன்னொன்றில் வைக்கோலும், புல்கட்டும், பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை மூட்டைகளும் வைக்கப்பட்டிருந்தன. அசைபோட்டுக் கொண்டிருந்த பசுவொன்று விளக்கு வெளிச்சத்தைக் கண்டு 'ம்மா!' என்று கத்திவிட்டு ஓய்ந்தது.

''உள்ளே போங்கள்'' என்றான் அருணாசலம், வைக்கோல் வைக்கப்பட்டிருந்த கொட்டிலை காட்டி. மர்மத்துக்கு மேல் மர்மமாக இருக்கிறதே என்று மறுபடியும் வீரய்யாவை அச்சம் பிடித்துக் கொண்டது. ''போங்கள் சொல்கிறேன்' என்று அவன் அவர் தோளை அழுத்தி உள்ளே போக வைத்தான்.

''லாந்தரை இப்படி என்னிடம் கொடுங்கள்'' என்று விளக்கை வாங்கிக் கொண்டான். ''அதோ அந்த வைக்கோல் போரைக் கலைத்துப் பாருங்கள்.''

மீண்டுமொருமுறை அவன் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்து விட்டு, வைக்கோல் போரை நெருங்கினார் அவர். அவருடைய உயரத்துக்குத்தான் இருந்தது வைக்கோல் குவியல். ஏற்கனவே கலைக்கப்பட்டிருந்ததும் தெரிந்தது.

''பிரித்துப் பாரும். உமது தங்கக் கட்டிகள் மொத்தமும் அங்கே இருக்கிறது'' என்றான் அருணாசலம் மெல்லச் சிரித்தபடி.

முதல் தடவையாக அந்தச் சிரிப்பில் ஒரு கேலி இருப்பது போல் தோன்றியது வீரய்யாவுக்கு. தயக்கத்துடன் கொஞ்சம் கலைத்தார் வைக்கோல் குவியலை. ஒன்றும் தெரியவில்லை.

''ஊம்!'' என்று ஊக்கினான் அருணாசலம் பின்னாலிருந்தபடி.

மேலும் பிரித்தவர், கையில் எதுவோ தட்டுப்படவே, அதை அள்ளித் தூக்கியபோது –

அவர் வீலென்று கத்த, அந்தக் கத்தல் வெளியே பரவுமுன் அவர் வாயைக் கப்பென்று பொத்தினான் அருணாசலம். ''சத்தம் போடாதீர்! போட்டால் உமக்குத்தான் ஆபத்து!'' என்று அவர் காதருகில் எச்சரித்தான்.

வீரய்யாவுக்குக் கண்கள் அசைவற்று நின்றன. இருதயம் அசுர வேகத்தில் அடித்துக் கொண்டது, தொண்டை வறண்டது. தலை சுற்றியது. கால்கள் நடுநடுங்கின. குபீரென்று வியர்வை வெள்ளம் அவர் தேகத்தை நனைத்தது. கையில் பிடித்ததை அப்படியே தொப்பென்று விட்டார்.

அந்தச் சவம் – உயிரற்ற உடல் – தொப்பென்று திரும்பி வைக்கோல் குவியலின்மீதே விழுந்தது.

அது, ஒரு குழந்தையின் உடல்!

அருணாசலத்தின் குழந்தை பாலுவின் உடல்!

கழுத்தின் குறுக்கே வெட்டப்பட்டு, ரத்தக் காயத்துடன் கோரமாய்க் காட்சி தந்தது. அந்த ஒன்றுமறியா பாலகனின் பூமேனி!

எதிர்பாராத பெருத்த விபரீதம் இது என்று புரிந்து விட்டது வீரய்யாவுக்கு. இருந்தாலும் சத்தம் போடாதே என்று எச்சரித்ததை ஞாபகம் வைத்துக் கொண்டு, ''அடேய் பாவி! சண்டாளா! என்னடா இது கொலைகாரத்தனம்?'' என்று தொண்டை கமற, வார்த்தை குழற, திணறியபடி கேட்டார்.

''என் அருமைப் பையன் பாலு! உமது கடைக்கு அடிக்கடி வருவானே அதே குழந்தை!''

''தெரிகிறது...ஆனால்...ஆனால்...''

''கழுத்திலும் காதிலும் காலிலும் நகைகள் ...டிருந்தானில்லையா? அவைகளுக்கு ஆசைப்பட்டு அவனைக் கொலை செய்திருக்கிறீர்!'' என்றான் அருணாசலம் அழுத்தமாக.

''ஐயையோ!'' என்று அலறினார் வீரையா. ''என்ன அபாண்டம்!''

''பயப்படாதீர், பயப்படாதீர்!'' சிரித்த வண்ணமே அவரைத் தோளில் தட்டிக் கொடுத்தான் அருணாசலம். ''இப்ப நான் சொன்னதை வெளியே யாரிடமும் சொல்ல ...' டேன்!''

''என்னடா பாவி சொல்கிறாய் நீ?'' என்றார் வீரய்யா. அவர் உடம்பு மொத்தமும் தடதடவென்று ஆடியது.

''புத்திசாலி, புரிந்து கொண்டிருப்பாய் என்று நினைத்தேன். சுத்த மக்காயிருக்கிறாயே!'' என்றான் அவன். ...பென்று அவன் குரலிலிருந்த மரியாதையும் சிரிப்பும் மறைந்தன. மாறாக, ஆங்காரமும் ஆத்திரமும் பொங்கிச் ...ன. ''வீரய்யா! கவனமாய்க் கேள். என் பையனைக் கொலை செய்தவன் நான்தான். இங்கே கொண்டு வந்து ...த்தவனும் நான்தான்!''

''நீயா...நீயேவா...!!!''

''ஆமாம், நானேதான். உன்னுடைய க்டனை அடைக்க ...க்கு இந்த வழிதான் தெரிந்தது. புரிகிறதா? என் கடன் ...ங்களை என்னிடம் கொடுத்திருக்கிறாய். இத்தோடு ...' டு விடு. அதாவது, உன் கடன் மொத்தமும் அடைத்தாகி ...' து என்று விட்டு விடு. இல்லா விட்டால்...''

''இல்லாவிட்டால்?'' ஈன சுரத்தில் வீரய்யா கேட்டார்.

'பாலு போட்டிருந்த நகைகளை ஒரு முடிச்சாகக் கட்டி வைத்திருக்கிறேன். அதை உன் வீட்டில் உனக்கே தெரியாமல் எங்காவது ஓர் இடத்தில் போட்டு விடுவேன். நாளைக்கு, என் குழந்தையைக் காணோமென்று தேடுகிற மாதிரி தேடுவேன். உன் மீது சந்தேகம் என்று போலீசில் சொல்லுவேன்....''

''யாரும் நம்ப மாட்டார்கள் உன் பேச்சை!''

''ஏன் நம்ப மாட்டார்கள்? பாலு தினம் தினம் உன் வீட்டுக்கு வருவதை அக்கம்பக்கத்தில் பல பேர் பார்த்திருக்கிறார்கள். நீ அவனுக்கு தினம் இனிப்பு மிட்டாய் கொடுத்து நைச்சியம் பண்ணி வைத்திருப்பதையும் பார்த்திருக்கிறார்கள். அந்த நகைகளை எடுத்துக் கொண்டு, குழந்தையைக் கொலை செய்திருக்கிறாய் என்று எனக்குச் சந்தேகம் என்பேன். உன் வீட்டைப் போலீசார் சோதனை போடுவார்கள். இந்தப் பிணமும் அகப்படும். நகைகளும் அகப்படும். ஏன், இதோ உன் வேட்டி சட்டையிலும் உடம்பிலும் ரத்தக் கறை படிந்திருக்கிறதே, அதைப் போக்க என்னதான் நீ முயன்றாலும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து கொண்டுதானிருக்கும்...''

திடுக்கட்டவராக வீரய்யா சரேலென்று தன் உடைகளைப் பார்த்தார். கைகளைப் பார்த்தார். வெட்டப்பட்ட ரத்த ஈரத்துடனிருந்த சவத்தைத் தொட்டதால் திட்டுத் திட்டாக ரத்தம் அவர் மீது ஒட்டியிருந்தது வாஸ்தவமே. அவர் புத்தியும் பகுத்தறிவும் பதினாயிரம் சுக்கல்களாக உடைந்து சிதறின. மிக நம்பிக்கையோடு, வெகு திட்டமிட்டு, உறுதியாகச் சதி செய்திருந்த அருணாசலத்தின் முன்னே அவருடைய பயந்தாங்கொள்ளித்தனம் நடுங்கியது. கரகரவென்று தட்டாமாலை சுற்றியெடுத்தது. அத்துடன் இன்னோர் எண்ணமும் ஏற்பட்டது, அவர் தொழிலால்

வட்டிக் கடைக்காரர், அயலூர்ப் பேர்வழி. இங்கே வந்து எல்லாருக்கும் கடன் கொடுத்து, கசக்கிப் பிழிந்து வசூல் செய்து எல்லாருடைய பகைமையையும் சம்பாதித்துக் கொண்டிருப்பவர். அருணாசலமோ அப்படியில்லை. பரம்பரை பரம்பரையாக இந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அவனுடைய முன்னோர்கள். ஏன், அவனே கூடப் பிறருக்கு அள்ளியிறைத்தே குடும்பத்தைப் பாழடித்துக் கொண்டவன்தான். ஆகவே உள்ளூர் ஜனங்களுக்கு அருணாசலத்தின் மீது இரக்கமும் அனுதாபமும் உண்டாகக்கூடும். நகைகளுக்கு ஆசைப்பட்டு வீரய்யா குழந்தையைக் கொன்று விட்டான் என்று அருணாசலம் சொல்வதை அப்படியே நம்பி விடுவார்கள்.

வீரய்யாவுக்குக் கை கால் உதறலெடுத்தது. ''இப்போது...நீ...என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?''

''ஒன்றும் பண்ண வேண்டாம். கடன் பத்திரங்களைத் தான் என்னிடம் கொடுத்து விட்டாயே? கணக்குத் தீர்ந்தது என்று வைத்துக்கொண்டு விடு.''

அதை ஜீரணிப்பது வீரய்யாவுக்குக் கஷ்டமாகத் தானிருந்தது. ஆனால் வேறு வழி இருக்கவில்லை. கடன் கொடுத்தவனைப் பயமுறுத்துவதற்காகத் தன் ஒரே மகனையும் கொலை செய்யத் துணிந்தவனின் முன்னால் வேறே என்னதான் செய்ய முடியும்?

''அடப் பாவி! இந்த மகா பாவத்துக்குக் கடவுள் உனக்குக் கூலி கொடுக்காமல் இருக்கமாட்டார்.''

''ஆமாமாம். கடவுள் எப்போதுமே நியாயவான் தான். இல்லாவிட்டால், அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி உன்னிடம் மாட்டிக் கொண்டிருந்த எனக்கு இவ்வளவு சுலபமான வழி காட்டுவாரா?'' என்று சிரித்தான் அருணாசலம்.

வீரய்யாவுக்கு அடுத்த திகில் ஏற்பட்டது. ''சரி, இந்தக் குழந்தையை... பிணத்தை என்ன செய்யப்போகிறாய்?''

''கவலைப்படாதே, ஒரு மண்வெட்டி எடுத்துக் கொண்டு என் பின்னால் வா'' என்றான் அவன்.

வீரய்யாவின் மூளை குழம்பிக் கிடந்ததால், அறிவு அச்சத்துக்கு ஆட்பட்டிருந்ததால், அவன் சொன்னபடி யெல்லாம் ஆடினார். தோட்டத்தில் தேடி மண்வெட்டி எடுத்து வந்தார். ''இங்கேயா புதைக்கப் போகிறாய்?'' என்றார் திகிலுடன்.

''இல்லையில்லை. வாய்க்கால் கரை இருக்கிறதே, அங்கே போய்ப் புதைப்போம். என் ஒண்டியால் அதைச் செய்ய முடியாது. நீயும் துணைக்கு வா'' என்றான் அவன்.

மாட்டேன் என்று மறுத்தால் எங்கே மறுபடியும் அவனுக்குக் கோபம் வந்து விடுமோ என்று பயந்தவராக அவனுடன் புறப்பட்டார். அருணாசலம் லாந்தர் விளக்கை ஊதி அணைத்து அங்கேயே வைத்துவிட்டு, குழந்தை பாலுவின் உடலைத் தூக்கித் தோளின் மீது சாத்திக் கொண்டான். வீரய்யா தன் அறைக்கதவுகளைச் சத்தப்படுத்தாமல் சாத்திவிட்டு அவன் கூட நடந்தார். ஊர் மொத்தமும் நித்திரையில் ஆழ்ந்துவிட்ட போதிலும், தப்பித் தவறி எவரையேனும் சந்தித்துவிடக் கூடாதே என்று சந்து பொந்துகள் வழியே சுற்றிக்கொண்டு ஊரின் எல்லையிலிருந்த கால்வாய்க் கரையை அடைந்தார்கள்.

மண் வெட்டியை எடுத்துப் பள்ளம் தோண்டினான் அருணாசலம். வீரய்யா குழந்தையின் சவத்துக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு, எந்த வினாடி யார் வந்து விடுவார்களோ என்று பீதியுடன் நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு வழியாகப் பள்ளம் தோண்டி முடித்தாயிற்று. குழந்தையின் உடலை அதற்குள் போட்டு மூடினான். காலால் அழுத்தி மண்ணைப் பழையபடி கெட்டிப்படுத்தினான். ''இனிக் கவலையில்லை. நீ உன் வீட்டுக்குப் போய் நிம்மதியாய்ப் படு. நான் என் வீட்டுக்குப் போய் நிம்மதியாய்த் தூங்குகிறேன். எனக்காக மிகவும் ஒத்துழைத்தாய். ரொம்ப நன்றி'' என்று வீரய்யாவின் கையைக் குலுக்கி விடை பெற்றான் அருணாசலம்.

வீரய்யா, ''இரு'' என்றார். ''இதுவரை சரி. இனி மேல் என்ன பண்ணுவாய்?''

''இனிமேல் என்ன?''

''உன் குழந்தையைக் காணவில்லையென்று மற்றவர்கள் தேட மாட்டார்களா? அப்போது என்ன சொல்லுவாய்?''

''ஹாஹ்ஹா!'' என்று அட்டகாசமாய்ச் சிரித்தான் அருணாசலம். ''எல்லாவற்றுக்கும் யோசனை பண்ணித்தான் வைத்திருக்கிறேன். கொஞ்ச நாளாய் நம்ம ஊரில் ஒரு லம்பாடிக் கூட்டம் வந்திருக்கிறதே, பார்த்திருக்கிறா யில்லையா? அவர்களில் ஒருவன்தான் குழந்தையை நகைக்காகக் கொன்றிருக்கிறான் என்று எனக்குச் சந்தேகம் என்று போலீசில் புகார் பண்ணுகிறேன். அவர்களுடைய கூடாரத்தின் பக்கமாய் இரண்டொரு நகைகளைப் போட்டு வைக்கிறேன். போலீசில் அவர்களைப் பிடித்துக் கொள்வார்கள்.''

''அப்பாடா!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் வீரய்யா. ''அப்பா! உன் திசைக்கு ஆயிரம் கும்பிடு. என் முகத்திலேயே முழிக்காதே. இனிமேல். நான் உன் முகத்தில் முழிக்கும் படியும் பண்ணி விடாதே!'' என்று மெய்யாகவே கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு வீட்டை நோக்கி வேகமாய் நடையைக் கட்டினார்.

அருணாசலத்துக்குத் தன் திட்டம் இவ்வளவு வெற்றி கரமாகவும் விரைவாகவும் சுளுவாகவும் முடிந்ததில் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

வீடு திரும்பியதும் பத்திரங்களையெல்லாம் நெருப்பில் போட்டுக் கொளுத்தினான். அலமாரியைத் திறந்தான். மதுப் புட்டிகளை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

கிளாசுக்கு மேல் கிளாசாக மது இறங்கிக் கொண்டேயிருந்தது. சிரித்துக் கொண்டான் தன் வெற்றியை நினைத்து. 'வீரய்யா ராஸ்கல்! என்னை எவ்வளவு அவமானப்படுத்தினான்! எத்தனை மிரட்டினான்!' என்று எண்ண எண்ண அவனுக்குள் ஆத்திரம் திரும்பிற்று.

ஏன் வீரய்யாவை அப்படி விட்டுவிட வேண்டும்? முதலில் நினைத்தபடி அவனையே போலீசில் மாட்ட விட்டால் என்ன?

குடி வெறி அவன் குரோதத்தை வளர்த்தது. அப்படியே செய்யத் தீர்மானித்தான்.

## 4

குடிபோதையில் விறுவிறுவென்று வளருகின்ற எண்ணம், போதை இறங்கியதும் அதே வேகத்தில் மறையும் என்று சொல்வதுண்டு. வீரய்யாவின் துரதிர்ஷ்டம், அருணாசலத்துக்கு அப்படி ஏற்படவில்லை.

கண்ணில் விரலைக் கொடுத்து ஆட்டிய அந்த வட்டிக்கடைக்காரனை உண்டு இல்லை என்று பண்ணிவிட வேண்டுமென்ற எண்ணம், அவனைத் தூக்குக் கயிற்றில் தொங்கவிட வேண்டுமென்ற வெறி, நிதானத்துக்கு வந்த பிறகும் அருணாசலத்தின் மனத்தில் மேலோங்கி நின்றது.

கையில் மதுக்கோப்பையுடனும் மனத்தில் பழியுணர்ச்சியுடனும் இரவு நாற்காலியிலே உட்கார்ந்தபடியே தூங்கியவன், பலபலவென்று பொழுது விடிந்ததும் ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

''அடேய் சோணிமுத்து!'' என்று ஒரு சத்தம் போட்டான். சம்பளம் கொடுக்காத காரணத்தால் பலவேலைக்காரர்கள் நின்றுவிட்ட போதிலும், சோணிமுத்து என்ற கிழவன் மட்டும் விசுவாசமாக அரைப் பட்டினியுடன் அந்த வீட்டிலேயே இருந்து வந்தான். ''என்ன எஜமான்?'' என்று பதறிக்கொண்டு கேட்டான் அவன்.

''எங்கேயடா என் கண்மணி? பாலு எங்கே?''

''சின்ன எஜமான் அவரோட அறையிலே தூங்கிக்கிட்டிருக்காங்க!'' என்றான் அந்த அப்பாவி.

''இல்லையே? அங்கே பார்த்துவிட்டுத்தானே கேட்கிறேன்?'' என்று அருணாசலம் சொன்னதும் கிழவன் பயந்தவனாகப் போய்ப் பார்த்தான், சிறுவன் வழக்கமாகப் படுத்துறங்கும் அறையை. கட்டில் காலியாயிருந்தது.

''தோட்டத்திலே பார்! கிணற்றிலே பார்! அடுத்த வீடுகளில் கேள்!'' என்று அருணாசலம் போட்ட கூச்சலில் அக்கம்பக்கமெல்லாம் கூடிவிட்டது. ''ஐயோ! என் சொத்தெல்லாம் போச்சு. அப்பா போனார். பெண்டாட்டி போனாள். எது போனாலும் இவன் இருக்கிறானென்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு இருந்தேனே! எந்தப் பாவியோ எனக்கு என் கண்மணியும் இல்லாதபடி சதி பண்ணிவிட்டானே!'' என்று அருணாசலம் வீடு பூரா விழுந்து புரண்டு அழுதான். 'அடடா! எப்படி வாழ்ந்த குடும்பம்! இப்படியாகி விட்டதே!'' என்று கூடியிருந்தவர்களுக்கெல்லாம் அவன் மீது பரிதாபம் ஏற்பட்டது.

யாரோ ஒருவர் சொன்னார்கள்: ''அருணாசலம், இப்படியே அழுது கொண்டு உட்கார்ந்திருந்தால் எப்படி? போலீசில் ஒரு புகார் கொடுங்கள்.''

அதுவரை அந்த எண்ணமே தனக்குத் தோன்றாதவன் போல குபுக்கென எழுந்து கொண்டான் அவன். வண்டி கட்டச் சொன்னான். டவுனிலிருந்த போலீஸ் நிலையத்துக்குப் போய் விஷயத்தைச் சொன்னான்.

சிறுவனின் அங்க அடையாளங்களைக் குறித்துக் கொண்ட அதிகாரி, ''அவனை யாராவது கடத்திப் போயிருப்பார்கள் என்று சந்தேகப்படுகிறீர்களா?'' என்று கேட்டார்.

''கொலையே கூடச் செய்திருப்பார்கள் என்று நான் பயப்படுகிறேன், ஐயா! நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளை அவன் போட்டிருந்தானே?'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டான் அருணாசலம்.

''அவன் எங்கெங்கெல்லாம் போவதுண்டு?''

''அதிகமாகச் சுற்ற மாட்டான். வட்டிக் கடை வீரய்யாவின் வீட்டுக்குத்தான் அடிக்கடி போவான். அவர் மிட்டாய் தின்பண்டம் கொடுப்பார்...'' என்றவன் திடீரென நினைத்துக் கொண்டவன்போல், ''ஒரு வேளை அவரே...சே, சே...இருக்காது...ஆனால் சாயந்திரம் கடைசியாய் அங்கேதான் போனான் போலிருக்கிறது?'' என்று தன் சந்தேகத்தைச் சாமர்த்தியமாய் வெளியிட்டான்.

போலீஸ் அதிகாரி இரண்டு ஜவான்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வீரய்யாவின் வீட்டுக்கு விரைந்து வந்தார்.

ஊரெல்லாம் அருணாசலத்தின் மகளைக் காணோமென்று தேடுவது வீரய்யாவுக்கும் தெரிந்திருந்தது. தன்னிடம் சொன்னபடியே அருணாசலம் நாடகமாடுகிறான் என்றுதான் அவர் நினைத்துக் கொண்டார்.

போலீஸ் கோஷ்டி தன் வீட்டையே முற்றுகையிட்ட போது வீரய்யா அதிர்ச்சி அடைந்தார். ''தன் மகள் கடைசியாக இங்கேதான் வந்தாளென்று அருணாசலம் சொல்கிறார். நீங்கள் பார்த்தீங்களா?'' என்று அதிகாரி அதட்டியவுடன் மிரண்டு போனார்.

''நானா...இல்லையே...இங்கே அவன் வரவே யில்லையே...'' என்று அவர் உளறியது எல்லோருக்கும் சந்தேகத்தை உண்டாக்கியது.

அதிகாரியின் பின்னே நின்றிருந்த அருணாசலம், ''அடேய் பாவி! உன்னிடம் வாங்கியிருந்த கடனை எப்படியாவது அடைத்து விடுகிறேனென்று சொல்லியிருந் தேனே! அதற்குள் உனக்குப் பொறுக்கவில்லையா? என் குழந்தையைக் கொலை பண்ணி அதன் நகைகளை அபகரித்துத்தானா உன் கடனை வசூல் செய்துகொள்ள வேண்டும்?'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழவே, வீரய்யாவுக்கு மார்பை அடைத்தது.

அதே சமயம் வீரய்யாவின் வீட்டுக்குள் சோதனையிடச் சென்ற ஜவான்களில் ஒருவர், ''இதோ இதைப் பாருங்கள் சார்'' என்று ஒரு துணிக் குவியலைக் கொண்டு வந்து காட்டினான்.

வீரய்யா வழக்கமாய் உடுத்துகிற வேட்டி, அணிகிற தலைப்பாகை, மாட்டிக் கொள்கிற கோட்டு. எல்லா வற்றிலும் ரத்தக் கறை!

நம்மீது சந்தேகம் திரும்பப் போவதில்லை என்று வீரய்யா முற்ற முழுக்க நம்பி இருந்தாராகையால் முந்தின இரவின் கோரங்களை உடனடியாக மறைக்க அவருக்குத் தோன்றவில்லை. பிற்பாடு அவைகளைக் கழுவிச் சலவை செய்யலாமென்று சுருட்டி ஒளித்து வைத்திருந்தார். அதுவே அவருக்கு எமனாயிற்று.

பளீரென்று அவர் பிடரியில் ஓர் அறை விழுந்தது. போலீஸ் அதிகாரி முடிவு கட்டிவிட்டார் அவர்தான் கொலையாளி என்று. அடிமேலடி விழுந்ததும் வீரய்யாவினால் எதுவும் ஒழுங்காய்ச் சொல்ல முடியவில்லை. ''இல்லை! இல்லை! நான் கொலை செய்யவில்லை. என்னை மிரட்டிக் கடன் பத்திரங்களைப் பறித்துக் கொண்டு போவதற்காக அருணாசலம்தான் தன் மகனைக் கொலை செய்து இங்கே கொண்டுவந்து போட்டான்...'' என்று ஆரம்பத்திலேயே அவர் சொல்லியிருந்தாரானால் ஒரு வேளை இரண்டொருவராவது நம்பியிருப்பார்களோ என்னவோ. ரத்தக்கறை படிந்த உடைகளைக் கண்டெடுத்த பின், அடிமேலடியாகப் போட்ட பின் அவர் சொன்னதற்குக் கடுகத்தனை வலுவும் இல்லாமற் போய்விட்டது. போலீஸ் அதிகாரியும் மற்றவர்களும் சிரித்தார்கள். ''என்னய்யா! உலகத்திலேயே கேள்விப் பட்டிராத கதையா இருக்கிறது! எந்தத் தகப்பனாவது தன் சின்னஞ்சிறு குழந்தையை, ஒரே மகனை, குத்திக் கொலை செய்வானா? அதுவும் ஒரு கடன்காரனை மிரட்டுவதற்காக!'' என்று ஊர் மொத்தமும் பேசியது.

குழந்தையை எங்கே புதைத்தாய் என்று போலீசார் அடித்து உதைத்து மிரட்டியதும் வீரய்யா அவர்களைக் கால்வாய்க் கரைக்கு அழைத்துப் போனார். சடலம் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டினார். தோண்டி எடுத்தார்கள் சடலத்தை.

அருணாசலத்தின் குழந்தை பாலுவைக் கொலை செய்து, அவன் அணிந்திருந்த நகைகளைத் திருடி எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறார் என்று வீரய்யா மீது வழக்குப் பதிவு செய்து கொண்டார் போலீஸ் அதிகாரி. ஜாமீனில்கூட அவரை விடுதலை செய்யாமல் டவுனிலிருந்த லாக்கப் சிறையில் அடைத்து வைத்தார்.

வீரய்யாவுக்குக் கொஞ்சநஞ்சம் நல்ல காலம் பாக்கி இருந்தது. அந்தச் சமயம் பார்த்து அவருடைய மைத்துனன் மாதவன் சென்னையிலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்தான். அவன் சட்டக் கல்லூரியில் படிக்கிறவன், ஏழை இளைஞன்.

இங்கே வந்த பிறகு தான் அக்காவின் கணவர் எப்படிப்பட்ட அபாயத்தில் சிக்கியிருக்கிறார் என்பது தெரிந்தது.

வழக்கறிஞர் இல்லையென்றாலும் சட்ட மாணவனாகையால், இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்று ஊகித்தான். அழுது அரற்றும் தமக்கைக்குத் ஆறுதல் சொல்லி, ''பயப்படாமல் இரு, அக்கா. அத்தான் சொல்வதுதான் உண்மையாக இருக்கும். நான் விசாரிக்கிறேன்'' என்று தைரியம் கூறி, ஜில்லா போலீஸ் தலைமையதிகாரியைப் போய் நேரில் சந்தித்தான்.

''என் அக்கா கணவன் பண விஷயத்தில் கெட்டியானவர் தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் காசுக்காகக் கொலை செய்யக்கூடிய அளவுக்குப் பணத்தாசை பிடித்தவரல்ல. அதுவும் இறந்து போன குழந்தையின் மீது அவர் மிகவும் பாசம் வைத்திருந்தார். இல்லாவிட்டால் அந்தக் குழந்தை தினம் தினம் அங்கே வந்திருக்குமா?'' என்றெல்லாம் எடுத்துரைத்த பின் அந்தப் பெரிய அதிகாரி சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர்களை வரவழைத்துப் பேசினார்.

மாதவன் கேட்டான்: ''எந்தக் கொலை வழக்கிலும் கொலைக்கருவி ஒரு முக்கியமான தடயம். அதைக் கண்டு பிடித்தீர்களா?''

அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

திரு திருவென விழித்து, ''அதை வீரய்யா சாமர்த்தியமாக எங்கோ ஒளித்து வைத்திருக்கிறார்'' என்றார்கள்.

''குழந்தை புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டியவர். கொலை செய்ய உபயோகித்த ஆயுதத்தை மட்டும் மறைப்பாரா?'' என்று மடக்கினான் மாதவன். பின்னர் சொன்னான்: ''நீங்கள் புகார் கிடைத்ததும் கிடுகிடுவென்று நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். மெச்ச வேண்டிய விஷயம் தான். ஆனால் ஒன்று. வீரய்யா கொலை செய்தாரென்று அருணாசலம் சொன்னதை ஏற்றுக்கொண்டு வீரய்யாவின் வீட்டைச் சோதனை போட்டீர்கள். ஆனால் அருணாசலம் தான் கொலை செய்தாரென்று வீரய்யா சொன்னதை ஏற்று அருணாசலத்தின் வீட்டையும் சோதனை போட்டிருக்க வேண்டாமா?''

ஜில்லா போலீஸ் அதிகாரி அந்த வாதத்தை சட்டென்று ஏற்றுக் கொண்டார். சிறிய அதிகாரியின் மீது கோபம் வந்தது. ''உண்மைதானே? ஏன் அதைச் செய்யவில்லை? உடனேயே அந்த வேலையைச் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அன்றே அருணாசலத்தின் வீட்டைப் போலீஸ் சல்லடை போட்டது. கெட்டிக்காரரான வீரய்யாவே தன் ரத்தக்கறை படிந்த உடைகளை அலட்சியமாய் விட்டு வைத்திருந்தபோது குடிகாரனும் முட்டாளும் அகம்பாவக்காரனுமான அருணாசலமா அந்த முன்ஜாக்கிரதை செய்து கொண்டிருப்பான்? அவனுடைய உடைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. கொலை செய்யப்பட்ட கத்தியும்

கிடைத்தது. பாதி எரிந்திருந்த பத்திரங்களின் கருகல்களும் அகப்பட்டன.

அது மட்டுமல்ல.

குழந்தையின் நகைகளை ஒரு முடிச்சாகக் கட்டி வைத்திருந்தானல்லவா, அதையும் கண்டுபிடித்து விட்டார்கள் போலீசில்! அந்த முடிச்சை அவன் வீரய்யாவின் வீட்டிலும் போடவில்லை. அலட்சியமாகத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தான்.

தான் செய்த சதி தனக்கே எதிராகத் திரும்பிவிட்ட பிறகு அருணாசலத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குற்றத்தை ஒப்புக்கொண்டான். அவனுக்குக் கொடுத்திருந்த கடன் மொத்தமும் வட்டி உள்பட வீரய்யாவுக்குக் கிடைக்காமலே போய்விட்டது. ஆனால் வீரய்யா அதற்காக வருத்தப்பட வில்லை. தூக்குக் கயிற்றிலிருந்து தப்பியதற்காகக் கடவுளை விழுந்து விழுந்து கும்பிட்டார்.

★★★

அருணாசலத்தின் கதையை பாலாவும் சுதீரும் படித்து முடிக்கவும் வாசல் கேட் கிறீச்சென்று சத்தமிடவும் சரியாயிருந்தது.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த பாலா, ''அப்பா வந்து விட்டார்! சுதீர், எல்லாவற்றையும் பழையபடி மூடிவை'' என்று அவசரப்படுத்தினாள்.

''எப்படியும் இது அந்த மாயப்பனின் கதை இல்லை. அடுத்ததைத்தான் பார்க்க வேண்டும்'' என்று சொல்லி, கலைந்தவற்றை ஒழுங்கு படுத்தினான்.

இருவரும் வெளியே அந்தார்கள்.

வாக்கிங் ஸ்டிக்கை அதன் ஸ்டாண்டில் மாட்டினார் ரிடையர்டு ஏ.ஸி.ஜனார்த்தனம். பாலாவையும் சுதீரையும் ஒரு சேரப் பார்க்க அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. ''என்னது! எலியும் பூனையும் கை கோத்துக் கொண்டு வருகிறது!'' என்றார்.

'இந்த எலிக்கு அந்தப் பூனையின் துணை இப்போது கட்டாயத் தேவையாக இருக்கிறது!' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது பாலாவுக்கு. ஒரு போலிச் சிரிப்புடன், ''இவன் தானே! வேறே எவனும் கிடைக்கா விட்டால் இங்கே வந்து விடுவான் நம்மை அறுப்பதற்கு! பையில் பாருங்கள் ஒரு மொட்டைப் பிளேடு இருக்கும்'' என்றாள்.

ஜனார்த்தனம் சிரித்துக் கொண்டே வெளியே போனார். ''நான் போய்விட்டு வருகிறேன் மாமா!'' என்றான் சுதீர்.

''என்ன அதற்குள்ளே புறப்பட்டு விட்டாய்?''

'ஆமாம், மொட்டை பிளேடு கொண்டு வர மறந்து விட்டேன். போய் எடுத்து வருகிறேன்'' என்று அவன் கிளம்ப, அவனை வழியனுப்பும் சாக்கில் பாலா வாசல் வரை போனாள்.

உள்புறம் ஒரு முறை எச்சரிக்கையாகப் பார்த்து விட்டு தாழ்ந்த குரலில், ''இனி என்ன செய்யலாம் சுதீர்!'' என்றாள் அவள்.

''முரடனிடமும் முட்டாளிடமும் ஆர்க்யூ பண்ணிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இந்த மாயப்பன் எந்த வகையாயிருந்தாலும் சரி, அவன் சொன்னதற்குச் சரியென்று தலையாட்டி வை.''

''அதாவது?''

''உன்னுடைய அடுத்த புரோக்ராம் தினத்தன்று, அவன் சொன்னபடி செய். தலையில் வெள்ளை ரோஜா வைத்துக்கொள். நீ அவன் மிரட்டலுக்குப் பணிந்திருக்கிறாய் என்பதே அவனுக்குத் திருப்தி ஏற்படுத்தும். டயம் வாங்கிக் கொண்டு மறுபடியும் இறங்கலாம்.''

அவள் மௌனமாய் நின்றாள்.

''என்ன யோசிக்கிறாய்?''

''வெள்ளை ரோஜா அவ்வளவு சுலபமாகக் கிடைக்காது.''

''உன்னுடைய நெக்ஸ்ட் புரோக்கிராம் சனிக்கிழமை தானே?''

''ஆமாம்.''

''டவுனில் பூக்கடைக்குப் போய், எப்படியாவது ஏழேகாலுக்கு உன்னை டி.வி. ஸ்டேஷன் வாசலில் வந்து பார்த்துக் கொடுக்கிறேன். ஓ.கே?''

''தாங்ஸ் சுதீர்'' என்றாள் பாலா. அவள் குரல் தழுதழுத்திருந்தது.

''ஏய் கிராக்!'' என்று அவள் கையை ஓர் அழுத்து அழுத்திவிட்டு அவன் புறப்பட்டான்.

சனிக்கிழமை அவள் செய்தி வாசிக்க வேண்டும். வெள்ளியன்று இரவு முதலே பலவிதமான அச்சங்கள் பாலாவைப் பிடித்துக் கொண்டன. சுதீர் எவ்வளவு தூரம் எல்லாவற்றையும் சீரியஸாக எடுத்துக் கொண்டிருப்பான்? அவன் பாட்டுக்கு, கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்துவிட்டு எங்கேயாவது யோகா வகுப்பு என்று கிளம்பித் தொலைத்து விட்டால்?

சனிக்கிழமை காலை ஒரு சினேகிதியைப் பார்த்து விட்டு வருவதாக அப்பாவிடம் சொல்லிவிட்டு அவள் சுதீர் வீட்டுக்குக் கிளம்பினாள். அத்தைக்கு, அன்றைக்கு ஜனார்த்தனத்துக்கு ஏற்பட்டது போலவே, இவள் திடீர் வருகையைப் பற்றி ஆச்சரியம். ''தோட்டத்தில் போய்ப் பார்க்கணும். அத்தி பூத்தாலும் பூத்திருக்கும்'' என்று கேலி செய்தாள்.

பூ! அத்தை அதைச் சொன்னதும் பாலாவுக்கு இன்னும் என்னவோ போலாகிவிட்டது. ''சுதீர் எங்கே?'' என்று கேட்டுக்கொண்டே மாடிக்கு விரைந்தாள். அத்தை தனக்குள் சிரித்துக் கொண்டு, 'குழந்தைகள் நெருங்கி வருகிறது' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

சுதீர் எங்கும் போய்விடவில்லை. அறையில் சவாசனம் செய்து படுத்துக் கொண்டிருந்தான். விரல்கள், மணிக்கட்டு, முழங்கை என்று ஒவ்வோர் அங்கமாக அவன் மனத்துக்குள் சொல்லிச் சொல்லி ரிலாக்ஸ் செய்து கொண்டு படுத்திருந்ததைக் கண்டாள். ஜட்டி மட்டுமே அணிந்திருந்த கட்டுமஸ்தான தேகத்தில் இளமை வழிந்தது. அவள் வந்ததைக் கண்டுவிட்டு, 'கொஞ்சம் இரு' என்று கண்ணால் ஜாடை காட்டியவன், மேலும் ஐந்து நிமிடம் சவாசனம் போட்ட பிறகே எழுந்து வந்தான்.

''ரோஜா விஷயம் நீ மறந்துவிடப் போகிறாயே என்றுதான் ஞாபகப்படுத்த வந்தேன்'' என்றாள்.

''என் பின்னால் வா'' என்றான் அவன். வேறெதுவும் சொல்லாமல் ஃப்ரிஜ்ஜைத் திறந்து காட்டினான். உள்ளே நடுத்தட்டில் பளிங்குச் சிற்பம் போலப் புத்தம் புது வெள்ளை ரோஜா ஒன்று காட்சி தந்தது. ''போதுமா?''

''அப்பா!'' நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டாள் அவள்.

''சாயந்தரம் சொன்ன நேரத்துக்கு எடுத்து வருகிறேன், கவலைப்படாதே'' என்று சொல்லியனுப்பினான் அவன்.

இரவு ஏழே முக்காலுக்கு, கூந்தலில் செருகிய வெள்ளை ரோஜாவுடன் ரெகார்டிங் அறையை நோக்கி நடந்தபோது, படபடப்போடு கூடவே ஒரு புன்னகையும் பிறந்தது அவளுக்கு. வெள்ளை ரோஜா வேண்டும் என்று இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. காஸ்ட்யூம்ஸ் அறையில் கேட்டு, ஒரு காகிதப் பூவை வாங்கி வைத்துக் கொண்டிருந்தால் கூடப் போதுமே!

''பாலா!'' என்ற குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது. நின்றாள்.

புரொட்யூசர்தான். ''என்ன இது. தலையில் பூ?''

''இதுவா...சும்மாதான்...'' அவள் சிரித்து மழுப்பினாள்.

''இன்றைக்குத்தான் மேலிடத்திலிருந்து சர்க்குலர் வந்திருக்கிறது. நியூஸ் ப்ரஸென்ட்டர்கள் டீஸன்ட்டாக இருப்பதில்லை என்று புகார் வந்திருக்கிறதாம். கவனமாயிருக்கும்படி கடுமையாய் எழுதியிருக்கிறார்கள். அதனால் இந்த ரோஜாவைக் கழற்றி வைத்துவிட்டு, செய்திகள் படிப்பதற்குப் போ.''

''சார்!'' அவள் திடுக்கிட்டாள். ''என்ன சார் இது! சும்மா ஒரு ரோஜாப் பூ வைத்துக் கொண்டால் இன்டீஸன்ட்டாகி விடுமா?''

''இதோ பார். இத்தனை நாள் வரை நீ இந்த மாதிரி ரோஜா செருகிக் கொண்டது உண்டா?''

''இல்லை.''

''அப்படியே இருந்து விட்டுப் போ. புதுப்பழக்கம் வேண்டாம்'' என்று கண்டிப்புடன் சொல்லி விட்டுச் சென்றார் புரொட்யூசர்.

## 5

திடீரென்று வெள்ளை ரோஜாவுக்குத் தடையுத்தரவு போடப்பட்டதும் தடுமாறிப் போனாள் பாலா. புரொட்யூசர் சொன்னது ஒன்றும் தப்பில்லை என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. வழக்கமாக எப்படிப்பட்ட தோற்றம் தந்து வந்திருக்கிறார்களோ அதிலிருந்து ஒரு நாள் மாறினால்கூடச் சிக்கல்தான். உடை மாறலாம். அதன் டிசைன் மாறலாம். ஹேர்டூவோ மேக்கப்போ வித்தியாசமாக அமைந்தால் கேள்வி வரும் என்பது ஏன் நமக்கு மறந்தே போய்விட்டது! அவள் தன்னைத்தானே நொந்து கொண்டாள். இருந்தாலும் புரொட்யூசரின் மீது கொஞ்சம் கோபமும் வந்தது. ஏதோ ஒரு வெள்ளை ரோஜாப் பூ! தலையின் ஓர் ஓரத்தில் சின்னதாய் ஓரிடத்தில் அமர்ந்துவிட்டுப் போகட்டுமே? பிரளயமா ஏற்பட்டு விடும்? லாக் புக்கில் அந்த மாற்றத்தைக் குறித்து வைப்பார்கள். குறித்துவிட்டுப் போகட்டும்!

எடிடோரியல் அறைக்குச் சென்று அன்றைக்கு வாசிக்க வேண்டிய செய்திகளின் காப்பியைப் பெற்றுக் கொண்டாள். யந்திரம் போல் சென்று யந்திரம் போலத் திரும்பியவள், ''ஹலோ பாலா, யூ லுக் ஃபைன்'' என்று எடிடோரியல் உதவியாளரொருவர் சொன்ன குரல் கேட்டுச் சற்று நின்றாள்.

என்ன சொல்கிறீர்கள் என்று கேட்பது போல் அவரை நோக்கியபோது, சுட்டு விரலால் தன் தலையைத் தொட்டுக் காட்டிப் புன்னகை செய்தார் அவர். இன்னும் அந்த ரோஜாவை அகற்றவில்லை என்று பிறகுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. ''கூடாதென்று சொல்லிவிட்டார்கள்'' என்று ஒரு சோகப் புன்னகையுடன் சொல்லிவிட்டு அதைக் கூந்தலிலிருந்து மெல்லப் பிரித்துக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''எல்லாம் பழைய பஞ்சாங்கம்!'' என்று அவன் திட்டியது அவளைச் சிரிக்க வைக்கவில்லை. யோசனையுடன் செய்திகள் படிக்கும் அறையை அடைந்தாள்.

''இன்றைக்கு ஒன்றும் கலாமிட்டி இல்லையே?'' என்று துணைப் புரொட்யூசர் சுருக்கென்று கேட்டுவிட்டார். அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று பாலாவுக்கு முதலில் புரியவில்லை.

காமெராமேன், ''அன்றைக்கு வாட் ஹேப்பண்ட் பாலா? அப்படித் திடுதிப்பென்று கிளம்பிவிட்டீர்கள்?'' என்றான்.

''ஓ! அதுவா?'' என்று சமாளித்துக் கொண்டான். ''பம்பாயில் பெரியம்மா...என்னிடம் ரொம்பப் பாசம் உள்ளவர்...உடம்பு சரியில்லாமல் இருந்தார்...அப்பா போனில் சொன்னதும் ஷாக்காகி விட்டேன்...''

''அடடா!'' என்றபடி விளக்குகளைப் பளீரென்று எரியவிட்டார் காமெராமேன்.

அவள் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''அது என்ன பக்கத்தில்? ரோஜாப்பூ?'' என்றார் துணை புரொட்யூசர்.

இன்றைக்கு இந்த மனிதர் ரொம்பத்தான் பாலாவை விரட்டுகிறார் என்று காமெராமேனுக்குத் தோன்றியிருக்க வேண்டும். ''பரவாயில்லை. கொஞ்சம் நகர்த்தி வையுங்கள் போதும். ஃப்ரேமுக்குள் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார்.

ஒரு வினாடி அதைப் பெருமூச்சுடன் பார்த்து விட்டு மேஜையின் ஓரமாக நகர்த்தினாள். எதிரிலிருந்த டி.வியைப் பார்த்தாள். செய்திகள் என்ற தலைப்புக் போட்டு விட்டார்கள். ஒரு முறை செய்திகளை வாசித்துப் பார்த்து வைத்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். குழப்பத்தில் மறந்து விட்டாள் .. பரவாயில்லை. அனுபவம் கைகொடுக்கும்.

அவள் படிக்க ஆரம்பித்தாள். வாக்கியங்கள் தங்கு தடையின்றிச் சரளமாக வந்தன. இடைவெளி விட்டுக் கண்களை உயர்த்திப் பார்க்கும்போது...

ஆயிரக்கணக்கான டி.வி. செட்டுகளில் எங்கே எந்த செட்டின் முன்னே உட்கார்ந்து அந்த மாயப்பன் கவனித்துக் கொண்டிருக்கிறானோ என்ற எண்ணமே அவள் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது. அவன் சொல்லியிருந்தபடி அவள் வெள்ளை ரோஜா செருகிக் கொள்ளவில்லை. அவனுடைய எச்சரிக்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டாள். தன் குடும்பத்தைப் பற்றி அப்பா எழுதக் கூடாது என்ற அவனது கட்டளையை அவள் அலட்சியப்படுத்தி விட்டாள். இனி இவளைச் சும்மா விடக் கூடாது. இவளை விட்டாலும் இவள் அப்பனை விடக்கூடாது. நறநறவென்று அவன் பல்லைக் கடிக்கிற சப்தம் கேட்கிற மாதிரி இருந்தது அவளுக்கு. எங்கோ ஒரு மூலையில் இருந்து அவன் கவனித்துக் கொண்டிருப்பதை,

அவனுடைய கூரிய கண்கள் தன் முகத்தின் மீது பதிந்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

'இத்துடன் செய்திகள் முடிவடைந்தன' என்ற கடைசி வாக்கியத்தைச் சொல்லி விட்டு, தலையை உயர்த்தி ஓர் இனிய முறுவலை வெளியிட்டாள். பிறகு தான் அவளுக்கே பிரமிப்பாயிருந்தது, உள்ளுக்குள்ளே கடலின் கொந்தளிப்பை வைத்துக் கொண்டு எப்படி நம்மால் எதுவுமே நடவாத மாதிரி படித்து முடிக்க முடிந்தது என்று.

விளக்குகள் அணைந்தன.

''பிரில்லியண்ட்டாய்ச் செய்தீர்கள், நியூஸ் ஸ்டார்!'' என்றார் காமெராமேன்.

''நியூஸ் ஸ்டார் என்பது அவளுக்கே உரிய செல்லப் பெயர்.

செய்தி வாசிப்பாளர் வேலைக்கு அவள் மனுப் போட்டு ஆடிஷன் டெஸ்ட் வைத்த அன்று ஏற்பட்ட பெயர்.

உச்சரிப்பில் சுத்தம் இருக்கிறதா, லகர ளகர வேற்றுமை புரிகிறதா, குரல் ஒரே மாதிரி சீராக வருகிறதா, ஸ்ஸ் என்று காற்றுச் சத்தம் கேட்காமல் இருக்கிறதா, வியர்க்காமல், இனிமையான கம்பீரத்துடன் தோற்றம் தருகிறார்களா – இப்படி நூறாயிரம் விஷயங்களை ஆடிஷன் கமிட்டி பரிசீலனை செய்யும். பெரும் பாலானவருக்கு மூன்று நாலு சந்தர்ப்பத்துக்குப் பிறகுதான் எல்லாம் சரியாக வரும் என்று பாலா கேள்விப் பட்டிருந்தாள். முதல் டெஸ்டின்போதே, ''நன்றாய்ச் செய்தாய்'' என்று ஒருமுகமாய்ச் சொன்னார்கள். கமிட்டியிலிருந்த தாமோதரன், குறிப்பாக, ''ஒரு நியூஸ்

ஸ்டார் பிறந்திருக்கிறார்'' என்று சிலேடையாகச் சொன்னார். நியூஸ் ஸ்டார் என்றும் கொள்ளலாம். நியூ ஸ்டார் என்றும் கொள்ளலாம். அது நிலையம் பூரா பரவிவிட்டது. இன்றைக்கும் அவளுடைய தோழிகள் 'உனக்கென்னடியம்மா, நியூஸ் ஸ்டார்!'' என்பார்கள்.

இரண்டு நிமிடங்களுக்கு இந்த நினைவுகள் தோன்றி அவள் மனத்தில் இருந்த கவலைகளை மறக்கடித்தன. இரண்டு நிமிடங்கள்தான். அறையை விட்டு வெளியே வந்ததுமே மாயப்பன் மறுபடி குடியேறி விட்டான் அவள் எண்ணங்களில்.

அவனுடைய அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்? இன்னொரு சான்ஸ் கொடுப்பானா? குரலிலிருந்து இளைஞன் மாதிரி தோன்றினானே, இளம் பெண் என்பதற்காக நம்மீது அனுதாபம் காட்ட மாட்டானா?

ரசீதில் கையெழுத்திட்டு, அன்றைய அன்பளிப்பு தொகையைத் பெற்றுக் கொண்டாள்.

ரிஸப்ஷன் ஹாலைத் தாண்டியிருக்க மாட்டாள்.

''பாலா, உங்களுக்குப் போன்''என்று அழைத்தாள் ரிஸப்ஷனிஸ்ட்.

ஒரு கணம் பாலாவுக்கு மார்பை அடைத்தது. முகத்தை இனிமையாக வைத்துக் கொண்டே பழக்கப்பட்டவளாகையால் கலவரத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பாகப் போனை எடுத்து, ''ஹலோ,'' என்றாள். 'கடவுளே, மாயப்பனாக இருக்கக் கூடாது' என்று மனத்துக்குள் ஒரு பிராத்தனை.

ஆனால் மாயப்பன்தான்.

''நான் சொன்னபடி செய்யவில்லையே?'' என்றான் தன் முரட்டுக் குரலில்.

பக்கத்திலேயே ரிஸப்ஷனிஸ்ட் இருக்கும் போது எப்படி பேசுவது என்று தெரியவில்லை. ''அது வந்து...'' என்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

''பரவாயில்லை. நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். ஒரு பையன் சாயந்தரம் வெள்ளை ரோஜா கொண்டு வந்ததையும் நீ அதைத் தலையில் வைத்துக் கொண்டு உள்ளே போனதையும் பார்த்தேன்...''

'மைகாட்! எங்கே மறைந்திருந்து பார்த்திருப்பான்! இப்போது, இந்த வினாடி கூட, இங்கேதான் எங்கேயோ இருந்தபடி பேசிக் கொண்டிருக்கிறானோ?'

''அப்புறம் யாரோ தடுத்து விட்டார்கள் போலிருக்கிறது'' என்று அவன் தொடர்ந்தான். ''பரவாயில்லை. நீ, நான் சொன்னதற்குச் சம்மதித்திருக் கிறாய் என்று ஊகித்துக் கொண்டேன். அப்படித்தானே?''

''ஆமாம்.''

''கட்டுரைகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித் தாயிற்றா?''

அவள் கைக்குட்டையால் வியர்வையை ஒற்றிக் கொண்டாள். ''இன்னும் இல்லை...' இப்போதுதான்...''

''செய்வதைச் சீக்கிரமாய்ச் செய், உனக்கு ஒரு சமாசாரம் தெரியுமா?''

''என்ன?''

''உன் அப்பா ஒரு இருதய நோயாளி. நான் பொறுப்பில்லாதவன். அவருக்கு அதிர்ச்சி ஏற்படும்படி

எதையாவது சொல்லி வைப்பேன் அல்லது செய்து வைப்பேன்.''

''வேண்டாம், வேண்டாம்'' என்றாள் அவள் அதிர்ச்சியுடன். அந்தத் திடீர்ப் பதற்றத்தைக் கேட்டு ரிஸஷப்னிஸ்ட் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

மாயப்பன் போனை வைத்துவிட்டான். இவளும் திரும்ப வைத்தாலும் அந்தப் படபடப்பு நீங்க வெகு நேரமாயிற்று. கைக்கடியாரத்தில் நேரம் சரி செய்கிற மாதிரி ஏதோ செய்து, தன் உள்ளத்தைச் சமன் செய்து கொண்டாள்.

வாசலில் இறங்கியபோது வழக்கத்தைக் காட்டிலும் வானம் அதிக இருட்டாக இருக்கிற மாதிரி தோன்றியது. ஒரு கார் அவளை விர்ரென்று தாண்டிச் சென்றது. ஒரு ஸ்கூட்டர்-

''பாலா'' என்றபடி அவளருகில் வண்டியை நிறுத்தினான் சுதீர்.

நடுச்சாலையாக மட்டும் இல்லையென்றால் குபீரென்று அவனைக் கட்டிக் கொண்டிருப்பாள். ஆயிரம் யானை பலம் வந்தமாதிரி இருந்தது. அந்த நிம்மதியில் கண்ணில் நீர் துளித்தது.

''இங்கே திருவல்லிக்கேணியில்தான் நான் ஒரு சினேகிதன் வீட்டில் டி.வி.பார்த்துக் கொண்டிருந்தேன். நீ ரோஜா வைத்துக் கொள்ளாததைப் பார்த்ததும் திக்கென்றிருந்தது. கெட்டுக் கிட்டுப் போக்கி விட்டாயா என்ன? அப்பவே தலையில் வைத்துக் கொண்டாயே?''

''அது ஒரு பெரிய கதை. இப்ப நீ வந்ததைப் பார்த்த பிறகுதான் எனக்கு உயிர் வந்தது'' என்று ஆரம்பித்து நடந்ததையெல்லாம் சொல்லி முடித்தாள்.

''சரி, பின்னால் ஏறிக்கொள்'' என்றான் அவன். ''ஏன் அனாவசியமாய்ப் பதறுகிறாய்? அவனும் டயம் கொடுத்திருக்கிறான். மாமாவும் தினம் வாக்கிங் போவதால் தேடிக் கண்டுபிடிக்க நமக்கு நிறைய அவகாசம் இருக்கிறதே!''

''இருந்தாலும் எனக்குப் பயமாய்த்தான் இருக்கிறது.''

அவன் வண்டியை ஸ்டார்ட் செய்து. ''அப்புறம் எதற்கு இந்த சூனா தீனா ர்ரன்னா இருக்கிறான். பீச்சுக்கு விடட்டுமா? மூட்டை கட்டிக் கடலில் எறிந்து விடலாம்.''

''எதை?''

''உன் பயத்தையும் கவலையையும்.''

அவள் சாயந்தரத்துக்குப் பிறகு முதல் தடவையாகச் சிரித்தாள். ''இன்றைக்கு வேண்டாம். கையில் கோணி கொண்டு வரவில்லை'' என்றாள்.

அவர்கள் வீட்டை அடைந்தபோது, வாசலில் காத் திருந்த ஜனார்த்தனம், ''ஊகூம்! நிச்சயமாய் உனக்கு ஏதோ ஆகி விட்டது'' என்று தலையைப் பலமாய் அசைத்து உதட்டைப் பிதுக்கினார்.

''என்னப்பா?''

''எலியும் பூனையும்தான்! பூனை ஸ்கூட்டர் ஓட்டுகிறது. எலி பின்னால் உட்கார்ந்து வருகிறது!''

அவர்கள் உள்ளே போனார்கள்.

''இன்றைக்கு வாக்கிங் எவ்வளவு தூரம் போனீர்கள் என்றாள் பாலா.

''இன்று போகவேயில்லை.''

''ஏன்?''

''வாக்கிங் போனால் பி.பி. அதிகமாகிறது என்று ஒரு மேகஸினில் படித்தேன். அதனால்...''

''அதனால்?''

''இனிமேல் தினம் தினம் வாக்கிங் போகப் போவதில்லை.''

சரேலென அவர்கள் பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள். ''மாகஸின்களில் எது வேண்டுமானாலும் போடுவார்கள்'' என்றான் சுதீர்.

''அதனாலே திங்கள், வெள்ளி இரண்டு நாள்தான் வெளியே போகப் போகிறேன். மற்ற நாட்கள் இந்த நான்கு சுவருக்குள்ளே அடக்கம்'' என்றார் ஜனார்த்தனம்.

''போரடித்துப் போகும்'' என்று ஆழம் பார்த்தாள் பாலா.

''ஏன் போரடிக்கிறது? எனக்கு ஒரு வேலை இருக்காதா என்ன?'' மர்மமாய்க் கண்ணடித்துச் சிரித்தார் அவர்.

அவளுடைய படபடப்பு மறுபடியும் ஆரம்பமாயிற்று. ''என்ன, ஊறுகாய் போட்டுக் கொள்ளாதீர்கள் என்று சொல்லியிருந்தேன். தினம் நாலு ஸ்பூன் போட்டுக் கொண்டிருப்பீர்கள். பி.பி. ஏறியது அதனால் தானே?''

''இல்லை.''

''வாக்கிங் போகிறேன் பேர்வழி என்று கிளம்பி நாலாவது வீட்டில் உட்கார்ந்து ஒருமணி நேரம் அரட்டை அடித்துவிட்டுத் திரும்புவீர்கள். அதனால் பி.பி...?''

''அவர் பெருமிதத்துடன் புன்னகை செய்தார். ''நான் மெமாயர்ஸ் எழுதி வருகிறேன். இனிமேல் பொழுது ஜம்மென்று போகும். படித்தது, கேட்டது, அனுபவம் - எல்லாவற்றையும். வெரி இன்ட்டரஸ்டிங்.''

சுதீரும் பாலாவும் மறுபடி பார்த்துக் கொண்டார்கள். ''அட! என்னிடம் சொல்லவே இல்லையே அப்பா!'' என்று நடித்தாள் அவள்.

''முடியட்டும், பிறகு சொல்லலாமென்றிருந்தேன், இப்போது அனேகமாய் முடிந்து விட்டது. வெளியிடு வதற்குக் கொடுக்க வேண்டியதுதான்.''

''மாமா, அதற்குள் அவசரப்படாதீர்கள்'' என்று குறுக்கிட்டான் சுதீர். ''நல்ல பெயருள்ள பதிப்பகமாகப் பார்த்து தர வேண்டும். ராயல்ட்டி ஒழுங்காய் வர வேண்டும். நான் நல்ல ரெப்யூட்டட் பப்ளிஷராக விசாரித்துச் சொல்கிறேன். ரிடையர்டு ஏ.ஸி. ஜனார்த்தனத்தின் அனுபவங்கள் என்றால் லேசில்லை, மாமா.''

அந்தப் புகழ்ச்சியில் அவர் முகமலர்ந்தார். ''இந்தச் சமையல்காரப் பாட்டியைப் பற்றித்தான் எனக்கு கவலையாக இருக்கிறது. வீட்டை ஒழிக்கிறேன் என்று சொல்லி எதை வேண்டுமானாலும் எடுத்து எங்கே வேண்டுமானாலும் போட்டு விடுகிறாள். நான் எழுதியிருப்பதையும் எங்கேயாவது போட்டுவிட்டால் என்கு ஹார்ட் அட்டாக்தான். அதனால் இனிமேல் என் ரூமைப் பூட்டி, சாவியை என்னிடமே வைத்துக் கொள்ளப் போகிறேன்.''

''ஆமாமாம். செய்ய வேண்டியதுதான்'' என்றாள் பாலா. அவள் குரல் செத்திருந்தது. இவ்வளவு கிடுகிடு

வென்று நிலைமைகள் மாறுமென்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

சுதீர் புறப்பட்டான். கேட்டைப் பூட்டிக்கொண்டு வருவதற்காக அவனுடன் வாசல்வரை போனாள் பாலா.

''கலங்காதே. என்னிடம் ஒரு டஜன் சாவிக் கொத்து இருக்கிறது. அதற்குத் திறக்காத பூட்டு உலகத்திலேயே கிடையாது'' என்றான் அவன், அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில். ''வாக்கிங் என்னென்ன கிழமை என்றார்?''

''திங்களும் வெள்ளியும்.''

''சரி. திங்கள்கிழமை நாம் பழையபடி இறங்கலாம்'' என்று அவளுக்கு உறுதி கூறிவிட்டுக் கிளம்பினான் அவன்.

★★★

**தி**ங்களன்று மாலை அவன் வந்தபோது ஜனார்த்தனம் வாக்கிங் சென்றிருந்தார். ஐந்து நிமிஷம்தான் சுதீர் மெனக்கெட்டான். தான் கொண்டு வந்திருந்த சாவிகளை வைத்து அறையைத் திறந்து விட்டான்.

இருவருமாகப் பழையபடி ஆராயத் தொடங்கினார்கள். இரண்டாவது கதை -

## மர்மமான குங்குமத் துளிகள்

**கா**லியாயிருக்கும் அடுத்த வீட்டுக்கு யாரோ குடி வரப் போகிறார்கள் என்று சாவித்திரிக்கு ஒரு மாதமாகவே தெரியும். ஆனால் ஏகப்பட்ட நபர்கள் கொண்ட பெரிய குடித்தனமாக இருக்குமென்றுதான் அவள் எதிர்ப்பார்த்திருந்தாள்.

ஒரு ஜட்கா வண்டியில் இளம் கணவன், இளம் மனைவி, இரண்டு வயதுக் குழந்தை – மூன்றே பேர்தான் வந்திறங்கினார்கள். இன்னொரு ஜட்கா வண்டியில் அவர் களுடைய பாத்திரப் பண்டம் சாமான்கள் வந்தன. குடும்பம் அத்தனை சிறியது.

எப்படி அவர்களைச் சினேகிதம் செய்து கொள்வது என்று சாவித்திரி யோசித்துக் கொண்டிருந்தபோது, மறுநாள் மாலையே அந்தப் பெண் சாவித்திரியைத் தேடிக்கொண்டு வந்தாள்.

''உங்கள் வீட்டில் பசுமாடு இருக்கிறதாமே? சொன்னார்கள்'' என்றாள்.

''ஆமாம், ஏன்?'' என்றாள் சாவித்திரி.

''என் பெண் மீனா தினம் ராத்திரி பசும்பால் சாப்பிட்டுப் பழக்கப்பட்டு விட்டாள். வேறெதுவும் ஒத்துக் கொள்ளாது. நீங்கள் தினம் ஓர் ஆழாக்குப் பசும்பால் கொடுத்தால் அதற்குண்டான பணத்தைத் தந்து விடுகிறேன். தப்பாக நினைக்கக் கூடாது...'' என்றாள் அவள் தயங்கி தயங்கி.

''இதிலென்ன தப்பு? கட்டாயம் தருகிறேன்'' என்ற சாவித்திரி, புதிய பெண்ணைப் பற்றி மற்ற விவரங்களை விசாரித்தாள்.

''என் பெயர் புவனேசுவரி. என் கணவருக்கு தாலுகா ஆபீசில் வேலை. டவுனில் நல்ல வீடு கிடைக்கவில்லை. கிடைத்தாலும் வாடகை அநியாயமாயிருக்கிறது. அதனால்தான் இந்தக் கிராமத்துக்கு வந்தோம். ஆபீசுக்கு சைக்கிளில் அவர் போய் வருவார்...'' என்றாள் அவள்.

''ரொம்ப நாளாய்ப் பக்கத்து வீடு பூட்டியே கிடந்தது. நீங்கள் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்று

சொன்ன சாவித்திரி அவள் கேட்ட பாலைக் கொடுத்தாள். ''நீங்கள் இந்தக் கிராமத்துக்குப் புதிசு. அதனால் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்'' என்றாள் தாழ்ந்த குரலில்.

''என்ன?''

''இங்கே வேலையில்லாதவர்கள் அதிகம். ஆகையால் திருட்டுப் புரட்டு ஜாஸ்தி, நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்றாள்.

புவனேசுவரி சிரித்து, ''நான் தைரியசாலி. ஜாக்கிரதை யாகவும் இருப்பேன்'' என்றாள்.

''வெறும் தைரியம் போதாது. தெய்வ பக்தி வேண்டும். ஏவல், செய்வினை, சூனியம் இப்படியும் சிலது நடக்கிறது'' என்று சாவித்திரி தெரிவித்ததும் புவனேசுவரியின் முகத்தில் பயம் தெரிந்தது.

## 6

**பு**வனேசுவரியின் பயம் வெளிப்படையாகத் தெரிந்தது. திருட்டுப் புரட்டு என்றால் பரவாயில்லை. ஆனால் காற்று, கறுப்பு, பில்லி சூனியம் என்று என்னென்னவோ சொல்கிறாளே இந்த சாவித்திரி!

''ஒன்றும் கவலைப்படாதீர்கள். பக்கத்து வீட்டில் தானே நான் இருக்கிறேன். என்ன நேர்ந்தாலும் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சாவித்திரி சொன்னது அவளுடைய பயத்தை இன்னும் அதிகரித்தது.

''நான் ஒரு பைத்தியக்காரத்தனம் பண்ணி விட்டேன்'' என்றாள். ''என் கணவருக்குத் தாலுகா ஆபீசில் சாதாரண வேலைதான் என்றாலும், என் அம்மா வீடு, மாமியார் வீடு இரண்டு இடமும் வசதியானவர்கள். நகை நட்டு நிறையச்

செய்து, போட்டிருந்தார்கள். அதெல்லாம் அவர்களிடம் விட்டுவிட்டு வந்திருக்கலாம். தெரியாத்தனமாய் எடுத்து வந்துவிட்டேன்...''

''அதுதான் சொல்கிறேனே, கவலைப்படாதீர்கள் என்று? ஜாக்கிரதையாக இருந்தால் நம்மை மீறி என்ன நடந்து விடும்? கிராமத்து எல்லையில் மாகாளியம்மன் கோவில் இருக்கிறது. அங்கே தினம் சாயந்தரம் நாம் விளக்கேற்றிக் கும்பிட்டுவிட்டு வரலாம். ஒன்றும் நேராது'' என்று சாவித்திரி தைரியம் சொன்னாள்.

''அப்படியே செய்யலாம். உங்களைப் போல இவ்வளவு பிரியமாய் யார் சொல்லப் போகிறார்கள்?'' என்று சொல்லிவிட்டுக் குழந்தையுடன் திரும்பினாள் புவனேசுவரி.

அன்று இரவு தயங்கித் தயங்கி, தான் கேட்ட விஷயத்தைக் கணவனிடம் சொன்னபோது திருமாலுக்குக் கோபம்தான் வந்தது. ''இதற்குத்தான் நான் முட்டிக் கொண்டேன். டவுனில் இருந்தால் அவரவர்கள் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு போவார்கள். நம் விஷயத்தில் மூக்கை நுழைக்க மாட்டார்கள். கிராமத்துக்கு வந்தால் இப்படித்தான். வேலையற்ற ஜனங்கள். பேய் பிசாசு என்று ஏதாவது பினாத்துவார்கள். டவுனில் வீட்டு வாடகை ஜாஸ்தி என்று நீதான் பிடிவாதம் பிடித்து இங்கே வரச் சொன்னாய்'' என்றான்.

அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல முடியாமல் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தாள் புவனேசுவரி. பிறகு, ''பேய் பிசாசு இருக்கட்டும். திருட்டுப் புரட்டுக்கு என்ன பண்ணுவது? நான் பாட்டுக்கு இருக்கிற நகைகளையெல்லாம் இங்கே எடுத்து வந்துவிட்டேனே?'' என்றாள்.

''இரண்டு வழிதான் உண்டு. திருச்சிராப்பள்ளியில் பெரிய பாங்க்கில்தான் சேஃப்டி லாக்கர் இருக்கிறது. அங்கே கொண்டுபோய் வைக்கணும். அல்லது உன் வீட்டிலாவது, என் வீட்டிலாவது ஒப்படைக்கணும். எது முடியும்? இப்பத்தான் ஜாயின் ஆகியிருக்கிறேன். லீவு கிடைக்காது. ஒரு மாதம் கம்மென்றிரு'' என்றான் திருமால்.

அவளால் கம்மென்றிருக்க முடியவில்லை. இரவு பூரா ஏதேதோ கெட்ட கனாக்கள். தைரியத்துக்காகக் குழந்தை மீனாவைக் கட்டிக்கொண்டு படுத்திருந்தாள். நிம்மதி யின்றிப் புரண்டாள்.

மறுநாள் காலை வேலைக்கு வந்த புது வேலைக் காரியிடம் மெதுவே பேச்சுக் கொடுத்தாள். சாவித்திரி சொன்னதெல்லாம் உண்மைதானா என்று விசாரித்தாள்.

''அதையேம்மா கேட்கிறீங்க? இந்த ஊரிலே என்ன வேணுமானாலும் நடக்கும்!'' என்று கூறிய வேலைக்காரி அவள் பீதியை இன்னும் அதிகப்படுத்தினாளே தவிரக் குறைக்கப் பயன்படவில்லை.

அன்று சாயந்தரமே சாவித்திரியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மாகாளியம்மன் கோவிலுக்குப் போனாள் புவனேசுவரி. சாவித்திரிக்குக் குழந்தை குட்டி கிடையாது. கணவன் நிலம் நீச்சு என்று போய்விடு வானாம். புவனேசுவரி தன் குழந்தை மீனாவை இடுப்பில் எடுத்துக் கொண்டாள். இருவரும் வீட்டைப் பூட்டிக் கொண்டார்கள்.

அம்மன் சன்னதியில் விளக்கேற்றிவிட்டு, அர்ச்சனை செய்து குங்குமம் இட்டுக்கொண்டு வீடு திரும்பியபோது புவனேசுவரியின் மனத்தில் சிறிது தெம்பு ஏற்பட்டிருந்தது

''இன்னும் ஒருமாதத்துக்குத் தினம் போகலாம். பிறகு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போனால் போதும்,'' என்று சாவித்திரி சொன்னதை மனசார ஏற்றுக்கொண்டாள்.

கோவிலிலிருந்து திரும்பும் வழியில் முதலில் புவனேசுவரியின் வீடுதான் இருந்தது. அடுத்ததுதான் சாவித்திரியின் வீடு. ''உள்ளே வந்துவிட்டுத்தான் போங்களேன்'' என்று புவனேசுவரி அழைத்தாள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து விளக்கேற்றினாள் புவனேசுவரி. அதே சமயம், ''என்ன இது?'' என்று சாவித்திரியின் திடுக்கிட்ட குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

நிலைப்படியில் செக்கச் செவேலென்று ஏதோ தெரிந்தது. டார்ச் லைட்டை எடுத்து வந்து அடித்துப் பார்த்தாள் புவனேசுவரி.

நிலைப்படியிலும் உள்ளேயும் பல இடங்களில் குங்குமம் கொட்டிக் கிடந்தது, திட்டுத் திட்டாக. நடு நடுவே மஞ்சள் பொடியும் சிதறியிருந்தது.

ஒருவரையொருவர் திகிலுடன் பார்த்துக் கொண்டார்கள். ''கோவிலிலிருந்து குங்குமம் கொண்டு வந்தாயா என்ன?'' என்றாள் சாவித்திரி.

''இல்லையே. அங்கேயே நெற்றியில் இட்டுக் கொண்டு விட்டேனே? மிச்சத்தைத் தூண் ஓரமாக உதறி விட்டேன்'' என்றாள் சாவித்திரி.

''அப்படியேயிருந்தாலும் மஞ்சள் பொடி எங்கிருந்து வந்தது?'' என்று பயம் கலந்த குரலில் பேசினாள் சாவித்திரி. ''இரு, துடைப்பத்தால் கூட்ட வேண்டாம்.

துணியினால் துடைக்கிறேன்,'' என்றவள் தன் புடவைத் தலைப்பாலேயே அதை ஒற்றி எடுத்தாள். பின்னர் சுவாமி படத்தை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டு,''அப்பனே, முருகா. காற்று கறுப்புத் தோஷத்திலிருந்தெல்லாம் நீதாண்டாப்பா காப்பத்தணும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

புவனேசுவரியின் முகத்தில் கலவரம் படர்ந்தது. அவள் இதயம் படபடத்தது. ''அதாவது...நீங்க அன்னிக்குச் சொன்னீங்களே...''

''அதன் வேலையாய்த்தான் இருக்கும். வா, என் வீட்டிலும் பார்த்து விடலாம். எனக்குப் பயமாயிருக் கிறது'' என்று புவனேசுவரியைத் துணைக்கழைத்தாள் சாவித்திரி.

பூட்டைத் திறக்கு முன்பே, அங்கேயும் நிலைப்படியில் அதே குங்குமத் தெறிப்பைக் கண்டார்கள். வீட்டுக்குள்ளும் குங்குமம் சிதறிக் கிடந்தது. மஞ்சள் பொடியும் தூவப்பட்டிருந்தது.

அது மட்டுமல்ல. அறைக்குள் இருந்த பழைய டிரங்குப் பெட்டிகள் திறந்து கிடந்தன.

''ஐயையோ!'' என்று ஓடிப்போய்ச் சாவித்திரி அந்தப் பெட்டிகளை ஆராய்ந்தாள். புடவைகளையும் ரவிக்கைகளையும் உதறி, விழுந்து விழுந்து எதையோ தேடினாள். ''ஐயோ! போய் விட்டதே! போய் விட்டதே!'' என்று தலையில் கை வைத்துக் கொண்டு ஓவென்று அழலானாள்.

புவனேசுவரிக்கு எதுவும் புரியவில்லை.''என்னம்மா, என்ன போய்விட்டது?''

''இரண்டாயிரத்துச் சொச்சம் ரூபாய் இருக்குமே! அவ்வளவும் போய் விட்டதே! அவ்வளவும் போய் விட்டதே!'' என்று விம்மி விம்மி அழுதாள் அவள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் சொன்னாள், அதுவும் ரகசியமான குரலில். ''என் புருஷன் எதற்கும் உபயோக மில்லாதவன். குடி கூத்தி எல்லாம் உண்டு. கையில் ஒரு பைசா தங்காது. ஆகையால் அவருக்குத் தெரியாமல் சிறு வாட்டுப் பணம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்துப் பெட்டி அடியில் ஒளித்து வைத்திருந்தேன். அத்தனையும் காணோம்!''

''யார் திருடியிருப்பார்கள்?'' என்று ஆச்சரியப்பட்டாள் புவனேசுவரி.

''திருட்டா? இல்லவேயில்லை! என்னவோ பில்லி சூன்ய சமாசாரம்தான் இதெல்லாம்! இல்லாவிட்டால் குங்குமமும் மஞ்சள் பொடியும் ஏன் இப்படிக் கொட்டிக் கிடக்கிறது! நீயும் உன் வீட்டில் ஜாக்கிரதையாக இரு! என் கணவருக்குத் தெரியாமல் நான் சேர்த்து வைத்திருந்தது தெரிந்தால் என்னை அடித்துக் கொன்று விடுவார். தயவு பண்ணி வெளியே சொல்லாதே. என் நஷ்டம் என்னோடு போகட்டும்'' என்றாள்.

வாசலில் யாரோ நிற்கிற மாதிரி சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தார்கள்.

இருபத்தைந்து வயது இருக்கும், ஓர் இளைஞன் கிழிந்த சட்டையும் அழுக்கு வேட்டியுமாக இருந்தான். உதட்டில் ஓர் அசட்டுச் சிரிப்பு இருந்தது. 'பே...பே.. பே...' என்றான் அவர்களைப் பார்த்ததும்.

''இதோ பார்! இன்னொரு தடவை இங்கே வந்தாயோ நான் ரொம்பப் பொல்லாதவளாகி விடுவேன்'' என்று அவனைப் பார்த்துக் கத்தினாள் சாவித்திரி.

''பாவம், ஊமைப் பிள்ளை மாதிரி இருக்கிறது'' என்றாள் புவனேசுவரி.

''ஊமைதான். ஆனால் பாவம் சீவம் என்று அனுதாபம் காட்டாதே. ஏவல், செய்வினை எல்லாம் இவன் மூலமாய்த்தான் நடக்கிறது'' என்ற சாவித்திரி, ''போகப் போகிறாயா இல்லையா?'' என்று அவனை விரட்டினாள்.

அவன் மறுபடி ஒரு பயங்கர இளிப்புடன் போய் விட்டான்.

புவனேஸ்வரி தன் வீட்டுக்குத் திரும்பினாள். சென்ற ஒரு மணி நேரத்துக்குள் நடந்த தெல்லாம் பயங்கரக் கனவாக, இனம் தெரியாத குழப்பமாக அவளைக் கலக்கியிருந்தது. ஒரு வேலையும் ஓடவில்லை. கணவன் வந்த போது சரியாய்ப் பேச முடியவில்லை. அவனிடம் சொன்னால் மறுபடி தன்னையே இடித்துக் காட்டுவான் என்று பயந்து வாயை மூடிக் கொண்டு விட்டாள். ஆனால் தன் நகை நட்டுக்களைச் சீக்கிரமே பத்திரப்படுத்தி வைத்து விடவேண்டும் என்று மட்டும் தீர்மானம் செய்து கொண்டாள்.

அன்று இரவும் அவள் சரியாய்த் தூங்கவில்லை. குபீர் குபீரென்று வியர்த்துக் கொண்டேயிருந்தது. உருவமில்லாத நிழல்கள் வீட்டுக்குள் நுழைவது போலவும் தன்னைக் கொல்ல வருவது போலவும் கற்பனைகள் முளைத்துக் கொண்டேயிருந்தன. யாரோ தன் நகைகளைக்

கொள்ளையடித்துக் கொண்டு ஓடுவது போலக் கண்டு திடுக்கிட்டுப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். மடக் மடக்கென்று நாலு டம்ளர் தண்ணீர் குடித்த பிறகுதான் மூச்சு சீராக வந்தது. எந்த வேளையில் இந்தக் கிராமத்தில் அடியெடுத்து வைத்தோமோ என்று தன்னையே சபித்துக் கொண்டு இரவை ஓட்டினாள்.

மறுநாள் பதினொரு மணி இருக்கும். திருமால் ஆபீசுக்குப் போய்விட்டான். குழந்தை மீனா தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

வியர்க்க விறுவிறுக்க உள்ளே ஓடி வந்தாள் சாவித்திரி.

''என்ன சாவித்திரிம்மா, ஏன்? என்ன விஷயம்? என்று அவள் தோற்றத்தைக் கண்டு பதறிப் போனாள் புவனேசுவரி.

''என் கைகாலெல்லாம் நடுங்குகிறது. கொஞ்சம் பொறு. சொல்கிறேன்'' என்றாள் சாவித்திரி. அவள் தலை அலங்கோலமாய்ப் பிரிந்திருந்தது. முகம் வெளிறியிருந்தது. ஒரு நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து, மேஜை மீதிருந்த பேப்பரை எடுத்துப் படபடவென்று விசிறிக் கொண்டாள்.

பானையிலிருந்து குளிர்ந்த நீர் எடுத்து வந்து கொடுத்தாள் புவனேசுவரி. ''கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள். முகத்தைக் கழுவிக் கொள்ளுங்கள். ஒன்றுக்கும் பயப்படாதீர்கள், மெதுவாய்ச் சொல்லுங்கள்'' என்றாள்

பல நிமிடங்கள் கழித்துத்தான் சாவித்திரி பேசினாள் திக்கித் திணறி. ''இதோ பார், நீ ஊரிலிருந்து வந்ததும் உன்னை எச்சரித்தேனே காற்று, கறுப்பு என்று. இப்போது

எனக்குத்தான் அபாயம் காத்திருக்கிறது. இன்றைக்கே கூட இந்த ஊரை விட்டுப் போய்விட்டால் தேவலை என்று தோன்றுகிறது...'' என்றாள்.

''பதட்டப்படாமல் மெதுவாய்ச் சொல்லுங்கள்'' என்றாள் புவனேசுவரி.

''காலையிலிருந்தே என்னவோ மனசுக்குள் ஒரு பீதியாக இருந்தது. என் கணவர் வெளியே போனதும் படுத்துக் கொண்டேன். ஒரே புழுக்கம். வெறும் தரையில் தான் படுத்துக் கொண்டேன். வீட்டில் ஒருவரும் இல்லாததால் முந்தானையைக் கூட அவிழ்த்து, இடுப்பின் கீழே தள்ளி விட்டுக் கொண்டு வெறும் ரவிக்கையோடு படுத்திருந்தேன். திடீரென்று முதுகில் யாரோ நெருப்புத் துண்டால் சுட்டமாதிரி இருந்தது!''

''என்ன!'' புவனேசுவரியையும் பயம் பற்றிக் கொண்டது.

''சுரீர் சுரீரென்று நாலைந்து இடத்தில் கொள்ளிவாய் முனையை வைத்த மாதிரி இருந்தது. சரேலென்று எழுந்து விட்டேன். முதுகு எரிந்தது. ரவிக்கையைக் கழற்றிப் பார்த்தால்-'' சாவித்திரி தன் கையோடு கொண்டு வந்திருந்த ரவிக்கையைப் பிரித்துக் காட்டினாள்.

புவனேசுவரிக்கு மார்பை அடைத்தது.

ஆமாம். ஐந்தாறு இடங்களில் நெருப்பு முனையினால் சுட்டமாதிரி, கருகிப் போன பொத்தல்கள் இருந்தன அந்த ரவிக்கையின் முதுகுப் புறத்தில்.

''நினைத்தாலே எனக்கு நடுங்குகிறது, புவனா. இது என்ன பேய் பிசாசு மாயமோ தெரியவில்லை'' என்று கூறி

முடித்துவிட்டு, இரு கைகளாலும் தலையைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் சாவித்திரி.

அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள் புவனேசுவரி. அவளுக்கும் இந்தச் சம்பவம் நடுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சற்று யோசித்தவள், ''ஏன் சாவித்திரியம்மா, இதற்கெல்லாம் மந்திர தந்திரம், பூஜை கீஜை இருக்குமே? நாம் இரண்டு பேருமாய் அதைச் செய்தாலென்ன?'' என்றாள்.

சாவித்திரியின் முகத்தில் கொஞ்சம் ஆறுதல் தென்பட்டது. ''நானும் அதையே நினைத்துத்தான் உன்னிடம் வந்தேன். நீயும் சொல்லிவிட்டாய். நாளைக்கே பூசாரியை அழைத்து வருகிறேன். இங்கேயே ஹோமம் ஏதாவது பண்ணுவார்'' என்றாள்.

புவனேசுவரியும் அதற்குச் சம்மதித்தாள். ஆனால் கணவனிடம் சொல்லாமல் எதையும் செய்ய அவளுக்கு விருப்பமில்லை. அன்றிரவு மெல்லத் தெரிவித்தாள்.

திருமாலுக்கும் கவலை ஏற்பட்டது. 'சரி, உன் மனசில் இருக்கிற பயத்தைப் போக்கிக் கொள்ளவாவது ஏதாவது செய்து கொள்'' என்று அனுமதியளித்தான்.

மறுநாள் பகல் சாவித்திரி ஒரு பூசாரியை அழைத்து வந்தாள். வீட்டு முற்றத்தில் அவர் அக்கினி மூட்டி, ஏகப்பட்ட மந்திர உச்சாடனங்கள் செய்து, மஞ்சள் நீரை இரு பெண்கள் தலையில் தெளித்தார். ''இனி இரண்டு பேர் வீட்டிலும் எந்தக் காற்றுக் கறுப்பும் எட்டிப் பார்க்காது'' என்று உறுதியளித்து, இருபது ரூபாய் தட்சிணை வாங்கிக் கொண்டு சென்றார்.

அன்றைய ராத்திரி புவனேசுவரி நன்றாகத் தூங்கினாள். மனத்தில் சஞ்சலம் அகன்றிருந்தது. ஆனால் மறுநாள் சாயந்தரம் வரை சாவித்திரி தன்னை வந்து பார்க்காதது ஆச்சரியமாயிருந்தது. குழந்தை மீனா தொணதொண வென்று அழுது கொண்டிருந்ததால் இவளும் அங்கே போகவில்லை.

மாலை வீட்டைப் பூட்டிக் கொண்டு குழந்தையுடன் கோயிலுக்குப் புறப்பட்டாள்.

''சாவித்திரிம்மா, வருகிறீர்களா கோவிலுக்கு?'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தவள், கனத்த கம்பளியைப் போர்த்திக்கொண்டு சாவித்திரி படுத்திருப் பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

''என்ன உங்களுக்கு? ஜுரமா?'' என்று அருகில் உட்கார்ந்து விசாரித்தாள்.

''காலையிலிருந்து ஒரே குளிர் ஜுரம். நேற்று பூசாரி செய்த பூசை என்னவோ ஒரு பயத்தை ஏற்படுத்தி விட்டது'' என்றாள் அவள்.

''கோவிலுக்கு வாருங்கள். ஒரு பிரதட்சிணம் செய்து விட்டு வரலாம். சரியாகிவிடும்'' என்று புவனேசுவரி அழைத்தாள்.

''என்னால் எழுந்திருக்கவே முடியாது. நீ மட்டும் போய் வா'' என்றாள் சாவித்திரி.

''சரி, அப்படியானால் இந்தாருங்கள் வீட்டுச் சாவி. என் புருஷன் இன்று வீட்டுக்கு வர லேட்டாகும் என்றுதான் சொன்னார். இருந்தாலும் ஒரு வேளை சீக்கிரம் வந்தால், இங்கே வந்து கேட்பார். கொடுத்து விடுங்கள்'' என்றாள் புவனேசுவரி.

''அப்படி அலமாரியில் வைத்து விட்டுப் போ.'' மேலும் போர்வைக்குள் சுருண்டு கொண்டாள் சாவித்திரி.

புவனேசுவரி மட்டும் கோவிலுக்குப் போனாள். அன்று ஆடி வெள்ளிக் கிழமை. ஏகப்பட்ட கூட்டமாக இருந்தது. அர்ச்சனை செய்து விட்டுத் திரும்பிய போது நன்கு இருட்டி விட்டது.

சாவித்திரியின் வீட்டில் அவள் இன்னும் அப்படியே தான் படுத்திருந்தாள். ''நான் கஞ்சி கிஞ்சி போட்டு எடுத்து வரட்டுமா?'' என்றாள் புவனேசுவரி.

''ஒன்றும் வேண்டாம். வயிற்றைப் பட்டினி போட்டால் ஜுரம் குறைந்துவிடும்'' என்றாள் அவள். ''நீ சாவியை எடுத்துக் கொண்டு போ.''

புவனேசுவரி அலமாரியில் சாவியை வைத்த இடத்தில் பார்த்தாள். காணோம்.

''இங்கே இல்லையே? வேறெங்கானும் எடுத்து வைத்தீர்களா?'' என்றாள்.

''இல்லையேம்மா. நீ போனது முதல் நான் எழுந்திருக்கவேயில்லை. நன்றாகப் பார்.''

புவனேசுவரி நன்றாய்த் தேடினாள். காணோம். சாவித்திரியும் எழுந்து வந்து தேடினாள்.

''ஒரு வேளை உன் கணவர் வந்து எடுத்துப் போயிருப்பாரோ? நான் தூங்குகிறேனென்று நினைத்து எழுப்பவில்லையோ என்னவோ'' என்றாள் சாவித்திரி.

''வாருங்கள், பார்க்கலாம்!''

இருவரும் புவனேசுவரியின் வீட்டுக்குச் சென்றார்கள். கதவு திறந்து கிடந்தது. ஆனால் விளக்குகள் எரியவில்லை.

ஒரே இருட்டு. ''என்னங்க, நீங்கள் வந்து விட்டீர்களா?'' குரல் கொடுத்தாள் புவனேசுவரி.

ஒரு பதிலும் வரவில்லை.

உள்ளே போனார்கள். இருட்டில் தட்டுத் தடுமாறிச் சென்று விளக்கை ஏற்றினாள் புவனேசுவரி. மறுகணம் வீலென்று கத்தினாள்.

அவளுடைய பெட்டிகள் திறந்து சிதறிக் கிடந்தன.

அது மட்டுமல்ல.

அறை வாயிற்படியில் அந்த ஊமைப் பையன் இறந்து கிடந்தான். மண்டை சிதறி, ரத்த வெள்ளம் பெருக் கெடுத்திருந்தது.

# 7

அச்சத்தினால் ரத்தம் ஐஸ் கட்டியாக உறைந்து விட, அந்தக் கோரக் காட்சியைப் பார்த்தது பார்த்தபடி சிலையாகிப் 'போனாள் புவனேசுவரி.

அந்த ஊமைப் பையனின் முகம் அலங்கோலமாய்ச் சிதைந்து, செக்கச் செவேலென்ற குருதிப் பிரவாகத்தில் குலைந்து கிடந்தது. நெற்றிக்கு மேலே மண்டை சிதறு தேங்காய் மாதிரி உடைந்திருந்தது. கையும் காலும் ப்ளஸ் குறி போல் பரத்திக் கொண்டு விறைத்திருந்தன. தோளில் மார்பில் முதுகின் கீழே எங்கெங்கும் ரத்த வெள்ளம்.

அவனை அடித்துக் கொல்ல உபயோகிக்கப்பட்ட உலக்கை – நெல் குத்தும் மர உலக்கை – ரத்தத்தைப் பூசிக்கொண்டு ஒரு மூலையில் கிடந்தது. அடிபட்டபோது

அவன் பயங்கரமாய் வீரிட்டுத்தான் இருக்க வேண்டும். அந்த வீடு தெருவின் கோடியில் இருந்ததாலோ என்னவோ யாருக்கும் அது கேட்கவில்லை.

புவனேசுவரியைக் காட்டிலும் சாவித்திரிக்கு மன உறுதி அதிகம் இருந்தது. இருவரில் முதலில் சுதாரித்துக் கொண்டவள் அவள்தான். ''ஐயையோ! இதென்ன கோரம்!'' என்று பெருங்குரலெடுத்துக் கத்தியவள் வாசலுக்குப் போய், ''ஐயோ, மீனாட்சியம்மா! நாட்டாண்மை மாமா! சங்கரியம்மா! வேலு அண்ணே! வாங்களேன்! ஓடி வாங்களேன்! கொலை! கொலை!'' என்று தொண்டை கிழிந்துவிடும் அளவுக்குக் கத்தினாள்.

இரண்டு நிமிஷத்தில் திமுதிமுவென்று கூட்டம் சேர்ந்து விட்டது. சாவித்திரி புவனேசுவரியின் கையைப் பிடித்துக் கொண்டு. ''ஐயோ! நான் அன்னிக்கே சொன்னேனே, காற்று கறுப்பு, இருட்டு, ஜாக்கிரதையா இருக்கணும் என்று! என்றைக்கு அந்தக் குங்குமத்தைப் பார்த்தேனோ அன்றைக்கே எனக்குத் தோன்றி விட்டது, இப்படியொரு விபரீதம் நேரப் போகிறதென்று!'' என்று ஒப்பாரி வைத்தவள், இறந்து கிடக்கும் ஊமையைப் பார்த்து, ''ஏண்டா பாவிப் பிள்ளை, நீ எங்கேடா இங்கே வந்தே? உனக்கு ஏண்டா இந்தக் கதி வரணும்?'' என்று ஏதோ உயிருடன் இருக்கிறவனிடம் விசாரிக்கிற மாதிரி பேசினாள்.

கூட்டத்திலிருந்த ஒரு பெரியவர், ''புவனேசுவரி, வீட்டுக்குள் போய், பணம், பண்டமெல்லாம் சரியாயிருக்கிறதா என்று பாருங்கள்'' என்றார்.

இன்னொருவர், ''திருமால் ஏன் இன்னும் வர வில்லை? மன்னார், நீ சைக்கிளை எடுத்துக்கிட்டு டவுனுக்குப் போய்ப் பார்த்து விட்டுவா'' என்றார்.

''போகிற வழியிலேயே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு தகவல் கொடுத்து விட்டுப் போ'' என்றார் மற்றொருவர்.

மீசைக்காரர் ஒருவர், ''புவனேசுவரி, குழந்தையை ஏன் தோளில் வைத்துக்கொண்டு அங்கே நிற்கிறீர்கள்? பயத்தில் அதற்கு ஜுரம் வந்து விடும். சொர்ணம், நீ குழந்தையை எடுத்துப் போய் நம் வீட்டில் வைத்துக்கொள்'' என்றார். அவர் மனைவி, பதுமை போல் நின்றிருந்த புவனேசுவரியிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு சென்றாள்.

புவனேசுவரி துக்கம் தாங்காமல் புடவைத் தலைப்பினால் வாயைப் பொத்திக் கொண்டாள். இப்படியொரு கோரக்கொலை நிகழ்ச்சி நடைபெற்று, ஊரே கூடிப் போகும் என்பதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

உள்ளே சென்றவள், ''ஐயோ!'' என்று இரண்டாம் முறையாக வீரிட்டாள். மரப் பீரோ இரண்டு கதவுகளும் வெட்டி மல்லாத்தின மாதிரி திறந்து கிடந்தன. பிஸ்கெட் டப்பாவில் ஐந்நூறு ஆயிரம் என்று கரென்ஸி நோட்டுக்களாய் வைத்திருப்பது வழக்கம். அது காலியாய்க் கிடந்தது. சிறிய சிறிய நகைப் பெட்டிகள் தரையில் சிதறிக் கிடந்தன. ஒற்றைப் பவுன் வளையல் பீரோவின் கீழே தெரிந்தது. காசு மாலை, வைரத்தோடு – இன்னும் என்னென்னவோ, அவளுடைய மனநிலையில் சரியாய்க் கணக்கெடுக்க முடியவில்லை – காணோம்.

அவள் கூச்சலைக் கேட்டுச் சாவித்திரி உள்ளே ஓடி [illegible]ந்தாள். "ஐயோ அக்கிரமமே! திருட்டு வேறே [illegible]யிருக்குதா?" என்று அவளும் புவனேசுவரியைக் [illegible]டிப் பிடித்துக்கொண்டு புலம்பினாள்.

யாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நல்ல [illegible]ளை, அதற்குள் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்து [illegible]ந்து விட்டார். கிராமத்து எல்லையில், டவுனுக்குப் [illegible]கும் நெடுஞ்சாலையில் தாணா இருந்ததால் தகவல் [illegible]த்ததும் விரைந்து வந்து விட்டார். அதே சமயம் [illegible]மாலும், யாரும் போய்த் தெரிவிக்கும் முன்பே வந்து [illegible]ான். தெருவில் நுழையும் போதே தன் வீட்டு [illegible]லில் கூடியிருந்த கும்பல் அவன் வயிற்றைக் [illegible]கியது. மனைவிக்கோ குழந்தைக்கோ என்னவோ [illegible]விட்டது என்று நடுங்கிப் போனான். இன்னும் [illegible]மாய்ப் பெடலை மிதிக்க எண்ணினானே ஒழிய, [illegible]கள் ஒத்துழைக்காமல் வெட வெடத்தன. அதற்குள் [illegible] சிறுவன் அவனிடம், "உங்க வீட்டிலே ஊமைப் [illegible]ன் செத்துக் கிடக்கிறான் சார்! பிசாசு அடிச்சுப் [illegible]டுட்டுது!" என்று தெரிவித்தான்.

போலீஸ் அதிகாரி உள்ளே நுழைந்து மிஞ்சியிருந்த [illegible]த்தினரை விரட்டி விட்டார். இரண்டு பெண்களும் [illegible]றி மாறியும் சேர்த்தும் சொன்ன விவரங்களை ஒரு [illegible]யாய்ப் புரிந்துகொண்டு தொகுத்து குறித்துக் [illegible]ண்டார். அடுத்த ஒரு மணிநேரத்துக்குள் டவுனிலிருந்து [illegible]ழும் பெரிய அதிகாரிகள் வந்து சேர்ந்தார்கள். ஊமைப் [illegible]னின் சவம் போஸ்ட் மார்ட்டத்துக்காகப் பெரிய [illegible]த்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கைரேகை [illegible]காரிகளும் புகைப்படக்காரர்களும் வந்து [illegible]லையைப் பதிவு செய்து கொண்டார்கள்.

இருட்டிப் போய் வெகு நேரமாகிவிட்டது. வாசலில் இரண்டு ஜவான்களைக் காவலுக்கு அமர்த்திவிட்டு, மறுநாள் மறுபடி வந்து விசாரிப்பதாகவும் பெண்கள் எங்கேயும் போக வேண்டாமென்றும் சொல்லிவிட்டுப் போலீஸ் அதிகாரிகள் புறப்பட்டார்கள். கூடியிருந்தவர்களை விசாரித்தபோது இது காற்றுக் கறுப்பு வேலைதான் என்று கிராமத்தார்களுக்கே உரிய நிச்சயத்தோடு சொன்னார்கள். திருமாலுக்கு ஒன்றும் புரியவில்லை. மனைவி சொன்னதையே தானும் திருப்பிச் சொன்னான்.

மறுநாள் பூரா சாவித்திரி தன் வீட்டிலேயே அடைந்து கிடந்தாள் புலம்பிக் கொண்டு. புவனேசுவரி குழந்தைக்காக வேண்டி ஏதோ சமையல் என்று செய்து விட்டு, தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். என்னென்ன பொருள்கள் காணாமல் போயிருக்கின்றன என்று திருமால் கணக்கெடுத்தான். கணிசமாகத் திருட்டுப் போயிருக்கிறது என்று தெரிந்த போது இடி விழுந்த மாதிரி ஆகிவிட்டது.

இறந்து போன அந்த ஊமைப் பையனின் பாட்டி யொருத்தி பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதாள். ''என் ராஜா ஒருத்தர் ஜோலிக்குப் போக மாட்டானே? திருட்டுப் புரட்டு எதுவும் எங்கள் வம்சத்திலேயே கிடையாதே?'' என்று புரண்டு புரண்டு பிரலாபம் செய்தாள்.

மாவட்டப் பெரிய போலீஸ் அதிகாரி ஒருவர் தன் உதவியாளர்கள் புடைசூழ வந்து சேர்ந்தார். புவனேசுவரியின் வீட்டுக்குள்ளேயே விசாரணைகள் நடத்தினார். கைரேகைத் தடயம் எதுவும் சரியாய்ப் புலப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட நிபுணர் களிடமிருந்து தகவல் வந்துவிட்டது. திருட்டையும்

கொலையையும் செய்தவர் யாராயிருந்தாலும், கெட்டிக்காரர் என்பது மட்டும் புரிந்தது. கையில் துணி சுற்றிக்கொண்டே எல்லா வேலைகளும் பண்ணியிருக்கிறார்கள் என்று கைரேகை நிபுணர்கள் சொன்னார்கள்.

புவனேசுவரியை அழைத்து விசாரித்தபோது சாவித்திரியின் வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டுத் தான் மட்டும் கோவிலுக்குப் போய் வந்ததையும், திரும்பி வந்ததும் தானும் சாவித்திரியும் கண்ட காட்சியையும், நடந்தது நடந்தபடியே முன்பின் முரணில்லாமல் சொல்லி முடித்தாள்.

''உங்களுடைய அபிப்பிராயம் என்னம்மா? இது எப்படி நடந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்?'' என்று போலீஸ் அதிகாரி சாவித்திரியைக் கேட்டார்.

''சந்தேகமில்லாமல் காற்று கறுப்பு சமாசாரம்தான்'' என்று அடித்துச் சொன்னாள் அவள்

''ஏம்மா, பேய் பிசாசு என்றால் ஆளை அடித்து வேண்டுமானால் கொல்லும். திருடிக் கொண்டு போயிடுமா?''

''அப்படியில்லை, சார். காற்று கறுப்புக்காகப் பூசாரியை வரவழைத்துப் பூசைகள் செய்திருக்கிறோம். ஆகவே சாமி காவல் இருந்திருக்கிறது இந்த வீட்டுக்கு. இந்தப் பையன் திருட வந்திருக்கிறான்; அவனை அடித்துப் போட்டிருக்கிறது காவல் சாமி.''

''இருக்கலாம்'' என்று ஒப்புக்கொண்ட அதிகாரி, ''எப்போது உங்களுக்கு இந்தக் காற்று கறுப்பு சந்தேகம் ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

தங்கள் இரண்டு பேர் வீட்டிலும் குங்குமமும் மஞ்சள் நீரும் தெளிக்கப்பட்டிருந்ததைச் சொன்னாள் சாவித்திரி. தன் வீட்டிலேயே கணவனுக்குத் தெரியாமல் வைத்திருந்த பணம் காணாமல் போனதையும் கூறினாள்.

விசாரணையின் போது சாவித்திரியின் கணவனும் பக்கத்தில் இருந்தான். பணம் திருட்டு போனதைப் பற்றிச் சொன்னதும் அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்தார் அதிகாரி. ''எவ்வளவு பணம் காணாமல் போயிற்று? சில்லறையாகவா, நோட்டாகவா? பணம் மட்டும் தானா? அல்லது நகைநட்டும் சேர்ந்தா?'' என்று அவனைக் கேட்டதும்....

''எனக்குத் தெரியாமல் இவள் பணம் சேர்த்ததே எனக்கு இப்போதுதான் தெரிகிறது. நான் கோபிப்பேன் என்று சொல்லவில்லை போலிருக்கிறது'' என்றான் அவன்.

அதிகாரி சாவித்திரியையே மறுபடி கேட்டார். ''தினம் புவனேசுவரியுடன் சேர்ந்து கோவிலுக்குப் போகிறவர் நேற்று மட்டும் ஏன் போகவில்லை?''

''அதுதான் சொன்னேனே! எனக்குக் கடுமையான ஜுரம். காலோடு தலை போர்த்திக் கொண்டு படுத்திருந்தேன். அதனால்தான் இந்த ஊமைப் பையன் வந்து சாவியை எடுத்துப் போனதே எனக்குத் தெரிய வில்லை'' என்றாள் அவள்.

''டாக்டரிடம் போய் மருந்து வாங்கிச் சாப்பிட்டீர்களா?''

''இந்தக் கிராமத்திலே டாக்டர் ஏதுங்க? நாட்டு வைத்தியம்தான். அவரும் உறவுகாரங்க கல்யாணம் என்று வெளியூர் போய்விட்டார். நானே சுக்குக் கஷாயம் போட்டுக் குடித்தேன்.''

''மஞ்சள் நீரும் குங்குமமும் இரண்டு பேர் வீட்டிலும் தெளித்திருந்ததா?'' என்று தன் பழைய கேள்விக்குத் திரும்பினார் போலீஸ் அதிகாரி.

''ஆமாம் சார். இப்ப புவனேசுவரி வீட்டுக்கு அபாயம் வந்துவிட்டது. அடுத்தாற்போல் எனக்கு என்ன நேருமோ என்று உடம்பு நடுங்குகிறது.''

''ஒன்றும் நேராது. பயப்படாமல் இருங்கள். காற்று கறுப்பு என்கிறீர்களே, குங்குமம், மஞ்சள் நீரைத் தவிர வேறு என்னென்ன அறிகுறிகள் தென்பட்டது?''

ஒருநாள் மத்தியான்னம், நான் படுத்திருந்தபோது முதுகில் நெருப்பு முனையால் சுட்டதுபோல் எரிந்தது பற்றிப் புவனேசுவரியிடம் சொன்னபடியே போலீஸ் அதிகாரியிடமும் சொன்னாள் சாவித்திரி.

''அந்த ரவிக்கைகூட அப்படியே இருக்கிறது, சார் கொண்டுவந்து காட்டுகிறேன் பாருங்கள்'' என்றவள் உள்ளே போய்க் கொண்டு வந்து காட்டினாள். போலீஸ் அதிகாரி பார்த்தார். உண்மைதான். சிகரெட் முனையினால் சுட்டமாதிரி பல பொத்தல்கள் விழுந்திருந்தன. படிப்பும் அனுபவமும் உள்ள அவருக்குக்கூட அது புதிராயும் சிறிது அச்சமாயும் இருந்தது. அந்த ரவிக்கையைக் கையில் வைத்திருந்தபோது அவருக்கே மனத்துக்குள் ஒரு படபடப்பு ஏற்பட்டது. ''உள்ளே கொண்டு போய் வையுங்கள்'' என்று அவளிடம் திருப்பிக் கொடுத்தார்.

சாவித்திரி திரும்பிச் சென்றபோது எதிர்பாராதவிதமாக ஒன்றைக் கவனித்தார் போலீஸ் அதிகாரி.

மற்ற கிராமத்துப் பெண்களைப்போல அல்லாமல் சாவித்திரி பிராவும் போடுகிறவள் என்பதே அது. சற்று

மெல்லிய பிளவுஸ் அணிந்திருந்ததால் பிராவின் பட்டைகள் தெரிந்தன.

''இருங்கள் அம்மா'' என்று போனவளைத் திரும்பக் கூப்பிட்டார். ''ஒரு சங்கடமான விஷயம் கேட்கணும். தப்பாய் நினைக்காதீர்கள். நீங்கள் ரவிக்கையுடன் பிராவும் அணிகிறவரில்லையா?''

''ஆமாங்க.''

''இந்தத் தீச்சுட்ட அன்றைக்கும் பிரா போட்டிருந்தீர்களா?''

''ஆமாம், சார்.''

''அப்படியானால் அந்தப் பிராவிலும் இதே மாதிரி பொத்தல் விழுந்திருக்குமே?''

''ஆமாம், சார். பிராவிலும் பொத்தல் ஏற்பட்டிருக்கிறது'' என்றாள் சாவித்திரி அழுத்தமாக.

''அதையும் பத்திரமாய் வைத்திருக்கிறீர்களா?''

''ஓ, தாராளமாய். இதோ'' என்று மறுவினாடியே பிராவையும் எடுத்து வந்து காட்டினாள்.

அதிலும் பொத்தல்கள் இருந்தன. தீ முனையினால் சுட்ட மாதிரியே.

ஒரு வினாடி அதிகாரியின் முகத்தில் ஏமாற்றம் ததும்பியது. ஒரு வினாடிதான், மறு வினாடியே அவர் முகம் மலர்ந்தது. ஏதோ எண்ணம் ஏற்பட்டவராக, ரவிக்கைக்குச் சரியாக அந்தப் பிராவைப் பொருத்திப் பார்த்தார், கடகடவென்று வெற்றியுடன் சிரித்தார்.

இரண்டிலும் பொத்தல்கள் இருந்தனவே தவிர, ஒன்றோடொன்று பொருந்தவில்லை. ரவிக்கையில்

வெவ்வேறு இடத்திலும், பிராவில் வெவ்வேறு இடத்திலும் இருந்தன!

அடுத்த அரைமணி நேரத்துக்குள், போலீஸ் மிரட்டிய மிரட்டலில் சாவித்திரி நொறுங்கிப் போய் விட்டாள்.

தடாலென்று அதிகாரியின் காலில் விழுந்து உண்மையை ஒப்புக் கொண்டாள்.

சாவித்திரியின் கணவன் ஊதாரி. காசு பணம் சேர்க்கத் தெரியாதவன். ஆகவே பிறர் பொருள்மீது சாவித்திரிக்கு ஒரு கண். புவனேசுவரி வந்த தினத்தன்றே தீர்மானம் செய்து விட்டாள் அவளுடைய நகைகளை அபகரிப்பதென்று. அதற்காகவே, அவளைப் பயமுறுத்த வேண்டி, பிற்பாடு அவளுக்குச் சந்தேகம் ஏற்படாதிருக்க வேண்டி, காற்று கறுப்பு, பில்லி சூனியம் என்றெல்லாம் கதைகட்டி நம்ப வைத்திருக்கிறாள். தன் வீட்டில் குங்குமம், மஞ்சள் நீர்தெளித்து, புவனேசுவரி பார்க்காதபோது அவள் வீட்டிலும் அதையே செய்து வைத்திருக்கிறாள். தன் பணம் காணாமல் போயிற்றென்று முந்திக்கொண்டு சொல்லி யிருக்கிறாள். ரவிக்கையில் தானே நெருப்பு ஓட்டை செய்து வைத்து அவளுக்கும் பீதி ஏற்படுத்தியிருக்கிறாள். பிறகு பிராவிலும் பொத்தல் போட்டாளே தவிர, இரண்டும் மூத்துப் போக வேண்டும் என்று எண்ணத் தவறி விட்டாள்!

அன்று ஜுரமென்கிற சாக்கில் படுத்திருந்துவிட்டு, புவனேசுவரி போனதும் அவள் கொடுத்த சாவியை எடுத்துப் போய் நகைகளைத் திருடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாய் அந்த ஊமைப் பையன் வந்து அவள் திருட்டைக் கண்டுவிட்டான்.சாமர்த்தியமாய்க் கையில் துணி சுற்றிக்கொண்டு எல்லாம் செய்தவள் அவனால் எல்லா குட்டும் வெளிப்பட்டு விடும் என்று அஞ்சினாள்.

ஒரே வழிதான் தெரிந்தது. பக்கத்திலிருந்த உலக்கையால் ஒரே போடு போட்டு விட்டுத் திரும்பி விட்டாள்.

இவ்வளவையும் ஒப்புக் கொண்டதோடு, ஒளித்து வைத்திருந்த நகைகளையும் எடுத்து வந்து போலீஸ் அதிகாரியிடம் ஒப்படைத்தாள். பாவம், அவள் கணவன் முகத்தைத்தான் பார்க்கச் சகிக்கவில்லை.

★★★

**பா**லா தான் படித்துக் கொண்டிருந்த நோட்டுப் புத்தகத்தை மூடினாள். ''இதிலும் அந்த மாயப்பனின் கதை இல்லை. மா என்று ஆரம்பிக்கிற பெயர் கூட இல்லை'' என்று ஏமாற்றத்துடன் சொன்னவள், சுதீர் ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருப்பதைக் கவனித்தாள்.

அது என்னவென்று எட்டிப் பார்த்தபோது எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

'யோகாசனம் – சுலபமான வழிகள்' என்பது அதன் பெயர்.

''பாவி! இதுதான் நீ எனக்கு உதவி செய்கிற லட்சணமா? அந்த மாயப்பன் எந்த நிமிடத்தில் என்ன செய்து விடுவானோ என்று குலை நடுங்கிக் கொண்டிருக்கிறேன் நான். நீ என்னடாவென்றால்...''

''ஸாரி, ஸாரி! யோகா சமாச்சாரம் என்றால் எனக்கு மற்றதெல்லாம் மறந்து விடுகிறது பாலா'' என்று மன்னிப்புக் கேட்டவன், ''இதோ, இதைப் பார்க்கலாமா?'' என்று அடுத்த நோட்டுப் புத்தகத்தை எடுத்தான்.

''சீக்கிரம், சீக்கிரம். அப்பா வருகிற நேரமாகி விட்டது'' என்று அவசரப்படுத்தினாள் பாலா.

* முதல் பக்கத்தில் இருந்த தலைப்பு

## துரோகம் செய்த மனைவி

கட்டம்பாளையம் போலீஸ் ஸ்டேஷன் கோவை ஈரோடு பாதையில் இருபது மைல் தொலைவில் இருந்தது.

இன்ஸ்பெக்டர் மருதாசலம் அன்று ரொம்ப எரிச்சலாயும் குழப்பமாயும் இருந்தார். மேலிடத்திலிருந்து வந்திருந்த கடிதம்தான் காரணம். ''உங்கள் ஏரியாவில் பல கொலை கொள்ளை வழிப்பறிக் குற்றங்கள் நடைபெறுவதாக அடிக்கடி புகார்கள் வருகின்றன. ஆனால் நீங்கள் உருப்படியாய் எந்தக் கேசும் பிடித்ததாய்த் தெரியவில்லை'' என்பதே கடிதத்தின் சாரம்.

கடிதத்தை மடிப்பதும் பிரிப்பதுமாய் இருந்த போது ஓர் ஆள் தடதடவென்று போலீஸ் ஸ்டேஷனுக்குள் ஓடி வந்தான். இளைஞன், முப்பது வயதுக்குள் இருக்கும். பேயறைந்த மாதிரி இருந்தது முகம்.

''சார்! சார்! என் பெண்டாட்டி உத்திரத்தில் தூக்குப் போட்டுக்கொண்டு விட்டாள்! இப்பத்தான் வீட்டுக்குள் நுழைந்தேன். பார்த்தேன். உடனே ஓடி வருகிறேன்'' என்று அலறினான்.

## 8

இன்ஸ்பெக்டர் மருதாசலம் கொஞ்ச நேரத்துக்குத் தன் சொந்தக் கவலைகளை மறந்தார். ஏராளமான குற்றங்கள் நிகழ்ந்திருந்தும் அவர் ஒரு கேஸ்கூடப் பிடிக்க வில்லை என்று மேலிடத்திலிருந்து வந்திருந்த குற்றச் சாட்டை மறந்தார். 'அப்பாடா! இப்போதாவது ஒரு கேஸ் வந்ததே!' என்று சிறிது சந்தோஷம் கூட அடைந்தார்.

''உட்காரப்பா, உட்கார். இப்படிப் பதறினால் நீ என்னத்தைச் சொல்வது, நான் என்னத்தை எழுதுவது?'' என்றி அவனை ஆசுவாசப்படுத்தினார்.

அதன் பின்னர்தான், இன்னொரு தலையும் வாசல் பக்கம் எட்டிப் பார்ப்பதைக் கவனித்தார். ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி அவனை உள்ளே அழைத்து வரச் செய்தார்.

வந்தவர் கட்டம்பாளையம் கிராமத்து நாட்டாண்மைக் காரர். ''கும்பிடறேன், இன்ஸ்பெக்டர் ஐயா!'' என்று தன் பெரிய உடம்பை இரண்டாய் ஒடித்துக் கொண்டு வணக்கம் செலுத்தினார். ''நான் தானுங்க இந்த ஆளை இங்கே வரச் சொன்னேன்.''

''அப்புறம் நீ ஏன் வாசலில் ஒளிகிறாய்?'' என்று மருதாசலம் அதட்டினார்.

''அவன் வாயாலேயே சொல்லட்டும் என்று நினைத்தேனுங்க. முதல்ல எங்கிட்டத்தான் வந்து சொன்னான். பெண்டாட்டி தூக்கிலே தொங்கினாள் என்று. 'ஐயையோ! இது பெரிய சமாசாரம். இன்ஸ்பெக்டர் ஐயா தான் வந்து பார்க்கணும்'னு சொல்லி இங்கே இட்டாந்தேன்.''

இன்ஸ்பெக்டர் மருதாசலம் அந்த இளைஞனை ஏற இறங்கப் பார்த்தார். அவன் இப்போது ஒரு முக்காலியில் உட்கார்ந்திருந்தான். ஆனால் உடம்பு இன்னும் வெட வெடத்துக் கொண்டிருந்தது. கண்கள் வெளிறிப் போயிருந்தன. பெரிய அதிர்ச்சியால் திடீரென ஊமையாகி விட்ட மாதிரி வாயை மூடிக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் பேனாவும் நோட்டும் எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டு, ''உன் பெயரென்ன?'' என்று கேட்டார்.

''சந்தரமூர்த்திங்க...'' என்றான் அவன், குரலில் நடுக்கத்துடன். ''சந்திரான்னு கூப்பிடுவாங்க.''

''சரி, என்ன நடந்தது சொல்லு'' என்றார் இன்ஸ்பெக்டர். அவருடைய தொனியில் கடுமை ஏறியிருந்தது.

சந்திரா மேலும் பயந்துபோனது வெளிப்படையாய்த் தெரிந்தது. ''எனக்கு எதுவுமே தெரியாதுங்க. இன்ஸ்பெக்டர், சார் என்னை நம்புங்க...'' என்று குழறினான்.

''நடந்ததைச் சொல்லு, மேன்! நம்பறதா வேண்டாமா என்று நான் அப்புறமாய் முடிவு பண்ணுகிறேன்.''

''எனக்குத் தொழில் வியாபாரம் சார். கடைத் தெருவில் சின்ன ஷாப் வைத்திருக்கிறேன். காலையில் வழக்கம் போலக் கடைக்குப் போனேன். என் பெண்டாட்டி சுப்புலட்சுமி அப்போ நல்லாத்தான் இருந்தாள். பகல் சாப்பாட்டுக்கு வந்தப்போ வாசல் கதவு திறந்திருந்தது. வழக்கமாய் நான் வந்து கதவைத் தட்டின பிறகுதான் அவள் திறப்பாள். இன்னிக்கு ஏன் திறந்து கிடக்குதுன்னு நினைச்சுக்கிட்டே உள்ளே போனேன். பார்த்தால்...'' அவன் விம்மி விம்மி அழுதான். ''சுப்புலட்சுமி உத்தரக்கட்டையிலே 'தூக்குப் போட்டுத் தொங்கிட்டிருந்தாள்! 'சுப்பு! சுப்பு!' என்று கத்தினேன். மூச்சுப் பேச்சுக் காணோம். இறந்துவிட்டாள் என்று நிச்சயமாய்த் தெரிஞ்சு போச்சு. உடனே நாட்டாண்மைக் காரரண்டை ஓடினேன்...''

''இப்ப அப்படியேதான் விட்டுட்டு வந்திருக்கிறாயா?''

''ஆமாங்க. போட்டது போட்டபடி வந்துட்டேன் சார்'' என்றான் சந்திரா.

''சரி,வா. போய்ப் பார்க்கலாம்'' என்று இரண்டு கான்ஸ்டபிள்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

சந்திரா அலறிக்கொண்டே வீட்டை விட்டுவெளியே ஓடி வந்ததையும் நாட்டாண்மைக்காரருடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்ததையும் அக்கம்பக்கத்தில் பலர் பார்த்திருந்ததால், வீட்டு வாசலில் நிறையக் கூட்டம் கூடியிருந்தது. ஆனால் நல்ல வேளையாக யாரும் உள்ளே போகவில்லை. எதையும் தொடவோ அப்புறப்படுத்தவோ இல்லை.

சந்திரா சொன்னது போலவே நடு அறையில் அவன் மனைவி தொங்கிக் கொண்டிருந்தாள். ஒரு புடவையினால் உத்தரக் கட்டையில் சுருக்கிட்டுக் கொண்டிருந்தாள். ஏறி நின்று கொண்டு மேஜையை உதைத்துத் தள்ளிவிட்டதால் அது ஒரு புறம் கவிழ்ந்து கிடந்தது.

ஜவான்களைக் கொண்டு சுருக்கை அவிழ்த்து சடலத்தை இறக்கினார். அவளுக்கு வயது 22 அல்லது 23 தான் இருக்கும். கண்கள் திறந்தபடி இருந்தன. சாவின் கோரம் இன்னும் படியாத அழகான கண்கள். உதடுகள் ரோஜா இதழ்கள் போல மென்மையாகவும் சிவந்தும் காணப்பட்டன. தேகத்தில் இளமையின் மிடுக்கும் வாளிப்பும் காணப்பட்டன. நல்ல சிவந்த நிறம். சுருட்டையான நீண்ட கூந்தலுக்கு ஒற்றைப் பின்னல் போட்டிருந்தாள்.

ஒரு ஜட்கா வண்டி அமர்த்தி, டவுன் ஆஸ்பத்திரிக்குப் பிரேத பரிசோதனைக்காகச் சவத்தை அனுப்பி வைத்தார்

இன்ஸ்பெக்டர் மருதாசலம். தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்துக் கொண்டார். புகைப் படக்காரர்களும் கைரேகைக்காரர்களும் வந்து பார்த்து விட்டுப் போன பின்னர் வீட்டைப் பூட்டி சீல் வைத்தார்.

''என்னுடன் ஸ்டேஷனுக்கு வா'' என்று சந்திராவை மறுபடி அழைத்துச் சென்றார்.

''நானும் வரணுங்களா?'' என்று நாட்டாண்மைக்காரர் கேட்டார்.

''நீ வேண்டாம்'' என்று இன்ஸ்பெக்டர் சொன்னதும் ஒரு பெரும் கும்பிடு போட்டு விட்டு அவர் தலை மறைந்தார். நல்லகாலம், இந்த விவகாரத்திலிருந்து தப்பினோம் என்ற நிம்மதி அவர் ஓட்டத்தில் தெரிந்தது.

இன்ஸ்பெக்டரும் சந்திராவும் மட்டும் போலீஸ் ஸ்டேஷனுக்குத் திரும்பினார்கள்.

''உட்கார்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

சந்திரா பயத்துடன் உட்கார்ந்ததும், ''இதோ பார், போலீஸ்காரர்களாகிய எங்களை ஏமாற்றுவது நீ நினைத் திருக்கிற மாதிரி அவ்வளவு சுலபமில்லை'' என்றார்.

''ஏமாற்றா? சார், என்ன சொல்றீங்க?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

''உஷ்! அந்தக் கதையெல்லாம் வேண்டாம்!'' என்று சீறினார் இன்ஸ்பெக்டர். ''பேசாமல் உண்மையை ஒப்புக் கொண்டு விடு. அதுதான் உனக்கு நல்லது.''

''என்ன உண்மைங்க?''

''நீதான் உன் பெண்டாட்டி சுப்புலட்சுமியின் கழுத்தை நெரித்துக் கொலை செய்திருக்கிறாய். பிறகு அவளாகத்

தற்கொலை செய்து கொண்டது போல் உத்தரத்தில் கட்டித் தொங்க விட்டிருக்கிறாய்!''

''ஐயையோ! இல்லவே இல்லீங்க!'' என்று அலறினான் சந்திரா.

''நீ நன்றாய் நடிக்கத் தெரிந்தவன் என்பதை நீ வந்த போதே கண்டுவிட்டேன். உன் வீட்டுக்கு வந்து பார்த்ததும் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகமும் போய்விட்டது. நீதான் கொலை செய்திருக்கிறாய்!'' என்று அடித்துப் பேசினார் இன்ஸ்பெக்டர் மருதாசலம்.

இதன் பின் இரண்டு நாள் சந்திரா போலீஸ் லாக்கப்பிலேயே அடைபட்டுக் கிடந்தான். நயமாயும் பயமாயும் அவனை எச்சரித்துக் கொண்டேயிருந்தார் இன்ஸ்பெக்டர்.

''நான் உனக்கு நல்லதைத்தான் சொல்கிறேன். கேள். நீ கொலை செய்தாயென்பது எப்படியும் கோர்ட்டில் ருசுவாகப் போகிறது. உனக்குத் தூக்குத்தண்டனை நிச்சயம். ஆனால் நீயாகவே உன் குற்றத்தை ஒப்புக் கொண்டா யானால் தண்டனையைக் குறைப்பார்கள்'' என்று மருதாசலம் அவனிடம் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

மூன்றாம் நாள்... ...

சந்திரா மிக விரிவாக ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்தான். அதில் அவன் சொன்னதாவது :

**நா**ங்கள் பரம்பரையாக வியாபாரத்தில் ஈடுபட்ட குடும்பத்தார்கள். என் தந்தை முத்துலிங்கம் கோயம் புத்தூரில் ஆர்.எஸ். புரத்தருகே ஜவுளிக்கடை வைத்திருக் கிறார். அவருடைய ஒரே மகன் நான். என் அப்பாதான் எனக்குப் போதுமான முதல் கொடுத்து, இங்கே கட்டம்

பாளையத்தில் மளிகைக் கடை வைத்துத் தந்தார். அப்போது எனக்குக் கல்யாணம் ஆகவில்லை.

கொள்முதல் செய்வதற்காக நான் அடிக்கடி வெளியூர் செல்வது வழக்கம். அப்படியொரு முறை ஈரோட்டுக்கு, மொத்தமாய்ப் புளி கொள்முதல் செய்வதற்குப் போயிருந்த போதுதான் முதல் தடவையாய்ச் சுப்புலட்சுமியைச் சந்தித்தேன். அன்று...

புளி வியாபாரி மாரியப்பனின் வீட்டுக்கு நான் போன போது நொண்டிக் கொண்டிருந்தேன். காரணம், காலையில் ஸ்டேஷனில் இறங்கும் போது ஒரு பிரயாணி தன் டிரங்குப் பெட்டியைக் கீழே போட்டு விட்டார். அது என் காலில் விழுந்தது. கனமான பெட்டி விரல்களை நசுக்கி விட்டது. நான் நொண்டுவதை மாரியப்பன் கவனிக்கவில்லை. வியாபார விஷயம் பேசி முடித்து விட்டு உள்ளே போய் விட்டார். எனக்காகக் காப்பி கொண்டு வந்து தந்த வேலைக்காரி சுப்புலட்சுமிதான் என் காயத்தைக் கவனித்து, ஏதோ ஆயின்ட்மெண்ட் எடுத்து வந்து கொடுத்தாள்; தடவிக் கொள்ளச் சொன்னாள். அவளுடைய அழகும் பருவமும் என்னைக் கவர்ந்து விட்டன. அந்த முதல் சந்திப்பிலேயே நான் அவளிடம் காதல் கொண்டு விட்டேன்.

அதற்குமுன் வெவ்வேறு இடங்களில் புளி கொள்முதல் செய்வது என் வழக்கம். சுப்புலட்சுமியைப் பார்த்த பிறகு மாரியப்பனிடம் மட்டுமே வ்ாங்க ஆரம்பித்தேன். மாதம் ஒரு தடவை, சில சமயம் இரண்டு தடவைக் கூட அவர் வீட்டுக்குப் போனேன். என் பார்வையையும் பேச்சையும் கொண்டு என் காதலை அவள் புரிந்து கொண்டாள். வீட்டுக்கு வெளியேயும் நாங்கள்

சந்தித்துக் கொள்ள ஆரம்பித்தோம். கடைசியில் கல்யாணம் செய்து கொள்வது என்ற தீர்மானத்துக்கு வந்தோம்.

என் தந்தை இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவர் எனக்காகப் பல பணக்கார இடங்களில் பெண் பார்த்து வைத்திருந்தார். கேவலம் ஒரு வேலைக்காரியை நான் காதலிக்கிறேன் என்றதும் மிகுந்த அதிர்ச்சி அடைந்தார்.

''இதோ பார்! ஏதாவது எக்கச்சக்கமா மாட்டிக் கொண்டிருந்தால் சொல்லிவிடு. பணம் கொடுத்து அவளைச் சரிகட்ட வேண்டியது. என் பொறுப்பு'' என்றார்.

''அதெல்லாமில்லை. நாங்கள் ஒருவரையொருவர் உண்மையாகவே காதலிக்கிறோம். நீங்கள் சம்மதித்தாலும் சரி; தடுத்தாலும் சரி எங்கள் கல்யாணம் நடந்தே தீரும்'' என்று சொன்னேன்.

''அப்படியானால் என் முகத்திலேயே விழிக்காதே'' என்று சொல்லிவிட்டார்.

நானும் சுப்புலட்சுமியும் ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டோம். ஒரு வருஷமாகிறது. சந்தோஷ மாகவே வாழ்க்கை நடத்தி வந்தோம்.

ஆனால் அந்தச் சந்தோஷத்தில் பெரிய இடி விழப்போகிறது என்று நான் எதிர்பார்க்கவில்லை.

ஒருநாள் சுப்புலட்சுமி எங்கோ வெளியில் போயிருந்தாள். என்னுடைய பெட்டியொன்றைத் திறக்க வேண்டியிருந்தது. சாவியைக் காணவில்லை, ஒருகால் சுப்புலட்சுமி தன் பெட்டிக்குள் வைத்திருக்கிறாளோ என்று

அவளுடைய டிரங்குப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். மேலோடு இருந்த புடவைகளை எடுத்துப்போட்டுவிட்டுப் பார்த்தேன். பெட்டியின் அடியில்...

நான் தேடிய சாவி இருக்கவில்லை..

நான் எதிர்பாராத சில கடிதங்கள் இருந்தன. காதல் கடிதங்கள்!

யாரோ ஒரு வைத்தி என்பவன் எழுதிய கடிதங்கள். மொத்தம் ஐந்து இருந்தன. முதல் கடிதத்தில், 'நீ என்னை இப்படி ஏமாற்றிவிட்டு வேறொருவனைக் கல்யாணம் செய்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை' என்று கோபத்துடன் குற்றம்சாட்டி எழுதியிருந்தான்.

அடுத்த கடிதத்தில், 'நீ மனம் வருத்தி எழுதிய கடிதம் கிடைத்தது. அதுமட்டில் எனக்குச் சந்தோஷமே. போனது போகட்டும். நாம் முன்போல சந்தித்துப் பழக வேண்டும். உன்னை என்னால் மறக்க முடியாது' என்று எழுதி யிருந்தான்.

அதற்கடுத்த கடிதங்களில், 'ஆகா! உன்னைப் பார்த்ததும் கட்டியணைத்ததும் கொஞ்சியதும் குலாவியதும் எத்தனை இன்பமான அனுபவங்கள்! என் கண்ணே! வாராவாரம் இதே போல் தவறாமல் என்னை வந்து பார்!' என்று எழுதியிருந்தான்.

எனக்கு ரத்தம் கொதித்தது.

நான் மனப்பூர்வமாகக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவள் ஏற்கனவே வேறொருவனின் காதலியாக இருந்திருக்கிறாள். அது கூடப் பரவாயில்லை. என்னை மணந்துகொண்ட பிறகும் அவனை மறக்காமல் எனக்குத் துரோகம் செய்து அவனுடன் கொஞ்சிக் குலவி யிருக்கிறாள்!

என்ன செய்வதென்று தெரியாமல், ஆத்திரத்தால் கொதித்துக் கொண்டிருந்தபோது சுப்புலட்சுமி வீட்டுக்குத் திரும்பினாள். திறந்த பெட்டியையும் என் கையிலிருந்த கடிதங்களையும் கண்டதுமே அவளுக்குப் புரிந்துவிட்டது.

''ஏண்டி துரோகி, என்னடி இதெல்லாம்?'' என்று நான் கத்தினேன்.

## 9

''ஐயையோ! எனக்கு ஒன்றுமே தெரியாது!'' என்று அழுதுகொண்டே சொன்னாள்.

பளார் பளாரென்று கன்னத்திலும் முதுகிலும் அறைந்தேன். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி யிருப்பேன். ஆனால் என் குடும்ப மானம் பறந்து விடும் என்பதால் அதைச் செய்யாமல் எவ்வளவு துன்புறுத்த முடியுமோ அவ்வளவும் செய்தேன். எதற்கும் அவள் மசியவில்லை. கடைசியில் இரும்புக் கரண்டியை அடுப்பில் பழுக்கக் காய்ச்சி அவள் மார்பில் சுடப் போனபோதுதான் அலறிக்கொண்டு எல்லாவற்றையும் சொன்னாள்.

பழனி அவளுடைய அத்தை மகனாம். லுங்கி மூட்டையைத் தெருத் தெருவாக எடுத்துச் சென்று வியாபாரம் செய்கிறவன். சின்ன வயது முதலே இருவரும் ஓடியாடி விளையாடிப் பழகியவர்கள். இவன் அவளுக்குத் தான் என்று பெரியவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பழனி ஒழுங்காய் ஒரு கடை கிடை வைத்து நிரந்தரமான பிழைப்புத் தேடிக் கொள்ளும்படி சுப்புலட்சுமியின் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். அதை அவன் கேட்காததோடு கொஞ்சம் கொஞ்சமாய்க்

கெட்ட சகவாசங்களிலும் ஈடுபட ஆரம்பித்தான். ஆகவே அவனுக்குத் தன் மகளைக் கட்டித் தர முடியாதென்று சொல்லிவிட்டார். புளி வியாபாரியான மாரியப்பன் அவருக்குத் தெரிந்தவர். தூரத்து உறவுகாரர் கூட. மேற்கொண்டு பழனிக்கும் சுப்புலட்சுமிக்கும் தொடர்பு இருக்கக் கூடாது என்பதற்காகவே சுப்புலட்சுமியின் அப்பா அவளை மாரியப்பனிடம் கொண்டு போய் வீட்டு வேலைக்கு உதவியாக அமர்த்திவிட்டார்.

ஆனால் அதன் பிறகும் பழனி அவளை விடவில்லை. ரகசியமாய் வருவதும் போவதுமாக இருந்தான். சுப்புலட்சுமியினாலும் அவனை மறக்கவோ புறக்கணிக்கவோ முடியவில்லை. அவனுக்கு அவள் இடம் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். அப்போதுதான் நான் சுப்புலட்சுமியைச் சந்தித்தேன். காதல் கொண்டேன். சுப்புலட்சுமிக்கும் என் மீது காதல் என்றுதான் நம்பினேன்.

எங்கள் கல்யாணத்துக்குப் பிறகும் அவளுடைய பழைய காதலன் வந்து போய்க் கொண்டிருந்தான் என்று அவளே தன் வாயால் ஒப்புக் கொண்டாள். அவன் கடிதங்கள் எழுதுவதும், தான் பதில் போடுவதும் வழக்கம்தான் என்று ஒப்புக் கொண்டாள்.

என்னுடைய ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போயிற்று. என் தந்தையையும் குடும்பத்தையும் பகைத்துக் கொண்டு இவளுக்காக ஏழ்மையை நான் ஏற்றுக் கொண்டதென்ன! இவள் எனக்கே துரோகம் செய்ததென்ன!

சுப்புலட்சுமி என் காலைப் பிடித்துக் கொண்டு அழுதாள். இனி இம்மாதிரி நேராதென்றும், நேர இடம் கொடுக்கமாட்டேனென்றும் மன்றாடினாள். அவளை அந்த முறை மன்னித்தேன். ஆனால் அந்த பழனியை நான்

பார்த்துப் பழி தீர்க்கத்தான் வேண்டுமென்று சொன்னேன் அடுத்த வாரம் ஒரு குறிப்பிட்ட நாளில், நான் ஊரில் இருக்க மாட்டேனென்றும் அப்போது அவன் வந்தால் இருவரும் சந்தோஷமாயிருக்கலாம் என்றும் ஒரு கடிதம் எழுதச் சொன்னேன். முதலில் அழுது புலம்பி மறுத்தாள் நான் கட்டாயப்படுத்தினேன். இல்லாவிட்டால் எனக்கும் அவளுக்கும் வாழ்க்கையே முற்றுப்புள்ளிதான் என்று பயமுறுத்தினேன். அதன் பேரில் அவள் கடிதமெழுதினாள்

அடுத்த வாரம் குறிப்பிட்ட தினத்தில் நான் ஒளிந்து கொண்டிருந்தேன். சுப்புலட்சுமி பயந்து கொண்டே காத்திருந்தாள். பகல் ஒரு மணி சுமாருக்கு அவன் வந்தான் இடுக்கு வழியே பார்த்தேன். என்னைவிட நாலைந்து வயது பெரியவன். கறுப்பாய் அழகில்லாமல் இருந்தான் இவனைப் போயா இவள் காதலித்தாள் என்று என் ஆத்திரம் இன்னும் அதிகமாயிற்று.

''சுப்பு!'' என்று வெகு ஆர்வமாக அவளைக் கட்டியணைக்க அவன் ஓடிவந்தான். அவள் விலகிக் கொண்டாள். நான் ஓசைப்படாமல் அவன் பின்புறம் வந்தேன். என் கையில் அரிவாள் இருந்தது. ஒரே வீச்சில் அவன் தலையைச் சீவிவிடத் தீர்மானித்திருந்தேன்.

நடுக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த சுப்பு லட்சுமிக்குக் கடைசி நிமிடத்தில் பயம் வந்துவிட்டது ''பழனி! ஓடிவிடு! ஓடிவிடு!'' என்று கத்திவிட்டாள் மறுவினாடியே அவன் உஷாராகித் திரும்பிப் பார்த்து என்னைக் கண்டு விஷயம் புரிந்து, திறந்திருந்த கொல்லைக் கதவின் வழியே ஒரே பாய்ச்சலில் ஓட்டம் பிடித்தான்.

எனக்கு ஏமாற்றமான ஏமாற்றம். 'காரியத்தைக் கெடுத்து விட்டாயேடி நாயே!' என்று அவளை அடி அடியென்று அடித்தேன். ''மறுபடியும் அவன் மீது உனக்கு

ஆசை! அதனால்தானே அவனைக் காப்பாற்றினாய்?'' என்று சத்தம் போட்டேன்.

''இல்லை, இல்லை! நீங்கள் கொலைகாரனாகி, என்னையும் அனாதையாக்கிவிட்டுப் போய் விடக் கூடாதென்றுதான் தடுத்தேன்'' என்று அழுதாள். கோபம் தணிந்த பிறகு அவள் சொன்னதும் நியாயமானதுதான் என்று தோன்றியது.

அவள் பெட்டியிலிருந்த கடிதங்களையெல்லாம் அன்று கொளுத்தினோம். சுவாமி படத்தின் முன்னே அவளைச் சத்தியம் பண்ணச் சொன்னேன். இனி அவனுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது என்று சத்தியம் செய்து தந்தாள்.

எல்லா நிம்மதியும் ஒரே வாரம்தான்.

நான் திருப்பூருக்குச் சென்றேன் கொள்முதலுக்காக. இரண்டு நாளாகும் திரும்பிவர என்று சுப்புலட்சுமியிடம் சொன்னேன். அவளை ஏமாற்றுவதற்காக அல்ல. நிஜமாகவேதான். ஆனால் விதி வேறு திட்டமிட்டிருந்தது.

பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தபோது, என் பர்ஸை எவனோ களவாடிக் கொண்டு வழியிலேயே இறங்கி விட்டான். ஐந்நூறு ரூபாய் போய்விட்டது. நான் பாதி வழி வந்த பிறகுதான் அதைக் கவனித்தேன். திருப்பூர் போய் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம். வியாபாரி களுக்குள் கொடுக்கல் வாங்கல் சகஜம்தான். எல்லாரும் எனக்குத் தெரிந்தவர்கள்தான். இருந்தாலும் எவரிடமும் பைசையோ உதவியோ கடனோ கேட்பதில்லை என்று அதுவரை கொள்கையாக வைத்திருந்தவனாகையால், போகாமல் ஊருக்குத் திரும்பத் தீர்மானித்தேன். வழியில் இறங்கிவிட்டேன். கட்டம்பாளையத்துக்கு நேர் பஸ்

கிடைக்கவில்லை. சட்டைப் பையிலிருந்த கொஞ்சம் சில்லறையை வைத்துக் கொண்டு இரண்டு பஸ் பிடித்து கிராமத்தை அடைந்தேன்.

நள்ளிரவு ஒன்றரை மணி இருக்கும் நான் வீட்டை அடைந்த போது. கதவைத் தட்டியதும் சுப்புலட்சுமி திறக்கவில்லை. நன்றாய்த் தூங்குகிறாள் என்று சமாதானம் செய்து கொண்டேன். சில நிமிடங்கள் கழித்து, கண்ணைக் கசக்கிக் கொண்டே கதவைத் திறந்தாள். அவள் முகத்தில் பரவியிருந்தது கலவரமா தூக்கக் கலக்கமா என்று தெரியவில்லை. ''ஏன்? என்ன ஆச்சு?'' என்றாள்.

''ஒன்றுமில்லை. பணம் பிக்பாக் கெட்டாகி விட்டது'' என்றேன்.

''அடடா! சாப்பிட்டீர்களா? சமையல் செய்யட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம். காலையில் பார்த்துக் கொள்ளலாம். களைப்பாயிருக்கிறது. தூங்குகிறேன்'' என்றேன்.

''சரி. இருங்கள். படுக்கை அறை ஒரே குப்பையா யிருக்கிறது. கூட்டிச் சுத்தம் செய்கிறேன்'' என்றவள் துடைப்பத்தை எடுத்து அறையைப் பெருக்கினாள்.

இரவு ஒன்றரை மணிக்கு அவள் அறையைக் கூட்டியது எனக்கு என்னவோ சந்தேகத்தை ஏற்படுத்தியது ''படுக்க வாருங்கள்'' என்று அழைத்தாள். கட்டிலில் உட்கார்ந்தேன். என்னவோ வித்தியாசமாக உணர்ந்தேன்.

கொஞ்ச நேரத்தில் புரிந்தது.

சிகரெட் மணம்!

சற்று நேரத்துக்கு முன் அங்கே யாரோ இருந்து சிகரெட் பிடித்திருக்கிறார்கள். எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது.

சட்டென்று கட்டிலின் கீழே குனிந்து பார்த்தேன்.

சிகரெட் துண்டுகள் கிடந்தன! அதைத்தான் அவள் அவசரமாகக் கூட்டித் தள்ளியிருக்கிறாள். விருட்டென்று எழுந்து வீட்டின் மற்ற அறைகளைப் பார்த்தேன். யாரும் இல்லை. ஆனால் கொல்லைக் கதவு திறந்து கிடந்தது!

''என்ன இது? யார் இந்த வழியே போனார்கள்?'' என்று அவள் கழுத்தைப் பிடித்தேன் ஆத்திரத்துடன்.

''யாருமில்லை தாழ்ப்பாள் போட மறந்து தூங்கிவிட்டேன்'' என்றாள்.

''கிடையாது! கிடையாது! மறுபடியும் நீ எனக்குத் துரோகம் செய்திருக்கிறாய். கட்டிலின் கீழே கிடந்த சிகரெட் துண்டுகளே சாட்சி!'' என்றேன். சொல்லச் சொல்ல, நினைக்க நினைக்க, பார்க்கப் பார்க்க, எனக்குள் ஆவேசம் கொந்தளித்தது. என்னிடமிருந்த மிருக வெறி புயலாய்ப் புறப்பட்டு என்னை அரக்கனாக்கியது. அவள் கழுத்தைப் பிடித்திருந்த கையை மேலும் மேலும் இறுக்கினேன். அவள் திமிறித் துவண்டு கீழே விழுந்தாள். அப்படியும் என் கையை எடுக்கவில்லை. கழுத்தை நெரித்தேன். அவள் துடித்தாள். கண்கள் பிதுங்கின. நான் மேலும் மேலும் இறுக்கினேன்.

சில நிமிடங்களில் அவள் உடம்பு அசைவற்று நின்று விட்டது. தொட்டுப் பார்த்தேன். கொஞ்சம் கொஞ்சமாய்க் கதகதப்பு அடங்கிச் சில்லிடத் தொடங்கியது. அவள் இறந்து விட்டாள் – அவளைக் கொலை செய்து விட்டேன் என்று உணர்ந்து கொண்டேன்.

அதற்காக நான் வருத்தப்படவில்லை. கணவனுக்குத் துரோகம் செய்யும் கூறுகெட்ட பெண்களில் ஓர் எண்ணிக்கையைக் குறைத்தோம் என்று என்னை நானே மெச்சிக் கொண்டேன். ஆனால் கொலைகாரன் என்ற பட்டத்துடன் என் உயிரை இழக்க நான் தயாராயில்லை.

ஆகவே அவள் புடவையாலேயே அவள் கழுத்தில் இறுக்கிச் சுருக்கிட்டு மேஜை மீது ஏறி உத்தரக் கட்டையில் தொங்க விட்டேன். அவள் தானே தற்கொலை செய்து கொண்டது போலத் தோன்றும்படி எல்லா ஜோடனைகளும் செய்து வைத்தேன். விடிந்ததும், அப்போதுதான் கவனித்த மாதிரி நாட்டாண்மைக்காரரிடம் ஓடிப் போய் தகவல் சொன்னேன். அவருடன் இங்கே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தேன்.

இதுதான் நடந்தது. ஆத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டுச் செய்து விட்டேன். சர்க்கார் என்னை மன்னிக்க வேண்டும்.''

இவ்வாறு சந்திரா என்ற சுந்தரமூர்த்தி எழுதிக் கொடுத்ததும் அந்த வாக்கு மூலத்தைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் மருதாசலம் பதிவு செய்து கொண்டார். சாட்சிக் கையெழுத்துக்கள் வாங்கிக் கொண்டார்.

அவன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

★★★

**கோ**யம்புத்தூர் ஆர்.எஸ். புரத்தில் வசித்து வந்த சந்திராவின் தந்தை முத்துலிங்கம், தன் மகனைப் பற்றி நினைப்பதை அடியோடு விட்டு விட்டார். அவர் என்னென்னவோ திட்டம் வைத்திருந்தார். அவருடைய

குடும்பத்தில் எல்லாச் சகோதரர்களும் பெரிய பெரிய வியாபாரிகளாக, வெற்றிகரமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். பிள்ளை பெண்களைப் பெரிய இடங்களில் சம்பந்தம் செய்து வைத்து அந்தப் பெருமையில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் ஒப்பிடுகையில் முத்துலிங்கம் சாதாரணமானவர்தான். ஆனால் பாடுபட்டு, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி நல்ல அந்தஸ்துக்கு வந்திருந்தார். மகன் சந்திராவின் மூலம் புகழ்க் கொடி நாட்டி, தன்னை ஏளனமாகப் பார்க்கும் உறவினர்களின் முகத்தில் கரி பூச வேண்டும் என்று எண்ணியிருந்த சமயத்தில்...

காதல் என்கிற மாய வலையில் விழுந்து விட்டான் சந்திரா. அவர் முகத்திலேயே அழிக்க முடியாத கரியைப் பூசி விட்டான்.

ஆகவே தன்னுடைய தூக்கத்தில் கண்ட ஒரு துர்சொப்பனம் போல அவனைத் தன் வாழ்க்கையிலிருந்தே மறக்க முயன்று, பல்வேறு பிஸினஸ் கவனங்கள் உள்ளவராகையால், அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். ஆனால் அவர் மனைவியினால் அவ்வளவு எளிதாக மறந்து விட முடியவில்லை. பெற்ற மனம் பிள்ளையை நினைத்து ஏங்கி ஏங்கி அழுதது, கணவன் சிறிது சாந்தமாயிருக்கும் சந்தர்ப்பங்களில், 'என்னங்க... நம்ம குழந்தை... என்ன இருந்தாலும்...' என்று ஆரம்பித்துப் பார்ப்பாள்.

அவர் முகம் கடுமையாய் மாறிவிடும். "கணவனுக்குப் பெண்டாட்டியாக என்னோடு இருப்பதா அல்லது பிள்ளைக்குத் தாயாக அவனோடு இருப்பதா என்பதை முதலில் முடிவு பண்ணு. பிறகு பேசு!'' என்று ஒரே பேச்சில் வெட்டி விடுவார். அவளுடைய மன்றாடல்கள் அப்படி இருக்கும்போதுதான் ஒரு நாள் ஒரு

போலீஸ் அதிகாரி வீடு தேடிக் கொண்டு அவரிடம் வந்தார். ''உங்கள் மகன் சந்திரா தன் மனைவியைக் கொலை செய்து விட்டார். குற்றத்தையும் ஒப்புக்கொண்டார்'' என்று கூறி எல்லா விவரங்களையும் தெரிவித்தார்.

இடி விழுந்தது போன்ற அதிர்ச்சியில் ஒரு வினாடி மௌனமானாலும், மறுவினாடியே சினத்தில் பொங்கி யெழுந்தார் முத்துலிங்கம். ''அந்தக் கேடு கெட்ட வேலைக்கார நாயை இழுத்துக் கொண்டு எப்போது அவன் ஓடினானோ அப்போதே எனக்குத் தெரியும் இப்படித்தான் ஏதாவது நேரப்போகிறதென்று! அவன் பேச்சை என்னிடம் எடுக்காதீர்கள்! எப்படி வேண்டுமானாலும் சாகட்டும்!'' என்று சொல்லி அதிகாரியை அனுப்பி விட்டார்.

''என்னங்க...'' என்று விம்மிய மனைவியிடம் ''சும்மா இரு! வாயைத் திறந்தாயோ இங்கேயும் ஒரு கொலை விழும்!'' என்று அடக்கி விட்டார்.

ஆனால் தான் ஆடாவிட்டாலுடம் தன் சதை ஆடும் என்பது எத்தனை உண்மை! இரவு படுக்கையில் வெகு நேரம் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தார். நல்ல குடிப்பிறப்பும் படிப்பும் வளர்ப்புமுள்ள மகன் அப்படிக் கூடச் செய்திருப்பானா என்று குழம்பினார்.

இரவு ஒரு மணி இருக்கும். மெதுவே படுக்கையை விட்டு இறங்கித் தன் அறைக்கு வந்தார். மெதுவே போனைச் சுழற்றினார். வெகுநேரம் மணி அடித்த பிறகு, மறுமுனையில் போனை எடுத்தார்கள்.

''வக்கீல் சாரங்கனா பேசுவது? நான் தான் சார் முத்துலிங்கம் பேசுகிறேன். இந்த வேளையில் எழுப்பினதற்கு ரொம்ப மன்னிச்சிடுங்க. ஆனால் ரொம்ப முக்கியமான விஷயம். என் பிள்ளை...'' என்று

சுருக்கமாகச் சொல்லி முடித்தார். ''சரிங்க... காலையிலே வீட்டுக்கு வருகிறேன்'' என்று கூறிப் போனைத் திரும்ப மாட்டிய போதுதான் அத்தனை நேரமும் அறை வாசலில் தன் மனைவி நின்றிருப்பதைக் கவனித்தார். ஹோவென்று அழுது கொண்டு ஓடி வந்து கட்டிக் கொண்ட அவளை அணைத்து ஆசுவாசப்படுத்தி, ''கவலைப்படாதே. சந்திராவை எப்படியும் காப்பாற்றி விடலாம்...'' என்றார்.

★★★

**அ**டுத்த நாள் மாலை மாஜிஸ்திரேட் கோர்ட் லாக்கப்பில் சந்திராவைச் சந்தித்தார்கள் முத்துலிங்கமும் அவருடைய வழக்கறிஞர் சாரங்கனும்.

''அப்பா! எனக்கு ஒன்றுமே தெரியாது! சத்தியமாய் நான் அவளைக் கொலை செய்யவில்லை!'' என்று கம்பிக்குப் பின்னாலிருந்து கதறினான் சந்திரா. 'கொலை செய்தேனென்று நானாகவே சொன்னால், தண்டனை யிலிருந்து தப்பலாம், இல்லாவிட்டால் தூக்குத் தண்டனை தான் என்று பயமுறுத்தினார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருக்குப் பயந்து அப்படிச் சொன்னேன். நான் சொன்னது மொத்தமும் பச்சைப் பொய்! கட்டுக் கதை!''

வக்கீல் சாரங்கன் அவனை வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். இவ்வளவு தூரம் தன்னைத்தானே சிக்கிக் கொண்டு விட்டவனை எப்படி விடுவிக்கப் போகிறோம் என்ற கவலை அவர் முகத்தில் படர்ந்தது.

## 10

**சா**ரங்கன் வயதில் சின்னவர்தான். சிவில் வழக்குகளை மட்டும் ஏற்றுக் கொண்டு நடத்துபவர். ஆனால் இளம் வயது முதலே அவருக்குக் கிரிமினல் லயனில்தான் நாட்டம். நிறையத் துப்பறியும் கதைப் புத்தகங்களையும் கிரிமினல் வழக்கறிஞர்களின் வாதங்களையும் படித்து அந்தத் துறையில் ஆர்வம் கொண்டிருந்தார்.

சாரங்கன் செய்த முதல் வேலை, சந்திரா தான் கொடுத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மறுக்கும்படி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சொல்லச் சொன்னதுதான். 'போலீஸார் என்னை அடித்துத் துன்புறுத்தினார்கள். நான் கொலை செய்ததாகத்தான் கோர்ட்டில் தீர்ப்பாகும் என்றும், தூக்குத் தண்டனை கிடைக்கும் என்றும் சொன்னார்கள். கள்ளக் காதலனுடன் மனைவி இருந்ததைப் பார்த்த ஆவேசத்தில் திடீரென்று அவளைக் கொலை செய்தேனென்று நானாகவே ஒப்புக் கொண்டால் கோர்ட்டார் மனமிளகுவார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதன் பேரில் நான் போலீசில் சொல்லிக் கொடுத்தபடியெல்லாம் சொன்னேன். மற்றப்படி என் மனைவி தானே தூக்குப் போட்டுக் கொண்டாள் என்பதுதான் உண்மை. நான் அவளைக் கொலை செய்யவில்லை' என்று சந்திரா மறுப்புத் தெரிவித்தான்.

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சுருக்கமாகவே விசாரணை நடந்து முடிந்து விட்டது. சந்திரா தன் மனைவியை கொலை செய்தான் என்பதற்குப் போதிய ஆதாரமிருப்பதாகக் கூறி, வழக்கை செஷன்சுக்குக் கமிட் பண்ணிவிட்டார் மாஜிஸ்திரேட். அதற்குள்ளாக, சந்திராவிடம் பல முறை

பேசியும், சொந்த முறையில் ரகசியமாகத் துப்பறிந்தும் பல தகவல்களைத் திரட்டித் தனக்குக் கேடயம் செய்து வைத்துக் கொண்டார் சாரங்கன்.

பிராசிக்யூஷன் தரப்பு சாட்சிகள் முதலில் விசாரிக்கப்பட்டனர். புலன் விசாரணை செய்த இன்ஸ்பெக்டர் மருதாசலம் சாட்சியம் சொன்னார். சந்திரா தன் 'ஒப்புதல்' வாக்குமூலத்தில் சொன்னதையே பெரும் பாலும் அவர் திருப்பிச் சொன்னார்.

அவரைக் குறுக்கு விசாரணை செய்ய எழுந்தார் சாரங்கன். இதுதான் ஒரு கிரிமினல் வழக்கில் தான் செய்யும் முதல் குறுக்கு விசாரணை என்பது நினைவு வந்த போது சற்று அதைரியம் ஏற்பட்டது. தான் தினம் வணங்கும் முருகனை மனத்துக்குள் நினைத்துக் கொண்டார். தான் சேகரித்து வைத்துள்ள விஷயங்களை நினைத்துக்கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக, சந்திராவின் குற்றமற்ற முகத்தையும் அநியாயமாக அவன் சிக்கிக் கொண்ட பரிதாபத்தையும் நினைத்துக் கொண்டார். உள்ளம் உறுதிப்பட்டது.

''இன்ஸ்பெக்டர், உங்களுக்கு எத்தனை வருட சர்வீஸ் ஆகிறது?'' என்பதே அவர் கேட்ட முதல் கேள்வி.

''பதினொரு வருடங்கள் ஆகிறது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இதுவரை எவ்வளவு கொலைக் கேஸ்கள் துப்பறிந் திருக்கிறீர்கள்?''

''இதுதான் முதல்.''

''கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு இது போன்ற கேஸ்கள்?''

''பத்துப் பன்னிரண்டு இருக்கும்.''

''கொலை வழக்கு இதுதான் முதல்?''

''ஆமாம்.''

''சமீப காலத்தில் நீங்கள் பிடித்த மற்றக் கேஸ்கள், எத்தனை இருக்கும்?''

''கரெக்டாய்ச் சொல்ல முடியாது.''

''வேண்டாம். இந்த வட்டாரத்தில் நிறையக் கொலை கொள்ளைகள் நடந்து வருகின்றன என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மைதானா?''

''இருக்கலாம்.''

''ஆனால் நீங்கள் சரியானபடி கேஸ்கள் பிடிக்க வில்லை என்று மேலிடத்திலிருந்து உங்கள் மீது குறை கூறிக் கடிதம் வந்ததல்லவா?''

''அப்ஜக்ஷன்'' என்று குறுக்கிட்டார் பிராசிக்யூஷன் வக்கீல். ''அது அவர்கள் டிபார்ட்மென்ட்டல் விஷயம். அதற்கும் இந்தக் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது.''

''சம்பந்தம் இருக்கிறது என்பதால்தான் கேட்கிறேன்'' என்றார் சாரங்கன்.

''இல்லை. அது அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட விவகாரம். அதை நீங்கள் கேட்கக் கூடாது'' என்று அனுமதி மறுத்து விட்டார் நீதிபதி.

ஒரு கணம் அந்தத் தோல்வியினால் துவண்டார் சாரங்கன். பிறகு ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டார். ''இன்ஸ்பெக்டர், எந்தக் கொலைக்கும் ஒரு மோடிவ் இருக்க வேண்டும் – ஒரு நோக்கம். இது ரொம்ப

அடிப்படையான விஷயம். இந்தக் கொலைக்கு என்ன அடிப்படை என்று கருதுகிறீர்கள்?''

இன்ஸ்பெக்டர் ஒரு வெற்றிச் சிரிப்புடன், ''அதுதான் ரொம்ப வெளிப்படையாக இருக்கிறதே? இன்ஃபிடலிடி ஆஃப் தி ஒய்ஃப்! மனைவி செய்த துரோகம்! கள்ளக் காதலனுடன் இருப்பதைக் கண்டதும் குற்றம் சாட்டப் பட்டுள்ளவருக்கு ஏற்பட்ட ஆத்திரம் - வெறி!''

''அவர் கொடுத்த வாக்குமூலத்தையே நீங்கள் ஆதாரம் காட்டுகிறீர்கள். இன்ஃபிடலிடி ஆஃப் தி ஒய்ஃப்! மனைவி செய்த துரோகம்! கள்ளக் காதலனுடன் இருப்பதைக் கண்டதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கு ஏற்பட்ட ஆத்திரம்-வெறி!''

''கள்ளக் காதலனும் இறந்து போனவரும் எழுதிக் கொண்ட காதல் கடிதங்கள்!'' என்றார் மருதாசலம்.

''அதெல்லாம் எங்கே?''

''சந்திரா அவைகளைக் கொளுத்தி அழித்து விட்டார்.''

''காரணம்?''

''நாளைக்கு இப்படி வரும் என்பதுதான்! கடிதங்கள் இருந்தால் அதனால் இவன் கொலை செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் ஏற்படும். அவள் தானாகவே தூக்குப் போட்டுக் கொண்ட மாதிரி தோன்ற வேண்டுமே? அதனால் அந்தக் கடிதங்களைக் கொளுத்தி விட்டார்'' என்று கூறி விட்டு இன்ஸ்பெக்டர் வெற்றியுடன் ஒரு முறை கோர்ட்டை நோட்டமிட்டார்.

''தாங்க்ஸ் இன்ஸ்பெக்டர். நீங்கள் சொல்வது லாஜிகலாகத்தான் இருக்கிறது. அதிருக்கட்டும். கள்ளக் காதலன்

என்று கூறப்படுகிற அந்தப் பழனி எங்கே?'' என்று சாரங்கன்.

''நீங்கள் இந்தக் கேள்வி கேட்பீர்கள் என்று எப்படியும் இந்த வழக்கு ஆரம்பமாவதற்கு முன் அவனைப் பிடிக்க வேண்டும் என்று படாத பட்டோம். இப்போதும் கூடத் தேடிக் கொண்டிருக்கிறோம். அவன் தலை மறைவாக எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான்.''

''ஏன்?''

''காரணம் வெளிப்படை. கள்ளக் காதல் விவகாரம் வெளிப்பட்டதும் மனைவியைக் கொன்றவன் தன்னையும் கொலை செய்து விடுவானோ என்ற நடுக்கத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறான்.''

''இறந்து போன சுப்புலட்சுமிக்குப் பழனி என்று கள்ளக் காதலனே கிடையாதென்றும் அவர்களுக்குள் காதல் கடிதங்களே எழுதப்பட்டதில்லை என்றும் சொல்கிறேன்.''

''அப்படியில்லை'' என்று மறுத்தார் இன்ஸ்பெக்டர் மருதாசலம்.

சாரங்கன் தன் ஜூனியர் நீட்டிய ஒரு குறிப்பை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, ''நல்லது இன்ஸ் பெக்டர். சம்பவம் நடந்த தினத்தன்று திருப்பூருக்குச் சென்றிருந்தார் சந்திரா. பஸ்ஸில் பர்ஸ் ஜேபடியாகி விட்டது. அதனால் உடனே வீட்டுக்குத் திரும்பி விட்டார். அப்போதுதான் தன் மனைவியின் கள்ளக் காதலைக் கண்டு ஆத்திரம் கொண்டார் இதுதானே தங்கள் கதை?''

''கதையில்லை, உண்மை.''

''ஸாரி, உண்மை.'' சாரங்கன் தன் முன் வைத்திருந்த ஒரு பழைய தினசரியை அவரிடம் நீட்டினார். ''நீங்கள் சொல்லும் தேதியில் ஒரு பந்த் நடைபெற்றிருக்கிறது. கொட்டம்பாளையத்துக்கும் திருப்பூருக்கும் பஸ் எதுவும் ஓடவில்லை. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' செய்தித் தாளை நீதிபதியிடமும் காட்டினார்.

இன்ஸ்பெக்டர் மருதாசலம் அசரவில்லை. ''அதைப் பற்றி ஏற்கெனவே செக்அப் செய்துவிட்டோம். அது முழுமையான பந்த் அல்ல. சில பஸ்கள் ஓடவில்லை. சில பஸ்கள் ஓடியிருக்கின்றன'' என்றார்.

''இந்தச் சின்ன விஷயத்தைச் செக்கப் செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றியது ஆச்சரியம் தான் இன்ஸ்பெக்டர்'' என்று கூறிவிட்டுக் குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டார் சாரங்கன்.

அடுத்து, இன்ஸ்பெக்டர் மருதாசலத்துடன் சென்று இறந்து போனவளின் உடலை முதன் முதலில் பார்த்த கான்ஸ்டபிள் விசாரிக்கப்பட்டார். இன்ஸ்பெக்டர் சொன்னதையே அவரும் திருப்பிச் சொன்னார்.

சாரங்கன் அவரிடம் இரண்டொரு கேள்விகள்தான் குறுக்கு விசாரணை செய்தார்.

''சந்திரா உங்கள் ஸ்டேஷனுக்கு ஓடி வந்த போது என்ன சொல்லிக் கொண்டு வந்தார்!''

''அவர் வரும் போதே, 'என் பெண்டாட்டி தூக்கு மாட்டிகிட்டு செத்து விட்டாள்! சீக்கிரம் வாங்க! சீக்கிரம் வாங்க!'' என்று சொல்லிக்கிட்டு வந்தார்'' என்றார் கான்ஸ்டபிள்.

''அதாவது, மனைவி தற்கொலை செய்து கொண்ட சில நிமிடங்களுக்கெல்லாம் உங்களிடம் ஓடி வந்திருக்கிறார்?''

''அப்ஜக்ஷன் மை லார்ட்'' என்று அரசாங்க வக்கீல் எழுந்து தெரிவித்தார். ''தற்கொலையா கொலையா என்று கோர்ட்டார் தீர்மானிக்க வேண்டுமே தவிர, தற்கொலைதானே என்று நண்பர் லீடிங் கொஸ்சன் போடக் கூடாது.''

நீதிபதி புன்னகையுடன், ''கேள்வியை மாற்றியமைத்துக் கேளுங்கள் சாரங்கள்'' என்றார்.

''நல்லது உங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கும் சந்திராவின் வீட்டுக்கும் எவ்வளவு தூரம் இருந்திருக்கும்?'' என்று வினவினார் சாரங்கன்.

''அரை மைல் இருக்கும்.''

''அதாவது பத்துப் பதினைந்து நிமிட நடையில் நீங்கள் அங்கே போய் விடலாம். இல்லையா?''

''ஆமாம்.''

''நீங்கள் போன போது அந்த அம்மாளின் உடம்பு உத்தரக் கட்டையில் தொங்கிக் கொண்டிருந்தது. இல்லையா?''

''ஆமாம்.''

''கீழே இறக்கிய போது தலை மார்பை நோக்கித் தொய்ந்து தொங்கிக் கொண்டிருந்ததா? அல்லது மேலே நிமிர்ந்து இருந்ததா?''

கான்ஸ்டபிள் சற்று யோசித்து, ''நிமிர்ந்து இருந்தது'' என்றார்.

''நன்றி கான்ஸ்டபிள்'' என்று குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டார்.

அடுத்து, சந்திராவின் அடுத்த வீட்டுக்காரரான சாம்ப சிவம் என்பவர் விசாரிக்கப்பட்டார். சந்திராவுக்கும் அவர் மனைவிக்கும் அடிக்கடி சண்டை வருவது உண்டு என்றும், அந்தச் சத்தம் தனக்குக் கேட்கும் என்றும் அவர் கூறினார். சந்திரா ஊரிலில்லாத போது ஓர் அன்னிய வாலிபன் வந்து போனதைத் தான் பார்த்திருப்பதாகவும் சொன்னார். இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் சுப்புலட்சுமியின் உடலைக் கீழே இறக்கியபோது தான் அருகில் இருந்ததாகவும் கூறினார்.

அவரைக் குறுக்கு விசாரணை செய்த சாரங்கன், ''எத்தனை காலமாக நீங்கள் சந்திராவுக்குப் பக்கத்து வீட்டில் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''பத்து வருடமாக இருக்கும்.''

''சந்திராவை உங்களுக்கு நன்றாய்த் தெரியுமா?''

''வெகு நன்றாகத் தெரியும். என் சினேகிதர் அவர். அவர் வாழ்க்கையில் இப்படி நடந்து விட்டதே என்று நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.''

''உண்மையான நண்பரின் லட்சணம் அதுதான்'' என்றார் சாரங்கன். ''பத்து வருஷ காலமாகப் பக்கத்து வீட்டில் இருந்தும், அவரிடம் சினேகிதம் இருந்தும், இப்படி ஓர் அன்னியன் வந்து போவதைப் பற்றிச் சந்திராவிடம் தெரிவிக்காமலிருந்தது நியாயமா, மிஸ்டர் சாம்பசிவம்!''

அவர் சற்றுத் தடுமாறி விட்டு, ''அதாவது... சந்திரா கொஞ்சம் கோபக்காரன். அது அவர்கள் குடும்ப விஷயம். நான் ஏதாவது சொல்லப் போய் என்னையே தாக்கலாம்.

அல்லது மனைவியைத் தாக்கலாம். அதனா... பேசாதிருந்தேன். நான் பயந்தபடியே ஆகி விட்... கடைசியில்'' என்றார்.

''உண்மை, உண்மை'' என்று அனுதாபத்து... தலையசைத்தார் சாரங்கன். ''சுப்புலட்சுமி உத்தரத்... தொங்கிக் கொண்டிருந்த போது அந்த அறை எப்படி இருந்... என்பதை போட்டோக்கள் எடுத்திருக்கிறார்... ரிப்போர்ட்டிலும் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்... உங்களுக்கு ஏதாவது நினைவு வருகிறதா – அறை அப்போது எப்படி இருந்ததென்று?''

சாம்பசிவம் யோசித்துப் பார்த்து, பெட்டி இங்கே இருந்தது. படுக்கை அங்கே இருந்தது என்றெல்லாம் சொன்னார்.

''இன்னும் கொஞ்சம் யோசனை செய்யுங்கள்'' என்று தூண்டினார் சாரங்கன்.

''வந்து... ஆமாம். தரையில் கண்ணாடி வளையல்களின் உடைந்த துண்டுகள் கிடந்தன. கழுத்தை நெரித்த போது உடைந்து விட்டது என்று நினைக்கிறேன்...'' என்று அவர் சொல்லத் தொடங்கியதும் சாரங்கன் சற்று அதட்டலாக ''நீங்கள் என்ன பார்த்தீர்கள் என்று மட்டும் தான் கேட்டே... நீங்கள் என்ன நினைத்தீர்கள் என்று கேட்கும் போது மற்றதெல்லாம் சொல்லுங்கள்'' என்றார்.

கடைசியாகப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் விசாரிக்கப்பட்டார்.

எத்தனை ஆண்டுகளாக, எத்தனை பிரேத பரிசோதனைகள் செய்திருக்கிறார் என்று தன் அனுபவங்களைப் பற்றிச் சொன்னபின், பிரேத

பரிசோதனையில் தான் கண்ட அம்சங்களைச் சொன்னார் டாக்டர்.

''டாக்டர், உங்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்ட போது போலீசார் என்ன சொல்லி ஒப்படைத்தார்கள்?'' என்று சாரங்கள் கேட்டார்.

''கொலை செய்யப்பட்ட பெண், போஸ்ட் மார்ட்டம் செய்யுங்கள் என்று சொல்லி ஒப்படைத்தார்கள்.''

சாரங்கனின் முகத்தில் புன்முறுவல் பூத்தது. ''அதாவது, அது கொலைதான் என்ற எண்ணத்துடன் தான் நீங்கள் பிரேத பரிசோதனை செய்தீர்கள். தற்கொலையாகவும் இருக்கக் கூடும் என்று நினைக்கவில்லை?''

''ஆட்சேபிக்கிறேன்'' என்று எழுந்தார் அரசாங்க வக்கீல், ''பக்கத்து விட்டுச் சாம்பசிவம் என்ன நினைக்கிறார் என்று சொல்ல வந்தபோது அதை ஆட்சேபித்த என் அருமை நண்பர், இப்போது போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் என்ன நினைத்தார் என்று மட்டும் அறிய முயலலாமா?''

நீதிபதி, ''உங்கள் ஆட்சேபணையை ஏற்கிறேன்'' என்றார்.

சாரங்கன், ''சரி, அந்தக் கேள்வியை விட்டு விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, ''டாக்டர், இந்த மாதிரி கேஸ்களில் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கழுத்தில் உள்ள அடையாளங்கள். இல்லையா?''

''ஆமாம்.''

''நீங்கள் கவனித்த வரையில் கையால் நெரித்த அடையாளங்கள் சுப்புலட்சுமியின் கழுத்தில் தெரிந்தனவா?''

''இல்லை.''

''ஆ!'' என்ற ஆச்சரியமான சலசலப்பு கோர்ட்டில் எழுந்தது. உடனே டாக்டர் ''ஆனால் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்படும் எல்லாக் கேஸ்களிலும் கழுத்தில் அடையாளம் இருக்கும் என்பது கிடையாது. ஏனென்றால் கழுத்தை நெரிக்கிறவர்கள் வழக்கமாக, ஒரு துணியைக் கழுத்தில் சுற்றி, அதன் நுனியில் ஒரு கட்டையைக் கொடுத்து முறுக்கிக் கொண்டே போவார்கள். மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் நேரிடும்'' என்றார்.

கோர்ட்டில் இத்தனை நேரமும் சந்திராவின் தந்தை முத்துலிங்கம் தலையை குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தார். இந்த வக்கீல் நம் மகனைக் காப்பாற்றப் போகிறாரா இல்லையா என்ற பீதி அவரை அரித்துக் கொண்டிருந்தது.

## 11

**வ**ழக்கறிஞர் சாரங்கள் டாக்டரிடம் தன் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

''டாக்டர், கத்தியால் வெட்டப்பட்டோ, குத்தப் பட்டோ, துப்பாக்கியால் சுடப்பட்டோ, தண்ணீரில் முழுகடித்தோ, விஷம் கொடுத்தோ இப்படிப் பல விதங்களில் கொலை செய்யலாம். இந்தக் கொலை அதாவது இதைக் கொலை என்று வைத்துக் கொண்டால் - எப்படி நேர்ந்திருக்கிறது என்று எண்ணுகிறீர்கள்?''

''கழுத்தை நெரித்து, மூச்சுத் திணறல் ஏற்படுத்தியதால் மரணம் ஏற்பட்டது என்று ஆரம்பத்திலேயே சொன்னேனே?''

''ஸாரி டாக்டர். கோபிக்காதீர்கள். கிரிமினல் துறை எனக்குப் புதிது. ஆகவே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது,'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் சாரங்கன். ''சரி, டாக்டர். மூச்சு விட

முடியாதபடி கொலை செய்வதிலும் பல வகை இருக்கின்றன என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கெட்டியான துணி அல்லது நைலான் கயிறு போன்ற வற்றால் கழுத்தை முறுக்கியிருக்கலாம். அல்லது ஒரு தலையணையை முகத்தின் மீது அழுத்தி மூச்சு விட முடியாதபடி செய்திருக்கலாம். இது எந்த வகை?''

''கழுத்தைச் சுற்றித் துணியினாலோ கயிற்றினாலோ இறுக்கி மரணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.''

''கழுத்து இறுக்கப்பட்ட அடையாளம் வளையம் வளையமாக இருந்திருக்குமல்லவா?''

''இருந்தது.''

''படுக்கை வசத்தில் வளையம் வளையமாக இருந்ததா? அல்லது தொண்டைக்குழி பக்கத்தில் கீழேயும் பிடரியின் பக்கத்தில் மேலேயும் இருந்ததா?''

''படுக்கை வசத்தில் இருக்கவில்லை. கீழிலிருந்து மேலாகத்தான் இருந்தது.''

''பிரேதத்தின் முகம் எப்படி இருந்தது?''

''நாக்கு வெளியே பிதுங்கித் தொங்கிக் கொண்டிருந்தது. கண்கள் வெளியே வந்து விழுகிற மாதிரி தெறித்துப் போயிருந்தன. வாயின் ஓரத்தில் எச்சில் ஒழுகியிருந்தது. நாக்கைக் கடித்துக் கொண்ட காயம் நாக்கின் நுனியில் இருந்தது.''

''மிக்க நன்றி டாக்டர். நீங்கள் இப்போது சொன்ன தகவலுக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று சாரங்கன் சொன்னதும் அரசாங்க வக்கீலும் அவரது உதவியாளர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சந்திராவின் தந்தை முத்துலிங்கம் இன்னும்

முகத்தில் கவலை அப்பியவராகவே இருந்தார். சந்திராவின் பார்வை வெறித்த சூனியத்தில் நிலைத்திருந்தது. விரக்தியின் உச்சத்தில் அவன் இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

டாக்டர் தன்னுடைய சாட்சியம் முடிந்து விட்டது என்ற எண்ணத்தில் கூண்டை விட்டு இறங்கவிருந்தார். ''இன்னும் இரண்டொரு கேள்விகள் டாக்டர்'' என்று சாரங்கன் கேட்டுக் கொண்டதும் திரும்ப நின்றார்.

''இறந்து போன சுப்புலட்சுமியின் உடம்பில் வேறு ஏதாவது காயங்கள் இருந்த்ததாக ஞாபகம் இருக்கிறதா?''

டாக்டர் யோசித்து விட்டு, ''வேறெதுவும் இல்லை'' என்றார்.

சாரங்கன் அவருடைய போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டைக் காட்டி, ''உள்ளங்காலில் சிறு கீறல் காயம் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களே?'' என்றார்.

''ஓ! ஆமாம். உள்ளங்காலில் பேனாக் கத்தியால் கிழித்த மாதிரி ஒரு கீறல் இருந்தது. எல்லாவற்றையும் குறிப்பிட வேண்டியது என் கடமையாகையால் அதையும் எழுதினேன். மற்றப்படி இந்த மரணத்துக்கும் அதற்கும் சம்பந்தமிருக்கும் என்று நான் கருதவில்லை. ஏனெனில் உள்ளங்காலில் அப்படிச் சிறு காயம் ஏற்படுத்துவதால் கொலை செய்ய முடியாது.''

''சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் கோர்ட்டாரவர்கள்'' என்று புன்சிரிப்புடன் சொன்னார் சாரங்கன். பிறகு, ''இறந்தவளின் விரல்களில் அல்லது நக நுனிகளில் ஏதாவது விசேடமாகத் தென்பட்டதா?'' என்றார்.

''விசேடமாக என்றால்?''

''போராடியதற்கான அறிகுறிகள். அதாவது, கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டதாக வைத்துக் கொண்டால் கொலை செய்தவனைப் பிராண்டியிருப்பாள். நகத்தால் கிழித்திருப்பாள். அப்போது நகத்தின் நுனியில் குற்றவாளியின் சதைத் துண்டோ ரத்தக் கறையோ ஒட்டியிருந்திருக்குமே?''

''அப்படி எதுவும் இல்லை.''

''குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சந்திராவின் உடம்பில் ஏதேனும் காயத்தைப் பார்த்தீர்களா?''

''அப்ஜக்ஷன் யுவர் ஆனர்'' என்று குறுக்கிட்டார் அரசாங்க வக்கீல். ''இவர் பிரேதத்தைப் பரிசோதனை செய்த டாக்டர்தான்! சந்திராவின் உடம்பில் காயம் இருந்ததா இல்லையா என்பது இவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?''

''ஸாரி, எனக்கு அது மறந்து விட்டது'' என்றார் சாரங்கன் தாழ்ந்த குரலில். ''ஆனால் சந்திராவின் உடம்பில் காயம் இருந்ததா என்பதை வேறு டாக்டரைக் கொண்டாவது பிராசிக்யூஷன் தரப்பில் சரி பார்த்து இருந்திருக்கலாம்.''

இத்துடன் பிராசிக்யூஷன் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்தன. பிறகு குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்திராவின் தரப்புக்கான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டன. அவர்கள் அதிகம் பேர் இருக்கவில்லை.

உள்ளூரைச் சேர்ந்த ஒரு வயோதிகப் பெண்மணி முதலில் சாட்சியம் சொன்னாள். தனக்கு இறந்து போன கப்புலட்சுமியை வெகு காலமாகத் தெரியும் என்றும், கப்புலட்சுமிக்கும் அவள் கணவனுக்கும் தான் அறிந்த வரையில் சண்டை எதுவும் கிடையாது என்றும் சொன்னாள்.

சுப்புலட்சுமி தன்னிடம் எந்த அந்தரங்கத்தையும் மறைத்தது கிடையாது என்றாள். வீட்டு விலக்குத் தள்ளிப் போனால் கூடத் தன்னிடம் சொல்லி மருந்துகேட்பாள் என்றும் அந்த அளவுக்குத் தன்னிடம் நெருக்கம் உண்டு என்றும் சொன்னவள், ''ஆனால் அவள் கொஞ்சம் ரோஷக்காரி'' என்றாள்.

''எதை வைத்துச் சொல்கிறீர்கள்?'' என்று சாரங்கன் கேட்டார்.

''ஒரு சின்ன விஷயத்தைக்கூட மனசில் போட்டு அலட்டிக்கொள்வாள். அதைப்பற்றித் திரும்பத் திரும்பப் புலம்புவாள்'' என்றாள் அந்தக் கிழவி.

''உதாரணமாக ஒன்று சொல்ல முடியுமா?''

''ஒரு தடவை நானும் அவளும் கடைத் தெருவுக்குப் போயிருந்தோம். கோவில் வாசலில் ஒரு பூக்காரியிடம் மல்லிகைப் பூ பேரம் பண்ணினாள். முழம் முப்பது பைசா என்று பூக்காரி சொன்னதும் 'இருபது பைசா வைத்துக் கொள்' என்றாள் சுப்புலட்சுமி. பூக்காரி கொடுக்கவில்லை, கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. 'மல்லிகைப் பூ வாங்குகிற மூஞ்சியைப் பார்!' என்று வேறே சொல்லி விட்டாள். கேவலம் ஒரு பூக்காரி இப்படிச் சொல்லி விட்டாளே என்று ரொம்ப நாள் வரையில் வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்தாள். இரண்டு நாள் சரியாய் ஆகாரம் கூடச் சாப்பிடவில்லை அந்த ரோஷத்தில். அதன் பிறகு கோயிலுக்குப் போனால் அந்தப் பூக்காரியின் பக்கமே போவதில்லை. 'இனாமாகவே கொடுத்தாலும் அவளிடம் வாங்க மாட்டேன்' என்று சொல்லி விட்டாள்,'' என்றாள் கிழவி.

சுப்புலட்சுமியின் சடலத்தை உத்தரக்கட்டையிலிருந்து இறக்கியபோது போலீசாருடன் கூட இருந்த பக்கத்து வீட்டுக்காரரொருவர் அடுத்து விசாரிக்கப்பட்டார்.

அவர் ஒரு விஷயம் தெரிவித்தார். உத்திரத்திலிருந்து இறக்கியபோது தலை கீழ்நோக்கித் தொங்கினாற் போலிருந்தது என்பதே அது.

அடுத்து எழுபது வயதான ஒரு பெரியவர் சாட்சிக்கு வர வழைக்கப்பட்டார். அவர் பெயர் நல்லதம்பி.

''நீங்கள் சுப்புலட்சுமிக்கு என்ன முறை?'' என்று கேட்டார் சாரங்கன்.

''தாத்தா. அவள் என் சொந்தப் பேத்தி. குடும்பத்தில் எல்லாரும் போயாச்சு. ஆண்டவன் என்னை மட்டும் எதற்காக விட்டு வைத்திருக்கிறானோ தெரியவில்லை'' என்று கண்ணீருகுத்தார் பெரியவர்.

''வருத்தப்படாதீர்கள். உங்களால் ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமென்று தான் உங்களுக்குக் கடவுள் ஆயுள் கொடுத்திருக்கிறார்'' என்று ஆறுதல் சொன்னார் சாரங்கன். ''நீங்கள் சுப்புலட்சுமிக்கு எந்த வழியில் பாட்டனார்? அம்மா வழியிலா, அப்பா வழியிலா?''

''அப்பா வழியில்'' என்றார் பெரியவர். ''சுப்பு லட்சுமியின் அப்பன் என் சொந்த மகன். மூணு வருஷம் முந்தி அவன் இறந்து போய்விட்டான். நான் குத்துக் கல்லாட்டம் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.''

''சுப்புலட்சுமியை உங்களுக்குச் சின்ன வயது முதல் தெரியுமா?''

''என் மடியில் வளர்ந்த குழந்தை.''

''உங்கள் மகனுக்கும் உங்களுக்கும் நல்ல உறவு இருந்ததா? அல்லது சண்டை கிண்டை உண்டா?''

பெரியவரின் முகத்தில் கோபம் படர்ந்தது. ''அவன் தங்கமான பிள்ளை சார். நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்.''

''உங்களுக்குச் சொல்லாமல் எதுவும் செய்ய மாட்டார்?''

''மாட்டவே மாட்டான்.''

''உங்கள் பேத்தி சுப்புலட்சுமி யாரோ பழனி என்பவருடன் சினேகிதம் வைத்திருந்ததாயும் அதை உங்கள் பிள்ளை - சுப்புலட்சுமியின் அப்பா - கண்டித்ததாயும் சொல்லப்படுவது உண்மைதானா?''

''சுத்தப் பொய், சார். சுப்புலட்சுமி அந்த மாதிரி வழிக்கெல்லாம் போகிற பெண் அல்ல.''

''அதற்காகவே அவளைப் பிரித்து, புளி வியாபாரியான மாரியப்பனின் வீட்டில் கொண்டு போய் விட்டதாகச் சொல்கிறார்களே?''

''அதுவும் கிடையாதுங்க. பொதுவாய் என் மகனுக்கு நிரந்தரமான வருமானமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். மாரியப்பன் எங்கள் சொந்தக்காரர். அவர் வீட்டிற்கு உதவிக்கு ஆள் தேவைபட்டது. பெண்ணை நல்லபடி வைத்துக் கொள்வார் என்று கொண்டு போய் விட்டிருந்தான். ஹூம்! அவன் நினைச்சது ஒண்ணு நடந்தது ஒண்ணு!'' என்று பெருமூச்சு விட்டார் பெரியவர்.

''சுப்புலட்சுமியின் அம்மா – உங்கள் மருமகள் எப்படி?''

''அது சண்டைக்காரப் பொண்ணுங்க. சின்ன வயசிலேயே இறந்து போயிட்டது. புருஷன் ஏதோ சொன்னான்னு கிணற்றிலே விழுந்து செத்திட்டுது.''

''த்சொ த்சொ'' என்றார் சாரங்கன். ''உங்க சம்பந்தி அம்மா எப்படி? அதாவது மருமகளின் தாயார்?''

''பொதுவாகவே அவங்க ஒரு தினுசானவங்க, சார். எப்ப எப்படி நடந்துப்பாங்க என்று சொல்ல முடியாது. சுப்புலட்சுமியோட பெரியம்மாவும் அப்படித்தான்! மாமியாரோடு சண்டை போட்டுக்கொண்டு கெரஸின் ஊற்றித் தற்கொலை செய்து கொண்டது.''

அரசாங்க வக்கீல் எழுந்து வந்து, ''உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ரொம்ப நெருக்கம் என்கிறீர். ஆனால் நீங்கள் ஓர் ஊரிலும் அவர் ஓர் ஊரிலும் இருந்திருக்கிறீர்களே, ஏன்? ஏன் நீங்கள் உங்கள் பிள்ளையோடு இருக்கவில்லை?'' என்றார்.

''அவனுக்கு ஏதோ வியாபாரம் கீபாரம்னு இருந்தது. எனக்கு ஊரிலே ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் இருந்தது. அதனால் தனித் தனியாய் இருந்தோம். என்னங்க கேள்வி இது! தாயும் பிள்ளையும் ஒண்ணானாலும் வாயும் வயிறும் வேறேன்னு நீங்க கேட்டதில்லையா?'' என்று பெரியவர் கோபித்துக் கொண்டார்.

அரசாங்க வக்கீல் அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் குறுக்கு விசாரணை செய்யவில்லை. சந்திரா தன் மனைவி சுப்புலட்சுமியைக் கொலை செய்து விட்டுத் தூக்கில் தொங்க விட்டானென்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் இருப்பதாகவும் ஆகவே அவனுக்கு அதிக பட்சத் தண்டனை என்ன உண்டோ அதைத் தர வேண்டுமென்றும் மீண்டும் வலியுறுத்தித் தன் வாதத்தை முடித்துக் கொண்டார்.

சாரங்கன் தன் கட்சியை விவரமாக எடுத்துரைக்கலானார்.

''மேன்மை தங்கிய கோர்ட்டாரவர்களே, இதுவரை கேட்டறிந்த சாட்சிகளைக் கொண்டு சந்திரா குற்றவாளியல்ல, வேண்டுமென்றே குற்றம் செய்ததாக மாட்டி வைக்கப்பட்டவள் என்பது தங்களுக்கே புரிந்திருக்கும். இருந்தாலும் சம்பிரதாயத்துக்காக வேண்டி மறுமுறையும் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

முதலாவதாக, கட்டம்பாளையம் இன்ஸ்பெக்டர் மருதாசலம் மிக இக்கட்டான நிலையில் இருந்திருக்கிறார். இந்த வட்டாரத்தில் ஏராளமான கொலை களவு குற்றங்கள் நடைபெற்றிருப்பதாகத் தகவல் வந்தும் எந்தக் கேசும் பிடிக்கவில்லை என்று மேலிடத்திலிருந்து அவருக்குக் கண்டனம் வந்திருக்கிறது. அந்தச் சமயம் தற்கொலையாக இருந்தாலும் கொலைக் கேஸாக மாற்றுவதென முடிவு செய்து அதற்குத் தக்கபடி ஜோடித்திருக்கிறார். நான் இன்ஸ்பெக்டரையோ போலீஸ் இலாகாவையோ குற்றம் சொல்லவில்லை. அவர்கள் நிலைமையில் இருந்தால் நானும் அப்படியேதான் செய்திருப்பேன். ஆகவே இது ஒரு ஜோடனைக் கேஸ் என்பது என் முதலாவது பாயிண்ட்.

இரண்டாவதாக, கொலை செய்வதற்கான நோக்கம். அது இந்த வழக்கில் இல்லவே இல்லை. பழனி என்று ஒரு கள்ளக் காதலன் இருந்ததாகவும், அவனுக்கும் இவளுக்கும் கடிதத் தொடர்புகள் இருந்ததாகவும் சொல்கிறார்கள். சரி, அந்தப் பழனி எங்கே என்று கேட்டால் அவனைத் தான் தேடிக் கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். கடிதங்கள் எங்கே என்றால் அப்போதே கொளுத்தியாகி விட்டதே என்கிறார்கள். ஆகவே கொலைக்கான நோக்கத்தை நிரூபிக்கவில்லை என்பது என் இரண்டாவது பாயிண்ட்,

மூன்றாவதாக, கொலையைக் கண்ணால் கண்ட சாட்சி யாருமே கிடையாது. கணவன் மனைவிக்குள் தகராறு இருந்தது என்றும், சண்டை போடும் சத்தம் கேட்டது என்றும் சாட்சி சொன்னால் சரியாகி விடுமா? உத்திரத்திலிருந்து சடலத்தைக் கீழே இறக்கும் போது பார்த்ததற்குத்தான் சாட்சிகள் இருக்கிறார்கள். அவைகளை வைத்து ஒரு நிரபராதிக்குத் தண்டனை கொடுக்க முடியாது.

நாலாவதாக, குற்றம் சாட்டப்பட்ட சந்திரா கட்டம் பாளையத்திலிருந்து திருப்பூருக்குச் சென்றதாகவும், பாதி வழியில் பர்ஸ் களவு போனதால் திரும்பி வந்ததாயும், அப்போது கள்ளக் காதலனுடன் மனைவியைப் பார்த்ததாயும் பிராசிக்யூஷன் தரப்புவாதம். குறிப்பிட்ட தினத்தன்று பந்த் நடைபெற்றதால் சரிவரப் பஸ்கள் ஓடவில்லை என்று நிரூபித்திருக்கிறேன். போவதற்குப் பஸ் கிடைத்திருந்தாலும், திரும்பி வருவதற்குப் பஸ் கிடைத்திருக்க முடியாது.

ஐந்தாவதாக, சவத்தைக் கீழே இறக்கிய போது தலை மார்பை நோக்கித் தொங்கிக் கொண்டிருந்தது என்பதைக் கவனிக்க வேண்டும். தலை விறைத்து நிமிர்ந்து இருந்ததாகப் போலீஸ் கான்ஸ்டபிள் சொன்னது வேண்டுமென்றே கூறப்பட்ட பொய். தொங்கியிருந்ததாகப் பக்கத்து வீட்டுக்காரர் சொன்னதுதான் உண்மை. ஏனென்றால் போலீஸ் கட்சிப்படி திடீரென்று ஏற்பட்ட ஆவேசத்தில் தன் மனைவியைக் கொலை செய்திருக்கிறான் என்றே வைத்துக் கொள்வோம். அவன் திட்டமிட்டுக் கொலை செய்திருந்தால் எல்லாவற்றையும் டாண்டாணென்று முடித்து விட்டிருப்பான். திடீரென்று வெறியில் செய்ததால் மனைவி இறந்த பிறகு, இனி என்ன செய்வது என்று ஒரு மணி நேரமாவது விழித்து, தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். அதற்குப் பிறகு உத்திரக்கட்டையில்

உடம்பைத் தொங்க விட்டிருந்தால் தலை கீழ்நோக்கித் தொங்கியிருக்க முடியாது. ஏனெனில் அதற்குள் சவத்தில் விறைப்பு ஏற்பட்டிருக்கும். தலை நிமிர்ந்துதான் இருக்கும். வளைந்து தொங்கியிருப்பது அசாத்தியம். அதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டுமென்றுதான் போலீஸ் கான்ஸ்டபிள், தலை விறைத்து நிமிர்ந்து இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

ஆறாவதாக, பாண்டுரங்கம் என்ற பக்கத்து வீட்டுக் காரரின் சாட்சியம். உத்திரத்தில் தொங்கிய உடலின் கீழே கண்ணாடி வளையல் உடைந்து கிடந்தன என்று அவர் சொல்கிறார். சுப்புலட்சுமி தூக்குப் போட்டுக் கொண்ட போது கையைக் காலை உதைத்துக் கொள்கையில் அவை உடைந்து சிதறியிருக்க வேண்டும். சந்திரா அவளைக் கொலை செய்திருந்தால் துண்டுகளை அப்புறப்படுத்தாமல் அப்படியே ஓடி வந்திருப்பாரா ஸ்டேஷனுக்கு?

ஏழாவதாக, போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டரின் சாட்சியம். தூக்கில் தொங்கினால்தான் நாக்குப் பிதுங்கும், நாக்கின் நுனி கடிபட்டிருக்கும். எச்சில் வழிந்திருக்கும், கண்கள் பிதுங்கியிருக்கும். கொலை செய்துவிட்டு தூக்கில் மாட்டியிருந்தால் இதெல்லாம் நேராது. அத்துடன் கழுத்தில் அடையாளம் படுக்கை வசத்தில் வளையம் வளையமாக இருந்தால்தான் கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாக அர்த்தம். தொண்டையின் பக்கம் கீழேயும் பிடரியின் பக்கம் மேலேயும் அடையாளம் தெரிந்ததென்றால், தூக்குப் போட்டுக் கொள்ளும் போது மட்டுமே அப்படி நேரும்.

எட்டாவதாக, கழுத்து நெரிக்கப்படும் போது எந்தப் பெண்ணும் எதிராளியைத் தன் நகத்தால் பிராண்டித் திமிறிப் போராடாமல் இருக்கமாட்டாள். அதற்கான அடையாளம் சுப்புலட்சுமியின் கையில் இல்லை. சந்திராவின் உடம்பிலும் இல்லை.

ஒன்பதாவதாக, உள்ளங்காலில் பேனாக் கத்தியால் கீறிய அடையாளம் தென்பட்டதாகச் சொன்னார் டாக்டர். அது ஏன்? வெளியிலிருந்து வந்த சந்திரா தன் மனைவி தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறான். அவள் உயிருடன் இருக்கிறாளா இல்லையா என்பதே தெரியாமல் கூப்பிட்டுப் பார்த்திருக்கிறான். பலனில்லை. பிறகு அவளுக்குச் சுரணை இருக்கிறதா என்று அறிவதற்காக உள்ளங்காலில்- அது தான் அவன் கைக்கு எட்டியதால்- ஒரு பேனாக் கத்தியால் சுரண்டி, கீறிப் பார்த்திருக்கிறான். அது தான் அந்தக் காயம்.

பத்தாவதாக, இறந்துபோன சுப்புலட்சுமி ரோஷக்காரி என்பதும் சிறு சொல்கூடப் பொறுக்காதவள் என்றும் கிழவி சொன்னாள். எப்போதோ யாரோ ஏதோ சொல்லியிருக்க வேண்டும். அது தாங்காமல் அவள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள். அது நமக்கு முக்கியமல்ல. சுப்புலட்சுமியின் குடும்பத்தில் ஏற்கெனவே இரண்டு பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் குடும்பத்தில் ஸ்யூஸைட் டென்டென்ஸி- தற்கொலை மனப்பான்மை- பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது.

ஆகவே, சந்திராவின் மனைவி சுப்புலட்சுமி தூக்குப் போட்டுக் கொண்டுதான் இறந்தாளென்றும், அவளைக் கொலை செய்துவிட்டுத் தூக்கில் மாட்டியதாகச் சொல்வது தவறு என்றும் கூறி முடித்துக் கொள்கிறேன். சந்திராவை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

சாரங்கன் உட்காரப்போன சமயம் அவருடைய ஜூனியரொருவர் ஓட்டமாய் ஓடி வந்து அவர் காதில் ஏதோ பரபரப்புடன் கிசுகிசுத்தார். சாரங்கனின் முகம் மலர்ந்தது. மீண்டும் எழுந்தார். ''மை லார்ட், ஒரு முக்கியமான சாட்சிக்காகக் காத்திருந்தேன். அவர் இப்போதுதான்

தாமதமாக வந்திருக்கிறார். அவரை விசாரிக்க அன்பு கூர்ந்து விசேட அனுமதி தர வேண்டும்'' என்றார்.

யார் அந்தக் கடைசி நிமிட சாட்சி என்று எல்லாரும் நாலாபுறமும் பார்த்தார்கள்.

## 12

கடைசி நிமிட சாட்சியாக யார் வரப் போகிறாரென்று கோர்ட்டில் சலசலப்பும் பரபரப்பும் ஏற்பட, அத்தனை கழுத்துக்களும் ஆவலுடன் வாசல் பக்கம் திரும்ப, 'ஆர்டர் ஆர்டர்!' என்று நீதிபதி மேஜையை மூன்று நாலு முறை தட்ட...

முப்பது வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் உள்ளே வந்தான். ராணுவத்தான் போல் ஒட்ட வெட்டிய தலையுடனும், மிடுக்கான நடையுடனும் காணப்பட்டான்.

''உங்கள் பெயர் என்ன? வயது என்ன?'' என்று கேள்விகளைத் தொடங்கினார் சாரங்கன்.

''என் பெயர் பஞ்சாட்சரம். வயது முப்பத்தொன்று.''

''நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள்?''

''அமிர்தசரஸில். ராணுவத்தில் பணியாற்றுகிறேன்.''

''சென்ற வருடம் கிட்டத்தட்ட இதே மாதத்தில் என்ன நடைபெற்றதென்று உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

அரசாங்க வக்கீல் குறுக்கிட்டு, ''யூவர் ஆனர், என்னது அருமை நண்பர் தங்கள் பொன்னான காலத்தை வீணடிக்கிறார் என்று தோன்றுகிறது, ஏற்கனவே எல்லாச் சாட்சியங்களும் முடித்து, தாங்கள் தீர்ப்புத் தர வேண்டிய கட்டம். அதைக் கெடுத்ததோடு மட்டுமல்லாமல் சம்பந்தமில்லாத கேள்விகளை வேறே கேட்டுக் கொண்டேயிருக்கிறார்'' என்றார்.

நீதிபதி புன்சிரிப்புடன், ''கடைசி நிமிடத்தில் சாட்சியை அழைத்து வருகிறார் என்றாலே ஏதோ முக்கியமான சம்பந்தம் இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். சாட்சியம் முடிந்தபிறகு அப்படி யொன்றும் முக்கியத்துவம் இல்லையென்று தெரிந்தால் உங்கள் அருமை நண்பரை கோர்ட் தக்கபடி கண்டிக்கும்'' என்றார்.

''தாங்க்யூ மை லார்ட்'' என்று சாரங்கன் நீதிபதிக்கு நன்றி சொல்லிவிட்டு, ''சொல்லுங்கள்'' என்றார் பஞ்சாட்சரத்திடம்.

''அப்போது வட இந்தியர்களின் பண்டிகையொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் ஒன்றிக் கட்டையான தால் எங்கும் வெளியே போவது கிடையாது. அன்று என் சினேகிதனொருவன் தன் ஊருக்கு வரும்படி என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றான். அங்கே அவர்கள் வீட்டு விழாவில் கலந்து கொண்டு விருந்து சாப்பிட்டேன். சினேகிதனுடைய மனைவி என் கையில் ரட்சையொன்று கட்டினாள். அது என்னவென்று கேட்டேன். அதன் பெயர் ராக்கி என்றும், அதைக் கட்டினால் அந்தப் பெண் என்னை சகோதரனாகக் கருதுகிறாள் என்றும் விளக்கினார்கள்.''

நீதிபதியும் சரி, அரசாங்க வக்கீலும் சரி, கோர்ட்டில் குழுமியிருந்த மற்றவர்களும் சரி, எதற்கு இந்த விவரமெல்லாம் என்று புரியாமல், அதனாலேற்பட்ட சுவாரஸ்யத்துடன் தொடர்ந்து கவனித்தார்கள்.

''சரி, அதற்குப் பிறகு என்ன நடந்தது?'' என்று கேட்டார் சாரங்கன்.

''அண்ணன்-தங்கை என்ற பாசத்தின் பிணைப்பைப் பற்றி அன்றுதான் நான் எண்ண ஆரம்பித்தேன். எனக்கு அக்காவோ தங்கையோ இருக்கக் கூடாதா என்று ஏங்கினேன். என்

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யார் எங்கே இருக்கிறார்கள் என்று எதுவும் எனக்குத் தெரியாது. சின்ன வயசிலேயே நான் வீட்டைவிட்டு ஓடியவன். எப்போதோ ஞாபகம் வைத்திருந்து இரண்டொருவருக்குக் கடிதம் எழுதினேன். என் பெரியம்மா பெண் ஒருத்தி கட்டம்பாளையத்தில் இருப்பதாகத் தெரிய வந்தது. அவள் பெயர் சுப்புலட்சுமி என்று அறிந்து கொண்டேன்.''

கோர்ட்டில் சில புருவங்கள் உயர்ந்தன. ஆனால் அரசாங்க வக்கீல் இதனாலெல்லாம் என்ன என்பதுபோல் கொட்டாவி விட்டார்.

''அதன் பிறகு என்ன செய்தீர்கள்?'' என்று சாரங்கன் கேட்டார்.

''பொங்கல் தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு, சகோதரன் தன் சகோதரிக்குத் துணிமணியோ பணமோ தருவது உண்டு என்று எனக்கு ஞாபகம் வந்தது. சென்ற பொங்கலன்று ஐம்பது ரூபாய் மணியார்டரில் அனுப்பி னேன்.''

''கூப்பனில் ஏதாவது எழுதினீர்களா?''

''ஆம். நான் இன்னாரென்றும் பொங்கல் திருநாளுக் காகப் பணம் அனுப்பியிருப்பதாகவும் எழுதினேன்.''

''அதைப்பற்றிச் சுப்புலட்சுமியிடமிருந்து பதில் வந்தா?''

''இல்லை. மணியார்டர் அக்னாலட்ஜ்மெண்ட் மட்டும் வந்தது.''

''அதை வைத்திருக்கிறீர்களா?''

''சந்தேகமில்லாமல், பொக்கிஷம் மாதிரி காப்பாற்றி வருகிறேன்.''

''இப்போது கொண்டு வந்திருக்கிறீர்களா?''

''இதோ'' என்றவன் அதை எடுத்து நீட்டினான்.

''மை லார்ட், அதைத் தாங்கள் வாங்கிப் பார்க்க வேண்டுகிறேன்'' என்ற சாரங்கன், கோர்ட் குமாஸ்தா மூலம் நீதிபதியிடம் அனுப்பி வைத்தார்.

பார்த்த நீதிபதி 'ஓ'! என்றார் வியப்புடன், அரசாங்க வக்கீல் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

மணியார்டர் பாரத்தைத் திரும்பப்பெற்றுக்கொண்ட சாரங்கன், அதை அரசாங்க வக்கீலிடமும் மற்றவர்களிடமும் தெரியக்கூடிய விதத்தில் உயர்த்திக் காட்டினார்.

சுப்புலட்சுமியின் கையெழுத்து அதில் இல்லை. கைநாட்டுதான் இருந்தது. கட்டை விரல் ரேகை பதித்த முத்திரை.

வெற்றிப் பெருமிதத்துடன் சாரங்கன் சொன்னார்:

''மை லார்ட், இந்த ஒரே பாயிண்ட்டில் பிராசிக்யூஷன் குற்றச்சாட்டு மொத்தமும் சடசட வென்று சரிந்து விழுந்து விட்டது. சுப்புலட்சுமிக்குக் காதல் கடிதங்கள் வந்ததாயும் அவள் பதில் எழுதியதாயும் போலீசாரின் கட்சி. உண்மையில் சுப்புலட்சுமிக்குக் காதல் கடிதத்தைப் படிக்கவோ பதிலுக்குக் காதல் கடிதம் எழுதவோ தெரியாது. இதை ஆரம்பத்திலேயே சந்திரா என்னிடம் சொன்னார். ஆனால் இறந்து போய்விட்ட ஒருவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதை எப்படி நிரூபிக்க முடியும்? கட்டம்பாளையம் தபாலாபீசில் விசாரணைகள் செய்தேன். சுப்புலட்சுமியின் பெயருக்குக் கடிதம் வந்ததாகவோ அவள் கடிதம் ஏதுவும் தபாலில் சேர்ப்பித்ததாகவோ யாருக்கும் தெரியவில்லை. ஒரே ஒரு

தபால்காரர் மட்டும் சென்ற பொங்கல் சமயம் அமிர்தசரஸிலிருந்து - அவளுக்கு ஐம்பது ரூபாய் வந்தது என்று சொன்னார். உறவினர்களைக் கேட்டேன். நண்பர் பஞ்சாட்சரத்தின் விலாசத்தைக் கண்டுபிடித்தேன். மணியார்டர் அக்னாலட்ஜ்மெண்ட்டுடன் உடனே வந்து சேரும்படி எழுதியிருந்தேன். அவர் லீவு எடுத்து இங்கே வருவதற்குச் சற்றுத் தாமதமாகி விட்டது ஆரம்பத்தில் நான் ஏற்கெனவே சொன்ன பத்துப் பாயிண்ட்டுகளோடு இதைப் பதினொன்றாவதாக - முக்கியமானதாக- சேர்த்துக்கொண்டு, குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்திராவை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

அரசாங்க வக்கீல் பஞ்சாட்சரத்தை விசாரணை எதுவும் செய்யவில்லை. தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

நீதிபதி தீர்ப்பளித்தார். எல்லோரும் எதிர்பார்த்தபடியே அநாவசியமாக ஒரு அப்பாவிக்குத் தண்டனை வாங்கித் தர முயன்றதற்காகப் போலீஸ் இலாகாவைக் கண்டித்த பின்னர் சந்திராவை விடுதலை செய்தார்.

சந்திராவின் தந்தை முத்துலிங்கம் வெறும் நன்றி மட்டும் சொல்லவில்லை. இரண்டாயிரம் ரூபாய் பீசும் அளித்தார். ஆனால் அதைச் சாரங்கன் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார். ஏனென்று கேட்டதற்கு, ''இரண்டு காரணம் இருக்கிறது'' என்றார்.

''என்ன?''

''முதலாவதாக, முதல் தடவையாக ஒரு கிரிமினல் வழக்கை என் சொந்த ஆசைக்காக ஏற்றுக் கொண்டு

நடத்தினேன். அதில் வெற்றியும் கிடைத்துவிட்டது. அந்தச் சந்தோஷமே எனக்கு பீஸ்,'' என்றார்.

''இன்னொரு காரணம்?''

''சண்டை போட்டுப் பிரிந்திருந்த தந்தையும் மகனும் இந்த வழக்கின் மூலம் ஒன்று சேர்ந்து விட்டீர்கள். அதற்குக் காரணமாயிருந்தவன் என்ற மன நிறைவே எனக்குப் போதும். நீங்கள் யாருக்காவது நன்றி சொல்ல வேண்டுமென்றால், உங்கள் மகனைக் காப்பற்றுவதற்காகவே அமிர்தசரஸிலிருந்து வந்திருக்கும் பஞ்சாட்சரத்துக்குச் சொல்லுங்கள்'' என்றார் சாரங்கன்.

★★★

சுதீர் அந்த நோட்டுப் புத்தகத்தைச் சலிப்புடன் மூடிவிட்டு, ''இதிலும் அந்த மாயப்பனின் குடும்பக் கதை எதுவும் இல்லை'' என்றான்.

பாலாவின் அழகிய முகத்திலும் ஏமாற்றம் படர்ந்திருந்தது. ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவள் திடீரென்று ஓர் எண்ணம் ஏற்பட்டவளாக, ''ஏன் சுதீர், அந்த மாயப்பன் தன் குடும்பத்தைப் பற்றிய விவரம் என்று மட்டும்தானே சொன்னான்? மாயப்பன் என்ற பெயர் வருமென்று சொல்லவில்லையே? நாம் இதுவரை படித்த கதைகள் ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட அந்தந்தக் குடும்பத்துக்கு அவமானமானதுதான். இவைகளிலேயே ஒன்றாக இருக்குமோ என்னவே, நமக்கெப்படித் தெரியும்?'' என்றான்.

''அட! முதல் தடவை!'' என்றான் சுதீர்.

''என்ன முதல் தடவை?''

''நீ மூளையோடு பேசுவது!'' என்றான் அவன். ''ஆனா அந்த ஊர் பேர் தெரியாத, முகமில்லாத மாயப்பனி ஒவ்வொரு கதையாகச் சொல்லி இதுஉன் கதையா என்று கேட்டுக் கொண்டிருக்க முடியாதே?''

''இருந்தாலும் 'உன் கதை என்ன, அதைச் சொல்லு' என்று கேட்கலாமல்லவா?''

''அடேங்கப்பா! கொஞ்ச நாளாய் உனக்குத் தைரியம் அதிகம் தான் வந்துவிட்டது.''

அறைக்குள் இருட்டு பரவத் தொடங்கியது. ''வா, மாமா வருவதற்குள் பழையபடி பூட்டிவிட வேண்டும். திடீரென்று வந்து விட்டால் ஆபத்து! சந்தேகப்படுவார்'' என்றான் சுதீர்.

''நாம் இங்கே புகுந்து அவருடைய ரெகார்ட்களை கலைத்து விட்டதைச் சொல்கிறாயா?''

''அதில்லை. இன்னொரு விதமான சந்தேகம்.''

''என்ன அது?''

''இந்த இருட்டில் நாம் தனியே இருப்பதைக் கண்டா ரென்றால் உனக்கும் எனக்கும் காவன்னா கீவன்னா ஏற்பட்டு விட்டது போலிருக்கிறது என்ற சந்தேகம்!''

''சீ! உன் முகரக் கட்டைக்கு அது ஒன்றுதான் குறைச்சல்'' என்று ஒரு பால் பாயிண்ட் பேனாவை அவன் மீது தூக்கியெறிந்தாள். அவன் அதைக் கப்பென்று காட்ச் பிடித்து விட்டு, சிரித்தபடியே அவளை வெளியே தள்ளி, பழையபடி கள்ளச் சாவியால் கதவைப் பூட்டினான்.

அப்படிச் சொல்லி விட்டாளே தவிர, இந்த இரண்டு மூன்று வாரப் பழக்கத்தில், நெருக்கத்தில் பகிர்ந்து கொள்ளும் ரகசியங்களில், தனக்கும் அவனுக்கும் நிஜமாகவே ஒரு காவன்னாவோ கீவன்னாவோ ஏற்பட்டிருக்குமோ என்று பாலாவுக்குத் தோன்றியது. அந்த நினைப்பு முன்னெல்லாம் ஒருவித எரிச்சலை ஏற்படுத்துவதுண்டு. இப்போது மனத்துக்குள் ஒரு புன்னகையை மலர்த்தியது. அவன் பார்க்காத சமயம் ஓரக் கண்ணால் அவனைக் கவனித்தாள். கச்சிதமான உயரமும் பருமனும் டீக்கான ப்ளூ ஷர்ட்டும் கொஞ்சம் கவர்ச்சிகரமான இளைஞன்தான் இந்த சுதீர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. ஆனால் அவன் தன்னைக் கவனிக்குமுன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

''பாலா, அடுத்த முறை நீ சொன்னபடியே செய்து விடு'' என்றான் அவன் வாசலுக்கு வந்ததும்.

''எதைச் சொல்கிறாய்?''

''எங்கே ஞாபகம் உனக்கு?'' என்றான் அவன். ''மாயப்பன் சமாசாரம்தான் சொல்கிறேன். அடுத்த தடவை அவன் போன் பண்ணினால் கட் அண்ட் ரைட்டாகச் சொல்லிவிடு. 'இதோ பாரய்யா, நூற்றுக்கணக்கான கட்டுரை என் அப்பா எழுதி வைத்திருக்கிறார். நீ எதைச் சொல்கிறாய்?' என்று கேட்டுவிடு. நம் வேலையும் சுலபமாகும். அவன் வேலையும் சுலபமாகும்.''

''சரி'' என்று ஒப்புக் கொண்டாள் அவள். ''இருந்தாலும் உன் வயதுக்கும் வாலிபத்துக்கும் ஏற்றபடி நாம் அவனை எதிர்த்துப் போராடுவோம் என்று சொல்வாய் என்று எதிர்பார்த்தேன். வெரி பிக் டிஸ்ஸப்பாயின்ட்மெண்ட்!'' என்று கிண்டல் செய்தாள்.

''வெறும் நிழலோடு போராட எந்தப் பீமனாலும் முடியாதம்மா புத்திசாலி!'' என்று அவள் தலையில் குட்டி விட்டுப் புறப்பட்டான் அவன்.

★★★

**அ**ன்று பாலா செய்தி வாசிக்க வேண்டிய முறை. காலையிலிருந்தே அவள் உள்ளத்துக்குள் ஒரு படபடப்பு ஏற்படலாயிற்று. போகாமலிருந்து விடலாமா என்று கூட யோசனை செய்தாள். எப்படியும் ஒரு நாள் அந்த மாயப்பனைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். வருவது வரட்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அப்பாகூடக் கேட்டார். ''ஏன் பாலா என்னவோ போலிருக்கிறாய்? உனக்குப் பிடித்த அம்ப்ரல்லா சில்லி பச்சடியை நீ டச்சிங் ஸீயிங்கூடச் செய்யவில்லையே?'' என்றார் அவருக்கே உரிய 'ஆங்கில'த்தில்.

''ஒன்றுமில்லையே? குடைமிளகாய்ப் பச்சடி நிறையப் போட்டுக் கொண்டேனே?'' என்று சமாளித்தாள் பாலா.

வீட்டில் இருப்புக் கொள்ளாமல் ஏழு மணிக்கே டி.வி. ஸ்டேஷனுக்குப் போய்விட்டாள். சில சமயம் செய்தி ஆரம்பிக்கு முன்னாலும் மாயப்பன் கூப்பிட்டிருக்கிறான், செய்தி முடிந்த பின்னும் கூப்பிட்டிருக்கிறான். இன்று எப்போது கூப்பிடுவானோ என்று ரிஸப்ஷன் பக்கமும் டெலிபோன் ஆபரேட்டர் அருகிலும் காரியமில்லாமல் நடந்து கொண்டிருந்தாள். ஏழே முக்கால் வரை யாரும் அவளைக் கூப்பிடவில்லை. இரண்டாவது ஃப்ளோரிலுள்ள நியூஸ் யூனிட்டை அவள் அடைந்த போது, 'உன்னை ரொம்ப நேரமாய்த் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்றார் நியூஸ் ப்ரொட்யூசர்.

''ஏன் சார்?'' என்றாள் அவள் திடுக்கிட்டு.

''இன்று இரண்டு டி.கே. இருக்கிறது. எடிட்டிங் ரூமில் போய்ப் பார்த்து வைத்துக்கொள்.'' என்று அவர் சொன்னதும் 'அப்பா! அவ்வளவுதானா!' என்று அவளுக்கு மூச்சு வந்தது.

கிரௌண்ட் ஃப்ளோருக்கு இறங்கிச் சென்றாள். டி.கே. என்பது டெலிகினி என்ற செய்திப் படம். செய்தி படிக்கும் போது இடையே காட்டப்படுவது. செய்தி வாசிக்கும் முன்னால் அதைப் பார்த்து வைத்துக் கொள்வது நல்லது. குறிப்பிட்ட இடத்தில் செய்தியை நிறுத்தவும் படம் முடிந்தவுடன் செய்தியைத் தொடரவும் வசதியாயிருக்கும்.

ஆறு அங்குலத்துக்கு ஒன்பது அங்குலமுள்ள சிறிய திரையில் டி.கே. யை ஓட்டிக் காட்டினார் எடிட்டிங் உதவியாளர். ஒன்று, ரஷ்யாவிலிருந்து ஓர் அமைச்சர் சென்னைக்கு வந்ததையும் அவரைக் கவர்னரும் முதல்வரும் வரவேற்பதையும் காட்டும் படம். மற்றது, டெல்லிக்கு அருகே நடந்த ஒரு ரயில் விபத்தைப் பற்றியது. ரொம்பக் கோரமாயிருந்தது.

லிப்ட் சரியாய் வேலை செய்யவில்லை. அதற்காகக் காத்திருக்க வேண்டாமென்று படிகளின் வழியே மீண்டும் நியூஸ் யூனிட்டை அடைந்தாள். ஸ்டூடியோவுக்குப் போகும்போதுதான் தண்ணீர் எடுத்து வரவில்லை என்பது ஞாபகம் வந்தது. ஸ்டூடியோவில் தண்ணீர் கிடையாது. எப்போதும் ஒரு கிளாஸ் டம்ளரில் த்ண்ணீர் கையோடு எடுத்துப் போவாள். அது இன்று மறந்து விட்டது. ஓர் ஊழியரை அனுப்பி எடுத்து வரச் சொல்லி ஸ்டூடியோவுக்குப் போனாள்.

படபடப்பாகவே இருந்து கொண்டிருந்தது. ஆனால் வெளியே தெரியாமல் தனது வழக்கமான புன்சிரிப்புடனேயே செய்தியைப் படித்து முடித்தாள்.

டெலிபோன் ஆபரேட்டரிடம் வேகமாய்த் திரும்பி, ''எனக்கு ஏதாவது கால் வந்ததா?'' என்று விசாரித்தாள்.

''கால் வரவில்லை. ஆள் வந்திருக்கிறது, அதோ'' என்று சுட்டிக் காட்டினாள் ஆபரேட்டர்.

மறுபடியும் திக்கென்று மார்பில் எதுவோ அடைக்க, காத்திருப்பது சுதீர்தான் என்று கண்டதும் மறுபடியும் ஒரு முறை மூச்சு வந்தது.

''என்ன?'' என்றான் அவன்

''ஊகூம். இன்று அவன் கூப்பிடவில்லை.''

அவன் அவள் கண்களை ஊடுருவுகிற மாதிரி பார்த்தான். ''பாலா, நீ நீயாகவேயில்லை. உன் முகத்தின் களையெல்லாம் போய்விட்டது. இதோ பார், இந்த உளைச்சலையெல்லாம் கொஞ்ச நேரம் மறந்துவிட்டு, டிரைவ் இன்னுக்குப் போகலாம் வா. ஏதாவது சாப்பிட்டபடி சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருப்போம்'' என்றான்.

அவளுக்கும் அது சரியென்று படவே அவனுடன் ஸ்கூட்டரில் ஏறிக்கொண்டாள். மெரினாவின் குளிர்ந்த காற்றும், மெல்லிய விளக்கு வெளிச்சமும் மனத்துக்கு இதமாயிருந்தன.

ஆனால் டிரைவ் இன்னில் நுழைந்து, இரண்டு பாசந்திக்கு ஆர்டர் கொடுக்கும் வரைதான் அவள் நிம்மதி நீடித்தது. அவள் அடிக்கடி பக்கவாட்டில் பார்த்துக் கொண்டாள். பிறகு மேசையில் குனிந்து சுதீரிடம் ரகசியக் குரலில், ''சுதீர், சாதாரணமாய்ப் பார்க்கிற மாதிரி பார். அதோ அந்த மேசையில் ஒரு பெண் தனியே உட்கார்ந்திருக்கிறாள்.

என்னையே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். லெஃப்ட் பக்கம் மெதுவாகக் கவனி. எனக்குப் பயமாயிருக்கிறது'' என்றாள்.

## 13

**ப**யந்த குரலில் பாலா சொன்னதும் சுதீர் மெல்லத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை. சாயங்கால நேரத்தின் உல்லாசங்கள் காற்றில் மிதந்து கொண்டிருந்தன. பலகாரத் தட்டுக்களின் ஓசையுடன் இளவயதுக்காரர்களின் சிரிப்புக் கலந்து கேட்டது. மேஜையின் அடியில் அமர்ந்து சாப்பிடுவோரும் காரில் உட்கார்ந்தபடி சாப்பிடுவோரும் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் பானத்தை ஸ்டிராவில் உறிஞ்சியபடி உலவிக் கொண்டிருந்தார்கள்.

''எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?'' என்றான் சுதீர்.

''கவனிக்காத மாதிரி கவனி. எனக்கு லெஃப்ட் ஸைட். தனியே உட்கார்ந்திருக்கிறாள் ஒரு பெண். வடை வைத்தது வைத்தபடியே இருக்கிறது. ஒரு விள்ளல்கூடக் கிள்ளாமல் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.''

''இது டீஸென்ட்டான இடம். டீஸென்ட்டான நபர்கள்தான் இங்கே வருவார்கள். நீ சொல்கிற மாதிரி....'' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே பாலா குறிப்பிடும் பெண்ணை அவன் கண்கள் கண்டுவிட்டன.

அவள் அவர்களையே பார்த்தபடி இருந்தாள். ஆனால் நேர்ப் பார்வையாக அல்ல. ஒரு மாதிரி ஓரக்கண்களால், திருட்டுத்தனமாகதான். அவர்களைப் பார்ப்பதை வேறு யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற மிரட்சி அதில்

தென்பட்டது. அவளுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் லட்சணமாய் இருந்தாள். மாநிறம். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது அவள் உடையிலிருந்து தெரிந்தது. ஆனால் ஏழையாகத் தோன்றவில்லை.

''ஏன் அப்படிப் பார்க்கிறாய் என்று நாமே போய்க்கேட்டு விடலாமா?'' என்றாள் பாலா.

''வேண்டாம், பொறு. நம்மிடம் வருவதற்கோ பேசுவதற்கோ விஷயம் இருந்தால் அவளாகவே வருவாள். ஒன்றுமில்லாமல் எழுந்து போனால் அப்போது போய்க் கேட்கலாம், எதற்கு அப்படிப் பார்த்தாய் என்று. நீ தோசை சாப்பிடு. சட்டினி ரொம்ப நன்றாயிருக்கிறது.''

அவளால் அவனைப் போலச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை. எதையும் சாப்பிடப் பிடிக்காமல் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டிருந்தாள். சுந்தர் சொன்னபடிதான் நடந்தது. வெகு நேரம் கழித்து அந்தப் பெண் எழுந்தாள். தயங்கித் தயங்கிச் சுற்று முற்றும் பார்த்தபடி, ''டெபுடி கமிஷனர் ஜனார்த்தனத்தின் மகள் பாலாதானே?'' என்றாள் பாலாவிடம்.

''ஆமாம், உட்காருங்கள்'' என்று பாலா சொல்ல, ஒரு காலி நாற்காலியை எடுத்து வந்து பக்கத்தில் போட்டான் சுந்தர்.

''இல்லை, எனக்கு உட்கார நேரமிரல்லை''என்றாள் அவள். பேச்சில் பதட்டமும் தொனியில் திகிலும் தென்பட்டன. ''இரண்டு நாளாய் உங்களைக் கண்டுபிடித்துப் பேச வேண்டும் என்று தேடிக் கொண்டிருக்கிறேன். டி.வி ஸ்டேஷனுக்குக் கொஞ்சம் முன்னால் வந்தேன். இங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தீர்கள். ஒரு ஆட்டோ பிடித்துப் பின்னாலேயே தொடர்ந்து வந்தேன்'' என்றாள்.

பாலா ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள். கண்சாடை அடக்கி அவளைத் தடுத்துவிட்டு, சுதீரே கேட்டான். ''நீங்கள் யார் என்ன என்று சொல்லவில்லையே?''

''உங்களை டெலிபோனில் மிரட்டிக் கொண்டிருக்கும் மாயப்பனின் மனைவி நான். என் பெயர் மரகதம்.''

சுதீர் உடனே அவளை நம்பத் தயாராயில்லை. ''மாயப்பனா? யாரது? எங்களை எதற்கு மிரட்டுகிறான்?'' என்றான்.

அவள் சோகமாக சிரித்து,''எனக்கு எல்லாம் தெரியும். பாலாவின் அப்பா பல போலீஸ் அனுபவங்களைக் கட்டுரையாகத் தொகுத்து எழுதிக் கொண்டிருக்கிறார். அதில் மாயப்பனின் குடும்பக் கதையும் இருக்கிறது. அந்தக் கதை வரக் கூடாதென்பது மாயப்பனின் தீர்மானம். அதைப் பற்றிய குறிப்பு, கட்டுரை எல்லாவற்றையும் திருடிக் கொண்டு வந்து தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறான். இல்லாவிட்டால் பாலாவின் அப்பாவுக்கு உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று மிரட்டியிருக்கிறான்'' என்றவள் பாலாவை நோக்கி, ''நான் சொல்வது உண்மைதானே?'' என்றாள்.

'ஆமாம்' என்று தலையாட்டினாள் பாலா. சுதீர் மேலும் விசாரணை செய்ய விரும்பி, ''சரி, இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? மாயப்பன் சொன்னானா?'' என்று கேட்டான்.

''இல்லை. குடி போதையில் அவன் உளறும் போதெல்லாம் கேட்டு நான் ஊகித்துக் கொண்டேன். சில சமயம் அவனே ஜம்பமாகச் சொல்லிக் கொள்வான் என்னிடம்.''

அவள் தன் கணவனை 'அவர்' என்று குறிப்பிடாமல் 'அவன்' என்றே ஆரம்ப முதல் குறிப்பிடுவதை இருவருமே

கவனித்தார்கள். மாயப்பனின் மீது சிறிது கூட மதிப் பில்லாதவள் என்பது வெளிப்படையாய்த் தெரிந்தது. சுதீர் அவள் முகத்தை ஒரு வினாடி உற்றுப் பார்த்தான். ''எங்களிடம் என்ன சொல்ல வேண்டுமென்று துரத்திக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?''

''அந்த மாயப்பனின் குடும்பக் கதை கட்டாயம் புத்தகமாக வெளிவரத்தான் வேண்டும்'' என்றாள் அவள் தீர்மானமாக.

''அது வெளிவந்தால் என் அப்பாவின் உயிருக்கே ஆபத்து என்று உங்கள் கணவர் மிரட்டியிருக்கிறார்'' என்று நினைவூட்டினாள் பாலா.

''அது வெளிவராவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன். எது பரவாயில்லையென்று நீங்களே முடிவு பண்ணிக் கொள்ளுங்கள்'' என்றாள் மரகதம் அதே உறுதியோடு. ''அது வெளிவரும்படி செய்வது சமூகத்துக்கு நீங்கள் செய்கிற சேவை. அப்படிப்பட்ட கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது ஜனங்களுக்குத் தெரிந்தேயாக வேண்டும்.''

சுதீர் புன்னகை செய்து அவள் தீவிரத்தைத் தணிக்க முயன்றான். ''நீங்கள் உங்கள் கணவர்மீது ரொம்பத்தான் கோபமாயிருக்கிறீர்கள்.''

''தயவு செய்து கணவன் என்று சொல்லாதீர்கள். அவன் ஒரு மிருகம். தெரியாத்தனமாய் என்னை என் அப்பா அந்தப் பாழும் கிணற்றில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டார். இந்தக் குடிகாரனிடம் தினம் அடி உதை தான் எனக்கு. முன்னெல்லாம் என் அம்மா வீட்டுக்கு விரட்டியடித்துக் கொண்டிருந்தான். இப்போது அங்கேயும் யாரும் இல்லை. ஆகவே இவன் காலடியிலேயே சாக வேண்டுமென்பது என்

தலையெழுத்தாகி விட்டது. சாவதற்கு முன்னால் இவனுடைய குடும்பத்தினரின் கதை, இவனுடைய முன்னோர்கள் எப்பேர்ப்பட்ட கொலைகாரர்கள் என்பதெல்லாம் வெளிவந்து, சந்தி சிரித்து, அதை என் கண்குளிரப் பார்த்து விட்டு, பிறகு நான் கண்ணை மூடவேண்டும். அது தான் என் ஒரே ஆசை.'' படபடப்பாகப் பேசியதில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

''இப்போது எப்படி இவ்வளவு தைரியமாக எங்களிடம் வந்து பேசுகிறீர்கள்?'' என்று சுதீர் கேட்டான்.

''அவன் இப்போது பம்பாய் போயிருக்கிறான் – என்ன கடத்தல் வியாபாரமோ திருட்டு வியாபாரமோ – வர இரண்டு மூன்று நாளாகும்.''

பாலா குறுக்கிட்டு, ''நீங்கள் கேட்டுக் கொள்கிறபடி அந்தக் குடும்பக் கதை வெளிவர வேண்டுமென்றாலும் சரி, உங்கள் கணவன் மிரட்டுகிறபடி அது வரக்கூடா தென்றாலும் சரி, அதில் ஒரு சிக்கல் இருக்கிறது'' என்றாள்.

''என்ன?''

''என் அப்பா நூற்றுக்கணக்கான குறிப்புக்களும் கட்டுரைகளும் எழுதி வைத்திருக்கிறார். அதில் மாயப்பன் கதையை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது? உங்களுக்கு ஏதாவது அதைப் பற்றிக் கொஞ்சம் தெரியுமா?''

''கொஞ்சமென்ன, நிறையவே தெரியும். ஆனால் அதைச் சொல்வதற்கு இது இடமில்லை. இப்போது நேரமில்லை.''

''அப்படியானால் உங்கள் வீட்டு விலாசத்தைக் கொடுங்கள். நாளைக் காலை வந்து பார்க்கிறோம்'' என்றான் சுதீர். தன் பாக்கெட் டயரியைப் பிரித்து, பேனாவையும் திறந்து கொடுத்தான்.

அவள் கீழுதட்டைக் கடித்தவண்ணம் சிறிது தயங்கி விட்டு, பிறகு தைரியம் கொண்டவளாய், '12, சிங்காரத்தான் தோட்டம், வியாசர்பாடி' என்று எழுதிக் கொடுத்தாள்.

''ரைட், காலை ஒன்பது மணிக்கு வருகிறோம்'' என்றாள் பாலா.

மரகதம் என்ற அந்தப் பெண் வந்த வேகத்திலேயே எழுந்துபோய் விட்டாள்.

''கதையில் இது ஒரு புதுத் திருப்பம்'' என்று சுதீர் சிரித்தான்.

''சிரிக்காதே. எனக்கு மண்டையைக் குடைகிறது'' என்றாள் பாலா. ''நாளைக்கு நாம் அங்கே போகிற போது அந்த மாயப்பனே அங்கே இருந்தால்?''

''ஹலோ என்று கை குலுக்குவோம். அவன் யாரென்று தெரியவேண்டுமென்றுதானே நாமும் மெனக்கெடு கிறோம்?'' என்று சொல்லிவிட்டு, சர்வர் கொண்டு வந்த பில்லுக்குப் பணத்தை வைத்தான் சுதீர்.

★★★

**ம**றுநாள் இருவரும் பாலாவின் வீட்டில் சந்தித்த போதுதான் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டது ஞாபகத்துக்கு வந்தது. காலை ஒன்பது மணிக்குப் போக வேண்டுமென்றால் வீட்டில் அப்பா இருப்பாரே? 'எங்கே இரண்டு பேருமாய் இந்த வேளையில் கிளம்புகிறீர்கள்?'' என்று கேட்பாரே?

அவர்கள் நினைக்கிறபடியே கேட்கத்தான் கேட்டார். ''கல்யாண நிச்சயதார்த்தமாம். இடம் தெரியாது என்று

என்னைக் கூப்பிட்டாள். அழைத்துப் போகிறேன்'' என்று சுதீர் கதையளந்தான்.

''ஹூம்! இவருடைய சினேகிதிகளில் அனேகமாய் இவள் தான் கடைசி'' என்று பெருமூச்சு விட்டார் ஜனார்த்தனம். ''எங்கெங்கேயோ யார் யாருக்கோ நிச்சயதார்த்தம் நடக்கிறது... நம்ம வீட்டில்தான்...''

அவர் பார்வை தங்கள் இருவர்மீதும் படருவதைக் கவனித்தாள் பாலா.

''தேவையில்லாத கற்பனைகளிலெல்லாம் மனத்தைச் செலுத்தாதீர்கள், அப்பா. ஏற்கெனவே நீங்கள் உடம்பு சரியில்லாதவர்'' என்று சொல்லிவிட்டு, சுதீரின் பின்னே ஸ்கூட்டரில் ஏறியமர்ந்தாள்.

நாலு தெருக்கள் தாண்டும்வரை இரண்டு பேரும், எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வோர் எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

''பிலியனில் ரொம்பத் தள்ளி உட்கார்ந்திருக்கிறாயே? விழுந்து விடப் போகிறாய்'' என்றான் சுதீர் கடைசியில்.

''விழுந்தால் விழுந்து விட்டுப் போகிறேன். அப்பா சொன்னதை வைத்து ஒன்றும் சிறகடித்துப் பறக்க வேண்டாம்'' என்று சிடுசிடுத்தாள் பாலா.

''இங்கே யாரும் சிறகடித்துப் பறக்கவும் இல்லை. கெஞ்சிக் கொண்டு பிச்சை எடுக்கவும் இல்லை. கீழே விழுந்து கிழுந்து தொலைந்தால் நான்தானே ஆஸ்பத்திரிக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் அலைந்து தொலைய வேண்டும்? அதற்காகச் சொன்னேன்.''

அவள் அரை அங்குலம் முன்னால் நகர்ந்து, ''இவ்வளவு தான் என்னால் முடியும்'' என்றாள்.

''போதும், போதும். தாங்ஸ். என் இடுப்பைக் கட்டிப்பிடித்துக் கொள் என்றா சொன்னேன்?''

இருவருக்குமே தாங்கள் போடுவது போலிச் சண்டை என்பது புரிந்து விட்டது. ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் புன்னகை செய்து கொண்டார்கள்.

வியாசர்பாடியில் பல சந்து பொந்துகளைக் கடந்து தான் அந்தச் சிங்காரத்தான் தோட்டத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் அந்த '12' ஆம் நம்பர் வீடு பூட்டிக் கிடந்தது.

தெருவில் அந்த வீட்டுக்கு இடப்புறமிருந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடையில் விசாரித்தார்கள். ''அதென்னமோ திடீர்னு நேத்து ராத்திரி வீட்டைக் காலி பண்ணிக்கிட்டுப் போயிட்டாங்க'' என்றான் கடைக்காரன். ''அந்த ஆள் எங்கிருந்தோ ஒரு கை வண்டி பிடிச்சிட்டு வந்தான். சமையல் சாமான், பெட்டி படுக்கைகளைத் தூக்கிப் போட்டுக்கிட்டாங்க. புறப்பட்டுப் போயிட்டாங்க.''

''அந்த மாயப்பன் எங்கே வேலை பார்க்கிறார்? என்ன செய்கிறார்?'' என்று சுதீர் விசாரித்தான்.

''யாருக்குங்க தெரியும்? மாயப்பன்கிற பெயரே நீங்க சொல்லித்தான் தெரியும். குடிகாரன். ரௌடி. யாரும் அவன் கைலே பேச்சு வைச்சுக்க மாட்டாங்க'' என்று பதில் கிடைத்தது. அக்கம் பக்கத்தில் மற்றவர்களும் அதையே சொன்னார்கள்.

ஏமாற்றத்துடன் ஸ்கூட்டரைக் கிளப்பினான் சுதீர்.

''நேற்று அவன் மனைவி நம்முடன் பேசியது மாயப்பனுக்கு எப்படியோ தெரிந்திருக்க வேண்டும்'' என்றாள் பாலா போகும் வழியில்.

''இருக்கலாம்'' என்று மட்டுமே சொன்னான் சுதீர்.

அவள் பயந்தபடிதான் ஆயிற்று. சுதீர் அவளை வீட்டில் இறக்கிவிட்டுச் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் டெலிபோன் மணி அடித்தது. நல்ல காலம் ஜனார்த்தனம் அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்தார். பாலா தான் போனை எடுத்தாள்.

''என்னம்மா. சௌக்கியமாயிருக்கியா?'' என்ற மாயப்பனின் குரல்.

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை.

''பாவம், நீ இன்னிக் காலையிலே வந்திருப்பே. வரவேற்கிறதுக்கு நானும் இல்லை. என் சம்சாரமும் இல்லை. மன்னிச்சுக்கமா'' என்றான் அவன் கேலியான குரலில். ''ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைச்சுக்க. பம்பாய் போனாலும் சரி, லண்டனுக்கே போனாலும் சரி, என் பெண்டாட்டி எங்கே போகிறாள், என்ன செய்கிறாள், யாரிடம் பேசுகிறாள் என்பதையெல்லாம் கண்காணிக்க ஆள் வச்சிட்டுத்தான் போவேன்.''

பாலாவுக்கு அடி வயிற்றில் பிசைந்தெடுத்தது. ஒரு பயம் உருவாகித் தொண்டையில் அடைத்துக்கொண்டது. அப்பா வந்து விடப் போகிறாரே என்று ஒரு முறை பார்த்துக் கொண்டுவிட்டு, ''அவளை... உன் மனைவியை...'' என்றாள்...

''பயப்படாதே, இன்னும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இனிமேல் அவள் உன்னிடம் பேச வருவது சந்தேகம் தான். தினம் இரண்டு வேளையும் சாப்பாட்டோடு தூக்க மாத்திரை கொடுத்து வருகிறேன். ஹெவி டோஸ். இருபத்து

நாலு மணிநேரம் கண்ணைச் செருகிக்கிட்டுப் படுத்துக் கிடப்பாள். என்னைக்காவது ஒரு நாள், செருகின கண் திறக்காமலே போனாலும் போயிடும். அதற்காக வருத்தப் பட்டுக்கிட்டு உட்கார்ந்திராதே. நான் கொடுத்திருக்கிற வேலையைத் தொடர்ந்து கவனி.'' மாயப்பன் டக்கென்று போனை வைத்துவிட்டான்.

முகத்தில் முத்து முத்தாகத் துளித்திருந்த வியர்வையைப் புடவைத் தலைப்பினால் அவள் ஒற்றிக் கொண்டாள். நெஞ்சின் பதைப்பு அடங்க நெடு நேரமாயிற்று.

அன்று மாலை அப்பா வெளியே போயிருந்த போது வழக்கம் போல் சுதீர் வந்தான். போன் விஷயத்தைச் சொன்னாள்.

''அவன் எதற்கும் துணிந்தவனாகத்தான் இருப்பான்'' என்ற சுதீர், ''சரி, நாம் வழக்கப்படி தேட ஆரம்பிக்கலாம்'' என்றான்.

இருவருமாக ஜனார்த்தனத்தின் அறையைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து, அடுத்த நோட்டுப் புத்தகத்தை எடுத்தார்கள். அது...

## தூக்கிலிருந்து தப்ப வழி

**மு**ப்பது வருடங்களுக்கு முன்பு ஆஜ்மீர் சிறையில் இரண்டு பேர் தூக்குத் தண்டனைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருவன் பெயர் ஹேம்ராஜ்.

மற்றவன் பெயர் உமத்கான்.

இரண்டு பேருமே முதல் நம்பர் கொலைகாரர்கள். ஹேம்ராஜ், ஒரு பணக்காரனின் குழந்தையைக் கடத்தி வந்து வைத்துக் கொண்டு பணம் கொடுத்தால் தான் குழந்தை உயிரோடு கிடைக்கும் என்று மிரட்டினான். அந்தப் பணக்காரன் வெகு சாமர்த்தியமாகப் போலீஸ் உதவியுடன் தன் குழந்தையை மீட்டு வந்து விட்டான்.

ஆத்திரமும் ஏமாற்றமுமடைந்த ஹேம்ராஜ், பிஜய் நகரின் கடைத் தெருவில், நட்ட நடுப் பகலில் எல்லோர் முன்னிலையிலும் அவனைச் சுட்டுக் கொலை செய்தான். அங்கேயே பிடிபட்டு, வழக்குத் தொடரப்பட்டு, முறையாக விசாரிக்கப்பட்டுத் தூக்குத் தண்டனை பெற்றவன்.

உமத்கானின் கதை வேறு விதம்.

காசு வைத்துச் சீட்டாடும் போது தோழர்களுடன் சண்டை வந்தது. ஒருவனை பிச்சுவாவால் குத்திக் கொலை செய்து விட்டான். அவனுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுப்ரீம் கோர்ட் வரை அப்பீல் போய், இருவருக்குமே தண்டனை ருசுவாகி விட்டது. மன்னிப்புக் கிடையாதென்று அறிவித்து விட்டார்கள்.

ஹேம்ராஜும், உமத்கானும் இந்த இடைக்காலத்தில் நெருங்கிய சினேகிதர்களாகி விட்டார்கள். தனியே பேச நேரம் கிடைத்த போது, ''நாம் இரண்டு பேரும் சேர்ந்து தப்பியோட முயற்சி பண்ணினால் என்ன?'' என்றான் ஹேம்ராஜ்.

''எனக்கும் ஆசைதான். ஆனால் எப்படி அதை நடத்துவது?'' என்றான் உமத்கான் பயத்துடன்.

''நான் கொஞ்சம் கொஞ்சமாய் யோசனை பண்ணி வைத்திருக்கிறேன். கவலைப்படாதே!'' என்று தைரியமளித்தான் ஹேம்ராஜ்.

தூக்குத் தண்டனைக் கைதிகளுக்காக உள்ள அந்த பிளாக்கில் மூன்று தனித்தனி அறைகள் வரிசையாக இருந்தன. மூன்றுக்கும் பொதுவான ஒருவெராந்தா உண்டு. ஒவ்வொரு அறையும் தனித் தனிக் கதவும் பூட்டும் கொண்டவை. வெராந்தாவுக்கும் தடுப்புச் சுவர் உண்டு. அதன் ஒரு கோடியில் ஒரு கதவு இருந்தது. வெராந்தா கதவுக்கு வெளியே கார்டுகளின் அறை. ஒரு தலைமை வார்டரும் நாலு சாதா வார்டர்களும் தூக்குத் தண்டனைக் கைதிகளைக் காவல் காத்து வந்தார்கள். பாரா முறை போட்டு, ஒவ்வொரு ட்யூட்டி நேரத்துக்கும் ஒரு ஸெண்ட்ரி அறைகளுக்கு வெளியே, ஆனால் வெராந்தாவுக்கு உள்ளே, காவல் இருப்பான்.

மூன்று அறைகளுள் முதல் அறையில் உமத்கான் இருந்தான். இரண்டாம் அறையில் ஹேம்ராஜ் இருந்தான். மூன்றாவது அறையை இருவருக்கும் பொதுவாக மல ஜலம் கழிக்கக் கொடுத்திருந்தார்கள். ஒவ்வொரு அறையும் நீண்ட பெரிய குறுக்குக் கம்பிகள் போட்ட கதவுடன் இருக்கும். உள்ளே கைதியின் படுக்கை பாராக் காவலாளியின் முழுப் பார்வைக்கு நன்கு புலப்படும்.

தினம் காலையில் ஒரு மணி நேரமும் சாயந்தரம் ஒரு மணி நேரமும் இருவரும் வெராந்தாவுக்கு வெளியே உலாத்த அனுமதிக்கப்படுவார்கள். மலஜலம் கழிக்கச் சென்றாலன்றி மற்ற நேரத்தில் ஹேம்ராஜையும் உமத்கானையும் கை விலங்கு போட்டுத்தான் வெளியே கொண்டு வருவார்கள். இருவரையும் சேர்ந்தாற்போல் வெளியே அனுமதிக்க மாட்டார்கள். ஒருவன் வெளியே போகும்போது மற்றவன் அறைக்குள் கிடப்பான். அவன் மீது ஒரு கண் வைத்தபடி இருப்பான் பாரா ஆள்.

எப்படியும் ஜெயில் கம்பியை உடைத்துக் கொண்டு தப்பி விடுவது என்று ஹேம்ராஜ்தான் முதலில் தீர்மானித்தான். அந்தக் காரியத்துக்குத் துணிச்சல், பொறுமை, திறமை எல்லாம் தேவைப்பட்டன. அவ்வளவும் ஹேம்ராஜிடம் இருந்தன.

''எப்படியும் தூக்கில் சாகத்தான் போகிறோம். இப்படி ஒரு முயற்சி பண்ணிப் பார்ப்போமே? ஜெயித்தால் சுதந்திரம். தோற்றால் மரணம்'' என்று உமத்கானுக்குச் சொல்லிக் கொடுத்தான்.

ஹேம்ராஜ் கொடுத்த தைரியத்தில் உமத்கான் வேலை செய்தான். இரண்டு மூன்று மாதங்களில் தூக்குப் போட்டு விடுவது நிச்சயம் அதற்குள் ஏதாவது முயற்சி செய்தால் தான் உண்டு என்று இருவருக்கும் புரிந்திருந்தது.

ஹேம்ராஜுக்கு உறவினரோ நண்பரோ கிடையாது. அப்படியே ஒருத்தர் இரண்டு பேர் இருந்தாலும் அவனை அவர்கள் பார்க்க வருவதில்லை. உமத்கான் விஷயம் அப்படியில்லை. நண்பர்கள் நிறைய இருந்தார்கள். மனைவியும் அடிக்கடி அவனைப் பார்க்க வந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் தனக்கு ஒரு சின்ன ரம்பம் வேண்டுமென்று ரகசியமாகத் தெரிவித்தான். முதலில் அவள் பயந்து மறுத்தாள். இருந்தாலும் கணவனின் உயிரைக் காப் பாற்றுவதில் அவளுக்கு ஆசை இருந்தது.

''எனக்குப் பயமா இருக்குதுங்க'' என்றாள்.

''நான் தப்பி வந்துவிட்டால் எல்லாம் சரியாகி விடும். என் சினேகிதன் சிக்கந்தர் கடைத் தெருவில் இரும்புப் பட்டறையில் வேலை செய்கிறான். அவனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லு. எப்படிப்பட்ட ரம்பம் வேண்டு

மென்று அவனுக்குத் தெரியும். தயார் செய்து கொடுப்பான்'' என்று தைரியமளித்தான் உமத்கான்.

அவள் அதே போல் சிக்கந்தர் மூலம் ஒரு சிறு ரம்பம் வாங்கிக் கொண்டாள். அடுத்த முறை அவனைச் சந்திக்க வந்த போது புடவைத் தலைப்பில் மறைத்து எடுத்து வந்து, அலட்சியமாக நின்றிருந்த காவல்காரனின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுக் கணவனிடம் சேர்ப்பித்து விட்டாள்.

அது ஒரு சின்ன ரம்பம்தான். ஐந்தங்குல நீளம்தான் இருந்தது. ஒரு பக்கம் மட்டும் கூர்மையான பற்கள் இருந்தன.

''இவ்வளவு சின்ன ரம்பத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?'' என்று உமத்கானுக்குச் சந்தேகம். ஆனால் ஹேம்ராஜுக்கு நம்பிக்கை. ''இது தான் நான் விரும்பிய சைஸ். பார்த்துக் கொண்டேயிரு'' என்றான்.

''ஸென்ட்ரி இருபத்து நாலு மணி நேரமும் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். ஜெயில் கம்பி ரொம்பப் பருமன். இந்தச் சின்ன ரம்பத்தினால் அறுக்க முடியுமா?''

''முடியும்'' என்று மறுபடியும் அடித்துச் சொன்னான் ஹேம்ராஜ்.

''அறுக்கிறபோது சர்சர்ரென்று சத்தம் கேட்குமே?''

''நீ பேசாமலிரு. நான் வழி சொல்லித் தருகிறேன். அதன் படி செய்தாயானால் போதும்'' என்ற ஹேம்ராஜ் தன் வழியை விளக்கினான்.

ஒவ்வொரு அறையிலும் மிக உயரத்தில் காற்றுக்காகச் சிறிய ஜன்னல் - வென்ட்டிலேட்டர் இருந்தது. அதுவும் குறுக்குக் கம்பிகள் போடப்பட்டவைதான். அதிலே ஒரு கம்பியை அறுத்தால் அதன் வழியை வெளியே தப்பி, கட்டிடத்தின் கூரைக்குத் தாவலாம். அதன் மீதாகவே ஓடி,

சுவரேறிக் குதிக்கலாம். ஆனால் அது புறச்சுவர்தான். அதன்பிறகு இன்னொரு சுவர். ஜெயிலைச் சுற்றினாற்போன்ற மதில் சுவர் இருக்கிறது. அதையும் கடந்தாக வேண்டும்.

வென்ட்டிலேட்டரில் ஒரு கம்பியை அறுப்பது என்று ஹேம்ராஜூம் உமத்கானும் முடிவு செய்தார்கள். ஒரு கம்பியை அறுத்தால் முக்காலடிக்கு ஓரடி இடைவெளி கிடைக்கும். அதன் வழியே உடம்பைத் திணித்துக் கொண்டு வெளியேறி விட முடியும். ஆனால் வென்ட்டிலேட்டர் அவ்வளவு உயரத்தில் இருக்கிறதே? அதை எப்படி எட்டுவது? யாரும் கவனிக்காமல் எப்படிக் கம்பியை அறுப்பது?

''இந்தச் சிறையைக் கட்டினவர்கள் சுத்த முட்டாள்கள்'' என்றான் ஹேம்ராஜ். ''வென்ட்டிலேட்டர் எங்கே இருக்கிறது பார். அறைக் கதவுக்கு நேர் மேலே இருக்கிறது. சரி, கதவின் அமைப்பையும் கவனி.''

உமத்கான் கவனித்தான்; அவனுக்குச் சட்டென்று புரியவில்லை.

''விளங்கவில்லையா? கதவை உள்பக்கமாகவும் திறக்கலாம். வெளிப்பக்கமாகவும் திறக்கலாம். உள்புறம் திறந்து கொண்டாய் என்று வைத்துக் கொள், அதுவே ஏணி மாதிரி உபயோகப்படும். அதன் முனையில் ஏறி நின்று கொண்டாயானால் போதும். வென்ட்டிலேட்டர் கம்பி உன் கைக்குச் சுலபமாய் எட்டும்'' என்றான் ஹேம்ராஜ்.

உமத்கான் அவன் சொன்னதைப் புரிந்துகொண்டான். சிறைக் கதவின் அமைப்பை ஒரு முறை பார்த்ததும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று தோன்றியது. வென்ட்டிலேட்டர் மட்டும் சிறைக்கதவுக்கு நேர் மேலே இல்லாமல், எதிர்ப்புறத்தில் இருந்திருந்தால்... எதுவும் பலிக்காது! முதலாவது, வென்ட்டிலேட்டர் ஜன்னலை எட்ட

முடியாது. அப்படியே எட்டினாலும் நேர் எதிரே வெராந்தாவில் இருக்கும் பாராக்காரன் ஒரே வினாடியில் அவன் செயலைக் கவனித்திருப்பான்.

மரண தண்டனை பெற்று, தூக்கு மேடைக்காக காத்திருக்கும் கைதிகள் என்பதால் அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. முக்கியமாகத் தங்கள் இஷ்டப்படி இறைவனை வழிபடப் பரிபூரண சுதந்திரம் தந்திருந்தார்கள். ஹேம்ராஜ் தான் படிப்பதற்கென்று ஒரு ராமாயணப் புத்தகம் வாங்கி வைத்திருந்தான். தடி அட்டை போட்ட பருமனான புத்தகம். அதற்குள் தன் சிறிய ரம்பத்தை ஒளித்து வைத்துக் கொள்ள வசதியாயிருந்தது. புத்தகத்தின் முதுகுப் பக்கத்தில் பைண்டிங் செய்யப்பட்ட இடுக்கில் அதை மறைத்திருந்தான். தினசரி அறையைச் சோதனை போடுவதற்காக வருகிறவர்களுக்கு அது கண்ணில் படவில்லை.

தினம் தினம் சில நிமிடங்கள் வென்ட்டிலேட்டர் கம்பியை அறுப்பதற்குச் செலவழிப்பதென்று தீர்மானித் தார்கள். கிடைத்த ஒவ்வொரு வினாடியையும் புத்தி சாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதற்கு வழியும் ஹேம்ராஜ் சொல்லித் தந்தான்.

''காலை வேளைகளில் கொஞ்சநேரம் உன்னையாவது என்னையாவது உலாத்தப்போவதற்காக வெளியே அனுமதிக் கிறார்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''அதே சமயம், மல ஜலம் கழிப்பதற்காக மூன்றாவது அறைக்குப் போவது என்று நீயோ அல்லது நானோ வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உலாத்தப் போகிறவன்

அந்தக் கிழட்டு வார்டரிடம் பேச்சுக் கொடுத்துப் பிடித்துக் கொண்டால், மற்றவன், அறைக் கதவு திறந்திருப்பதால் வென்ட்டிலேட்டர் வேலையைக் கவனிக்க வேண்டும்.''

''எனக்குப் பேசவே வராது'' என்று உமத்கான் முனகினான்.

''கொலை செய்ய மட்டும் வருமாக்கும்?'' என்று அவனைத் திட்டினான் ஹேம்ராஜ். ''சரி, நாளைக் காலை நான் எப்படிப் பேச்சுக் கொடுக்கிறேன் என்று பார்த்து வைத்துக் கொள்.''

மறுநாள் இருவரும் பேசி வைத்துக் கொண்டபடி உமத்கான் இயற்கைக் கடன் கழிப்பதற்காகக் கதவைத் திறக்க வைத்தான். ஹேம்ராஜ் உலாத்திக் கொண்டே வார்டரிடம் பேசலானான். வார்டர் பெரும் சம்சாரி என்பதும் அவனுக்குத் தெரியும்.

''சலாம் சார்'' என்று கும்பிடு போட்டவன், ''என்ன சார், உங்கள் கோட்டில் இரண்டு பொத்தான் இல்லை?'' என்று பரிவோடு விசாரித்தான்.

''பிய்ந்து போச்சு. ஹூம்! சூபரிண்ட் கூடக் கோவிச்சுக்கிட்டார்'' என்றான் வார்டர்.

''வாரம் ஒரு வாட்டி வீட்டுக்குப் போகிறீர்களே? அங்கே யாரும் தைச்சுத்தர மாட்டாங்களா?'' என்று மேலும் அன்போடு விசாரித்தான் ஹேம்ராஜ்.

''அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறே? இரண்டு பேருக்கும் ஒருத்தரோடொருத்தர் சண்டை போடத் தான் நேரம் சரியாயிருக்குது.''

''இரண்டு பேரா?''

''ஆமாம். எனக்கு ரெண்டு பெண்டாட்டி'' என்று வெட்கத்துடன் ஒப்புக் கொண்டான் வார்டர்.

''இரண்டு பேரையும் ஒரே வீட்டிலா வைச்சிருக்கீங்க?''

''ஆமாம்.''

''மகா டேஞ்சராச்சுதே! இரண்டு பேரும் சேர்ந்து ஒரு நாள் உங்களை மர்டர் பண்ணிடப் போறாங்க!'' என்று சொல்லிவிட்டு வேண்டுமென்றே ஹோஹ்ஹோவென்று சிரித்தான் ஹேம்ராஜ். அவனுடன் சேர்ந்து வார்டரும் பலமாகச் சிரித்தான்.

சிரிப்பு அடங்கியதும் ஹேம்ராஜ். ''நான் கூடத்தான் இரண்டு இல்லை - மூன்று பெண்டாட்டி வைச்சுக் கிட்டிருந்தேன்'' என்றான்.

''ஐயோ! எப்படிச் சமாளிச்சே?''

''உங்களைப் போலச் செய்வேனா? ஒருத்தி இருப்பது இன்னொருத்திக்குத் தெரியாது. மூன்று பேரையும் தனித்தனி இடத்திலே வைச்சிருந்தேன்'' என்று மறுபடி ஹேம்ராஜ் பலமாகச் சிரிக்க, வார்டரும் சிரித்தான்.

''ஆனால் ஒரு நாள் ராவுலே வராமல் இருந்து விடுகிறேன்னு ஒரு பெண்டாட்டிக்குச் சந்தேகம் வந்திட்டுது. என்னைக் கண்காணிக்க ஆரம்பிச்சிட்டாள். ஒரு நாள் என் மூணாவது பெண்டாட்டியோடு படுத்திட்டிருக்கேன், தடதடன்னு கதவைத் தட்டினாங்க யாரோ. கதவைத் திறந்தால்...'' வார்டர் சிரித்துக் கொண்டே, ''இன்னொரு பெண்டாட்டி வந்து நிற்கிறாளாக்கும்?'' என்றான்.

''ஒருத்தி இல்லை! இரண்டு பேர். மற்றவளையும் கூட்டிட்டு வந்திட்டாள். மூணாமவளுக்கு விஷயம் தெரிஞ்சு

போச்சு. மூன்று பெண்டாட்டியுமாய்ச் சேர்ந்து என்னைத் துடைப்பக் கட்டையால் அடிச்சிருக்காங்க, பாருங்க! துடைப்பமே பிய்ஞ்சு போச்சு!'' என்று ஹேம்ராஜ் மறுபடி உரத்த குரலில் நகைக்க அதற்கு மேல் பெரிதாய்ச் சிரித்தான் வார்டர்.

''ஆனால் மூணு பெண்டாட்டிக்கும் என் மேலே பிரியம். இப்ப தூக்குப் போடப் போறாங்கன்னு தெரிஞ்சதும் தினம் ஒருத்தி மாற்றி ஒருத்தி வந்து வந்து என்னைப் பார்த்து அழுவுறாங்க'' என்று சொல்லி முடித்தான் ஹேம்ராஜ்.

இந்தச் சில நிமிட சம்பாஷணையையும், வார்டரின் கவனம் வேறு திசையில் திரும்பியிருப்பதையும் உமத்கான் கெட்டிக்காரத்தனமாய்ப் பயன்படுத்திக் கொண்டான். இயற்கைக் கடனுக்குச் சென்று வருவதற்காக அவன் அறைக் கதவு திறந்திருந்தது. அந்தக் கம்பிக் கதவின் மேல் ஏறி நின்றுகொண்டு, ஹேம்ராஜ் இரவில் கொடுத்திருந்த ரம்பத்தினால் வெண்ட்டிலேட்டர் கம்பியை மெல்ல மெல்ல அறுக்க ஆரம்பித்தான். அந்தச் சத்தம் கேட்காமலிருக்கத்தான் ஹேம்ராஜ் தானும் உரக்கச் சிரித்து வார்டரையும் சிரிக்க வைத்திருந்தான். அத்துடன் கம்பியின் மீது சிறிது தண்ணீரும் தெளித்துக் கொண்டான். அதுவும் ஹேம்ராஜின் யோசனைப் படி.

அடுத்த நாள் உமத்கான் வெளியே உலாத்தச் சென்று, ஹேம்ராஜிடம் பாடம் கற்றிருந்தபடி, வார்டரிடம் வேடிக்கையும் விளையாட்டுமாய்ப் பேசினான். உரக்கச் சிரித்தான். அதே நேரத்தில் ஹேம்ராஜும் தனது அறை வெண்ட்டிலேட்டர் கம்பியை அறுக்கத்தொடங்கினான்.

தினம் மயிரிழைதான். ஆனால் வெகு பொறுமையாகத் தினம் கொஞ்சம் அறுத்தார்கள். மூன்று மாத காலத்துக்குள் இவன் அறையில் ஒரு கம்பியும், அவன் அறையில் ஒரு

கம்பியும் அகற்றியாகிவிட்டது. வெளியேறிச் செல்வதற் கான இடைவெளி கிடைத்து விட்டது. ஆனால் மூளியான இடம் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, கொஞ்சம் தார் எடுத்து வந்து அந்தந்த இடத்தில் கம்பியை மேலோடு ஒட்டினாற்போல் வைத்தார்கள்.

முதல் கட்டம் முடிந்தது.

ஆனால் வெண்ட்டிலேட்டர் வழியே தப்பினால் மட்டும் போதாதே? சிறையின் வெளிச்சுவரையும் தாண்டிச் சென்றால் அல்லவா சுதந்திரம் அடைய முடியும்?

தூக்குத் தண்டனை பெறுவதற்குப் பல காலம் முன்பிருந்தே, வழக்கு விசாரணை நடந்த காலத்திலிருந்தே அவர்கள் அந்தச் சிறையில்தான் இருந்து வந்தார்கள். ஆகவே சிறையின் அமைப்பு, இடங்கள் எல்லாம் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தன. தப்புவதென்று தீர்மானித்த பிறகு இன்னும் நன்றாகக் கவனித்து மனப்பாடம் பண்ணி வைத்துக் கொண்டார்கள்.

அவர்களுடைய அறைகள் இருந்த இடத்திலிருந்து 50 கெஜ தூரத்தில் ஒரு கேட் இருந்தது. அதன் வழியாக நுழைந்தால் தூக்கு மேடை அமைந்திருந்த முற்றத்தை அடையலாம். அந்த முற்றத்தின் மறுபுறம் இன்னொரு கேட். அதைத் திறந்தால் வெளி உலகம்! சுதந்திரம்! விடுதலை!

தூக்கு மேடை முற்றத்துக்குச் செல்லும் கேட்டைத் திறக்க வேண்டுமானால், அதன் பூட்டை உடைக்க வேண்டும். அதற்கு நீண்ட இரும்புத் தடி ஒன்று வேண்டும். அதை நெம்பு கோலாகப் பயன்படுத்தி, தாழ்ப்பாளைப் பெயர்த்து விடலாம்.

நீண்ட இரும்புத் தடிக்கு எங்கே போவது?

# 15

''தூக்கு மேடை முற்றத்துக்குச் செல்லும் வாசலைத் திறக்க, அதன் பூட்டை உடைக்க நிச்சயமாய் நமக்கு ஒரு நீளமான இரும்புத்தடி வேண்டும். அதற்கு எங்கே போவது?'' என்று உமத்கான் கவலைப்பட்டான்.

ஹேம்ராஜின் மூளை மறுபடி வேகமாக வேலை செய்தது. ''உனக்கு உன் மத சம்பந்தமான பாட்டு, பஜனை ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டான்.

''எனக்கு உமத்கான் என்று பெயரே தவிர நான் இஸ்லாமியனா இல்லையா என்று கூடத் தெரியாது'' என்றான் தோழன். ''சரி, அதைப்பற்றி இப்போது என்ன? பாட்டுப் பாடினால் சாமி இரும்புத்தடி கொண்டு வந்து கொடுக்குமா?''

''சாமி எதுவுமே கொடுக்காது. நாம்தான் எல்லாவற்றையும் செய்துக்கணும்'' என்றான் ஹேம்ராஜ். ''நம்ம அறைக் கதவிலிருந்தே ஒரு குறுக்குக் கம்பியை அறுத்து எடுத்து விடலாம். பயப்படாமல் இரு.''

உமத்கான் வாயைப் பிளந்தான். ''அதெப்படி? மேலே வெண்ட்டிலேட்டர் கம்பியை அறுத்தபோது நம்மை எவனும் கவனிக்கவில்லை. அறைக்கதவுக் கம்பியை அறுப்ப தென்றால், நேர் எதிரில் கொட்டக் 'கொட்ட வார்டர் பார்த்துவிட்டு உட்கார்ந்திருப்பானே?''

''அவன் கண்ணில் மண்ணைத் தூவத்தான் உனக்குப் பாடத் தெரியுமா என்று கேட்டேன். பரவாயில்லை. நான் பாடுகிற போதெல்லாம் நீயும் சேர்ந்துக்க. நான் மற்றதைக் கவனித்துக் கொள்கிறேன். நான் பாட ஆரம்பிக்கிறப்போ கதவோடு கதவாய் மூஞ்சியை வைத்துக் கொண்டு நிற்பேன்.

வெளியே பார்த்த மாதிரி இரைந்து பாடுவேன். அந்த மாதிரி நீயும் செய். வார்டர் வந்து கேட்டால் தகுந்தபடி சொல்லிக்க.''

''சரி, கதவுக் கம்பியை யார் அறுப்பது?''

''அதைத்தான் நான் செய்கிறேன் என்றேனே? அறுக்கற சத்தத்தை அமுக்கத்தான் நம்ம பாட்டு'' என்றான் ஹேம்ராஜ்.

அவன் கொஞ்ச நாள் சைக்கிள் கடை நடத்தியவன். ஆகவே இந்த மாதிரி மெகானிக்கல் சமாசாரங்கள் ஓரளவு அவனுக்குத் தெரியும்.

அன்று மாலை அவன் கதவுக் கம்பியில் முகத்தைப் பதித்தவாறு பெரும் குரலில், ''ஓம் ஜெகதீச ஹரே!'' என்ற பஜனைப் பாட்டைப் பாடத் தொடங்கினான். அதே சமயம் கை இரண்டையும் சிறைக் கம்பியின் மேல் பிடித்துக்கொண்டு ஒரு கையால் மேல்புறத்தை அறுக்கத் தொடங்கினான். அதே சமயம் உமத்கானும் சேர்ந்து கொண்டு பாட ஆரம்பித்தான்.

அவனுக்குச் சகிக்க முடியாத சாரீரம். உரத்த தொண்டை வேறு. உமத்கானும் சேர்ந்து கொள்ளவே வார்டருக்கு அந்தச் சத்தம் சகிக்கவில்லை.

''டேய், டேய்! நிறுத்தப்பா!'' என்று கத்திக் கொண்டே ஹேம்ராஜிடம் வந்தான். ''என்னப்பா பக்தி பிய்த்துக்கொண்டு போகுது திடீர்னு?''

ரம்பத்தை மறைத்துக் கொண்டு, ''தூக்கிலே என்னை இன்னிக்குப் போடப் போறீங்களோ, நாளைக்குப் போடப் போறீங்களோ? போகிற வழிக்குப் புண்ணியம் சேர்த்துக்கிறது கூடவா உன் கண்ணை உறுத்துது?'' என்றான் ஹேம்ராஜ்.

அவன் சொல்வதும் நியாயம்தான் என்று திரும்பிய வார்டர் உமத்கானிடம் சென்றான். ''ஏம்பா, நீ முஸ்லிமில்லே? ஓம் ஜெகதீச ஹரேன்னு அந்த ஆசாமி பாடினால் நீ ஏன் சேர்ந்துக்கிறே?'' என்றான்.

உமத்கான் பெரிசாய் இளித்தான், ''சாகப் போகிற சமயத்தில், சாதி ஏது, மதம் ஏதுங்கோ? எல்லோரும் ஒரே ஆண்டவனிடம்தான் போகப் போகிறோம். எனக்கு எந்தப் பாட்டும் தெரியாது. அதனாலே அவன் பாடறதையே நானும் பாடிட்டுப் போறேன்'' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

''எப்படியோ தொலைங்க'' என்று விட்டுவிட்டுப் போய்விட்டான் வார்டர்.

சில நாட்களுக்கு இப்படி வேலை நடந்தது. ஆனால் ஹேம்ராஜுக்குத் தெரியும். தினம் தினம் இப்படிச் சேர்ந்தாற் போல் பாடினால் எந்த மடையனுக்கும் சந்தேகம் ஏற்படக்கூடும் என்று. ஆகையால் இன்னொரு திட்டமும் ஏற்பாடு செய்து கொண்டான்.

ட்யூட்டிக்கு வரும் வார்டர்களில் யார் எப்படிப்பட்டவர் என்பதைக் கவனித்தான். அவர்களில் ஒருவன் எழுதப் படிக்கத் தெரியாதவன். ஆனால் படிக்க வேண்டும் என்ற ஆசை கொண்டவன் என்று தெரிந்தது. உமத்கான் கொஞ்சம் படித்தவன். இந்தியும் உருதும் தெரிந்தவன். அவனை அந்த வார்டருக்கு இந்தி, உருது பாடம் சொல்லிக் கொடுக்கும்படி தூண்டி விட்டான்.

உமத்கான் அவனுக்குச் சிலேட்டுப் பலகையில் எழுதக் கற்றுக் கொடுக்கலானான். 'அ, ஆ' என்று உரத்த குரலில் சொல்லி, அவனையும் சொல்லச் சொல்லி, அவனுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டான்.

அந்தச் சமயங்களில் ஹேம்ராஜ் ரொம்பச் சாதுபோலத் தன் சிறைக் கதவருகே உட்கார்ந்து கொண்டு, கம்பியின் அடிப்பக்கத்தை அறுக்கலானான். இப்படி ஒரு நாள் பாட்டிலும் ஒருநாள் இந்திப் பாடத்திலும் சத்தம்போட்டுப் போட்டு ஹேம்ராஜின் வேலை வெளியே தெரியாதவாறு இரண்டு பேரும் பார்த்துக்கொண்டார்கள்.

தினம் தங்கள் 'தெய்வ வழிபாட்டுக்கு' என்று பூ பழம் ஊதுவத்தி முதலியன வாங்கிக்கொண்டார்கள் இருவரும். அட்டைப் பெட்டிகளில் ஊதுவத்தி வந்தது. அந்த அட்டைகளையும், ஊதுவத்தி சுற்றிய காகிதங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து வந்தான் ஹேம்ராஜ். கைவேலையில் வெகுகெட்டிக்காரன் அவன். அந்த அட்டைகளையும் காகிதங்களையும் கொண்டு, தான் சிறைக்கதவில் எந்தக் கம்பியை அறுக்கிறானோ அதே அளவுக்கு, அதே அமைப்புக்கு ஒரு பொம்மைக் கம்பி தயாரித்தான். ஜெயில் சிப்பந்திகளைக் கேட்டுப் பசை வாங்கி அட்டைகளையும் காகிதங்களையும் ஒட்டி அந்தப் பொய்க்கம்பியை உருவாக்கினான். தூக்கிலே சாகப்போகிற ஆள் பசை ஏன் கேட்கிறான் என்று எந்தச் சிப்பந்தியும் கேட்கவில்லை. அல்லது, சாகப் போகிறவன் என்ன கேட்டாலும் கொடுத்துக் தொலைப்போம் என்று எண்ணினார்களோ என்னவோ! ஜெயில் சுவர்களில் சுகாதாரத்துக்காக வேண்டி கெட்டியாகத் தார், அடித்திருந்தார்கள். அந்தத் தாரைச் சுரண்டி, அட்டைக் கம்பியின் மீது பூசிக் கறுப்பாக்கினான். அசல் கம்பியை அறுத்த இடத்தில் அந்த அட்டைக் கம்பியை வைத்தான். அதை யாரும் உற்றுக் கவனிக்காமல் அவர்கள் பார்வையைத் திருப்பவேண்டி இன்னொரு தந்திரமும் செய்தான். தான் கும்பிடுவதற்கு ஒரு பரமசிவன் படம் வேண்டுமென்று

கேட்டுவரவழைத்துக் கொண்டான். அதை அந்தக் கம்பியின் மேல் பகுதியில் மாட்டி வைத்தான். வருகிற வார்டர்கள் அதைப் பார்த்ததும் கன்னத்தில் போட்டுக் கொள்வார்களே தவிர மற்றதைக் கவனிக்க மாட்டார்கள்.

எந்தத் தினத்தில் தப்பியோடுவது என்பதைப் பற்றி அவர்கள் அதுவரை தீர்மானிக்காமல் இருந்தார்கள். ஒரு நாள் உமத்கான் வெளியே உலாத்திக் கொண்டிருந்தபோது இரண்டு சிறை அதிகாரிகள் பேசிக் கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது.

''உங்களுக்குத் தெரியுமோ? உமத்கான், ஹேம்ராஜ் இரண்டு பேரும் கொடுத்திருந்த கருணை மனு நிராகரிக்கப் பட்டு விட்டதாம்.''

''அடப் பாவமே!''

''அனேகமாய் அடுத்த வாரத்தில் ஒரு நாள் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டியிருக்கும்.''

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும் உமத்கானுக்கு உடம்பு நடுங்கிற்று. மெல்ல ஹேம்ராஜுக்குத் தெரிவித்தான்.

''இன்றிலிருந்து மூன்றாம் நாள் இருவரும் தப்பிவிட வேண்டியதுதான்'' என்றான் ஹேம்ராஜ்.

அப்படி அவன் நாள் குறித்ததற்குக் காரணம் இருந்தது. எந்தெந்த ஸென்ட்ரி எப்போது வருகிறான். வருகிறவன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் கவனித்துக் கணக்குப் பண்ணியிருந்தான். ஒரு குறிப்பிட்ட ஸென்ட்ரி மிகவும் சோம்பேறி என்பதையும், தூங்கி வழிகிறவன் என்பதையும் தெரிந்து வைத்திருந்தான். அவன் பாரா ட்யூட்டி பார்க்கும் இரவு, பத்து மணி சுமாருக்குத் தப்புவது என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

ஆனால் ஒரு கஷ்டம்.

வெண்ட்டிலேட்டர் ஜன்னலை எட்ட வேண்டு மென்றால், அதற்குச் சிறைக் கதவு திறந்திருக்க வேண்டும். அதன்மேல் ஏறித்தானே வெண்ட்டிலேட்டர் வழியே வெளியே தப்ப முடியும்? இரவு பத்து மணிக்குச் சிறைக்கதவு திறந்திருக்காதே?

ஹேம்ராஜ் அதற்கும் ஒரு திட்டம் தயாரித்தான்.

அவனுக்குப் போர்த்திக்கொள்ள ஒரு துப்பட்டி கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஒன்றை முறுக்கிக் கயிறு போல் நீட்டமாகச் செய்து கொண்டான். காலை வேளையில், சிறைக் கதவு திறந்திருந்த போது, அதன் மீது ஏறிக் கொண்டான் ஹேம்ராஜ். வெண்ட்டிலேட்டரின் கம்பிகளில் துப்பட்டியின் ஒரு முனையை முடிச்சுப் போட்டுத் தொங்கவிட்டான். ஆனால் வெளியே வெராந்தாவிலிருந்து தெரியாத விதமாக, கதவுக்குக் கொஞ்சம் மேலாகவே சுருட்டி விட்டிருந்தான். அதிலிருந்து ஒரு நூல் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது. அதை இழுத்தால் போர்வைக் கயிறு அவிழ்த்து விழுமாறு செய்து கொண்டான்.

அன்று இரவு மணி பத்தாயிற்று. அவர்கள் எதிர்பார்த்த படியே அதே தூங்குமூஞ்சி வார்டர் வந்து சேர்ந்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனுடைய குறட்டைச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

ஹேம்ராஜும் உமத்கானும் முன்னாடியே பேசி வைத்திருந்தபடி, மண்பானை, துடைப்பம், துணிமணி, போர்வை முதலானவற்றை அடுக்கி வைத்தார்கள். அவைகளின் மீது ஒரு போர்வையை மூடினார்கள். வெளியிலிருந்து பாராக்காரன் பார்த்தால் கைதி போர்த்திக்

கொண்டு படுத்துத் தூங்குகிற மாதிரி தோன்றும்படி செய்தார்கள்.

முடிந்து சுருட்டி வைத்திருந்த போர்வையைக் கீழே இழுத்து, அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினான் ஹேம்ராஜ். வென்ட்டிலேட்டர் வழியே வெளியே வந்தான். முடிச்சிட்டிருந்த போர்வையை அவிழ்த்து எடுத்துக் கூரையின் மீதாகவே பதுங்கிப் பதுங்கிச் சென்று அடுத்தாற்போலிருந்த உமத்கானின் அறையை அடைந்தான். அங்கிருந்து போர்வைக் கயிற்றை உள்ளே இறக்கி, வென்ட்டிலேட்டரில் மறுமுனையைக் கட்டினான். உமத்கானும் ஹேம்ராஜைப் போலவே அதைப் பிடித்துக் கொண்டு மேலேறினான். வென்ட்டிலேட்டரில் அறுத்து வைத்திருந்த கம்பியை அகற்றிவிட்டு அந்த இருட்டு வழியே வெளியே வந்தான்.

சிறையெங்கும் கும்மென்று இருட்டுப் பரவியிருந்தது. எங்காவது ஓரிடத்தில் பாராக்காரர்கள் நடமாடும் சத்தம் கேட்டது. நேரமாக ஆக அந்த ஓசையும் அடங்கி விட்டது.

உமத்கானும் ஹேம்ராஜும் பூனை போல் பதுங்கிக் கூரை மீது தவழ்ந்து தவழ்ந்து நகர்ந்தார்கள்.

## 16

திடீரென்று எங்கிருந்தோ ஒரு சத்தம் படபடவென்று கேட்டது. பாராக்காரன்தான் எவனோ விழித்துக் கொண்டு விட்டான் என்று ஹேம்ராஜும் உமத்கானும் ஒரு வினாடி நடுங்கிப் போனார்கள்.

ஒரு வெள்ளைப் பூனைதான். 'மியாவ்' என்று மெல்லிய குரல் மட்டும் கொடுத்து விட்டுப் பளபளவென்று அவர்களைத் தாண்டிக் கொண்டு ஓடியது.

பின்னர் மறுபடியும் அங்குலம் அங்குலமாக நகரத்தொடங்கினார்கள். கூரையின் முனையை அடைந்ததும் ஒரு குழாயைப் பற்றிக் கொண்டு ஓசைப்படாமல் வழுக்கியவாறு இறங்கினார்கள்.

நின்று நிதானித்தார்கள். எவரும் எதிர்ப்படுவதாகத் தெரியவில்லை. ஒருவரின் இதயத் துடிப்பு மற்றவருக்குக் கேட்கும் அளவுக்கு அவர்களுக்குள் பதைப்பும் சூழ்நிலையில் அமைதியும் பரவியிருந்தன.

'ஓடு!' என்றான் ஹேம்ராஜ்.

கால் நுனியைப் பூமியில் பதித்துக் கொண்டு, கடுகத்தனை சத்தமும் இல்லாமல் உமத்கான் முன்னே ஓடினான். பின்னே அவனைத் தொடர்ந்தான் ஹேம்ராஜ்.

தூக்குப் போடும் முற்றத்தை அடைந்தார்கள்.

முதலில் ஒரு மரக் கதவு இருந்தது. ஹேம்ராஜ் தன் அறையிலிருந்து அறுத்து எடுத்து வந்திருந்த இரும்புத் தடியினால் நெம்பி, மரக் கதவின் தாழ்ப்பாளை உடைத்தான்.

அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்றதும் இன்னொரு கதவு இருந்தது – இரும்புக் கிராதி போட்டது. அதன் பூட்டையும் ஹேம்ராஜ் தன் இரும்புத் தடியினால் உடைந்தான்.

உள்ளே நுழைந்தார்கள்.

தூக்கு மேடை அமைந்த முற்றத்திற்கு வந்தாயிற்று – திட்டமிட்டிருந்ததற்கு அணுவளவும் பிசகாமல் ஹேம்ராஜின் முதுகில் உமத்கான் தட்டிக் கொடுத்தான். ஆனால் அந்தப் பாராட்டை ஏற்றுக் கொள்ளும் நிதானத்தில் ஹேம்ராஜ் இருக்கவில்லை.

''உஷ்! இனிமேல் ஒரு வினாடி கூட நமக்கு அவகாசம் கிடையாது! வா'' என்றவன் தோழனின் கையைப் பற்றிக் கொண்டு, தூக்குமேடை முற்றத்தின் மறுபகுதிக்கு ஓடினான்.

அங்கே ஒரே ஒரு கதவுதான் – கம்பி போட்ட கதவு இருந்தது – அதைத் திறந்து விட்டால்...

விடுதலை! சுதந்திரம்!

''இனி...'' என்று ஆரம்பித்த ஹேம்ராஜ், ''அடடா!, என்று திகைத்துப் போய் நின்றான்.

அந்தக் கதவின் பூட்டு உள்பக்கம் தங்களை நோக்கி இருக்குமென்று அவன் நினைத்திருந்தான். அப்படி இல்லாமல் வெளிப்புறத்தில் பூட்டு இருந்தது.

உள்பக்கமாக இருந்தால் அதை நெம்புவதோ உடைப்பதோ ரொம்பச் சுலபமாக இருந்திருக்கும். அப்படித்தான் அவன் எதிர்பார்த்திருந்தான்.

உமத்கானும் நிலைமையைப் புரிந்து கொண்டான். ''பரவாயில்லை. கம்பி வழியே கையை வெளியே விட்டுப் பூட்டை உடைத்துப் பார்க்கலாம்'' என்றான்.

அதுதான் ஒரே வழியாகத் தோன்றியது ஹேம் ராஜுக்கும். கையை வெளியே விட்டு, இரும்புத்தடியால் பூட்டை நெம்பப் பார்த்தான். ஓசைப்படாமல் செய்ய வேண்டியிருந்தது. வினாடிகள் ஓடின. நிமிடங்கள் ஓடின. அவனுக்கு வியர்த்துக் கொட்டிற்று. கைக்கு வாகாக இல்லாததால் பூட்டை ஒன்றும் செய்ய முடியவில்லை.

''நீ நகர், நான் பார்க்கிறேன்'' என்றான் உமத்கான். அவனும் வெளியே கையை நீட்டிப் பூட்டை நெம்பப் பாடு பட்டான். நேரம் வீணானதுதான் மிச்சம். அதுவும் எப்படிப்பட்ட நேரம்! ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு ரத்தினம் போல் விலைமதிக்க முடியாத நேரம். இரவு ஓடிக்

கொண்டேயிருந்தது. சந்தர்ப்பம் - கடைசி சந்தர்ப்பம் - பாழாகிக்கொண்டேயிருந்தது. இருவருக்கும் நெஞ்சு படபடத்தது. மூச்சு வாங்கிற்று. வெள்ளமாய் வியர்வை கொட்டியது.

கிட்டத்தட்ட நள்ளிரவு நேரமாகிவிட்டது. இப்போது பாராக்காரர்கள் மாறுகிற வேளை. ட்யூட்டி மாறிப் புதிதாக வருகிற பாராக்காரன் சிறையைக் கண்காணிக்க ஒரு சுற்றுச் சுற்றுவான். தூக்கு மேடை முற்றத்துக்குச் செல்லும் இரண்டு கதவுகளும் உடைக்கப்பட்டிருப்பது நிச்சயமாய் அவன் கண்ணில் படும்.

''எனக்குப் பயமாயிருக்கப்பா, எந்த நிமிடத்திலும் நாம் பிடிபட்டு விடுவோம்'' என்றான் உமத்கான்.

அதுவரை தைரியமாயிருந்து வந்த ஹேம்ராஜுக்கும் நடுக்கம் ஏற்படலாயிற்று. இவ்வளவு திட்டமிட்டுச் செய்து. வெற்றிக்கும் சுதந்திரத்துக்கும் இத்தனை கிட்டேவந்த பிறகு, ஒரு சின்னத் தடங்கல் எல்லாவற்றையும் பாழ் பண்ணி விட்டதே!

குழப்பமும் பீதியும் அவர்களை ஆட்டிப் படைத்த அதே சமயம் ஜெயிலுக்கு வெளியே வெகு தூரத்தில் ஒரு சின்ன வெளிச்சம் தெரிந்தது. அங்கே ஒரு பாராக்காரன் நிறுத்தப்பட்டிருக்கிறான் என்று எண்ணிவிட்டார்கள். உண்மையில் அங்கே யாருமில்லை. எவனோ பீடி குடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

''உமத், திரும்பிப் போய் விடலாம் வா'' என்றான் ஹேம்ராஜ் பதற்றத்துடன்.

''ஆமாம், அதுதான் சரி. இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம். அல்லது வேறு ஏதாவது வழி கண்டு பிடிக்கலாம்'' என்றான் உமத்கான்.

இருவரும் வந்த வழியிலேயே திரும்பி ஓடினார்கள். முதலிலிருந்த ஜாக்கிரதை இப்போது இருக்கவில்லை. தோல்வியின் பயம் அவர்கள் பிடரியைப் பிடித்து உந்தியது. விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். இருவரில் உமத்கான் சிறிது ஒல்லியானவன். கிடுகிடுவென்று ஓடி, கூரை மீது ஏறி, பழைய வென்ட்டிலேட்டர் வழியே தன் அறைக்குள் குதித்து விட்டான்.

ஆனால் ஹேம்ராஜ் கொஞ்சம் குண்டு. உமத்கானுக்குச் சமமாய் ஓட முடியவில்லை. தூக்குமேடை முற்றத்துக்கு வெளியே வந்தவன் குழாயைப் பிடித்து ஏறப்போன சமயம் ஒரு பாராக்காரன் பார்த்து விட்டான். ''யாரது? நில்!'' என்று கூறியவன் ஒரே எட்டில் அவனைப் பிடித்தும் விட்டான். மறு கணமே விசிலை ஊத, சிறைமுழுதும் விழித்துக் கொண்டு விட்டது. நாலு திசையிலிருந்தும் வார்டர்கள் ஓடி வந்து ஹேம்ராஜைச் சூழ்ந்து கொண்டார்கள். கழுத்தைப் பிடித்துத் தள்ளி அவனை அவனுடைய அறையில் இழுத்துக் கொண்டுபோய்த் தள்ளினார்கள்.

தூக்குக் கைதிகளின் அறைகளுக்கு வெளியே பாராகொடுத்துக் கொண்டிருந்த ஸென்ட்ரி கண்ணைக் கசக்கிக் கொண்டான். என்ன ஏது என்று புரிந்து கொள்ளவே சில நிமிடங்கள் பிடித்தன அவனுக்கு.

''ஹேம்ராஜ் தப்பியோட்டப் பார்த்தான். பிடித்து விட்டோம். உமத்கான் என்ன பண்ணுகிறான் பார்'' என்றான் வார்டர்களில் ஒருவன்.

ஸென்ட்ரி, உமத்கானின் அறையைப் பார்த்தான். ''அவன் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறானே?'' என்று சொன்னபடி உள்ளே நுழைந்தான்.

உமத்கான் ஓரளவு புத்திசாலி. சும்மாவானும் போர்வை போட்டு மூடியிருந்த துடைப்பம், சட்டிபானை எல்லாவற்றையும் சரசரவென்று அகற்றித் தள்ளி விட்டு, அந்த இடத்தில் ரொம்பச் சாதுபோல் தூங்குவதாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

ஆனால் அவனுடைய சாமர்த்தியம் இரண்டு மூன்று வினாடிகளுக்குத்தான் பலித்தது. மேலே வென்ட்டிலேட்டரி லிருந்து தொங்கிக் கொண்டிருந்த போர்வை? அது அப்படியே இருந்தது! அதைப் பிடித்துக் கொண்டு அவன் ஏறித் தப்பிவிட்டுத் திரும்பியிருக்கிறான் என்பதைச் சந்தேக மில்லாமல் விளக்கி விட்டது.

சரியாய் 25 நாள் கழித்து ஒரு நாள் உமத்கான், ஹேம்ராஜ் இருவரும் தூக்கிலிடப்பட்டார்கள். உமத்கானின் தலையைக் கறுப்புத் துணியால் மூடிவிட்டு கழுத்தில் சுருக்கை மாட்டியபோது, 'ஒரு நிமிஷம் இருங்கள்' என்று வேண்டிக் கொண்டு, கறுப்புத் துணியை அகற்றினான் அவன். உலகத்தைச் சிறிது நேரம் பார்த்தான். தான் தப்பியோடுவதாக இருந்த திட்டமும், கைவரை எட்டிய சுதந்திரம் வாய்க்கு எட்டாமல் போனதும் அவனுக்கு நினைவு வந்தன. ஏக்கத்துடன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, கறுப்புத் துணியை மீண்டும் மாட்டிக்கொண்டான். இரண்டு நிமிடத்தில் அவன் வாழ்வு முடிந்து விட்டது.

ஹேம்ராஜ் அந்தக் காரியம்கூடச் செய்யவில்லை. தன் ஏக்கமும் ஏமாற்றமும் வெளியே தெரியாவண்ணமே உயிர் துறந்தான்.

இந்தக் கதைக்கு ஒரு விசித்திரமான பின்கதை இருக்கிறது. அது விதியின் விளையாட்டு.

ஹேம்ராஜ், உமத்கான் இருவருடைய சடலங்களும் அவர்கள் எந்தக் கதவு வழியாக வெளியேறத் திட்ட

மிட்டிருந்தார்களோ அந்தக்கதவு வழியாகவே வெளியே கொண்டு வரப்பட்டன. அப்போது காவலாளிகள் அந்தக் கதவின் பூட்டைத் திறக்க முயன்றார்கள். துருப் பிடித்திருந்ததாலோ என்னவோ சட்டென்று திறக்க இயலவில்லை. கதவின் கம்பிகளை ஒரு சங்கிலி போட்டு இழுத்துக் கட்டி, அந்தச் சங்கிலியின் முனைகளைத்தான் பூட்டால் இணைத்திருந்தார்கள்.

''பூட்டு திறக்கவில்லையென்றால் அந்தச் சங்கிலியை நெம்பு'' என்றான் காவலாளிகளில் ஒருவன்.

மற்றவன் ஓர் இரும்புத் தடியால் சங்கிலியை நெம்பினான். படக்கென்று விட்டுக் கொண்டது. சங்கிலியைக் கழற்றிவிட்டு, கதவைத் திறந்து கொண்டு இரண்டு சடலங்களையும் வெளியே எடுத்துச் சென்றார்கள்.

அன்று பூட்டை உடைத்துக் கொண்டிருக்காமல் இதேபோல் சங்கிலியை நெம்பியிருந்தால் உமத்கானும் ஹேம்ராஜூம் வெகு சுலபமாகத் தப்பியிருக்க முடியும். விதி அவர்கள் அறிவை மறைத்து விட்டது.

★★★

''**ம**டையன்ஸ்!'' என்றான் சுதீர் அந்தக் கதையை முடித்ததும்.

பாலா பதிலொன்றும் சொல்லவில்லை. இனி ஏதேனும் தொடர்பு வைத்துக் கொண்டால் மனைவியைக் கொலை செய்யவும் தயங்கப் போவதில்லை என்று மாயப்பன் டெலிபோனில் சொன்னது அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட கொலைகாரனின் குடும்பக் கதை வெளிப்பட்டே தீர வேண்டும் என்று அவளுக்கு ஆத்திரமேற்பட்டது. 'இவனுடைய குடும்பத்தினர் எப்படிப்

பட்ட கொலைகாரர்கள் என்ற கதை வெளிவந்து சந்தி சிரித்து என் கண் குளிரப்பார்க்க வேண்டும்' என்று மாயப்பனின் மனைவி மரகதம் அடிவயிற்றிலிருந்து எழுந்த கோபத்துடன் பேசியது ஞாபகம் வந்தது. அவளுக்காகவேனும் இனி ஏதும் செய்யாமல் அப்பாவின் புத்தகம் வெளி வரட்டும் என்று விட்டுவிடவேண்டும் என்ற வெறி உண்டாயிற்று. அதே சமயம் முன்னே அப்பாவின் உயிருக்கு மட்டுமே ஆபத்து என்று மிரட்டி வந்தவன், இப்போது ஓர் அப்பாவிப் பெண்ணையும் மடக்கி வைத்திருக்கிறான் என்பதை நினைத்துப் பார்த்தாள். எந்த வழியிலும் போக முடியாமல் கையைப் பிசைவதைத் தவிர வேறெதுவும் தோன்றவில்லை.

சாயந்தரத்தின் நிறம் மாறி, அறைக்குள் இருட்டுப் பரவத் தொடங்கியிருந்தது. எழுந்து விளக்கைப் போட்டாள்.

''மடையன்ஸ் என்று நான் சொன்னேனே, யாரை என்று நீ கேட்கவில்லையே!'' என்று சுதீர் மறுபடி சொன்னான்.

செயற்கையாகவாவது தனக்கு உற்சாக மூட்டிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினாள் பாலா. இல்லா விட்டால் அப்பா திரும்பி வந்ததும் 'ஏன் என்னவோ, போலிருக்கிறாய்?' என்றுதான் முதல் கேள்வி கேட்பார்.

''மடையன்ஸ் என்று ப்ளூரலில் சொன்னதால் இந்தத் தூக்குக் கைதிகளைத்தான் சொல்கிறாய் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் உன்னையே நீ வர்ணித்துக் கொள்கிறாய் என்று சொல்லியிருப்பேன்'' என்றவள் அந்த நோட்டுப் புத்தகத்தை மூடினாள்.

''ஏன் மடையன்ஸ் என்றேன் தெரியுமா? அத்தனை நாட்கள் இரும்புக் கம்பியை அறுப்பதற்கும் பூட்டை உடைப்பதற்கும் பழகிக் கொண்டிருந்தவர்கள். அதற்குப் பதில் பேசாமல் யோகாசனப் பயிற்சி செய்து வந்திருக்கலாம்.

உடம்பு எந்தக் கம்பி இடுக்கிலும் நுழையும்படி மெலியப் பண்ணியிருக்கலாம்'' என்றான் சுதீர்.

''ஆரம்பித்து விடாதே உன் யோகாசன அறுப்பை!'' என்று சிரித்தாள் பாலா. ''பெரிய யோகாசனப் பேராசிரியர் என்று ஞாபகம்! சிரசாசனம் போடக் கூட உனக்குத் தெரியாது!''

''என்ன, என்ன, என்ன?'' என்று படபடத்தான் சுதிர். ''என்க்கா சிரசாசனம் தெரியாது என்றாய்?'' சடசடவென்று சட்டை பான்ட்டைக் கழற்றினான். சுவர் ஓரத்தில் சிரசாசனம் செய்ய முயன்றான். ஆனால் உள்ளத்தில் நிதானம் இல்லாததால், பதற்றம் நிறைந்திருந்ததால், கால்கள் எழும்பி எழும்பி விழுந்தன.

''பிரமாதம் யோகாசன மாஸ்டர்!'' என்று கைதட்டிக் கொண்டே அவன் கால்களைத் தூக்கிவிட்டாள்.

''நீ ஒன்றும் எனக்கு உதவி செய்ய வேண்டாம். நாளைக்கு நானே செய்து காட்டுகிறேன்'' என்று எழுந்து கொண்டான் அவன். ''என்ன பார்க்கிறாய்?''

''ஒன்றுமில்லை'' என்றாள் அவள். அவனுடைய இளமைக்கட்டான தேகத்தை அவள் இவ்வளவு அருகில், இவ்வளவு கூர்ந்து பார்ப்பது இதுதான் முதல் தடவை. அவளுக்கு மனத்தை என்னவோ செய்தது. 'இவனைப் போய்க் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறோம்?' என்று நினைத்துக் கொண்டாள் .அந்த எண்ணம் அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''அப்பா வர இன்னும் நேரமிருக்கிறது. அடுத்த கதையையும் பார்க்கலாம்'' என்று இன்னொரு புதிய நோட்டைப் புரட்டினாள்.

**சு**லேகா அண்ட் கம்பெனியில் கடியாரம் நாலே முக்கால் காட்டியது. நாலரையுடன் ஆபீஸ் மூடி விடுவதால் பெரும்பாலானவர்கள் வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்கள்.

மானேஜர் பரமசிவானந்தம் மட்டும் தன் அறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். மின்சார விசிறி மெல்லச் சுழன்று கொண்டிருந்தது. பெரிய மேஜையின் ஒவ்வொரு டிராயராக இழுத்து இழுத்து எதையோ தேடினார். பிறகு மேஜை மீது கிடக்கும் ஃபைல் குவியல்களைத் தேடினார். இரும்பு அலமாரியைத் தட்டுத் தட்டாக ஆராய்ந்தார்.

அவர் தேடிய ஃபைலைக் காணவில்லை. பஸ்ஸரை வேகமாய் அழுத்தினார்.

பியூன் ரத்தினம் சலித்தபடி உள்ளே வந்தான். இவர் போன பிறகுதான் அவன் கிளம்ப வேண்டும். இந்த ஆள் ஏன் இப்படி ஆபீசைக் கட்டிக்கொண்டு அழுகிறார் என்று தினம் தினம் வெளியே கேட்காமல் திட்டிக் கொண்டிருப்பது வழக்கம்.

''தினேஷைக் கூப்பிடு! அவனுக்குத்தான் தெரியும் எந்த ஃபைல் எங்கே இருக்கிறதென்று!'' என்றார் மானேஜர்

''அவர் நாலரைக்கே வீட்டுக்குப் போயிட்டார்'' என்றான் ரத்தினம்.

''அப்படியானால் வண்டியை எடுத்துட்டு அவன் வீட்டுக்குப் போ. கையோட கூப்பிட்டுக் கொண்டு வா. அந்த ஜெயக்குமார் ஃபைலை இன்றைக்கே பார்த்து ஆர்டர் அனுப்பியாக வேண்டும்'' என்று இரைந்தார். மானேஜர்.

'ஆபீசை விட்டால் நேரே வீட்டுக்குப் போக மாட்டார் சார் தினேஷ். எங்காச்சும் சுத்திட்டுத்தான்...''

அவன் சிரிப்பை அடக்கிக் கொள்ள முயலுவதை மானேஜர் கவனித்தார். ''எங்கே சுத்துவான்? அவன் சம்சாரத்தைக் கேளேன், சொல்கிறாள்!''

''தினேஷுக்கு இன்னும் கண்ணாலமே ஆகலை சார்'' என்று வாய்விட்டே புன்னகையை வெளிப்படுத்தினான் பியூன். ''நீங்க பெரியவர்... உங்கக்கிட்டே அந்த மாதிரி சமாசார மெல்லாம் பேசக் கூடாது...''

மானேஜருக்குச் சுவாரஸ்யம் ஏற்பட்டது. ''சும்மா சொல்லு. ஆபீசில் யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லதுதானே?''

''பொம்பளைப் பித்து சார், அந்த ஆளுக்கு. ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சரக்கு....''

''சரி, நீ போ'' என்று அவனை அனுப்பிவிட்டார் மானேஜர். அவருக்கு வயது ஐம்பதைத் தாண்டிவிட்டது. இளமையில் அனுபவிக்கத் தவறிய சுகங்களெல்லாம் ஞாபகம் வந்து ஒரு சோகப் பெருமூச்சைக் கிளப்பின.

பியூன் திரும்பி வந்து, 'சார்.... நாளைக்கு அவர் வர்றப்போ நான் சொன்னது எதையும் சொல்லிடாதீங்க சார்'' என்றான்.

நாளைக்கு அல்ல. அதற்கு மறுநாளைக்கு அல்ல. மறு நாளைக்கு மறுநாளும் அல்ல - என்றென்றுமே தினேஷ் திரும்பி வரப் போவதில்லை என்பது அந்த மானேஜருக்கோ அந்த பியூனுக்கோ அப்போது தெரியாது.

## 17

**சா**யந்தரம் மழையிருட்டாக இருந்த வானம் யோசித்து யோசித்து மெலிந்த தூறல்களைப் போடத்தொடங்கியது. சிறிது நேரத்தில் சோவென்று மழை பிடித்துக் கொண்டது.

தினேஷின் தாய் தாயாரம்மா இருப்புக் கொள்ளாமல் தவித்தாள். வீட்டிலிருந்த விளக்குகளையெல்லாம் எரிய விட்டு, வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள். வீடு பெரியது. சோபாக்களும் மேஜைகளும் லஸ்தர் விளக்குகளுமாய் வசதியானது. சமையற்காரன், வேலைக்காரர்கள் இருந்தார்கள். வீட்டின் பின்புறத் தோட்டத்தில் மாவும் தென்னையும் கொழித்து வளர்ந்திருந்தன. தாயாரம்மா விதவையானாலும் காதில் வைரக்கம்மலும், கழுத்தில் காசுமாலையும் போட்டிருப்பவள். அவள் கணவர் பெரும் மிராசுதாராக இருந்தவராகையால் திரண்ட சொத்து இருந்தது. இன்னும் மூன்று தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடக்கூடிய அளவுக்குச் செல்வம் பொங்கும் இல்லம்.

தினேஷ் சும்மா வீட்டில் உட்கார்ந்திருப்பது கௌரவமல்ல என்று, பெயருக்காக சுலேகா அண்ட் கம்பெனியில் வேலை பார்த்து வந்தான். அங்கே கிடைக்கும் பணம் அவனுடைய சிகரெட் செலவுக்குக் கூடக் காணாது.

தினேஷின் தம்பி சோமு அவனைக் காட்டிலும் இரண்டு வயது சிறியவன். லாரி புரோக்கர், கமிஷன் ஏஜெண்ட் என்று சொல்லிக்கொண்டு அவனும் சொந்தத் தொழில் செய்து வந்தான்.

ஹாலிலிருந்த பெரிய கடியாரம் இரவு ஒன்பது மணி அடித்தது. அதற்கு எதிரொலிப்பதுபோல் வானத்தில் கடகடவென்று இடி உருட்டிக் கொண்டு ஓடியது. தாயாரம்மாளுக்கு வயிற்றைப் பிசைந்தது.

''முருகேசா! பஸ் ஸ்டாண்டில் போய்ப் பார்த்து வாயேன்'' என்று வேலைக்காரனை விரட்டினாள். அவன் குடையெடுத்துக் கொண்டு போய்ப் பார்த்துவிட்டு, ''கடைசிப் பஸ்கூட வந்திட்டு போயிட்டுது அம்மா. இனி மேல் டவுனிலிருந்து அடுத்த பஸ் நாளைக் காலைதான்'' என்று தெரிவித்தான்.

மாடியறையில் தன் வரவு செலவு கணக்குப் புத்தகங்களில் மூழ்கியிருந்தான் சோமு. அவனிடம் ஓடினாள். ''ஏம்பா சோமு, நீயாவது மோட்டார் சைக்கிளில் போய் தினேஷின் ஆபீசில் விசாரித்துவிட்டு வாயேன்'' என்றாள்.

''அவர்களுடைய கம்பெனி டாணென்று ஐந்தரைக்கெல்லாம் மூடி விடுவார்கள், அம்மா. அங்கே போனால் தினேஷைப் பார்க்க முடியாது. பூட்டையும் வாட்ச்மேனையும்தான் பார்க்க வேண்டும்'' என்றான் அவன்.

''அண்ணனென்று உனக்குக் கொஞ்சமாவது பாசமிருக்கிறதா? இப்படி அலட்சியமாகப் பேசுகிறாயே?'' என்றாள் தாயாரம்மா.

சோமு ஒரு பெருமூச்சுடன், ''உனக்கு உண்மையே தெரியாது அம்மா. சொன்னால் வருத்தப்படுவீர்கள் என்று நான் சொல்வதில்லை. ஆனால் அனாவசியமாய் என்மீது கோபிக்கிறீர்கள்'' என்றான்.

''என்னடா உண்மை?''

''தினேஷின் நடத்தையே சரியில்லை. அவ்வளவுதான் சொல்வேன். ஒரு மகன் ஒரு தாயிடம் இதற்குமேல் பேசுவது அநாகரிகம்'' என்றான் அவன்.

இடிந்து போனவளாகக் கொஞ்சநேரம் பேசாதிருந்தாள் தாயாரம்மா.

''அம்மா, விட்டுத் தள்ளு. தன்னாலே கொஞ்ச நேரத்தில் வந்து சேருவான்'' என்று சொல்லிவிட்டு தன் ஃபைல்களில் கவனத்தைச் செலுத்தினான் சோமு.

ஜன்னலருகே சென்று நின்றுகொண்டாள் தாயாரம்மா. வெளியே கொட்டோ கொட்டென்று மழை பெய்து கொண்டிருந்தது. தோட்டமெல்லாம் சின்னச் சின்னக் கால்

வாய்களாக மழைநீர் ஓடிக்கொண்டிருந்தது. மகா கோபத்துடன் ஒன்றோடொன்று சண்டையிடுகிற மாதிரி மரங்கள் தலைவிரித்து ஆடின. அத்தனை கொந்தளிப்புக் களைக் காட்டிலும் அதிகமாகத் தாயாரம்மாவின் உள்ளத்தில் புயல் வீசிக் கொண்டிருந்தது. ஜன்னலைப் பிடித்தபடி நின்றிருந்தவள் துவண்டு சரிந்து பக்கத்திலிருந்த சோபாவில் உட்கார்ந்தாள். வெகுநேரம் விழித்திருந்த பின் தன்னை மீறிய களைப்பில் தூங்கிவிட்டாள் கடைசியில்.

மறுநாள் காலையிலும் தினேஷ் ஆபீசுக்கு வர வில்லை..''லீவு ஏதாவது போட்டிருக்கிறானா?'' என்று மானேஜர் விசாரித்துக் கொண்டிருந்தபோது, தினேஷின் வீட்டிலிருந்தே வேலையாளும் சோமுவும் வந்து விசாரித்தார்கள்.

''ராத்திரி இங்கே ஏதாவது வேலை இருந்து ஒரு வேளை தங்கி விட்டானோ என்று நினைத்தோம்'' என்றான் சோமு.

மானேஜருக்கு எரிச்சல். ''இங்கே அப்படி எந்த வேலையும் இல்லை. தினேஷுக்கு வேறு எங்கே என்ன வேலையோ?'' என்றார் குத்தலாக.

அடுத்த தினமும் தினேஷ் இருக்குமிடம் தெரியாததால் போலீசில் புகார் கொடுத்தார்கள். அதை விசாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் போலீஸ் துறையில் இருபத்திரண்டு வருஷ சர்வீஸ் உள்ளவர். விடாப்பிடிக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். தாமஸ் என்று பெயர்.

தினேஷ் வேலை செய்த ஆபீசில் விசாரித்த சிலமணி நேரத்துக்குள்ளேயே அவன் எப்படிப்பட்ட பெண் பித்தன் என்பது தாமசுக்குப் புரிந்து விட்டது.

தினேஷின் காரியங்களைக் கவனிக்கும் பியூனைக் குடைந்து குடைந்து விசாரணை செய்தார். மானேஜரிடம்

அவன் தினேஷைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருந்ததால் தனக்கொன்றும் தெரியாது என்று நழுவ முடியவில்லை.

''அவருக்குப் பல பெண்கள் தொடர்பு உண்டு. ஆனால் குறிப்பாய்...''

''குறிப்பாய்?''

''வெங்கடலக்ஷ்மி என்கிற பெண் அவருக்கு ரொம்ப சினேகிதம். பெருமாள் கோவிலுக்கு இடது பக்கத்தில் கடைசி வீடு. அங்கேதான் அதிகமாய்ப் போவார். சில சமயம் என் மூலம் அவளுக்குப் புடவை, சென்ட், பவுடர் எல்லாம் கொடுத்தனுப்புவார்'' என்று ஒப்புக் கொண்டான் பியூன்.

தாமஸின் அடுத்த விஜயம் வெங்கடலக்ஷ்மியின் வீடாகத்தான் இருந்தது. ஆனால் அங்கே இம்மியளவு பயனும் கிடைக்கவில்லை.

தளுக்கும் மினுக்குமாக இருந்த வெங்கடலக்ஷ்மியைப் பார்த்தவுடனேயே அவள் தொழில் என்னவென்று புலப் பட்டுவிட்டது. வேறு யாராகவேனும் இருந்திருந்தால் அவளுடைய சாகசப் பேச்சிலும் மயக்கும் சிரிப்பிலும் எதுவுமே கேட்காமலே போயிருப்பார்கள். ஆனால் தாமஸிடம் அது நடை பெறவில்லை.

அவருடைய கண்டிப்பான தோற்றத்தின் முன்னே அவளால் பொய் சொல்ல முடியவில்லை. தினேஷ் அங்கே அடிக்கடி வருவது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டாள். தனக்கும் அவனுக்கும் 'சினேகிதம்' உண்டு என்றும் ஒப்புக்கொண்டாள். ஆனால் கடந்த ஒரு வாரமாக அவன் அங்கு வரவேயில்லை என்று சத்தியம் பண்ணினாள். அதிலும், தினேஷ் காணாமற்போன தினத்தன்று இங்கே வரவில்லை என்று அடித்துச் சொன்னதோடு, அதற்கு

அத்தாட்சியாக அன்றிரவு அவளுடன், தங்கியிருந்த ஆள் யார் என்பதையும் தெரிவித்தாள். அவனை விசாரித்தபோது வெங்கடலக்ஷ்மி சொன்னது உண்மை தான் என்று நிரூபணமாயிற்று.

''இங்கேயும் வராமல் வீட்டுக்கும் திரும்பாமல் அவன் எங்கேதான் போயிருப்பான்?'' என்றார் தாமஸ்.

''அவருக்கு என்னைத் தவிர வேறு காதலிகளும் உண்டு'' என்றாள் வெங்கடலக்ஷ்மி. ''என்னிடம் அவரே சொல்லியிருக்கிறார்.''

''யார் யார் சொல்லு'' என்று விலாசங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார் தாமஸ். ஆனால் அங்கேயும் தினேஷ் வந்ததாகத் தெரியவில்லை.

உள்ளூரிலும் அக்கம் பக்கத்திலுமுள்ள சந்தேகாஸ்பத மான பல பேர்வழிகளின் வீடுகளைச் சோதனை போட்டார் கள். தினேஷ் வீட்டையும் அவனுடன் சுற்றக் கூடிய மட்டரகப் பேர்வழிகளின் இருப்பிடங்களையும் புரட்டியெடுத்தார்கள். திருப்திகரமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எந்தத் திசையில் சென்றாலும் முட்டுச் சந்து போல மேலே நகர முடியாமல் நின்றது.

நாலாவது நாள்...

பேயறைந்த மாதிரி ஓர் ஆள் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி வந்தான்.

''நான் அடுத்த ஊரிலிருந்து வந்து கொண்டிருந்தேன். ஆற்றில் தண்ணீர் அதிகம் இல்லை, பாலத்தின் வழியே சுற்றிக் கொண்டு வருவானேன் என்று இறங்கினேன். லைன் கரையில் இருந்த மூங்கில் தோப்புக்கருகே ஒரு சவம் கிடக்கிறது. அழுகிப் போயிருக்குது. அரை நிமிஷம் கூட நிற்க முடியவில்லை. குடல் வெளியே வந்து விட்டது நாற்றம்

தாங்காமல்!'' என்று மூச்சுத் திணறத் திணறத் தெரிவித்தான் அவன்.

தாமஸ் மறு வினாடியே நாலு கான்ஸ்டபிள்களுடன் அங்கு பறந்தார். அந்த ஆளும் கூடவே வந்து இடத்தைக் காட்டினான்.

ஆம்!தினேஷின் உடல் தான். கழுத்திலும் மார்பிலும் அரிவாளால் வெட்டப்பட்ட காயங்கள் இருந்தன. சட்டை பாண்ட் அடையாளங்கள் அவன் தான் என்பதைக் காட்டின. வேறெங்கோ கொலை செய்துவிட்டு இங்கே இழுத்து வந்து மறைவாய்ப் போட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. ஆனால் மழை காரணமாக, இழுத்து வந்த தடம் அதிக தூரத்துக்குத் தெரியவில்லை.

தாயாரம்மாவுக்கும் சோமுவுக்கும் உடனே ஆளனுப்பி வரவழைத்தார்கள். எந்தத் தாய்க்குத்தான் மகனைத் தெரியாமல் போகும்? எந்தத் தம்பிக்குத்தான் அண்ணனைத் தெரியாமல் போகும்?

'தினேஷ், தினேஷ்' என்று அவன் மீது விழுந்து புரண்டு கதறினார்கள். அவர்களைப் பெரும்பாடு பட்டு விலக்கி, பிரேத விசாரணைக்குச் சடலத்தை அனுப்ப ஏற்பாடு செய்தார் தாமஸ்.

அதற்கு முன் தினேஷின் சட்டைப் பைகளைச் சோதனையிட்டார்.

ஒரு கடிதம் கிடைத்தது.

மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்திருந்ததால் அதில் சில வரிகள் தெரிந்தன. சில வரிகள் அழிந்திருந்தன.

அது ஒரு பெண்ணின் கையெழுத்து.

'அன்பு-தினேஷ்- மறுபடியும் எப்-சந்திப்போம் என்று மனம் துடிக் - அய்யனார் பண்ணை-பம்ப்-ஆவ-காத்திருப்பேன்-இன்று மாலை-

-என்ற வரிகளை மட்டுமே தாமஸால் படிக்க முடிந்தது. நல்ல வேளை, கீழே 'சபிதா' என்ற கையெழுத்தும்,தேதியும் தெரிந்தன.

அந்தத் தேதி...

தினேஷ் காணாமல் போன அதே தேதிதான்.

அதாவது, இந்த அழைப்பின் பேரில் அன்று சென்றவன் தான் கொலை செய்யப்பட்டிருக்கிறான்.

யார் இந்த சபிதா?

தாமஸ் தன் கீழுள்ள அதிகாரிகளைக் கேட்டார். ''தினேஷின் வீட்டில் நன்றாய்ச் சோதனை போட்டு விட்டீர்களா? எதிலாவது 'சபிதா' என்ற பெயரைப் பார்த்தீர்களா?''

''இல்லை சார்'' என்று கோரஸாகப் பதில் வந்தது.

ஆனால் தாமஸ் மறுபடியும் ஒரு முயற்சி செய்து பார்ப்பதென்று முடிவு செய்தார். தினேஷின் வீட்டை அடைந்து, அவனுடைய அறையைச் சோதனை போட்டார்.

ரொமான்ஸ் உணர்வுள்ள வாலிபனின் அறைக்கேற்ப எங்கு பார்த்தாலும் 'பின் அப்'களின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அலமாரிகளில் காதல் கதைகளும் செக்ஸ் நூல்களும் இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன.

மேஜை டிராயரை இழுத்துப் பார்த்தபோது, உள் பக்கம் இன்னொரு சிறிய அறை இருப்பது தெரிந்தது. அதை முந்தின சோதனையின் போது கவனிக்கத் தவறிவிட்டார்கள்.

இப்போது பார்த்தபோது, அந்த உள்ளறைக்குள் ஏழெட்டுக் கடிதங்கள் இருப்பதைக் கண்டெடுத்தார்கள்.

எல்லாம் காதல் கடிதங்கள் சபிதா என்ற பெண்ணிடமிருந்து.

ஆசைத் தாபங்கள் நிறைந்தவை. காதலின் உச்சக் கட்டங்கள். உள்ளத்தின் ஏக்க எரிமலைகள். 'என் கண்ணான கண்ணன் தினேஷுக்கு' என்று ஆர்வம் சொட்டச் சொட்ட ஆரம்பித்திருந்தன. 'உங்களைக் கண்டது முதல் என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன்' என்று பக்கம் பக்கமாய் வர்ணித்திருந்தன. கடிதத்தின் கடைசியில் பெருக்கல் குறியிட்டு, 'இங்கே நான் முத்தமிட்டிருக்கிறேன். நீங்களும் முத்தமிடவும்' என்று எழுதியிருந்தது.

அது ஒரு பெண்ணின் கையெழுத்துத்தான். சபிதா என்று எல்லாவற்றிலும் கையொப்பம் இடப்பட்டிருந்தது. ஆனால் எதிலும் தேதி காணப்படாததால் எந்தக் கடிதம் முதலில் வந்தது, எது பிறகு வந்தது என்று தெரியவில்லை.

கடிதத்தினுள்ளே ரோஜா இதழ்கள் வைக்கப் பட்டிருந்தன. கடிதம் அனுப்பும்போது அந்தச் சபிதா வைத்திருந்தாளா அல்லது கடிதம் வந்தபின் காதல் அர்ச்சனையாகத் தினேஷ் வைத்தானா என்பது புரியவில்லை.

கடிதங்களைக் கைப்பற்றிப் போலீஸ் நிலையத்துக்கு எடுத்துப் போய் மணிக்கணக்கில் வைத்துக்கொண்டு வெறிக்க வெறிக்கப் பார்த்து ஆராய்ச்சி செய்தார் தாமஸ். இதில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருப்பதால் நாசூக்காகத் தன் நடவடிக்கைகளைச் செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

தினேஷ் வேலை பார்த்தது பெரிய டவுன். வசித்து வந்தது கிராமம். ஆனால் கிட்டத்தட்ட முனிசிபாலிட்டி போன்ற பெரிய கிராமம்.

அங்கே சபிதா என்ற பெயருள்ள பெண் யார் யார் இருக்கிறார்கள் என்பதை விசாரித்து வர ஒரு துப்பறியும் பட்டாளத்தை அனுப்பினார்.

முதல் கட்டத்தில் தோல்வியே கிடைத்தது. சபிதா என்ற பெயரில் எந்தப் பெண்ணும் இல்லை என்றார்கள்.

இரண்டாவது கட்டத்தில் வெற்றி கிடைத்தது.

சபிதா என்ற பெண் இருக்கிறாள், அதுவும் தினேஷ் வீடு இருக்கும் அதே தெருவின் கோடியில்.

அழகி. இளம் வயதுக்காரி. கல்யாணமானவள். அவள் கணவன் பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் அதிகாரியாக இருக்கிறான். நல்ல சம்பளம். திருமணமாகி ஒன்றரை வருடம்தான் ஆகிறது. இப்போது தன் தாய் வீட்டுக்கு வந்திருக்கிறாள். மூன்று மாதமாக இங்கேதான் தங்கியிருக்கிறாள். அவள் தந்தை திருச்சியில் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சோமேசுவரர் என்று பெயர். ஆனால் புரொபசர் என்றே எல்லோரும் சொல்வார்கள்.

தினேஷின் பாக்கெட்டில் இருந்த கடிதத்தை எழுதிய சபிதாவும் இந்தப் புரொபசரின் பெண் சபிதாவும் ஒருத்தியேதானா? வெவ்வேறா?

இரண்டு பேருடைய கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். ஆனால் அதை எப்படிச் செய்வது, அனாவசியப் பரபரப்பேற்படுத்தாமல்?

தாமஸ் யோசனையில் ஆழ்ந்தார்.

# 18

இன்ஸ்பெக்டர் யோசித்துக் கொண்டிருந்த அதே சமயம் – அறியாமையே சொர்க்கம் என்பார்களே, அந்தச் சொர்க்கத்தில் இருந்தார் புரொபசர் சோமேசுவர். திருச்சி கல்லூரியில் கால் நூற்றாண்டுக் காலம் தாவரயியல் பேராசிரியராக இருந்த அவர், ஓய்வு பெற்றபின் சும்மா கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. ஒரு சிறிய வீடு வாங்கிக் கொண்டார். பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தார். ஆனால் ஈஸிசேரில் சாய்ந்துவிடாமல் பார்த்தினியம் என்ற விஷச்செடிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

ஆகவே, பம்பாயிலிருந்து வந்து தங்கியிருக்கும் தன் மகள் சபிதாவைப் பற்றிக் கிசுகிசு புறப்பட்டிருப்பது அவருக்குத் தெரியவே தெரியாது.

திடீரென்று ஒரு நாள் அவருக்கு மொட்டைக் கடிதம் ஒன்று வந்தது.

'புரொபசர் சார், பார்த்தினியம் ஆராய்ச்சி அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். முதலில் உமது மகள் சபிதாவைப் பற்றிய சமாசாரத்தை ஆராய்ச்சி செய்யும். ஊரே நாறுகிறது' என்று எவனோ ஒருவன் எழுதிப் போட்டான்.

ஊரில் நாலு பேருக்கு மத்தியில் கௌரவமான பெயரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணியிருந்த சோமேசுவருக்கு அந்த மொட்டைக் கடிதம் ஏற்படுத்திய அதிர்ச்சி!

''சபிதா! சபிதா!'' என்று இரைந்து கூப்பிட்டவர், சமையல்காரிக்குத் தெரிய வேண்டாமென்று, மெல்ல அவளை மாடிக்கு அழைத்துச் சென்றார்.

தந்தை இப்படிப் பதட்டமாயும் ஒளிவுமறைவாயும் தன்னை அழைத்தது கிடையாதே என்ற திகைப்புடன் அவரைப் பின்தொடர்ந்த சபிதா, ''உன்னிடம் ஒன்று கேட்கப் போகிறேன். சத்தியமான பதிலை நீ தர வேண்டும்'' என்று அவர் சொன்னதும் இன்னும் திடுக்கிட்டுப் போனாள்.

''என்னப்பா விஷயம்?''

''இதோ, இந்தக் கடிதத்துக்கு என்ன அர்த்தம்?'' என்று கடிதத்தை நீட்டினார் புரொபசர்.

படித்தவளின் முகத்தில் பயங்கரமான கலவரம் பரவியது ''ஐயையோ! என்ன அப்பா இது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''

அவளைக் கடினமான கண்களால் காலோடு தலை அளந்தார் தந்தை. ''புரியவில்லையா? நீ ஏதோ தப்பான காரியம் செய்திருக்கிறாய்! எனக்கு அதைப் பற்றிப் பேசவே நாக்குக் கூசுகிறது. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது...

''ஐயா! ஐயா!'' என்று மாடிப்படியின் கீழிருந்து சமையல்காரி குரல் கொடுத்தாள்.

''என்ன?'' என்றார் புரொபசர்.

''உங்க பெரிய மாமா வந்திருக்கிறார்.''

''கீழே உட்காரச் சொல்லு. இதோ வருகிறேன்'' என்றார். புரொபசரின் மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய பெரியவர் அந்தப் பெரிய மாமா. நிலபுலன்களுடன் வசதியாக இருக்கும் கண்ணியவான். ரொம்ப அவசியமாயிருந்தாலொழியப் புரொபசரைத் தேடி வரமாட்டார்.

மாடியிலேயே மகளை இருக்கச் சொல்லிவிட்டு, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, முகபாவத்தையும் மாற்றிக் கொண்டு கீழே வந்தார் புரொபசர்.

பெரிய மாமா எப்போதும் சிரித்த முகமாயிருப்பார். இன்று அதில் கவலை படர்ந்திருந்தது. ''தோட்டத்தில் உட்கார்ந்து பேசுவோம், வா. ஒரு முக்கியமான விஷயம்'' என்றார் புரொபசரிடம்.

இரண்டு கூடை நாற்காலிகளை எடுத்துக் கொண்டு போய், வாசற்புறமிருந்த சிறிய தோட்டத்தில் போட்டு, ''உட்காருங்கள் மாமா, என்ன திடீரென்று? சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே?'' என்றார் புரொபசர்.

மாமா சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு, ''அவ்வளவு சாவகாசமாய்ப் பேசக் கூடிய விஷயமில்லை. காதில் விழுந்தது. உடனே உன்னிடம் வந்தேன்'' என்றார்.

''என்ன மாமா காதில் விழுந்தது?''

''சபிதாவைப் பற்றி?''

புரொபசருக்கு அடிவயிற்றைப் பிசைந்தது. மறுபடியும் சபிதா விஷயமா!

''வந்து...''

கையமர்த்தினார் மாமா. ''சபிதா ரொம்ப நல்ல பெண். எந்தக் கெட்ட விஷயத்திலும் அவள் மனம் செல்லாது. இதெல்லாம் நீ சொல்ல வேண்டியதில்லை. எனக்கே தெரியும். ஆனால் முழுக்கப் பேச்சுப் பரவிவிட்டதால் நீ அசட்டையாய் இருக்கக் கூடாது.''

புரொபசரின் கையிலேயே அந்த மொட்டைக் கடிதம் இருந்தது. ''இதைப் பாருங்கள். இன்றுதான் வந்தது. அதைப்பற்றித்தான் சபிதாவைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்களும் வந்தீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை, மாமா.''

''நீ ஒரு குழந்தை மாதிரி இருக்கிறாய்'' என்று அவரை மெல்ல தட்டிக் கொடுத்தார். ''பதட்டப்படாமல் கேள். இந்தத் தெருக் கோடியில் தினேஷ் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் கொலை செய்யப்பட்டு விட்டான். அது உனக்குத் தெரியுமா?''

''ஆமாம், ஏதொ கேள்விப்பட்டேன்.''

''அவனுக்கும் சபிதாவுக்கும் ஒரு இது...! சொல்லச் சங்கடமாயிருக்கிறது எனக்கு! கள்ளத் தொடர்பு இருந்ததாம்.''

''மாமா!''

''அமைதியாய்க் கேள். இவள் பம்பாயிலிருந்து வந்தது முதல் அவனுக்கும் இவளுக்கும் சினேகிதமாம். அது விஷயமாகத்தான் வேறு எவனுக்கோ பொறாமை ஏற்பட்டு அவனைக் கொலை செய்திருக்கிறார்களாம்.''

''பொய் மாமா, பொய்!'' என்ற சபிதாவின் ஆங்காரமான குரல் கேட்ட பிறகுதான், அவளும் வெகுநேரமாய்த் தங்கள் பக்கத்தில் வந்து நின்றிருப்பதை அவர்கள் கவனித்தார்கள்.

''மாமா! அப்பாவிடம் கூட நான் இன்னும் சொல்லவில்லை. நான் மூன்று மாதமாய்க் குளிக்காமல் இருக்கிறேன். என் கணவரின் குழந்தை வயிற்றில் வளர்ந்து வருகிறது. அந்தச் சிசுவின் மீது ஆணையாகச் சொல்கிறேன். இந்த ஊரில் எனக்கு எந்த அயோக்கியனையும் தெரியாது. நீங்கள் சொல்கிற ஆளை நான் பார்த்ததே கிடையாது! சத்தியம் மாமா''

பெரியவர் அவளை அமைதிப்படுத்தினார். ''இதோ பார். ஆத்திரப்படுவதற்கு இது சமயமில்லை. நிதானமாய்,

அலட்டிக் கொள்ளாமல் நாலு பேருக்குத் தெரியாமல் நாம் காரியம் செய்யவேண்டும். நல்ல காலம், பம்பாயிலிருக்கும் மாப்பிள்ளையின் வீட்டு விலாசம் இங்கே யாருக்கும் தெரியாது. இதே மாதிரி ஒரு மொட்டைக் கடிதம் அங்கேயும் போனால் நிலைமை விபரீதமாகிவிடும்...''

''ஆமாம் மாமா...'' என்று புரொபசர் பதறினார்.

''இந்தக் கேஸை விசாரித்து கொண்டிருப்பவர் தாமஸ் என்ற போலீஸ் அதிகாரி. நேர்மையானவர். எனக்கும் தெரிந்தவர். அவரை நாளைக்குப் போய்ப் பார்ப்போம்'' என்றார் பெரிய மாமா.

இன்ஸ்பெக்டர் தாமசுக்கு பேராசிரியர் சோமேசுவரரை யும் அவருடைய பெரிய மாமாவையும் பார்த்தபோது ஒரு விதத்தில் ஆச்சரியமாயிருந்தது. ஒரு விதத்தில் நிம்மதியும் ஏற்பட்டது. போலீஸ் அதிகாரியானாலும், எதையும் முரட்டுத்தனமாகச் செய்து விடக்கூடாதென்ற கொள்கை கொண்டவர் அவர். சபிதாவைப் பற்றிப் பல தகவல்கள் திரட்டி வைத்திருந்த போதிலும், ஒரு கல்யாணமான பெண்ணின் கௌரவமான வாழ்க்கையைக் குலைத்து விடக் கூடாதே என்று தர்மசங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். ஆகவே இவர்களாகவே வந்ததில் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.

சோமேசுவரின் பெரிய மாமா விஷயத்தைச் சொன்னதும் தாமஸ் கேட்டார்:

''நான் இப்படிக் கேட்பதற்காக நீங்கள் வருத்தப் படக்கூடாது. ஆனால் போலீஸ் அதிகாரி என்ற முறையில் கேட்க வேண்டியது என் கடமை. உங்கள் பெண் எந்தக்

காலத்திலேனும் தப்பான நடவடிக்கையில் இறங்கியதாக உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதுண்டா?''

சோமேசுவர் தன் வேதனையை அடக்கிக் கொண்டு, ''கிடையவே கிடையாது சார். அவள் தங்கமான பெண்'' என்று அடித்துச் சொன்னார்.

''சபிதா என்று கையெழுத்திட்டுப் பல காதல் கடிதங்களை இறந்துபோன தினேஷின் வீட்டிலிருந்து கைப்பற்றியிருக்கிறோம்.''

''அதெல்லாம் யாரோ எதிரிகள் வேண்டுமென்றே செய்திருப்பார்கள்.''

''உங்களுக்கு அப்படிப்பட்ட எதிரிகள் யார் இருக்க முடியும்?''

சோமேசுவர் சில நிமிடங்கள் யோசனை செய்தபின், ''நான் யாரிடமும் வம்பு தும்புக்குப் போகிறவனில்லை. ஒருவேளை இதை அரசியல் கட்சிகள் செய்திருக்கலாம்'' என்றார்.

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஆமாம். நம் ஊரில் இரண்டு முக்கியமான கட்சிகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். எந்த அடிதடிச் சண்டைக்கும் கொலை கொள்கைக்கும் துணிந்தவர்கள். போன தேர்தலின்போது தங்களுக்கு ஆதரவு தர வேண்டும், தங்கள் கட்சிக் கூட்டங்களில் வந்து பேச வேண்டும் என்று இரண்டு பேருமே என்னைக் கேட்டுக் கொண்டார்கள். நான் எந்தக் கட்சியிலும் சேரத் தயாராகயில்லை என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லியனுப்பிவிட்டேன் அதில் கோபமடைந்து, எனக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று அவர்களில் யாராவது செய்திருக்கலாம்.''

இன்ஸ்பெக்டர் தாமஸ் புன்னகை செய்தார். ''நீங்கள் சொல்லுமுன்பே நாங்கள் அந்தக் கோணத்தையும் ஆராய்ந்து விட்டோம். எந்த அரசியல் கட்சியும் உங்கள் மீது காழ்ப்புக் கொண்டிருக்கவில்லை. எந்த அரசியல் ஆட்களுக்கும் இந்த விஷயத்தில் சம்பந்தம் கிடையாது என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது.''

''பின்னே யார்தான் செய்திருப்பார்கள்?'' என்று கேட்டார் சோமேசுவரின் பெரிய மாமா.

''அதைப் பற்றி எங்கள் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் ஒரு கருத்து இருக்கிறது. அதாவது, என் கீழுள்ள அதிகாரிகள் அப்படி நினைக்கிறார்கள்.''

''எப்படி?''

''உங்கள் பெண்ணுக்கும் அந்த தினேஷுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது. அது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பிடிக்கவில்லை. அவனைத் தீர்த்துக் கட்டினால் இந்தப் பிரச்னை தீரும் என்று தீர்மானித்திருக்கிறீர்கள். ஆகவே குறிப்பிட்ட இடத்திற்கு வரும்படி சபிதாவை விட்டுக் கடிதம் எழுதி, அவனை அங்கே வரவழைத்திருக்கிறீர்கள். அந்த இடத்தில் உங்கள் ஆட்கள் தயாராயிருந்து, அவன் வந்ததும் கொலை செய்திருக்கிறீர்கள்...''

''பொய்! பொய்!'' என்று குறுக்கிட்டுக் கத்தினார் புரொபசர்.

''ஆத்திரப்படாதீர்கள். என் கீழுள்ள அதிகாரிகள் அப்படி நினைக்கிறார்கள் என்றுதான் நான் சொன்னேன். நான் அப்படி நினைப்பதாகச் சொல்லவில்லை. நான் நினைத்திருந்தால் என்றைக்கோ அவளைக் கைது செய்து விசாரணை செய்திருப்பேன். பகிரங்கமாக அப்படிச் செய்து ஒரு

பெண்ணின் வாழ்க்கையைக் குலைத்து விடக் கூடாது என்று பொறுமையாக இருக்கிறேன்.''

''ரொம்ப நன்றி இன்ஸ்பெக்டர், ரொம்ப நன்றி!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டார் சோமேசுவரர்.

★★★

அக்கம் பக்கத்தாரின் கவனத்தைக் கவராத முறையில், அடுத்த நாள் தான் மட்டுமே வந்தார் தாமஸ். சபிதாவைக் கைது செய்து முறைப்படி விசாரணை செய்து கொண்டிராமல், குற்றவாளி என்று சந்தேகிக்கப் படுகிற ஒருவரிடம் இப்படிப் பரிவு காட்டலாமா என்று ஒருபுறம் அவருக்குத் தோன்றியது. மறுபுறம் சபிதா நிரபராதி என்ற எண்ணமும் அவருக்கு அழுத்தமாக ஏற்பட்டிருந்தது. இதில் வேறு ஏதோ மர்மம் இருக்கிறது என்று நிச்சயமாக எண்ணினார்.

சபிதாவைப் பார்த்தவுடனேயே அவருடைய அபிப்பிராயம் ஊர்ஜிதமடைந்தது. களங்கமற்ற கண்களும் மென்மையான நடையும் மிருதுவான பேச்சும் உள்ள இந்தப் பெண் ஒருநாளும் கணவனுக்குத் துரோகம் செய்யக் கூடியவளாய் இருக்க மாட்டாள் என்று நம்பினார். அப்படியே இருந்தாலும் ஒரு கொலைக்கு உடந்தையாய் இருந்திருக்க மாட்டாள்.

''சத்தியமாக எனக்கு எதுவுமே தெரியாது சார்'' என்று அவள் கண் கலங்கக் கூறியபோது, ''கவலைப்படாமல் இரு. உன்னைக் காப்பாற்ற நானாயிற்று'' என்று தன்னையும் மறந்து வாக்களித்து விட்டார்.

''கொலை நடந்த தினத்தன்று நீ எங்கே இருந்தாய்?'' என்று விசாரித்தார்.

''என் பால்யத் தோழி ஒருத்தியைப் பார்ப்பதற்காகப் [illegible]த்துக் கிராமத்துக்குப் போனேன். அவள் ஊரில் இல்லை. திரும்பி விட்டேன்'' என்றாள் அவள்.

''எதிரிகள் அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். இறந்து போன தினேஷை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரச் சொல்லிக் கடிதம் போட்டுவிட்டு அதே நேரத்தில் நீயும் வெளியே போயிருக்கிறாய்'' என்றார் தாமஸ். ''சரி, நீ எழுதிய கடிதங்கள் ஏதாவது இருந்தால் கொண்டு வா.''

''நான் கடிதம் எழுதுகிற விஷயத்தில் மிகவும் சோம்பேறி. பம்பாயிலிருந்தபோது என் அப்பாவுக்கு இரண்டு மாதத்துக்கு ஒன்று எழுதினால் அதிகம்.''

''அவைகளை நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்'' என்று எடுத்து வந்து தந்தார் சோமேசுவர். தினேஷின் வீட்டில் கைப்பற்றிய கடிதங்களின் எழுத்தையும் இந்தக் கடிதங்களின் எழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் தாமஸ். அவன் சட்டைப்பையில் இருந்த கடிதம் நனைந்து உலர்ந்து எழுத்துக்கள் அழிந்திருந்ததால் ஒப்பிட இயலவில்லை. மற்ற கடிதங்கள், பொதுவாகப் பெண்களின் கையெழுத்தைப் போலிருந்தன, வட்டமாக, குண்டாக, சின்ன எழுத்தாக இருந்தன. இரண்டும் ஒருவரே எழுதியதுதான் என்பதை நிரூபிக்க, சென்னையிலுள்ள கையெழுத்து நிபுணர்களுக்கு அனுப்பிப் பரிசீலனை செய்யச் சொல்ல வேண்டும். அதற்கு நாள் பிடிக்கும். இதுவோ உடனே பரபரவென்று செய்யவேண்டிய சந்தர்ப்பம்.

கடிதங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தவருக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. பம்பாயிலிருந்து அவள்

எழுதியிருந்த கடிதங்கள் அனைத்தும், 'நான் இங்கே சௌக்கியம். நீங்கள் அங்கே சௌக்கியமா' என்கிற வகையில்தான் இருந்தன.

இந்தப் பெண் ஏதோ சுமாராய்ப் படித்தவள்தான் என்றாலும் இலக்கிய அறிவு உள்ளவளாகத் தோன்ற வில்லை. இவள் எழுதியதாகச் சொல்லப்பட்டு தினேஷிடம் இருந்த கடிதங்களோ வர்ணனையும் வார்த்தை ஜாலமுமாய், காதல் நயம் சொட்ட இருந்தன. அதெப்படி?

''ஏனம்மா, நீ நிறைய நாவல்கள், கதைகள் படிப்பாயா?'' என்று கேட்டார்.

''பொதுவாய் நான் அதிகம் படிப்பதில்லை சார்'' என்றாள் அவள்.

''பத்திரிகைகள்?''

''அதுவும் கிடையாது, சார். பொழுது போகவில்லை என்றால் டிரான்ஸிஸ்டரில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருப்பேன்.''

மோவாயைத் தடவிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தார் தாமஸ். பிறகு, ''நான் ஒரு விஷயம் சொல்கிறேன். அதை நீ பத்து வரிகளில் கதை மாதிரி எழுதி பார்க்கலாம்'' என்றார்.

புரொபசரும் அவருடைய பெரிய மாமாவும் சபிதாவும் இதென்ன புதுவகைப் பரீட்சை என்று நினைத்தார்கள். இருந்தாலும் பேனாவும் பேப்பரும் எடுத்து வந்து எதிரில் உட்கார்ந்து கொண்டாள் சபிதா.

''ஆபீசில் வேலை பார்க்கிற ஒரு இளைஞன், சாய்ந்தரம் வீட்டுக்கு வந்து பார்த்தபோது, மனைவி

...த்தில் படுத்திருக்கிறாள். அவன் டாக்டரிடம் அவளை அழைத்துப் போய் மருந்து வாங்கித் தருகிறான் இந்த விஷயத்தை நீ எழுது, பார்க்கலாம்.''

''எனக்கு அதெல்லாம் எழுத வராது சார்'' என்று சொன்னவள், வெகு நேரம் பேனாவைத் திறந்து வைத்துக் கொண்டு யோசித்தபடியே இருந்தாள். பிறகு எழுத ஆரம்பித்தாள். ஒரு வாக்கியம் எழுதப் பத்து நிமிடம் பிடித்தது. தாமஸ் பொறுமையிழந்துவிட்ட சமயம் தான் எழுதியதை நீட்டினாள்.

வாங்கிப் படித்தவருக்குக் கிட்டத்தட்டச் சிரிப்பே வந்துவிட்டது. இந்தச் சமயத்தில் சிரிக்கக் கூடாது என்று அடக்கிக் கொண்டார். அவள் எழுதித் தந்த முதல் சில வரிகள்.

''ஒரே ஒரு ஊரில் ராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். பெற்றோரிடம் பிரியம் உள்ளவன். அவன் ஒரு ஆபீசில் வேலை செய்தான். அவனிடம் எல்லோரும் மிகவும் பிரியமாயிருந்தார்கள். ஒரு நாள் அவனுக்குக் கல்யாணமாயிற்று...''

தாமஸ் முடிவுக்கு வந்தார்.

இவ்வளவு குழந்தைத்தனமாக ஒரு விஷயத்தை எழுதுகிறவள், சத்தியமாக அத்தனை இலக்கிய வர்ணனைகள் மிகுந்த காதல் கடிதங்களை எழுதியிருக்க முடியாது.

தினேஷின் வீட்டில் கண்டெடுத்த காதல் கடிதங்களை மறுபடியும் ஒரு முறை பார்த்தார்.

ஒரு கடிதத்தின் முடிவில் இருந்த சில வரிகளைக் கண்டதும் சட்டென நிமிர்ந்து உட்கார்ந்தார். அது ஒரு கவிதையின் அடிகள்.

அந்தக் கவிதையை எங்கேயோ, எப்போதோ படித்திருக்கிறோமென்பது அவருக்கு ஞாபகம் வந்தது. எங்கே?

## 19

**அ**ந்தக் கவிதை வரிகளைப் படிக்கப் படிக்கத் தாமசுக்கு நிச்சயமாய் இதை எங்கேயோ படித்திருக்கிறோம் என்று அழுத்தமாய்த் தோன்றியது. காலேஜ் பிராயத்திலிருந்தே அவர் கவிதைப் பிரியர். ஷேக்ஸ்பியரும் பிடிக்கும், தாகூரும் பிடிக்கும், பாரதியும் பிடிக்கும், துளசிதாசரும் பிடிக்கும், கம்பனும் பிடிக்கும். இந்திய மொழிகளில் வெளி வந்துள்ள ஆயிரக்கணக்கான கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கரைத்துக் குடித்திருக்கிறார். ஆனாலும் கூட, இது எங்கேயோ படித்த கவிதை என்பது மட்டும் தான் ஞாபகம் வந்ததே தவிர எங்கே, எப்போது, யார் எழுதியது என்பது நினைவு வரவில்லை.

ஆனால் கண்டிப்பாக இதைச் சபிதா எழுதியிருக்க முடியாது என்று புரிந்து விட்டது. பொதுவாகவே அவளுக்கு இலக்கிய அறிவு கம்மி. இன்னொரு பிரபல கவிதையைத் திருடி எழுதும் அளவுக்கு மூளையுள்ளவள் அல்ல.

யார் எழுதிய கவிதை இது? யார் எழுதியது?

மீண்டும் படித்தார் :

'என் அன்பே

உன் கடிதம் கிடைத்தது.

அதைப் படிக்கையில் நான் அடைந்த பரவசத்துக்கு அளவேயில்லை.

உன்னை நான்
நூறு நூறு வடிவங்களிலே,
நூறு நூறு காலங்களிலே
காதலித்து வந்திருக்கிறேன்.
யுகத்துக்குப் பின் யுகமாக,

ஜன்மத்துக்குப் பின் ஜன்மமாக,
என் காதல் இருதயம் கோத்த
கவிதை மாலையை
உன் கழுத்திலே நீ
அழகுபட
அணிந்திருக்கிறாய்
யுகத்துக்குப் பின் யுகமாக
ஜன்மத்துக்குப் பின் ஜன்மமாக...'

மூளையை எத்தனை கசக்கிக் கொண்டும் இந்தப் பாட்டைப் பற்றி ஞாபகம் வரவில்லை தாமஸுக்கு. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

இந்த வழக்கில் புலன் விசாரணைகள் செய்த அதிகாரிகளைக் கூப்பிட்டார். ''சந்தேக ஸ்பதமான கேடிகள் வீட்டில் எல்லாம் சோதனை போட்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டார். 'ஆம்' என்றார்கள்.

''சரி, இன்னொரு ரவுண்டு அதே வீடுகளில் சோதனை போடுங்கள். இந்த முறை ஆயுதங்களைத் தேட வேண்டாம்.''

''பின்னே?''

''பத்திரிகைகள், புத்தகங்கள் இந்த மாதிரி என்ன அகப்பட்டாலும் கைப்பற்றிக் கொண்டு வாருங்கள்'' என்றார் தாமஸ்.

அவர்கள் திகைப்புடன் சென்றார்கள். புத்தகங்கள் பத்திரிகைகளைக் கைப்பற்றி வரும்படி எந்த அதிகாரியும் இதுவரை கட்டளையிட்டதில்லையே? கோணி கோணி யாகப் பழைய குப்பைக் காகிதங்களைக் கைப்பற்றி எடுத்து வந்து அவர் முன் போட்டார்கள். அனேகமாக, பழைய தினசரிகள் மட்டரகமான நாவல்கள், சினிமாப் பாட்டுப் புத்தகங்கள், அட்டை கிழிந்த வால்யூம்கள்...

ஒரு வார காலம் எல்லாவற்றையும் பொறுமையுடன் ஆராய்ந்தார் தாமஸ். கிட்டத்தட்ட இதிலே ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை என்று மனம் சோர்ந்த வேளையில்

திடீரென்று அவர் முகம் மலர்ந்தது.

அந்தக் கிழிந்த புத்தகம் ஒரு கவிதைத் தொகுதி - தாகூரினுடையது.

தாகூர்! தாகூர்!

சட்டென்று நினைவு வந்து விட்டது தாமசுக்கு. ஆம் தாகூர் எழுதிய கவிதையின் சில அடிகள்தான் அந்தக் கடிதத்தில் படித்தவை!

பரபரப்புடன் தொகுப்பிலிருந்த கவிதைகளைப் புரட்டினார்.

உன்னை நான் நூறு நூறு
வடிவங்களாக.
நூறு நூறு காலங்களிலே
காதலித்து வந்திருக்கிறேன்,
யுகத்துக்குப் பின் யுகமாக
ஜன்மத்துக்குப் பின் ஜன்மமாக....

''வேணு!'' என்று உற்சாகத்துடன் அழைத்தார் சோதனையிட்ட அதிகாரியை.

''இந்தப் புத்தகத்தை எந்த வீட்டில் எடுத்தீர்கள்?'' என்று கேட்டார்.

வேணு என்ற அதிகாரி தான் குறித்திருந்த பட்டியலைப் பார்த்து, ''இது மன்னார் என்கிற கேடியின் வீட்டில் எடுத்தது சார். இறந்து போன தினேஷ் இவன் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு'' என்றார்.

''சரி, வாருங்கள். அங்கே இன்னொரு சோதனை போடலாம்'' என்று அவசரமாகப் புறப்பட்டார் தாமஸ்.

மன்னாரின் வீட்டில் இண்டு இடுக்குகளில் துண்டுக் காகிதங்கள் கிடந்தன. சில காகிதங்களில், ஒரு பெண்ணின் எழுத்தைப் போல் எழுதி எழுதிப் பழகிய கிறுக்கல்கள். இன்னும் சிலவற்றில் சபிதா சபிதா சபிதா என்று திரும்பத் திரும்பப் போட்டுப் பார்த்திருக்கும் கையெழுத்து...

மன்னாரைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து முட்டிக்கு முட்டி தட்டினார் தாமஸ். சட்டத்துக்கு உட்பட்டும் கொஞ்சம் மேற்பட்டும் என்ன விதமாய் வழிக்குக் கொண்டு வர முடியுமோ அவ்வளவும் செய்தார்.

திடுக்கிடத்தக்க, அதிர்ச்சியான உண்மை அவருக்குக் கிடைத்தது.

தினேஷுக் கொலை செய்யத் திட்டமிட்டவன் – செய்தவன் – மன்னார் அல்ல.

தினேஷின் தம்பி சோமு!

மன்னார் சொன்ன விவரங்களைக் கேட்டதும் உடனடியாகச் சோமுவைக் கைது செய்ய உத்தரவிட்டார் தாமஸ்.

சோமு செய்த சதியைக் கேட்டு அவன் அம்மா தாயாரம்மாள் விழுந்து விழுந்து புரண்டு அழுதாள். அவளைச் சமாதானப்படுத்தி, உண்மையை விளக்கினார் தாமஸ்.

சோமு, தினேஷைக் காட்டிலும் பெரிய செலவாளி. வெளியே யோக்கியமானவன் போல் காணப்பட்டாலும், அந்தரங்கத்தில் பல காதலிகளும் சூதாட்ட நண்பர்களும் உண்டு. அவர்களுக்காக ரகசியமாக நிறையச் செலவழித்துக் கொண்டிருந்தான். ஆனால் அது போதவில்லை. தாயாரின் காலத்துக்குப் பிறகு, திரண்ட சொத்து இரண்டாகப் பிரிந்து தினேஷுக்குப் பாதி போய்விடுமே என்று நினைக்கும்போதே அவனுக்கு வெறுப்பாயிருந்தது. தினேஷை ஒழித்துக் கட்டி, மொத்தச் சொத்துக்கும் தானே அதிபதியாகத் தீர்மானித்தான்.

தினேஷின் பெண்பித்து அவனுக்குச் சௌகரியமாயிருந்தது. ஐடியா கொடுத்தது.

தினேஷின் சினேகிதர்கள் யார் யார் என்று தேடி, மன்னாரைப் பிடித்தான். அவன் மூலம்தான் தெரிய வந்தது –

பம்பாயிலிருந்து புதிதாக வந்திருக்கும் சபிதா என்கிற பெண்ணின் மீது தினேஷுக்குக் காதல் ஏற்பட்டிருக்கிறது என்று. அந்தப் பெண்ணுக்கும் தினேஷின் மேல் ஆசை இருக்கிறதென்று தினேஷிடம் மன்னாரைச் சொல்ல வைத்தான். தினேஷை அவளுக்குக் காதல் கடிதம் எழுதித் தரும்படி தூண்டினான். மன்னாரே அவளுக்குக் கொண்டுபோய்த் தந்து பதில் வாங்கி வந்து தருவதாக நாடகம் நடிக்க வைத்தான்.

தினேஷ் எழுதிய கடிதங்கள் சபிதாவிடம் ஒரு நாளும் போனது கிடையாது. அவளிடமிருந்து பதில் வந்ததும் கிடையாது. தினேஷின் கடிதங்களைக்கிழித்துப் போட்டு விட்டு, அவள் பதில் எழுதுகிற மாதிரி தேன் சுவை சொட்டும் காதல் கடிதங்களைத் தானே எழுதினான். அவனுக்குக் கொஞ்சம் இலக்கிய அறிவு உண்டு. அதற்குப் பயன்படக் கூடிய புத்தகங்களையும் வாங்கி வைத்துக் கொண்டு,

மன்னாரின் வீட்டிலிருந்தபடி, சபிதாவின் பெயரில் கடிதங்களைத் தயார் செய்து, மன்னார் மூலம் தினேஷுக்குக் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்தான்.

முட்டாள் தினேஷ், காதல் பித்துக் கண்ணை மறைக்க அந்தக் கடிதங்கள் சபிதா எழுதியவை தான் என்று நினைத்து இன்பக் கனவுகளில் மிதந்தான். சபிதா தன் உறவினர் வீட்டுக்குப் போகும் தினத்தைத் தெரிந்து கொண்டதும், அதே தினத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அவனைத் தனியே வரும்படி கடிதம் அனுப்பி வைத்தான். தினேஷ் வந்ததும் கொலை செய்து விட்டான். கொலை செய்வதற்கு உபயோகப்படுத்திய அரிவாளை ஓரிடத்தில் புதைத்து விட்டுத் திரும்பி விட்டான்.

தினேஷின் வீட்டில் சபிதாவின் கடிதங்கள் கிடைக்கும், அவனுக்கும் அவளுக்குமுள்ள கள்ளக் காதலை முறியடிப்பதற்காகச் சபிதாவின் உறவினர்கள் தினேஷை ரகசியமாக வரவழைத்துக் கொலை செய்து விட்டார்கள். இப்படித்தான் போலீஸில் முடிவு செய்வார்கள் என்று சோமு நினைத்திருந்தான்.

அவன் துரதிர்ஷ்டம், இன்ஸ்பெக்டர் தாமஸுக்குச் சபிதா நல்ல பெண் என்ற எண்ணம் எடுத்த எடுப்பிலேயே ஏற்பட்டுவிட்டது.

சபிதாவின் வாழ்வையே குலைத்திருக்கக் கூடிய விஷயம், பம்பாயிலுள்ள அவளுடைய கணவனுக்கு எட்டாமலே, அவளுடைய மானம் தப்பி விட்டது. தாயாரம்மாள்தான் பாவம், இரண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்துவிட்டு, ஏராளமான சொத்துக்களைக் கைவசம் வைத்துக் கொண்டு, நரக வேதனையில் ஆழ்ந்தாள்.

★★★

சுதீர் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டான். ''மாயப்பனாவது வெண்டைக்காயப்பனாவது! இந்த ஜன்மத்தில் அகப்படுமென்று தோன்றவில்லை'' என்றான் சலிப்புடன்.

அவனைப் பார்ப்பதற்காக வந்தான் பாலா.

அவன் வதனத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்தன. ''சுதீர், நீயே இப்படிச் சொல்லிவிட்டால் எப்படி? இதை ஒரு வழியாகச் செய்து தராவிட்டால் அப்பாவின் உயிருக்கு ஆபத்து என்று அவன் சொல்லி யிருக்கிறான். முரடன், எது வேண்டுமானாலும் செய்து விடுவான்'' என்று சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது.

வாசல் வரை போய்விட்ட சுதீர் நின்று திரும்பி அவளைப் பார்த்தான். அவளுடைய கலங்கிய கண்கள் அவன் மனத்தை நெருடியது. என்னவோ ஒரு தாகத்தில் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொண்டு, அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

அவர்களுடைய உறவு நிஜமாகவே எலியும் பூனையுமாக இருந்திருந்தால், அவள் அவனைப் பளீரென்று கன்னத்தில் அறைந்திருப்பாள். இப்போதுதான் அவளுக்கே புரிந்தது- உள்ளூர மனமார அவனை இத்தனை நாளும் காதலித்து வந்திருக்கிறோம் என்பது. சில நிமிடங்களுக்கு அந்த அணைப்பில் மெய்ம்மறந்திருந்தவள் பிறகு மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டாள். நெஞ்சில் பரவசமும் பயமும் ஒரே சமயத்தில் ஆக்கிரமித்துக் கொண்டன.

'ஐ லவ் யூ பாலா. உனக்காக நான் எதையும் செய்வேன். கவலைப்படாதே'' என்று அவள் கூந்தலை வருடிக் கொடுத்து, ''மறுபடியும் தேடலாம். பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்'' என்றவன், அவள் இதழ்களில் மேலோடு ஒரு முத்தம் பதித்துவிட்டு கிளம்பினான்.

அன்று மாலை அவள் டி.வி.நிலையத்தை அடைந்த போது, ரிசப்ஷனிஸ்ட் ''பாலா, உங்களுடைய ஃபேன் மெயில்'' என்று ஐந்து கடிதங்களைத் தந்தாள்.

வாரம் பத்துப் பதினைந்து ரசிகர் கடிதங்களாவது அவளுக்கு வருவது வழக்கம் கண்ணியமானவற்றுக்கு நன்றி கூறிப் பதில் எழுதுவாள். அசட்டுத் தனமாயிருப்பவைகளைச் சிரித்துக் கொண்டே கிழித்தெறிந்து விடுவாள்.

இன்று வந்த கடிதங்களில் ஒன்று வித்தியாசமாக இருந்தது.

''குமாரி பாலா அவர்களுக்கு,

வாரம் தவறாமல் உங்கள் முகத்தையும் குரலையும் டி.வி.யில் ரசித்து வரும் ஆயிரக்கணக்கான பேரில் நானும் ஒருவன்.

டி.வி. பார்க்கிறேன் என்பதால் என்னைப் பணக்காரன். என்று நினைத்து விடாதீர்கள். சாப்பாட்டுக்கில்லாத ஏழை இளைஞன். ஆனால் பட்டதாரி. டி.வி. விற்பனை செய்யும் கடைகளுக்கு, நீங்கள் தோன்றும் நேரம் பார்த்துப் போவேன். ஒரு டிவி வாங்கப் போகிறவன் மாதிரி நடித்து, உங்கள் முகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி விடுவேன்.

உங்கள் குரலைக் கேட்கக் கேட்க, நீங்கள் இரக்க உள்ளம் படைத்தவர் என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. எப்படியாவது எங்கேயாவது எனக்கு ஒரு வேலை தேடிக் கொடுங்கள் அல்லது வேறு எந்த விதத்தில் உதவி செய்ய முடிந்தாலும் செய்யுங்கள்.

நன்றியுடன், ஜி. கண்ணன்.'

கையெழுத்துடன், தன் முகவரியையும் தந்திருந்தான் அந்த இளைஞன்.

இந்த மாதிரி கடிதங்கள் அவ்வப்போது அவளுக்கு வருவது வழக்கம்தான். முடியும்போது ஐந்தோ பத்தோ பணம் அனுப்பி வைப்பாள். வேலை, உத்தியோகமெல்லாம் அவளால் எப்படி வாங்கிக் கொடுக்க முடியும்?

''என்ன பாலா, கையிலே சுளுக்கா?'' என்ற குரல் கேட்டதும் நின்றாள்.

'யூத் புரொக்ராம்' நடத்தும் அனந்துதான்.

''சுளுக்கா? ஒன்றும் இல்லையே சார்?''

''பின்னே விஷ்கூடப் பண்ணாமல் போய்க் கொண்டிருக்கிறாயே?''

அவள் சிரித்து, ''மன்னிக்கணும். இந்தக் கடிதத்தைப் பாருங்கள். படித்ததும் பாவமாயிருந்தது. அந்த யோசனையில் உங்களைக் கவனிக்கவில்லை'' என்று சொல்லி, அந்தக் கடிதத்தைக் கொடுத்தாள்.

வாங்கிப் பார்த்த அனந்து சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். ''டி.வி.யினால் சில நல்ல காரியங்களும் நடைபெறுவது உண்டு'' என்று மெதுவே சொன்னார். ''இந்தப் பையனுக்குக் கடிதம் போட்டு வரவழைக்கிறேன். யூத் புரொக்ராமில், வேலையில்லாமல் திண்டாடும் கஷ்டத்தைப்பற்றிப் பேட்டி கண்டு பேச வைக்கிறேன். யாராவது வசதியுள்ள தொழிலதிபர் கேட்டு இவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுப்பார். முன்னே கூட அந்த மாதிரி இரண்டொருமுறை நடந்திருக்கிறது'' என்றார்.

''தாங்க்ஸ் சார், தாங்க்ஸ் எ லாட்'' என்று சொல்லி அவரிடம் விடைபெற்றுக் கொண்டாள் பாலா.

நியூஸ் எடிட்டரின் அறைக்குள் நுழைந்த போதும், டெக்ஸ்டை வாங்கிக் கொண்ட போதும், ஒருமுறை படித்துப் பார்த்துக் கொண்ட போதும், ஸ்டூடியோவுக்குள் செய்தி

வாசிக்க உட்கார்ந்த போதும், ஒரு நல்ல காரியம் செய்தோம் என்ற மன நிறைவும் சந்தோஷமும் ஏற்பட்டிருந்தன. மாயப்பனைப் பற்றி அவள் மறந்தே போனாள்.

ஆனால் சுதீர் மறக்கவில்லை. அவள் வருவதற்கு வெகு நேரம் முன்பே, ஸ்கூட்டரில், டிவி நிலையத்தைச் சுற்றிச் சுற்றி அவன் வந்து கொண்டிருந்தான். ஆனால் பாலாவைச் சந்திப்பதற்காக அல்ல. மாயப்பனைச் சந்திப்பதற்காக.

இன்று பாலா செய்தி வாசிக்கிற தினம் என்று தெரிந்துகொண்டு, பக்கத்தில் ஏதாவதொரு பொது டெலிபோனிலிருந்து அவன் பேசக்கூடும் என்று அவன் எதிர் பார்த்தான்.

அருகிலிருந்த புதிய கட்டிடங்கள், எம்.எல்.ஏ. ஹாஸ்டல், கடை கண்ணி எல்லா இடங்களிலும் அவன் கண்கள் மேய்ந்து கொண்டிருந்தன. ரௌடித் தோற்றமுள்ள எவனேனும் தென்படுகிறானா என்று பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அவன் பார்வை சட்டென நின்றது.

அதோ அந்த டெலிபோன் கூண்டுக்குள் –

## 20

இருட்டி விட்டதால் சுதீரால் அந்த ஆளைக் கூர்மையாகப் பார்க்க முடியவில்லை. எதை வைத்து இவன்தான் அந்த மாயப்பன் என்ற முடிவுக்கு வந்தோம் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ ஓர் உள்ளுணர்வுதான் அப்படிச் சொல்லியது.

ஸ்கூட்டரை ஒரு மரத்தின் பின்னே மறைவாக நிறுத்திவிட்டு, அந்த டெலிபோன் கூண்டை நெருங்கினான்.

கிட்டே சென்றபோது அவன் தன் பேண்ட் பையில் ஓர் நாணயத்துக்காகத் துழாவுவது தெரிந்தது. கிடைத்ததுப் எடுத்துப் பெட்டியில் போட்டான். ஆஜானுபாகுவான பயங்கர உருவமாக இருக்காமல், மெல்லியவனாக, இளைஞனாக இருந்தான். சாதாரணமாய் ஒரு தொழிலாளி போலக் கசங்கிய பேண்ட், சட்டை அணிந்திருந்தான். முடி பம்மென்று வளர்ந்திருந்தது.

சுதீர் அவனை நெருங்கிய சமயம் அவனுக்குக் கனெக்ஷன் கிடைத்துவிட்டது.

''ஹலோ, நியூஸ் ரீடர் மிஸ் பாலா இருக்காங்களா?'' என்று அவன் வினவிக் கொண்டிருந்தான்.

''நீங்கள் யார்?'' என்று மறுமுனையில் கேட்டிருக்க வேண்டும். ''பாலாவின் ஃப்ரண்டு'' என்றான் தொடர்ந்து.

சுதீருக்கு ஆத்திரம் வந்தது. பாவம், பாலா. ஒரு 'ஃப்ரண்டு' என்றவுடனே மாயப்பன்தான் என்று தெரிந்து கொண்டு விடுவாள். அவள் முகம் இருளடையும். கண்கள் கலங்கும். மார்பு படபடக்கும். பேசவும் முடியாமல் பேசாமல் இருக்கவும் முடியாமல் வேதனைப்படுவாள்... அவளுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கும்போதே சுதீருக்குக் கோபம் பொங்கியது. சென்ற தடவை அவளை இறுக்கி அணைத்து முத்தமிட்ட பின்னர், தனக்கும், அவளுக்கும் இடையே ஒரு துரும்பு நுழைவதைக்கூடத் தாள முடியாது என்று அவனுக்கு தோன்றிவிட்டது. அவளுடைய விழி முனையில் பொட்டு நீர் துளிர்த்தால் கூட அதற்குக் காரண மானவனை வெட்டிப் போடக் கூடிய அளவுக்குத் தனக்கு உரிமை ஏற்பட்டு விட்டதென்று அவன் நம்பினான்.

கண்மணி பாலாவைக் கடந்த இரண்டு மாதமாக இந்த மாயப்பன் எப்படியெல்லாம் துன்புறுத்தியிருக்கிறான்! நினைக்கும்போதே அவனுக்குள் பிரளய கோபம் உதித்தது.

டெலிபோன் கூண்டின் சாத்தியிருந்த கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். கோபத்தை அடக்கிக் கொண்டான். அமைதியான, கிண்டலான குரலில், ''ஹலோ மாயப்பன்! மிஸ் பாலாவுடன் பேசுகிறீர்களா? பேசிவிட்டு என்னிடம் கொடுங்கள். நானும் இரண்டு வார்த்தை பேசவேண்டும்'' என்றான்.

விருட்டென்று திரும்பினான் மாயப்பன். இந்த இடையூறை அவன் எதிர்பார்க்கவே இல்லை. சுதீரின் தோற்றமும் பேச்சுத் தோரணையும் அவனைத் திடுக்கிட வைத்தன. அவன் தடுமாறிய அந்த ஒரு வினாடிக்குள் அவனைக் கையைப் பிடித்து முறுக்க எண்ணினான் சுதீர். தன் உடல் வலிமையும் யோகாசனப் பயிற்சிகளும் இந்த ஆளை மடக்கத் தாராளமாய்ப் போதும் என்று அவன் நம்பினான்.

ஆனால் கண் இமைக்கும் நேரத்துக்குள் மாயப்பன் சமாளித்துக் கொண்டு விட்டான். மூளையும் சுறுசுறுப்பாக இயங்கியதால் சுதீர் யார், என்ன நோக்கத்துடன் வந்திருக்கிறான் என்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்டு விட்டான். சரேலென்று சுதீரைக் கீழே தள்ளினான். ஆனால் அவனுடன் சண்டை போடவோ தாக்கவோ நிற்கவில்லை. ஒரே தாவில் டெலிபோன் கூண்டை விட்டு வெளியேறினான்.

விழுந்தவன் எழுந்து கொண்டபோதுதான் சுதீர் கவனித்தான், டெலிபோன் கூண்டின் மறுபுறத்தில் மாயப்பன் தன் மோட்டார் பைக்கை நிறுத்தி வைத்திருப்பதை. குபீரென்று அதில் தாவி, உதைத்து, சீறிக்கொண்டு கிளம்பி விட்டான் மாயப்பன்.

சுதீர் உடனே தன் ஸ்கூட்டரை எடுத்து அவனைப் பின் தொடர்ந்து துரத்த எண்ணினான். ஆனால் சமயம் பார்த்து அவனுடைய ஸ்கூட்டர் நம்பிக்கைத் துரோகம் செய்து

விட்டது. நினைத்த மாத்திரத்தில் ஸ்டார்ட் ஆக மறுத்து, மக்கர் செய்தது. கடைசியில் ஒருவழியாய் ஸ்டார்ட் ஆனபோது மாயப்பன் எந்தத் திசையில் மறைந்தான் என்பது கூடத் தெரியவில்லை.

என்ன மடத்தனமாக அந்த ஆளைத் தப்ப விட்டு விட்டோம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டவனாக மறுபடி டெலிபோன் கூண்டை நெருங்கியபோது பாலா என்ன கவலைப்பட்டுக் கொண்டிருப்பாளோ என்ற எண்ணம் ஏற்பட்டது. 'உங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார்கள். யாரோ ஃப்ரண்டாம், என்று அழைத்திருப்பார்கள். அவளும் மாயப்பன்தான் என்று ஊகித்திருப்பாள். பேசுவதற்காக ரிசீவரைக் கையில் எடுக்கும்போது ஒரு பதிலும் வந்திருக்காது. குழம்பிக் கொண்டிருப்பாள்.

அவளைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்லிவிட்டால் என்ன?

ஸ்கூட்டரை வெளியே நிறுத்திவிட்டு மறுபடியும் அங்கே நுழைந்தான். டயல் செய்யுமுன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

மணி எட்டடித்து மூன்று நிமிடம் காட்டியது. சரியாய்ச் செய்தி படித்துக் கொண்டிருக்கும் நேரம். பத்துப் பதினைந்து நிமிடத்தில் அவள் வெளியே வந்துவிடுவாள். நேரிலேயே விளக்கிக் கொள்ளலாம்.

ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிய சமயம் கீழே கிடக்கும் ஒரு காகிதத்தைப் பார்த்தான்.

அவன் உள்ளம் ஜிவ்வென்று துள்ளியது.

அது ஏதோ ஒரு ஷாப் தந்த பில். என்ன பொருள் வாங்கினார்கள் என்பது எழுத்து சரியாக விளங்கவில்லை. ஆனால் வாங்கியவரின் முகவரி தெளிவாய்த் தெரிந்தது.

சூளையில் ஒரு விலாசம். மாயப்பன், 12 சூடாமணி சந்து.

டெலிபோனுக்குப் போடுவதற்காகச் காசை எடுத்தபோது மாயப்பனின் பாண்ட் பையிலிருந்து இது விழுந்திருக்கவேண்டும்.

அட்ரஸை மறுபடி பார்த்தான் சுதீர்.

நாளை அந்த முகவரிக்குப் போய் மடக்கலாம் என்று தான் முதலில் தோன்றியது. ஆனால், ஆளைத் தெரிந்துகொண்டு விட்டதால் இனி அங்கே இருக்க வேண்டாம் என்று வேறெங்காவது ஓடினாலும் ஓடி விடுவான்.

அத்துடன் இப்போது தனக்கிருக்கும் உற்சாகமும் கோபமும் ஆத்திரமும் நாளை இருக்குமா என்று சுதீருக்குச் சந்தேகமாயிருந்தது, கையோடு கையாக மடக்கினால்தான் நல்லது என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவன் சூளையை அடைந்தபோது மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டது. சந்து பொந்துகளில் தேடி, சூடாமணி சந்து என்பது எங்கேயிருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தபோது மணி பத்து ஆகியிருந்தது.

பல குடித்தனங்கள் உள்ள சின்ன வீடு அது. மாயப்பன் என்று ஒருத்தன் மாடியில் குடியிருப்பதே கீழேயிருக்கும் பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

அறைக்குள்ளிருந்து பீடிப் புகை குப்பென்று வந்து கொண்டிருந்தது. சிரிப்புச் சத்தம் பலமாகக் கேட்டது. லேசாகச் சாத்தியிருந்த கதவை ஒற்றைக் காலால் உதைத்துத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். தன்னந்தனியாகப் போவது புத்திசாலித்தனமானதுதானா என்று ஒரு நிமிடம்

தோன்றினாலும் மறு வினாடி அந்த எண்ணத்தை ஒதுக்கினான்.

மாயப்பனும் இன்னும் மூன்று கூட்டாளிகளும் காசு வைத்துச் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். தரையில் கிழிசல் ஜமுக்காளம் விரித்து அதில் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு கிளாஸ் புட்டிகளும் டம்ளர்களும் இருந்தன.

சாராயமாக இருக்க வேண்டும். பீடி நாற்றத்துடன் சாராயத்தின் மணமும் கலந்து வீசின. பெண்கள் வசிப்பதற்கான புடவையோ பாத்திரம் பண்டங்களோ கண்ணில் படவில்லை. அவர்கள் தலைக்கு மேல் மங்கலான, அழுக்கான பல்பு ஒளியைச் சொட்டிக் கொண்டிருந்தது.

இடுப்பில் கையை வைத்துக்கொண்டு, கால்களை அகல விரித்தபடி அச்சமில்லாமல் நின்று கொண்டிருக்கும் சுதீரை நாலு பேரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

''என்ன பார்க்கிறே மாயப்பா? எப்படி இங்கே வந்தேனென்றா? நீதான் க்ளூ கொடுத்தாய்?'' அந்த ஷாப் பில்லைச் சுருட்டி அவன் முகத்தில் எறிந்தான் சுதீர். ''கொலை, கொள்ளை, பிளாக்மெயில் அது இது என்று மிரட்டுகிறவர்களுக்கு வெறும் வாய்ச் சவடால் மட்டும் போதாது. கொஞ்சம் இங்கேயும் இருக்கவேண்டும்'' என்று நெற்றிப் பொட்டைத் தட்டிக் காட்டினான். ''இல்லாவிட்டால் டெலிபோன் பூத்தில் உன் விலாசத்தை கண்டபடி போட்டுவிட்டு வருவாயா?''

''டேய்!'' என்று மாயப்பனின் கூட்டாளிகள் மூன்று பேரும் ஏககாலத்தில் அவன் மீது பாய வந்தார்கள்.

''உஷ்! இந்த உதாரையெல்லாம் பொம்பளைப் பசங்ககிட்டே வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று

கையமர்த்தினான் சுதீர். ''இங்கே வரப்போகிறேன் என்று போலீசில் முன்னதாகவே சொல்லிவிட்டுத் தான் வந்திருக்கிறேன்'' என்று வாய்க்குத் தோன்றிய பொய்யை அவிழ்த்து விட்டான். ''தெருக் கோடியில் அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். என் மீது ஒரு கீறல் பட்டாலும் சரி, அடுத்த நிமிஷம் நீங்கள் கம்பி எண்ண வேண்டியிருக்கும்.''

அதுவரை பேசாதிருந்த மாயப்பன் மெல்ல எழுந்தான். அறையின் மூலையிலிருந்த ஒரு முக்காலியை எடுத்து வந்துபோட்டு, ''உட்கார். உட்கார்ந்து, நீ யார், எங்கே வந்தாய் என்கிறதைச் சொல்லு'' என்றான்.

அவன் பேச்சில் நிதானமும் இருந்தது. கண்டிப்பும் தென்பட்டது.

சுதீரும் அதே நிதானத்துடன், ''பாலா என்கிற பெண்ணை வாரத்துக்கொரு முறை கூப்பிட்டு மிரட்டிக் கொண்டிருக்கிறாயே, அது சம்பந்தமாகப் பேச வந்திருக்கிறேன்'' என்றான்.

''அவளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''தாலி சம்பந்தம். இன்னும் கொஞ்ச நாளில் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவன் நான்.''

அந்த மூன்று பேரும் கொஞ்சம் விலகிக் கொண்டார்கள். மாயப்பன் நெருங்கிவந்து சுதீரை முகத்தில் அடிக்கப்போவது போலக் கையை உயர்த்தினான். பிறகு யோசனையுடன் தழைத்துக் கொண்டான். ''என் குடும்பக் கதை வெளியாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அந்தப் பெண்ணின் பொறுப்பு. அதைத்தான் அவளிடம் சொல்லியிருக்கிறேன். நடுவிலே நீ யார்?''

''நான் யார் என்பதைத்தான் முதலிலேயே சொல்லி விட்டேனே?'' என்றான் சுதீர். ''உனக்குத் தில் இருந்தால் நேரே அவள் அப்பாவிடம் போ. மிரட்டிப் பார். என்ன விளைவு ஏற்படுகிறதோ அனுபவி. அவர் ஹார்ட் பேஷண்ட் என்பதை ஆதாயமாக வைத்துக் கொண்டு ஒரு பெண் பிள்ளையிடம் ஏன் பாய்ச்சல் காட்டுகிறாய்?''

''அது என் இஷ்டம்'' என்றான் அவன் வீறாப்பாக.

''பிறகு என் இஷ்டம் என்ன என்பதையும் காட்டுவேன்.''

''என்ன பண்ணுவாய்?''

''கொலை! கொலையே பண்ணி விடுவேன்! ஜாக்கிரதை! இன்னொரு தரம் பாலாவை நீ டெலிபோனில் கூப்பிட்டாலும் சரி, மிரட்டினாலும் சரி அத்தோடு தொலைந்தாய். அதுதான் நீ டயல் பண்ணுகிற கடைசி போன்! உஷார்!''

கொலைக்கு அஞ்சாத நாலு முரடர்களின் நடுவே எப்படித் தன்னால் அத்தனை தைரியமாய்ப் பேச முடிந்தது என்று அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. அதை விட ஆச்சரியம் –

கீழே வந்தபோது, அறைவாசலில் கூடியிருந்த கும்பல்

அவன் மாடியேறிய வேகத்தையும் போட்ட கூச்சலையும் கேட்டு, கீழ்வீட்டுக் குடித்தனக்காரர்கள் பல பேர் வேடிக்கை பார்க்கச் சூழ்ந்திருந்தார்கள். அவர்களை விலக்கிக் கொண்டு வெளியே வந்தான். வாசலில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரை வேகமாய் ஓர் உதை உதைத்து ஆத்திரத்துடன் முரட்டுத்தனமாகத் திரும்பியவன் –

இருட்டில் வந்து கொண்டிருந்த ஒரு சைக்கிள் ரிக்ஷாவின் மேல் ஓர் இடிஇடித்து விட்டான். ரிக்ஷா

கவிழ்ந்தது. நல்லவேளை, அதில் யாரும் இருக்கவில்லை. ரிக்ஷாவை ஓட்டி வந்த பையன் சட்டெனக் குதித்து விட்டதால் அவனுக்கும் காயம் படவில்லை.

ஆனால் ஐந்து நிமிடத்துக்குள் சரசரவென்று கூட்டம் கூடிவிட்டது. ''வண்டி உடைஞ்சு போச்சுய்யா! பிடிய்யா அந்த ஆளை!'' என்று எவனோ குரல் கொடுத்தான். உடனே ஆளுக்கு ஆள் கூச்சல் போடத் தொடங்கினார்கள்.

''உஷ்! எவனாவது கிட்டே வந்தீர்களானால் தெரியும் சேதி! லைட் இல்லாமல் வந்தது அவன் தப்பு! இத்தனை சின்னப் பையனுக்கு லைசன்ஸ் இருக்கிறதா என்பதே சந்தேகம். வேணுமானால் போலீஸ் ஸ்டேஷனுக்கு வாங்க, பேசிக் கொள்ளலாம்'' என்றான் சுதீர்.

கும்பல் சற்றுப் பின்வாங்கியது. சுதீர் தன் பர்ஸைத் திறந்து, ''இந்தாடா தம்பி, போனால் போகிறது. வைத்துக்கொள்'' என்று இரண்டு பத்துரூபாய்த் தாளைத் தந்துவிட்டு ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டான்.

பையன் நோட்டைக் கண்ணில் ஒற்றிக் கொள்ள, கும்பல் அச்சத்துடன் வழிவிட்டது.

★★★

''வாப்பா. நீ செய்வது கொஞ்சம் கூட நன்றாயில்லை, சுதீர். மணி பதினொன்றோ பன்னிரண்டோ ஆகப் போகிறது. எங்கேதான் சுற்றுகிறாய் அப்படி?'' என்று கடித்து கொண்டாள் சுதீரின் அம்மா.

''கம்மென்றிரு அம்மா. பசி உயிர் போகிறது. முதலில் சோற்றைப் போடு. பிறகு மற்றதெல்லாம் சொல்கிறேன்'' என்றான் அவன்.

அதன் பின் அவன் அம்மா எதுவும் பேசவில்லை.

வயிறு நிரம்பச் சாப்பிட்ட பின் மொட்டை மாடியில் போய்ப் படுத்துக் கொண்டான்.

அன்றைய சம்பவங்களை எண்ணிப் பார்த்துக் கொண்டபோது அவன் உதட்டில் புன்னகை பூத்தது. மாயப்பனைச் சரியானபடி மடக்கி விட்டோம் என்று பெருமிதம் உதித்தது. இனி அவன் பாலாவின் வழிக்கு வர மாட்டான்.

காலையில் எழுந்ததும் பாலாவைப் போய்ப் பார்த்து எல்லாவற்றையும் சொல்ல நினைத்தான். ஆனால் முந்தின இரவு ரிக்ஷாவுடன் மோதியதில் ஸ்கூட்டருக்கு எங்கேயோ ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது. கூப்பிட்ட குரலக்கு அது ஏனென்று கேட்கவில்லை. பகல் பூரா அவனுக்கு வேறு வேலைகள் இருந்தன.

சாயந்தரம், தன் வழக்கமான நேரத்துக்குத்தான் பாலாவின் வீட்டை அடைந்தான். ஜனார்த்தனம் வாக்கிங் போயிருந்தார்.

ஃப்ரிஜ்ஜிலிருந்து கூல் ட்ரிங்க் எடுத்து வந்து தந்தாள் பாலா. இருவரும் பால்கனியில் உட்கார்ந்தார்கள்.

''உனக்கு ஒரு நல்ல செய்தி'' என்றான் சுதீர்.

''என்ன?''

''நேற்று அந்த மாயப்பனைப் பார்த்து,மடக்கி, மிரட்டிவிட்டு வந்திருக்கிறேன். இனி அவன் உனக்குப் போனே பண்ண மாட்டான்'' என்றவன் விவரங்களையும் சொன்னான்.

''தாங்ஸ் சுதீர். ஆனால் இந்த மாதிரி நீ அனாவசிய ரிஸ்க்கெல்லாம் எடுத்துக் கொள்ளாதே. ப்ளீஸ், எனக்காக'' என்று அவள் அவன் கைகளைப் பற்றிக் கொண்ட அதே நேரம்...

வாசலில் ஒரு போலீஸ் ஜீப் வந்து நிற்பது தெரிந்தது. அப்பாவின் போலீஸ் நண்பர்கள் எப்போதாவது வருவதுண்டு. அவர்களை வரவேற்பதற்காக இருவரும் கீழே இறங்கிச் சென்றார்கள்.

வந்த போலீஸ் அதிகாரியின் முகத்தில் நட்புறவு தென்படவில்லை. ''நீங்கள்தானே சுதீர் என்பது?'' என்று தோரணையான குரலில் கேட்டார்.

''ஆமாம்'' என்றான் அவன்.

''நேற்று சூளையில் மாயப்பன் என்பவனைக் கொலை செய்வேன் என்று நீங்கள் மிரட்டியிருக்கிறீர்கள். பிறகு ஒரு சைக்கிள் ரிக்ஷா மீது மோதியிருக்கிறீர்கள். உண்மை தானே? ரிக்ஷாக்காரன் உங்கள் ஸ்கூட்டர் நம்பரைச் சொன்னான். அதை வைத்துத்தான் உங்களை கண்டு பிடித்து இங்கே வந்திருக்கிறோம்.''

சுதீருக்கு ஒன்றும் புரியவில்லை. ''சரி...என்ன விஷயம்?''

''ஐயாம் ஸாரி. உங்களை கைது செய்ய வேண்டி யிருக்கிறது. நேற்றிரவு மாயப்பன் கொலை செய்யப் பட்டிருக்கிறான்'' என்றார் போலீஸ் அதிகாரி.

## 21

**சு**தீரைப் போலீஸ் அதிகாரி கைது செய்து அழைத்துச் செல்ல, பாலா கையைப் பிசைந்துகொண்டு நிற்க, சமையல்கார அம்மாள் ஏதும் புரியாமல் விழிக்க...!

அதே சமயத்தில்...

பாலாவின் அப்பா ஜனார்த்தனம் டாக்டர் சண்முகவேலின் ஈ ஸி ஜி கிளினிக்கில் ஏர்கண்டிஷன்

அறையில் மல்லாந்து படுத்திருந்தார். அவருடைய இடுப்பிலும் முழங்கால்களிலும் ஒயர்கள் பொருத்தப் பட்டிருந்தன. இருதயத் துடிப்பைக் காட்டும் காகிதம் படபடவென்று ஓடிக்கொண்டிருந்தது.

''மூச்சைக் கொஞ்சம் இழுத்துப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றார் டாக்டர்.

அதைப் பதிவு செய்து கொண்டபின் ''மூச்சை விடுங்கள்'' என்றார்.

பிறகு ''எழுந்திருங்கள்'' என்றார்.

நீளமான டேப்பில் கூர்மையும் வளைவுமான கோடுகள் கோலம் போட்டிருந்தன.

டாக்டரைக் கவலையுடன் பார்த்தவாறு முக்காலியில் இரு கால்களையும் வைத்துக்கொண்டு மேஜையை விட்டுக் கீழே இறங்காமலே டாக்டரை கவலையுடன் பார்த்தவாறிருந் தார் ஜனார்த்தனம்.

டாக்டர் சண்முகவேல் சட்டென்று பேச மாட்டார். தொடர்ந்து பேச மாட்டார். நின்று நிதானித்து, இடைவெளி விட்டுத்தான் பேசுவார். முகமும் சிலை மாதிரி தான் இருக்கும். அவரிடமிருந்து முடிவைத் தெரிந்து கொள்ளக் காத்திருக்கும் அந்தச் சில நிமிடங்களிலேயே பாதிப் பிராணன் போய் விடும் என்று சில நோயாளிகள் சொல்வதுண்டு.

ஆனால் இந்தத் தடவை அவர் ஜனார்த்தனத்தை அந்த மாதிரி பதைக்க வைக்கவில்லை. ஈ ஸி ஜி டேப்பைப் பார்த்ததுமே அவர் முகத்தில் புன்னகை படர்ந்து மலர்ந்தது. ''வாஸ்ட் இம்ப்ரூவ்மெண்ட்'' என்றார். ''கங்கி ராசுலேஷன்ஸ்.''

''தாங்க் யூ டாக்டர்'' என்று ஜனார்த்தனமும் வெளிப்படையான புன்சிரிப்பில் தன் மகிழ்ச்சியைக்

காட்டிக்கொண்டார். ''நான் இனிமேல் ஹார்ட் பேஷண்ட் இல்லை? அப்படித்தானே?''

''ஆமாம். அதற்காக இருபது வயசுக் காளை மாதிரி தாவலாம், குதிக்கலாம், கும்மாளம் போடலாம் என்று நினைக்காதீர்கள்! அபாய கட்டத்தை நன்றாய்க் கடந்து விட்டீர்கள் என்றுதான் அர்த்தம். இனிமேல் நார்மல் லைஃப். ஆனால் கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருந்தால் போதும். இருங்கள், வேறு மருந்து எழுதித் தருகிறேன்'' என்றவர், நீளமாய்ப் பிரிஸ்கிரிப்ஷன் பட்டியலொன்று தயாரித்துத் தந்தார்.

கிளினிக்குக்கு எதிர்ச் சாரியிலேயே இருந்த பார்மஸியில் மருந்து வாங்கிக் கொண்டு தோள்பையில் மாட்டிக் கொண்டபோது ஜனார்த்தனத்தின் மனம் உற்சாகத்தால் துள்ளியது. திரும்புகையில், கவுண்ட்டர் ஓரமாக இருந்த டெலிபோனைக் கண்டு ஒரு நிமிடம் நின்றார். பாலாவைக் கூப்பிட்டு, டாக்டர் சொன்னதைச் சொல்லலாமா என்று யோசித்தார். ஆனால் நேரில் சென்று ப்ளஸென்ட் ஸர்ப்ரைஸாகத்தான் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

பாவம் பாலா, அவருக்கு இந்த இருதய நோய் வந்தது முதல் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்! அதிர்ச்சியான செய்தி எதுவும் பேசாதீர்கள் என்று டாக்டர் சொன்னாலும் சொன்னார், அந்த விஷயத்தில் எத்தனை கண்ணும் கருத்துமாக எச்சரிக்கையாக இருந்திருக்கிறாள்! ஒரே ஒரு நாள் அவர் தன் சிநேகிதர்களுடன் மகாபலிபுரம் போயிருந்தபோது, இங்கே லம்பர் ரூமில் சமையற்கார அம்மாளுக்காக ஏதோ பழைய தகர டப்பாவை எடுத்துக் கொடுக்கப் போக, அந்த இருட்டு அடைசலில் ஒரு தேள் அவளைக் கொட்டிவிட்டதாம். சின்னத் தேள்தான் என்றாலும்

மிகவும் துடித்துப் போய், தானே பக்கத்துத் தெரு டாக்டரிடம் போய் இஞ்செக்ஷன் போட்டுக்கொண்டு சமையற்காரியும் வேலைக்காரியும் சொன்னபடியெல்லாம் வெங்காயத்தையும் துளசியையும் அரைத்துத் தடவிக்கொண்டு என்னென்னவோ அவஸ்தைகள். சாயந்திரம் அவர் திரும்பி வந்தபோது மூச்சுக் காட்டவில்லை. புன்சிரிப்புடன், அவருடைய பொழுது எப்படிக் கழிந்தது என்பதை விசாரித்து, படுக்கப் போகும் வரை அவருக்குத் தேவையானவைகளைக் கவனித்து அனுப்பினாள். நாலு நாள் கழித்துத்தான் வேலைக்காரி மூலம் தற்செயலாய்த் தெரிந்து கொண்டார். 'என்னம்மா நீ, என்னிடம் சொல்லவேயில்லை அன்றைக்கு?' என்று கேட்டால், 'அதென்னப்பா பிரமாத விஷயம்? நீங்கள் அனாவசியமாய்ப் பதறுவீர்கள். உங்கள் உடம்புக்கு ஆகாது' என்றாள். வீட்டில் கியாஸ் தீர்ந்து விட்டால்கூட அவருக்குத் தெரியாமல் அவர் வெளியே போயிருக்கிறபோதுதான் கம்பெனிக்குப் போன் செய்வாள். கடுகத்தனை விஷயத்துக்காகவும் அவர் அலட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கும் பெண் அவள்.

உடனே போய்ப் பாலாவிடம் சொல்ல வேண்டும். 'எனக்கு இருதய நிலைமை ஜம்மென்று சீராகிவிட்டதாம். இனிமேல் கவலையே இல்லையாம்' என்று சொல்ல வேண்டும். இனிமேல் இதை மறைக்கிறேன் அதை மறைக்கிறேன் என்று எண்ணி உன்னையே நீ வருத்திக் கொண்டிருந்தாயே, அதற்கெல்லாம் தலை முழுகு' என்று சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் தீர்மானித்துக்கொண்டு வீட்டை அடைந்தவருக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சி! வாசலிலேயே கண்ணீரும் கம்பலையுமாக பாலா நின்றிருந்தாள். பின்னாடி வேலைக்காரர்கள். அக்கம்பக்கத்து வீட்டார் நாலைந்து பேர் கூடிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்ன இதெல்லாம்?

''அப்பா...'' என்று விசும்பி, உடனே கண்ணை துடைத்துக் கொண்டு ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துச் சென்றாள். ''அப்பா, நீங்கள் அதிர்ச்சி அடையாமலிருந்தால் எல்லாம் சொல்கிறேன்'' என்று பீடிகை போட்டதும் அவருக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ''இதோ பாரம்மா, நான் அந்தக் கட்டத்தையெல்லாம் தாண்டி விட்டேன். நீ நடந்ததைச் சொல்லு'' என்றார்.

மாயப்பன் போன் செய்து மிரட்ட ஆரம்பித்ததையும் தானும் சுதீருமாக அவருடைய கட்டுரைகளைத் தேடியதையும் சொல்லி, சற்று முன் சுதீரைக் கொலைக் குற்றம் சாட்டிப் போலீஸார் அழைத்துச் சென்றதையும் விவரமாகச் சொல்லி முடித்தாள் அவள்.

ஜனார்த்தனம் எதுவும் சொல்லாமல் பின்கை கட்டியபடி குறுக்கும் நெடுக்குமாக அறையினுள் உலவினார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மகளின் எதிரில் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். ''நீயும் சுதீரும் செய்தது ஆரம்ப முதலே முட்டாள்தனம், பாலா'' என்றார் அமைதியாக. ''பிளாக்மெயில் பண்ணுகிறவனுக்கு எந்தச் சமயத்திலும் இடம் தரக் கூடாது. முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்க வேண்டாமா நீ? நிலைமை அபாயமென்று தோன்றினால், அந்த மாயப்பனின் கதையை நானே கூட எடுத்துக் கொடுத்திருப்பேனே?''

''உங்கள் உடல் நிலையைப் பற்றித்தான் நான் பயப்பட்டேன், அப்பா. ஏதாவது அதிர்ச்சி ஏற்பட்டு நீங்கள்...''

''அசடு, அசடு!'' என்று கசப்புடன் சிரித்தார் ஜனார்த்தனம். ''இப்போதுதான் டாக்டர் என்னைக்

கம்ப்ளீட்டாகச் செக் அப் பண்ணி உடம்பு நன்றாய்த் தேறி விட்டது என்று சொன்னார்.''

''அப்படியா அப்பா?'' என்று அத்தனை வேதனை நடுவிலும் மகிழ்ச்சியுடன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் பாலா.

''ஆமாம். நீ தைரியமாக எல்லாவற்றையும் என்னிடம் சொல்லியிருந்தால் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது. சுதீரையும் மடத்தனமாக இதில் போய் மாட்டிக் கொள்ள விட்டிருக்க மாட்டேன்.''

''அப்பா...சுதீர்...அவனுக்கு ஒன்றும் ஆகாதே?''

கவலையுடன் கொஞ்ச நேரம் தலையைக் குனிந்து கொண்டிருந்தவர்,''ஆகும்படி விட்டு விட்டால் அப்புறம் இத்தனை வருடம் போலீஸ் உத்தியோகம் பார்த்ததற் கெல்லாம் அர்த்தமில்லை'' என்றார். ''ஆனால் இவன் போய்க் கொலை செய்யப் போகிறேன் என்று மிரட்டி விட்டு வந்திருக்கிறான். போனதற்கும் பலமான சாட்சியங்கள் வேறே இருக்கிறது. சரி, சாப்பிட்டு விட்டுத் தூங்கு. பொறுப்பை என்னிடம் விடு.''

''எப்படியப்பா நான் சாப்பிடுவேன்? எப்படியப்பா தூங்குவேன்?''

எழுந்து வந்து மகளின் தலையை வருடிக் கொடுத்தார் ஜனார்த்தனம். ''சுதீர் என்னுடைய நெருங்கிய உறவினன், நான் சம்பந்தப்பட்ட விவகாரம் இது என்றெல்லாம் போலீசில் இதற்குள் தெரிந்திருக்கும். ஆகவே அடித்துத் துன்புறுத்த மாட்டார்கள். இருபத்து நாலு மணி நேரத்துக்குள் மாஜிஸ்திரேட்டின் முன் கொண்டு போய் நிறுத்தி ரிமாண்டில்

வைக்க வேண்டும். அவர் பார்த்துப் போலீஸ் கஸ்டடியா ஜுடீஷியல் கஸ்டடியா என்று தீர்ப்புத் தருவார். நாம் ஜாமீனுக்கு விண்ணப்பிக்கலாம். அழைத்து வரலாம். விசாரிக்கலாம். எவ்வளவோ இருக்கிறது. கவலையில்லாமல் இரு.''

பாலாவுக்கு முகத்தில் கொஞ்சம் களை பிறந்தது. ''சரி, வாருங்கள், இரண்டு பேருமே சாப்பிடலாம். ஆனால்... நீங்கள்....நீங்கள்...''

''என்னம்மா, சொல்லு.''

''சுதீர்....கொலை செய்திருப்பானென்று நீங்கள் நினைக்கவில்லையே?''

''பைத்தியம். உன்னை அப்படி நினைத்தால் கூட அவனை அப்படி நினைக்க மாட்டேன். எழுந்திரு.''

சாப்பிடப் போகுமுன், தனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரிகளைக் கூப்பிட்டு, சுதீரை இரவு கண்ணியமான முறையில் பார்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தார்.

ஆனால் மறுநாள் அவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. சுதீரை ஜாமீனில் வெளியே கொண்டு வரும் முயற்சி வெற்றி பெறவில்லை.

மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும் சரி, செஷன்ஸ் கோர்டிலும் அவனை ஜாமீனில் விட மறுத்துவிட்டார்கள். சுதீர் ஒரு பெரிய முன்னாள் போலீஸ் அதிகாரியின் உறவினனானதால் அவருடைய உதவியுடன் சாட்சியங்களைக் கலைத்து விடக் கூடுமென்றும், அவன் மீது சந்தேகம் பலமாக இருப்பதால் ஜாமீனில் விடுவிக்கக் கூடாது என்றும் பப்ளிக் பிராசிக்யூட்டர் சொன்னதை நீதிபதி ஏற்றுக்கொண்டுவிட்டார்.

இரண்டு தினங்கள் கழித்து அவர்கள் சுதீரை சென்ட்ரல் ஜெயிலில்தான் சந்தித்தார்கள்.

கண்ணீரை விழுங்கிக் கொண்டு, 'சுதீர்...சுதீர்' என்று விம்முவதைத் தவிர பாலாவினால் எதுவுமே பேச முடியவில்லை. ஜனார்த்தனம் பிராக்டிகலாக இருந்தார். அனாவசியமான ஸென்டிமென்ட்களைத் துடைத்து எறிந்து விட்டு, ''நீ மாயப்பனை மிரட்டிவிட்டு வந்த பிறகு அவனுடைய கூட்டாளிகளில் எவனோதான் அவனைக் கொலை செய்திருக்க வேண்டும். யார் யார் அங்கே இருந்தார்கள் நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார்.

சுதீர் கொஞ்சம் நினைவுபடுத்திக்கொண்டு சில பேரின் அடையாளங்களைச் சொன்னான். சட்டென்று வேறொரு நினைவு வந்தது அவனுக்கு. ''மாமா, அந்த மரகதத்தை மறந்தே போனோமே?'' என்றான்.

''ஆமாம்பா'' என்றாள் பாலாவும் திடீர் உற்சாகத்துடன்.

''எந்த மரகதம்?'' என்று திகைத்தார் ஜனார்த்தனம்.

''ஒன்று விடாமல் உங்களிடம் சொல்லிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நடுவில் வந்த அந்த மரகதத்தின் கதையைச் சொல்லாமலிருந்து விட்டேன். மாயப்பனின் மனைவி அவள். அவளை அவன் ரொம்பக் கொடுமைப் படுத்தினான். எங்கேயோ தனியாய் அடைத்து வைத்திருந்தான். மாயப்பனுடைய குடும்பத்தின் அவமானக் கதை கட்டாயம் வெளி வந்தாக வேண்டுமென்று ஒரு நாள் எங்களைப் பார்த்துச் சொன்னாள். மறுநாள் அவள் எங்கே போனாளென்று தெரியவில்லை...''

சந்திப்புக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது என்று காவலாளி வந்து தெரிவித்தார்.

''சுதீர், இது ஒரு புதுப் பாயிண்ட். தைரியமாயிரு. நீ கொலை செய்ததாகக் கண்ணால் பார்த்ததற்குச் சாட்சி எதுவும் இல்லை. எல்லாம் ஸர்க்கம்ஸ்டான்ஷியல் எவிடன்ஸ்தான். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவனிடம் கை குலுக்கி விடை பெற்றார்.

பாலாவுக்கு அது கூடத் தோன்றவில்லை. கொஞ்ச நேரம் கண் கலங்க அவனையே பார்த்துவிட்டுத் திரும்பினான்.

★★★

**ப**த்து நாள் ஓடியதே தவிர நிலைமையில் மாறுதல் தென்படவில்லை.

ஜனார்த்தனம் ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸியிடம் மரகதத்தைக் கண்டுபிடிக்கும் வேலையை ஒப்படைத்திருந்தார். அதைத் தவிர ஒரு பிரபல கிரிமினல் வக்கீலையும் அமர்த்தியிருந்தார். அப்படியும் பலன் ஏற்படவில்லை. மரகதம் மாயமாய் மறைந்து போயிருந்தாள். சுதீர் தைரியமாயிருந்தால் கூடப் பாலாவைத் தேற்றுவது அவருக்குப் பெரும் பாடாக இருந்தது.

அன்று அவர் ஒரு வழி கண்டுபிடித்தார். பாலாவின் காலேஜ் சிநேகிதிகள் இரண்டு மூன்று பேரை ரகசியமாகச் சந்தித்து, வீட்டுக்கு வந்து பாலாவுக்கு உற்சாக மூட்டும்படி கேட்டுக் கொண்டார். கொஞ்சம் முன்பு அவர்கள் வந்திருந்து, இல்லாத அரட்டையெல்லாம் அடித்து, அவளை ஒரு சினிமாவுக்கும் இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

கொஞ்ச நேரம் அவளும் நிம்மதியாயிருக்கட்டும், நாமும் நிம்மதியாயிருப்போம் என்று அவர் பேப்பருடன் சோபாவில் சாய்ந்திருப்பார்.

''சார்...'' என்று ஒரு தயங்கிய குரல் கூப்பிட்டது.

வாசலுக்கு வந்து பார்த்தார்.

ஓர் இளைஞன் அப்பாவியாயும் சாதுவாயும் இருந்தான். கையில் இரண்டு ஆப்பிள் பழங்கள் வைத்திருந்தான். நெர்வஸாகத் தோன்றினான். ''மிஸ் பாலா... இங்கே தானே ...இது தானே... அவர்கள் வீடு...டெலிவிஷனில் நியூஸ் படிக்கிறாரே...''

''ஆமாம், வாருங்கள்'' என்று வேண்டா வெறுப்பாய் அவனை உள்ளே அழைத்துச் சென்றார் ஜனார்த்தனம். மாதத்துக்கொரு முறை இரண்டு முறை இந்த மாதிரி கழுத்தறுப்புகள் வருவது வழக்கம்தான். அசட்டு பிசட்டென்று பேசிக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். நல்ல வேளை, பாலா இல்லை. சீக்கிரம் வெளியே அனுப்பிவிட வேண்டும்.

''உட்காருங்கள். என்ன சமாசாரம்?'' என்றார். குரலில் அரைக்கடுமை இருந்தது.

''மிஸ் பாலாவுக்குத் தாங்க்ஸ் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்...'' என்றான் அவன் மெதுவாய்.

''எதற்குத் தாங்க்ஸ்? நீங்கள் யார்?''

''என் பெயர் கண்ணன். ஜி.கண்ணன்.''

''சரி?''

''கொஞ்ச நாள் முன்பு மிஸ் பாலாவுக்கு லெட்டர் போட்டிருந்தேன்.''

'ரொம்பப் பேர் போடுகிறார்கள். எல்லோருக்கும் பதில் எழுதிக் கட்டுப்படியாவதில்லை.''

''எனக்கும் மிஸ் பாலா பதில் எழுதவில்லை...ஆனால் வேறு வகையில் ரொம்ப உபகாரம் பண்ணியிருக்கிறார்.''

''ஓகோ''

''நான் படித்து விட்டு வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறேன் என்று மிஸ் பாலாவுக்கு லெட்டர் போட்டிருந்தேன். அதை அவர் டிவியில் யூத் புரோக்ராம் நடத்துகிறவரிடம் கொடுத்திருந்தார். அவர் என்னை கூப்பிட்டனுப்பி, 'வேலையில்லாப் பட்டதாரிகள் கஷ்டம்' என்கிற தலைப்பில் ஒரு பேட்டி நிகழ்ச்சி நடத்தினார். அதைப் பார்த்த சர்வேசன் நேஷனல் டைப்ரைட்டர்ஸ் கம்பெனி மானேஜிங் டைரக்டர் என்னைக் கூப்பிட்டனுப்பி, ஒரு வேலை போட்டுத் தந்திருக்கிறார்...''

ஜனார்த்தனத்துக்குத் தன் பெண்ணைப் பற்றிப் பெருமையும் இந்த இளைஞனிடம் கனிவும் ஏற்பட்டன.

''அதுதான் மிஸ் பாலாவைப் பார்த்து... நன்றி தெரிவித்து... இந்தப் பழத்தையும் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்...''

''சந்தோஷம். பழமெல்லாம் எதற்கு? பாலா சினிமாவுக்குப் போயிருக்கிறாள். நான் அவள் தகப்பனார்தான். அவள் வந்ததும் நீங்கள் வந்தீர்கள் என்று எல்லா விவரமும் சொல்கிறேன்.''

கொஞ்சம் ஏமாற்றத்துடன் ''சரி, சார்'' என்று அவன் எழுந்திருக்க முயன்றான்.

''இருங்கள். ஏதாவது ட்ரிங்க் சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்று ஜனார்த்தனம் எழுந்து போய் ஃப்ரிஜ்ஜைத் திறந்து ஒரு கிளாஸில் கூல் ட்ரிங்க் ஊற்றி எடுத்து வந்து தந்தார்.

''தாங்க்ஸ் சார். மிஸ் பாலாவின் வீட்டை விசாரித்த போது, நீங்கள் ஒரு பெரிய போலீஸ் அதிகாரி என்று சொன்னார்கள்...''

''ஆமாம். ஆனால் ரிடையர்டு.''

''இருந்தாலும் உங்களிடம் ஒரு விஷயம் பேசலாமென்று... அதாவது, வந்து...என் பக்கத்து வீட்டில்...''

''ஏதாவது திருட்டா?''

''இல்லை சார், ஒரு பெண்ணை ரகசியமாய் அடைத்து வைத்திருக்கிறார்கள்.''

ஜனார்த்தனம் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அந்தப் பெண்ணின் பெயர்?''

''சரியாய்த் தெரியவில்லை சார். மரகதம் என்று சொல்லிக் கொண்டார்கள்'' என்றான் அவன்.

## 22

மரகதம்!

அந்தப் பெயருள்ள பெண்ணைத்தான் போலீசில் ஒரு பக்கமும், இவர் ஒரு பக்கமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்!

''கண்ணன்! என்ன பெயர் சொன்னாய்? மரகதமா! விவரமாய் மறுபடியும் சொல்லு'' என்றார் ஜனார்த்தனம்.

இவர் மகள் பாலாவுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போவதற்காகக் கையில் இரண்டு ஆப்பிளுடன் வந்த அந்த இளைஞனுக்கு இவருடைய திடீர் பரபரப்புக்குக் காரணம் விளங்கவில்லை. ஒரு போலீஸ் அதிகாரி அமைதியாகத் தகவல் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது தானே? இவர் ஏனிப்படித் தலை போன மாதிரி பறக்கிறார்?

''ஒன்றுமில்லை சார்... என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு போர்ஷன்... அங்கே ஒரு பெண்ணை அதிகம் வெளியே விடாமல் அடைத்து வைத்திருக்கிற மாதிரி தோன்றியது... புதுப் பெண் வந்திருக்கிறாளே என்று என் அம்மா விசாரிக்கப் போனாள். யாரோ இரண்டு ஆண்கள் வந்து, 'மரகதம்! வெளியே வராதேன்னு சொன்னேனில்ல?' என்று கத்திக்கொண்டு அவளை உள்ளே இழுத்துட்டுப் போய்க் கதவைத் தாள் போட்டு விட்டார்களாம்...''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் சட்டை பாண்ட்டை மாட்டிக்கொண்டிருந்தார். ''கண்ணன், நீ வாசலுக்குப் போய் ஏதாவது ஆட்டோ ரிக்ஷா போனால் நிறுத்தி வை. இதோ வருகிறேன்'' என்றார். சமையற் காரியைக் கூப்பிட்டு, ''ஒரு காப்பி கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டார். அவர் உடலும் உள்ளமும் பரபரத்தன. ஓய்வு பெற்ற பிறகு ஒரு க்ரைம் விசாரணையில் முதல் தடவையாக இறங்கும் உற்சாகத்தில் அவர் இருபது வயது குறைந்தவராக ஆனார். என்னதான் சொந்தக் குடும்ப விஷயம் என்றால் கூட முன்னேயெல்லாம் உடம்பை அதிகம் வருத்திக் கொள்ள யோசிப்பார். இப்போது இருதயக் கோளாறு சரியாகிவிட்டது என்று டாக்டர் சொல்லி விட்டதால் இரட்டிப்புச் சுறுசுறுப்பு ஏற்பட்டு விட்டது.

சமையற்காரி கொண்டு வந்து தந்த காப்பியை ஒரே மடக்கில் விழுங்கிவிட்டு வாசலுக்கு 'வந்த போது கண்ணன் ஓர் ஆட்டோவைப் பிடித்து வைத்திருந்தான். ஏறிக் கொண்டு, ''போகவேண்டிய இடத்தைச் சொல்லு'' என்றார் அவனிடம். எழும்பூரில் ஒரு விலாசத்தைச் சொன்னான் அவன்.

போகும் வழியில் அவர்கள் எதுவும் பேசிக்கொள்ள வில்லை. ஜனார்த்தனம் தன் யோசனையில் மூழ்கியிருந்தார்.

கண்ணனுக்கோ அவ்வளவு பெரிய மனிதரிடம் வலியப் பேச்சுக்கொடுக்கப் பயமாயிருந்தது.

எழும்பூரை ஆட்டோ அடைந்த போதுதான் அவர் முதல் தடவையாக வாயைத் திறந்தார். ''வீட்டு வாசலில் ஆட்டோவில் போய் இறங்க வேண்டாம். தெரு முனையிலேயே சொல்லிவிடு.''

''சரி சார்'' என்றவன் ஆட்டோக்காரருக்கு வழியைக் கூறி, ''இங்கே இறங்கலாம் சார், அதோ அந்தக் கோடி வீடுதான் நாங்கள் இருப்பது'' என்றான்.

பணம் கொடுக்க முன்வந்தவனைத் தடுத்துத் தானே கொடுத்துவிட்டு அவனுடன் நடந்தார்.

ஒரு பழைய காம்பவுண்டுக்குள் முன்புறம் ஒரு சிறு வீடு இருந்தது. அதன் வலப்புறத்தில் செல்லும் ஒரு நடையின் முடிவில் இன்னொரு போர்ஷன் தெரிந்தது. ''அந்தப் பின்பக்கம் உள்ள வீட்டில் தான் நான் சொல்கிற பெண் இருக்கிறாள் சார்'' என்று சுட்டிக் காட்டினான் கண்ணன்.

''எப்போதும் அண்டை அசலில் ஒரு சந்தேகமான காரியம் நடக்கிறமாதிரி தோன்றினால் உடனே நியரஸ்ட் போலீஸ் ஸ்டேஷனில் போய்ச் சொல்லி விட வேண்டும், அது உன் கடமை. நாட்டுக்கு செய்கிற சேவை. நாளைக்கு உனக்கே கூட ஓர் ஆபத்து ஏற்பட்டது என்று வைத்துக்கொள். முன்னாடியே ஏன் சொல்ல வில்லை என்று கேட்பார்கள்..''

திரும்பிப் பார்த்த ஜனார்த்தனத்துக்கு திகைப்பு ஏற்பட்டது. கண்ணன் அவரைப் பின்தொடர்ந்து வரக்காணோம். அவர் உதட்டில் புன்னகை அரும்பியது. 'பாவம், ரொம்பப் பயந்த சுபாவமுள்ள பையன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அவன் சுட்டிக்காட்டிய வழியில் நடந்தார்.

மணி ஏழைத் தாண்டிக் கொண்டிருந்ததால் பெரும் பாலும் இருட்டுத்தான் வழியை அடைத்துக் கொண்டிருந்தது. பக்கத்து மனையில் வீடு கட்டிக் கொண்டிருந்ததால் அங்கிருந்து உதிர்ந்த செங்கல் துண்டுகளும் காரைக் கட்டிகளும் காலில் இடறின. ஒரு வேப்ப மரம் சோனியாய் எந்த நிமிடத்திலும் வெட்டப்படக்கூடிய நிலையில் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

பின்புறப் போர்ஷனை அடைந்தவர் கொஞ்சம் நிதானித்தார். கதவு சாத்தியிருப்பது தெரிந்தது. ஆனால் உள்ளே எரிந்த விளக்கின் வெளிச்சக் கீற்று வெளியே கோடு போட்டது.

மெல்லத் தட்டினார் விரல் முட்டியால். முதலில் எந்தப் பதிலும் வரவில்லை. ஆனால் எச்சரிக்கையாய் யாரோ நடமாடுகிற மாதிரி தோன்றியது. கதவை அரையங்குல அகலம் திறப்பது தெரிந்தது. யாரென்று பார்த்துக் கொண்டு உடனே மூடிவிட வேண்டும் என்பது உள்ளே இருப்பவரின் திட்டமாயிருக்க வேண்டும். ஆனால் அந்த நொடி நேரத்தை வீணடிக்கவில்லை ஜனார்த்தனம். திறந்ததுதான் சாக்கு என்று குபீரென்று தோளினால் மோதி சரேலென உள்ளே புகுந்து விட்டார்.

உள்ளே ஒரு பெண் வெடவெடத்துக் கொண்டு நின்றிருந்தாள். அச்சத்தினால் முகம் வெளிறியிருந்தது. இருபத்தைந்து வயதுக்குள் இருக்கும். ஏழ்மையோ, கஷ்டமோ, துன்பத்தில் அடிபட்ட சுவடுகள் தெரிந்தன.

''நீதான் மரகதம் என்கிற பெண்ணா?'' என்று ஜனார்த்தனம் கேட்டதும் அவளுக்குத் தேகம் மேலும் நடுங்க ஆரம்பித்தது. 'ஆமாம்' என்றும் சொல்லமுடியாமல் 'இல்லை'என்றும் சொல்ல முடியாமல் தலையைச் சற்றே அசைத்தாள். அவள் விழிகள் வாசலையே நோக்கின.

எவனுடைய வரவையோ துணையையோ அவள் எதிர் பார்க்கிறாள் என்று தோன்றியது.

''இறந்து போனானே மாயப்பன், அவனுடைய மனைவியா நீ?'' என்று அவர் கேட்டு முடிக்குமுன் பின்னாலிருந்து ஓர் இரும்புக்கரம் அவர் கழுத்தை வளைத்துப் பிடித்தது. அதிலிருந்து அவர் திமிறி விடுபடுவதற்குள் இன்னோர் ஆள் முன்னே வந்து அவருடைய முகத்தில் ஓர் குத்துக் குத்தினான். அவர் மல்லாந்து விழுந்தார். இருவரும் அவரை மேலே விழுந்து அமுக்க, ''வேண்டாம் அண்ணே, வேண்டாம்!''என்று அந்தப் பெண் அலற, ஜனார்த்தனம் தன் சக்தி முழுவதையும் பயன்படுத்தி இருவரையும் ஒரே உதையில் எகிறித் தள்ளப் பிரயாசைப்பட,''நிறுத்துங்கள்!'' என்று ஓர் அதட்டல் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து மூன்று போலீஸ்காரர்களும் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் திமுதிமுவென்று உள்ளே நுழைந்தார்கள்.

இரண்டு நிமிடத்தில் அமளி அடங்கி விட்டது. 'அண்ணே' என்று மரகதத்தால் அழைக்கப்பட்ட இரண்டு ஆண்களையும் போலீஸ்காரர்கள் மடக்கிப் பிடிக்க, எந்த கட்டாயமும் தேவைப்படாமல் மரகதம் சோர்ந்து மயங்கித் தரையில் சரிந்தாள்.

'தாங்ஸ்' என்ற ஜனார்த்தனம் நிலைப்படியருகே நின்றிருந்த கண்ணனைப் பார்த்தார்.

''எதுவானாலும் போலீஸில் சொல்லணும் என்று நீங்கள் சொன்னது எனக்குச் சுருக்கென்று உறைத்தது. இதுவும் ஓர் அபாயகரமான சமயம்தான், போலீஸ் இருந்தால் நல்லதுதான் என்று நினைத்து உங்களிடம் கூடச் சொல்லாமலேயே நழுவினேன். ஸ்டேஷனுக்குப் போய் இவர்களை அழைத்து வந்தேன்'' என்றான் அவன் குழந்தைத்தனமான பெருமிதத்துடன்.

''நல்ல காரியம் செய்தாய்'' என்று தன் தூசியைத் தட்டிக் கொண்டு அவன் முதுகையும் தட்டிக் கொடுத்தார் ஜனார்த்தனம்.

★★★

**போ**லீஸ் ஸ்டேஷனில் ஒரு மணி நேரம் மன்றாடிய பிறகே நடந்ததை யெல்லாம் ஜனார்த்தனத்தால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

''அண்ணே'' என்று அழைக்கப்பட்டவர்கள் இருவரும் உண்மையாகவே மரகதத்தின் அண்ணன்கள்தான். அவர்களில் மூத்தவனான செல்வராஜ் சொன்னான். ''நானும் தம்பியும் சிந்தாதிரிப்பேட்டையில் ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப் நடத்தி வருகிறோம். மரகதம் எங்களுடைய ஒரே தங்கை. ஐந்து வருடத்துக்கு முன்னால் மாயப்பனுக்குச் சீரும் சிறப்புமாகக் கல்யாணம் செய்து கொடுத்தோம். ஆனால் அவன் ஒரு குடிகாரன், கேடி, பொம்பளைப் பொறுக்கி என்று போகப் போகத்தான் தெரிந்தது. இவள் அங்கே படாத கஷ்டமில்லை. எங்களுடன் வந்துவிடும்படி சொன்னோம். அவனும் விட வில்லை. இவளும் வரவில்லை.

''பதினைந்து நாள் முன்னாடி அடி உதை காயங்களுடன் மரகதம் வந்து சேர்ந்தாள். எங்கேயோ இவளை அடைத்து வைத்திருந்தானாம். குடித்துவிட்டு அடித்த அடி தாங்காமல் தப்பி வந்துவிட்டாள். இனி அவனிடம் திரும்பிப் போக வேண்டாம், விவாகரத்துக்கு வக்கீலைக் கலந்து ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இவள் கேட்கவில்லை. 'அவனை என் கையால்கொலை செய்தால் தான் எனக்கு கட்டை வேகும்' என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள். அப்படி எதுவும் நடந்துவிடக்கூடாது என்று ஒரு கிழவியை இவளுக்குக் காவல் போட்டு வைத்திருந்தோம்.

''அன்று நடுராத்திரி. அந்தக் கிழவியையும் ஏமாற்றி வீட்டிலிருந்த வெட்டரிவாளுடன் இவள் போய், சுவரேறிக் குதித்து அவனை வெட்டிக் கொன்று விட்டுத் திரும்பிவிட்டாள். எல்லாம் முடித்துவிட்டு வந்த பின் எங்களுக்குச் சொன்னாள். எப்படி இவளைக் காப்பாற்றுவது, என்ன செய்வது என்று தவித்தோம். அதற்குள் போலீசில் சுதீர் என்கிற பையனைப் பிடித்திருப்பதாயும், மாயப்பனை அவன் தான் கொலை செய்தான் என்று பலத்த சந்தேகம் இருப்பதாயும் பேப்பரில் வந்திருந்தது. ஒரு பக்கம் மனசில் உறுத்தியது. மறுபக்கம் எங்கள் தங்கையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற கவலையும் ஏற்பட்டது. அதனால்தான் அவளைப் பிறர் கண்ணுக்குக் காட்டாமல் இங்கே கொண்டுவந்து வைத்திருந்தோம். இன்னும் கொஞ்சநாள் கழித்து வெளி யூருக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ கூட அழைத்துப் போய்விடலாம் என்று திட்டமிட்டிருந்தோம். அதற்குள் அவள் விதி முடிந்துவிட்டது.''

ஜனார்த்தனம் கைக்கடியாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதே முக்காலாகி இருந்தது. பாலா இன்நேரம் சினிமா பார்த்துவிட்டுத் திரும்பியிருப்பாள். அப்பா அவசரமாய்க் கிளம்பிப் போனதைச் சமையல்காரியிடம் கேட்டறிந்து கவலைப்பட்டுக்கொண்டிருப்பாள். அவள் கவலை, சுதீர் கவலை, என் கவலை எல்லாம் ஒரு வழியாய்த் தீர்த்து விட்டதைச் சொல்ல வேண்டும்.

''ஒரு போன் செய்யலாமா இன்ஸ்பெக்டர்?'' என்று அனுமதி பெற்று, வீட்டு நம்பருக்கு டயலைச் சுழற்றினார்.

★★★

**பா**லாவின் வீட்டில் இரவு விருந்து முடிந்து ஹாலில் வந்து உட்கார்ந்திருந்தார்கள் எல்லோரும் – சுதீர், பாலா ஜனார்த்தனம், சுதீரின் அம்மா.

''அண்ணா, விருந்து கிருத்து போட்டு என்னைச் சரிக் கட்டலாம் என்று பார்க்காதே. நான் ஏமாற மாட்டேன்'' என்றாள் சுதீரின் அம்மா.

ஜனார்த்தனம் திகைத்து, ''சரிக் கட்டப் பார்க்கிறேனா? எதில்?'' என்றார்.

''உன் பெண்ணுக்கு என் பிள்ளையை மடக்கிப் போடலாம் என்றுதானே பார்க்கிறாய்? அது நடக்காது. டி.வி. நியூஸ் வாசிக்கிறேன் பேர்வழி என்று கண்ட கண்ட வம்பையெல்லாம் இழுத்துக் கொண்டு வருகிறாள் உன் பெண். நான் இந்த மாதிரி பிடாரியையெல்லாம் என் மருமகளாக ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை'' என்றாள் சுதீரின் அம்மா.

''ஐ ஆல்ஸோ ரெடி நாட்'' என்றார் ஜனார்த்தனம்.''என் பெண் பரவாயில்லை. உன் பிள்ளை கொலைக் குற்றத்துக்காகப் போலீசில் மாட்டிக் கொண்டவன். அவனைப் போய் என் ஃப்ளவர் ஸன்னாக ஏற்றுக் கொள்வேனா?'' என்றார் ஜனார்த்தனம்.

சுதீர் குறுக்கிட்டான். ''அம்மா! மாமா! உங்கள் இரண்டு பேருக்கும் கும்பிடு. இப்பத்தான் ஐந்து நிமிஷம் முன்னால் நாங்கள் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று முடிவு பண்ணினோம். இப்ப நீங்கள் ஆரம்பித்து விடாதீர்கள்!''

இந்த வேடிக்கைப் பேச்சில் பாலா கலந்து கொள்ள வில்லை. அவள் முகம் சீரியஸாக இருந்தது. ''அப்பா, உங்களை ஒன்று கேட்கலாமா?'' என்றாள்.

''என்னம்மா?''

''அப்படி என்னதான் இருந்தது அந்த மாயப்பன் கதையில்?''

''எடுத்து வருகிறேன். யார் கண்ணுக்கும் படாதபடி அதை ரொம்பப் பத்திரமாக, மேஜையின் உள் டிராயரில் ரகசியமாக வைத்திருக்கிறேன்.'' தன் அறைக்குச் சென்று ஒரு சிறிய பேப்பர் கட்டை எடுத்து வந்தார். ''அடிக்கடி பவர் கட் ஏற்படுகிறது. ஒரு மெழுகுவத்தி ஏற்றி வா.''

பாலா வத்தியுடன் திரும்பி, குட்டி மேஜை மீது வைத்து விட்டுத் தந்தையின் பக்கத்தில் ஆவலுடன் உட்கார்ந்தாள். மெழுகுவர்த்தியின் சுடர் மெல்ல ஆடியது. ஜனார்த்தனம் காகிதக் கட்டைப் பிரித்தார். முதல் காகிதத்தை எடுத்தார்.

மெழுகுவத்தியின் நெருப்பில் அதைக் கொளுத்தினார்.

''அப்பா!'' திடுக்கிட்டாள் பாலா.

''என்ன மாமா?'' என்று சுதீரும் குறுக்கிட்டான்.

''சரெக்டான காரியம்தான் செய்கிறேன்,'' என்றார் ஜனார்த்தனம் ஆழமான குரலில் . ''அந்த மாயப்பன் நல்லவனோ பொல்லாதவனோ, யோக்கியனோ ரௌடியோ கொலைகாரனோ குடிகாரனோ எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் அவன் உள்ளுக்குள்ளே ஒரு தன்மானம் இருந்திருக்கிறது. தன் குடும்பத்தின் அவமானக் கதை வெளியே தெரியக் கூடாது என்று அவன் தீவிரமாக இருந்தான். இப்போது அவன் உயிருடன் இல்லை என்றாலும் அவனுடைய உணர்ச்சிகளுக்கு, சுய கௌரவத்துக்கு, நான் மதிப்புக் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் நான் மனிதனேயில்லை.''

சிறிது சிறிதாக, ஒவ்வொரு தாளாக அவர் எரிக்கலானார்.

முற்றும்